# கலையும் இலக்கியமும்

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையும் இலக்கியமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் இலக்கியமும்

[கட்டுரைகள்]

வாகீச கலாநிதி, சித்தாந்த பண்டிதர்

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.D.**

*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,*

*சப்ரகமுவ பல்கலைக்கழகம்*

பதிப்பாசிரியர்

**எஸ். வை. ஸ்ரீதர்**

*முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை*

*சப்ரகமுவ பல்கலைக்கழகம்*

கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையும் இலக்கியமும்

எழுதியது: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

பதிப்பாசிரியர் : எஸ். வை. ஸ்ரீதர்

பதிப்புரிமை © 2013, கனகசபாபதி நாகேஸ்வரன்

வெளியீடு: கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் மணிவிழாக்குழு

அச்சு: குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06

Kalaiyum Llakkiyamum

by Kanagasabapathy Nageswaran

Edited by S.Y. Sirithar

First edition © 2013, Kanagasabapathy Nageswaran

*Published by* Kanagasabapathy Nageswaran Felicitation Committee

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo - 06, Tel. - 011 2364550

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**பேராசிரியர் கலாநிதி வி. சிவசாமி**
*ஓய்வுபெற்ற பேராசிரியர், சம்ஸ்கிருதத் துறை*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

நம்முடைய அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய மாணவரும், நண்பருமாகிய ஆசிரியரின் ஆய்வுக் கட்டுரைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதுவதில் மிக மகிழ்ச்சியடைகிறேன். சப்ரகமுவ பல்கலைக்கழக மொழித்துறைச் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிவழி அறங்காவலர்களில் ஒருவருமான கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் மணிவிழாவையொட்டி வெளியிடப்படும் இக் கட்டுரைத் தொகுதியிலே இடம்பெறும் ஆக்கங்கள் பல்வேறு காலப்பகுதி களிலே எழுதப்பட்டவை. பன்முகத் தன்மையும், நுண்ணாய்வுத் திறனுங் கொண்டவை.

யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடுத்துள்ள பிரதான சப்த தீவுகளில் ஒன்றாக நயினாதீவு திகழ்கிறது. ஏனைய தீவுகள் போலவே இதுவும் சமய ஞானம், தமிழ் முதலியவற்றிற்குச் சிறப்பான ஓரிடமாகும். இது இந்து சமயத்திற்கும், பௌத்தத்திற்கும் புகழ்பெற்ற புண்ணிய பூமியாகும். இந்து சமயத்தைப் பொறுத்த மட்டில் தென்னாசியாவிலுள்ள புகழ்பெற்ற சக்தி பீடங்களில் ஒன்றாக இங்கு விளங்கும் ஸ்ரீ நாகேஸ்வரி அம்மன் ஆலயம் தொன்மையும் திருவருள் பாலிக்கும் தனிச் சிறப்பும் வாய்ந்ததாகும்.

பழந்தமிழர் வரலாறு, சமயம், பண்பாடு, கலை, கல்வி, இலக்கியம், மருத்துவம், விரதங்கள், விழாக்கள் முதலியன பற்றிப் பல திறப்பட்ட அறிஞர்கள், ஆர்வலர்கள், ஆய்வாளர்கள் எழுதியுள்ள கிடைக்கக்கூடிய பிரசுரங்களைத் தமது நுண்ணாய்வுத் திறன் கொண்டு ஆராய்ந்து கட்டுரை யாசிரியர் இக்கட்டுரைகளை நன்கு எழுதியுள்ளமை பாராட்டிற்குரியதாகும். ஆங்காங்கே புதிய தகவல்களையும், விளக்கங்களையும் ஆசிரியர் கூறத் தவறிலர்.

இவ்வாய்வுக் கட்டுரைகளை ஆசிரியர் தகவல்களைத் திரட்டிச் செம்மை யான செந்தமிழ் நடையிலே எழுதியிருப்பது வாசகர்களைக் கவரும் என்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயமில்லை. இத்தகைய ஆய்வுக் கட்டுரைகளை எழுதுவதற்கு ஆசிரியர் பல்வேறு தகைமைகள் கொண்டுள்ளார். குறிப்பாக, அவரின் சிறப்பான ஆழமான தமிழ்ப்புலமை, வரலாறு, சமய அறிவு, ஆய்வு நோக்கு முதலியன குறிப்பிடற்பாலன. ஆசிரியர் காய்தல், உவத்தலின்றிக் கருத்துக்களைக் கூறும் நுட்பம் கவனித்தற்பாலது. இவர் இவ்விடயங்கள் பற்றியும், வேறுபல விடயங்கள் பற்றியும் இன்னும் பல ஆய்வுகள் செய்து அறிவியல் உலகிலே மேன்மேலும் சிறப்படைய எல்லாம் வல்ல அன்னை ஸ்ரீ நாகேஸ்வரி இவருக்குத் திருவருள் பாலிப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நூலாய்வு, வரலாறு, பெண்ணியம், அரசறிவியல், கலை இலக்கியம், கல்வி, மருத்துவம், சமூகம், மொழி எனும் பல்துறை சார்நந்த ஆக்கங்களின் தொகுப்பு இந்நூலாகும். அணிந்துரைகள் என்று எம்மால் எழுதப்பட்டவையும் சில இதிலடங்குகின்றன. அணிந்துரை எழுதுமாறு எம்மைப்பணித்த ஆக்க இலக்கியகாரர்களுக்கு எமது நன்றிகள். பத்திரிகைகள், சஞ்சிகைகளிலே சில ஆக்கங்கள் வெளியிடப்பட்டன. அவற்றை வெளியிட்ட நிறுவனங்களுக்கு நன்றிகள். சுதேச மருத்துவம் பற்றியவை எனது கலாநிதிப்பட்ட ஆராய்ச்சி விடயமாகும். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு விடயம் அது. ஒரு சில இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துத் தமிழ்ச் சேவையில் ஒலிபரப்பப்பட்டவை. இந்நூல் பல்பயன் தரவல்லது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவைப் பணிப்பாளர், மணிவிழாக் குழுவினர், எழுத்துப்பிழையற அழகுடன் அச்சிட்ட குமரன் புத்தக இல்லத்தினர் அனைவர்க்கும் எம் நன்றிகள்.

அன்பன்
***கலாநிதி க. நாகேஸ்வரன்***

மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா
12.03.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

எம் பெருமதிப்பிற்கும் பேரன்பிற்கும் போற்றுதற்கும் பாராட்டுதற்குமுரிய முதுநிலை விரிவுரையாளர் அருட்கலைமாமணி, சித்தாந்த பண்டிதர் வாகீச கலாநிதி, சொற்பேராழி, டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.D அவர்கள் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு நூலாகத் 'கலையும் இலக்கியமும்' என்னுமிந்நூல் வெளியிடப்படுகிறது. மணிவிழாவையொட்டி வெளியிடப் படும் இந்நூல் காலத்துக்குக் காலம் ஆசிரியரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் அருங்களஞ்சிய மெனலாம்.

கலாநிதி க. நாகேஸ்வரன் அவர்கள் நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்திலும், நயினாதீவு மகாவித்தியாலயத்திலும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் கல்வியைக் கற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர். முத்தமிழிலும் பாண்டித்தியமும் திறமையும் கொண்ட வாகீச கலாநிதி தமிழிலே புலமையும் வித்துவமுங் கொண்ட சான்றோர் பலரிடத்திலும் கல்வித் தொடர்புள்ளவர். வித்துவான் சி. குமாரசாமி, பண்டிதை புனிதவதி, நயினைக் கவிஞர் நா. க சண்முகநாதபிள்ளை, பண்டித வித்துவான் ப. க. குகதாசன், அதிபர் சபா. ஆனந்தர், ஆத்மஜோதி கா. முத்தையா, அறிவொளி த. சண்முகசுந்தரம், மகாஜனச் சிற்பி தெ. து. ஜெயரத்தினம், பேராசிரியர்கள் கலாநிதிகள் க.கைலாசபதி, கா. சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், எம். ஏ. நுஃமான், நா.சுப்பிரமணியன், கா. இந்திரபாலா, சபா. ஜெயராசா, சித்திரலேகா மௌனகுரு, ஏ. ஜே. கனகரட்னா, நா. பாலகிருஷ்ணன், கா. கைலாசநாதக் குருக்கள், ப. கோபால கிருஷ்ணன், க. அருணாசலம், பேராசான் சி. பத்மநாதன் ஆகியவர்களிடம் விரிவுரைகள் கேட்டவர். இலங்கை வானொலியிலும் 'ஈழநாடு' பத்திரிகையிலும் பணியாற்றியவர். நேர்முக வர்ணனையாளர், கதாப்பிரசங்கக் கலைஞர், வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளர் என்று இன்றும் கலைப்பணிபுரிபவர். பண்ணுடன் திருமுறைகளைப் பாடவல்ல இவர் ஒரு வில்லிசைக்கலைஞருமாவார். நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் குடும்பத்திலும் நயினை வரகவி நாகமணிப்புலவர் பரம்பரையிலும் உதித்தவர். நல்ல சமயச் சொற் பொழிவாளரான கலாநிதி நாகேஸ்வரனின் விரிவுரைகள் மாணாக்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்துப் பிணிக்க வல்லவை. பல்கலைக்கழகத்திலே மொழிப்பீடத்திலே கற்கும் அனைத்து மாணவரின் அன்பிற்கும் பாத்திர மானவர். புலமையும் வித்துவமும் எழுத்தாற்றலுஞ் சிந்தனை வளமும் நிரம்பப் பெற்ற முனைவர் கனகசபாபதி நாகேஸ்வரனின் எழுத்து வளத்தை இத்தொகுதி பறைசாற்று கிறது. இந்நூலை வெளியிடுவதில் மணிவிழாக்குழு மிகுந்த பேருவகையும் மகிழ்ச்சியும் அடைகிறது. இன்னும் பல அரிய சிந்தனை ஆழங் கொண்ட கட்டுரைகளை எழுத வேண்டுமெனவும், வெகுவிரைவில் தமிழ்ப் பேராசிரியர் என்ற பதவியுயர்வினைப் பெற்றுத் தமிழ்த் தொண்டாற்ற வேண்டுமெனவும் வாழ்த்தி மகிழ்கிறேன்.

மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்
பெலிகுல்லோயா

அன்புடன்
***எஸ். வை. ஶ்ரீதர்***
பதிப்பாசிரியர்
மணிவிழாக்குழு
14.03.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அணிந்துரை | v |
| | முன்னுரை | vii |
| | பதிப்புரை | viii |
| 1. | கலை, இலக்கிய ஆக்கத் திறன்கள் - ஒரு நோக்கு | 1 |
| 2. | மொழியும் வானொலியும் | 5 |
| 3. | எழுத்தில் எதனை எளிமைப்படுத்துவது? | 9 |
| 4. | சாதீயம் எழுப்பிய சிந்தனை | 11 |
| 5. | மணிமேகலை - காப்பியநலன் | 15 |
| 6. | கனவோ! இது நனவோ! | 21 |
| 7. | யோகக்கலை - நவீனயுகத்தின் மருத்துவம் | 23 |
| 8. | பெண்மையரசு | 38 |
| 9. | பெண்ணின் மாண்பும் பெண்மை நலன்களும் | 42 |
| 10. | 'சூல் கொண்ட எழுத்துமுகில்' பால. வைரவநாதன் - அணிந்துரை | 71 |
| 11. | கவிஞர் பு. நிஸாந்தின் 'பனி விழும் இரவுகள்' கவிதைத் தொகுப்பு - அணிந்துரை | 75 |
| 12. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழ்ப் பண்பாடும் | 79 |
| 13. | பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து தருமம் -96 | 82 |
| 14. | இந்திய காங்கிரஸ் வளர்ச்சியில் சில போக்குகள் | 87 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி


| | | |
|---|---|---|
| 15. | தமிழர்களின் கல்வித்தரம் | 91 |
| 16. | விழுமியக் கல்வி பற்றிய கூர்த்த சிந்தனைகள் | 103 |
| 17. | விழுமியக் கல்வியின் பயன்கள் | 116 |
| 18. | தற்காலக் கல்விச் சிந்தனைகள் | 128 |
| 19. | வாழ்க்கை விழுமியங்களும் | 140 |


## சுதேச மருத்துவம் / தமிழ் மருத்துவம்


| | | |
|---|---|---|
| 20. | சுதேச தமிழ் மருத்துவ இலக்கியமான பரராசசேகரத்தின் யாப்பியற் கவிதை வளம் | 172 |
| 21. | இன்றும் நடைமுறையிலே பயன்படும் தமிழ் மருந்துகள் குறித்த இலக்கியச் சான்றுகள் | 177 |
| 22. | சுதேச தமிழ் மருத்துவ நூல்கள் | 195 |
| 23. | ஈழத்துச் சுதேச மருத்துவ நூல்களுள் முதன்மையானது பரராசசேகரம் | 216 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# கலை, இலக்கிய ஆக்கத் திறன்கள்

## ஒரு நோக்கு

கலைகள் மக்களது உணர்வையும், சிந்தனையையும் ரசனையையும் கற்பனையையுந் தூண்டிவிடும் தன்மைகளைக் கொண்டவை. உணர்ச்சி வசப்படும் தன்மையையுந் தரவல்லன. கலைச் சாதனங்கள், பெருவாரியாகவும், பெருமளவிலும் செப்பமான முறைகளிலும், பரந்து விரிந்து கிடக்கின்றன; கிடைக்கின்றன. மலர்ந்திருக்கும் பூ காலைச் சூரியோதயம், பறவைகளின் உலாவல், மரஞ்சடி கொடிகளின் இலைகள், கொப்புகள், கிளைகளின் அசைவுகள், மிருகங்களின் அசைவியக்கம், குருவிக் கூடுகள், வீடுகள், மலைகள், ஆறுகள், அருவிகள், குளங்கள், கடல், வான், மண், விண், முகில், ஆலயங்கள், வாகனங்கள், தெய்வ விக்கிரகங்கள், வர்ணப் பூச்சுகள், ஆண் பெண் மனித வர்க்கத்தினர், குழந்தைகள், மழை, இருட்டு, நிலவு இசை, சிற்பம், ஓவியம், நடனம், கட்டடம், சிரிப்பு, அழுகை, மரணம், ஊர்வலம் என்ற அனைத்திலுமே 'கலைத்துவம்' என்பது பொதுளியுள்ளன. உலகம் உருண்டை என்பதும் சூரியப் பிரகாசம் என்பது கூடக் கலைகளிலேயே அடங்கும். மருத்துவம் என்பதும் ஒரு பெருங்கலையேயாம். சோதிடம், விஞ்ஞானக்கலை என்றும் கூறும் வழக்காறுண்டல்லவா? அறிவுக்கும் மனதிற்கும் அனுபவத்திற்கும் இடந்தரும் தன்மை கலைகளுக்குண்டு. இயற்கையின் படைப்புகள் கலைத்துவமிக்கனவென்பது காணத்தக்கது. ஆக, கலைத்துவ மேதாவிலாசமென்பது அதனைச் சுவைப்போன் பெறும் இன்பத்திலேயே தங்கியுள்ளது. இங்கு கலைக்கும் கலைஞனுக்குமுள்ள அத்யந்தத் தொடர்பு துலக்கம் பெறுகிறது.

கலையின் பரிணமிப்பு, கலையில் எழுச்சி, கலைப் படைப்புகளின் நுட்படும் பற்றிய அறிவு, கல்வி, அனுபவம், வாசகனொருவனது உணர்வு நலனை, ஆக்கத்திறனை, படைப்பு நுட்பத்தை மேன்மையுடையதாக்குமென்பது அனுபவ உண்மை. காட்சியறிவையும் கருத்தியலறிவையும் கோட்பாட்டு நோக்கையும் ரசனை முறை நயப்பையும் நல்குந்திறன் கலைகளுக்குண்டு. கலா விமர்சகர்கள், ஆக்க இலக்கியப் படைப்பாளிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பிகள், இசைவாணர்கள், கற்பனையிலே ஓவியம் தீட்டும் ஓவியர்கள், எழுத்துவாண்மை மிக்க படைப்புப் பிரம்மாக்கள், மேதைகள், சிந்தனை யாளர்கள், விமர்சகர்கள் அனைவரும் கலை பற்றிய பிரக்ஞையும், கலா பூர்வமான நோக்கும் கொண்ட வர்களென்பது போதரும். கலை பற்றிய பன்னெடுங்காலத்துச் சிந்தனைத்தடம் நம்மனக் கண்முன் விரிகிறது. பழம் பெரும் நாகரிகங்களிலேயும், மூடுண்டு கிடக்கும் புவி மேற்பரப்பில் ஆழப்பகுதியிற் கிடக்கும் நாகரிகங்களினதும் இடிந்த கட்டடங்களினதும் சிலைகளினதும் தொல்பொருட் சின்னங்களினதும் கூறுகள், சிதைவுகள், கண்டுபிடிப்புகள் என்பன கலைத்துவப் பெறுமானங் களைப் புதிது புதிதாகவே நல்கவல்லன. விக்கிரகவியல், நாணயங்கள், மட்பாண்டங்கள், அழிந்த நகரத்தின் எச்சங்கள் கலைக் கொள்கையை விசாலித்து நம்மை வியப்பார் வத்திலாழ்த்தும் பெற்றியன.

கல்லிலும், மண்ணினாலும் மரத்தினாலும் அமைக்கும் கலைகள் ஒரு வகையின. மனிதனிடத்திலே இயற்கையாயுள்ள குரலினாலமையும் இசை வளம், குரல் ஓசை, சங்கீதம் என்பன பிறிதொரு வகை. மொழியையும் சிந்தனையையும் கற்பனையையும் எண்ணங்களையும் அடிப்படையாகக் கொண்டு புனையும் புனைவுகள் பிறிதொரு வகையானவை. அழகுணர்ச்சியும் நயப்புணர்வும் வாசனை விருப்பையும் நல்க வல்லவை படைப்பிலக் கியங்கள். வெறுமனே காட்சியனுபவத்தில் கண்டு விட்டுப் போய்விடும் தன்மை இலக்கியக் கலைக்கு இல்லை. இலக்கிய விமர்சனம்,இலக்கியத் திறனாய்வு, இலக்கியச் சிந்தனை என்பதில் 'எண்ணங்களின் விரிவு' தொக்கி நிற்கிறது. வளர்ச்சிப் படிநிலை தென்பட வேண்டும் உயர்ச்சியான வளர்ச்சிக் கான நிலைமை ஏற்பட வேண்டும். மரங்களிலே உயர்வான மரம் நிற்பது போல, மலைகளில் மிகவுயர்ந்த சிகரங் கொண்டவை உலகப் படத்திலே குறிக்கப்பட்டிருப்பது போல, நீண்ட ஆறு, உயர்ந்த மனிதன், பருப்பமுள்ள- எடையுள்ள மனிதன் கண்டு பிடித்துக் கூறப்படுவது போலவே 'எண்ணங் களின் உயர்ச்சி'யை மெய்ப்பித்து வெளிப்படுத்துவது இலக்கியக் கலை யாகும். அதனால்தான் படைப்பாளி, எழுத்தாளன், நூலாசிரியன், சஞ்சிகை யாசிரியன், திரும்பத் திரும்ப மீட்டுருவம் செய்யப்படுகிறான். ஏனெனில் 'சிந்தனையின் விரிவாழம்' விளக்கமுற விளக்கமுற எழுத்தாளன் பெரும் நேசிப்புக்குரியவனாகிறான். படைப்பு நிலையில் கௌரவம் பெறுகிறான். நேசிப்புக்குள்ளாகிறான். கல்வியும், அறிவும், சிந்தனையும் கணத்துக்குள் கணம் மாற்றமடைந்து வளர்ச்சி நிலையை எய்தும் வேளைகளிலெல்லாம் மனதிற்கும் அறிவுத் தேடலுக்கும் 'தீனி' வேண்டப்படும். அத்தீனியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்குவன இலக்கிய எழுத்துருவாக்கங்கள் தான். இவ்விடத்திலே ஒரு நிகழ்முறையை - மாறும் புதிய போக்கையும் - மனங்கொள்ளல் அவசிய மாகும். கொள்கைகளும், கோட்பாடுகளும், ஆசிரியனது - எழுத்தாளனது படைப்பில் வெளிவரும் கணமும் எப்பொழுதும் மாறுபடத்தக்கதென்ற பேருண்மையே அதுவாகும். இலக்கியக் கலையின் நுட்பமான நோக்கு இதில் அடங்கும். காலத்தின் பின்னணியில், காலத்தின் தன்மைக்கேற்பவே இலக்கியத்தின் பாடுபொருள், உள்ளடக்கம் இயலும். இம்மாற்றம் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய கலைகளுக்கு பொருந்தாதென்றே குறிப்பிடலாம். 'காதல்' என்னும் உள்ளடக்கம் கவிதையிலும் சிறுகதைகளிலும், நாவல்களிலும் நாடகங்களிலும் திரைப்படத்திலும் கட்டுரைகளில் இடம்பெறுவதுண்டு. தமிழிலக்கிய மரபில் புதுமை காணும் எழுத்தாளர்களில் அநேகர் இக்காதலை முதன்மையாகவே கைக்கொண்டு படைப்பிலக்கியம் செய்கின்றனர். அது வற்றாத உள்ளடக்கம்தான்; அதன் விகசிப்பும் வண்ணங்களும் ஆளுக்காள் வித்தியாசமானதும் கூட. ஒரு சிறிய உணர்வலையை, சபலத்தை, சலனத்தை ஏற்படுத்தவல்ல இந்த உள்ளடக்கம் பற்றிய சர்ச்சை - வாதப் பிரதிவாதம் - இன்று இலக்கிய விமர்சன உலகிலே றோறொரு புதிய பரிணாமம் பெற்று விட்டதென்றே எண்ணத் தோன்றுகிறது. காதலிலே 'பெண்' என்பவள் முதன்மை பெறும் நிலை ஒரு காலத்திலிருந்தது. இன்றைய பெண்ணிலை வாதிகளின் ஆக்ரோஷமான கோஷம் 'பெண்' உடலால், உணர்ச்சியால், பாலியல் தன்மையால், மனவோட்டத்தால் 'வேறுபட்டவளாகிவிட்டாள்' என்பது. இது இலக்கியம், சமூகம், எதிர்காலம், வளர்ச்சி நிலை, கலைக் கொள்கை, இயற்கை நியதி, யதார்த்தம் என்பவற்றை மறுதலிக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா, ஆகவே எது சரியான - தெளிவான - உறுதியான உண்மையான 'தடம்' ஏன்பதனைக் கண்டு காட்ட வேண்டிய தேவை கலாவிமர்சகர்களுக்குத் தான் உண்டு. ஆயினும் முடிந்த முடிபுகள் என்று ஒன்றில்லை! காலமாறுதல்களுக்கேற்பக் கருத்தோட்டங்களும் மாறு படும் என்பதே நியதி. விதிகள் தான் சரி என்பதுமில்லை. விதிகள் மீறப் படுவது மிகச் சரி என்றில்லை என்பதனாலேயே உறுதிபட நெஞ்சிருத்திக் கொள்ள வேண்டியுள்ளது. உடைந்த உள்ளங்களினது வக்கிரம் - வன்மம் - வசை - வாண்மை பொதுநியதியுமல்ல; சிறப்புக் கோட்பாடுமல்ல. அளவை யீடு செய்வதில் மதிப்பீடு பண்ணுவதில் தடம் - நிலை தவறாதிருத்தல் நன்மை தரத்தக்கது. **உண்மை புனிதமானது. விரும்பியவர்கள் விரும்பிய வாறு வியாக்கியானஞ் செய்யலாம்.** ஆயினும் உண்மையைச் சாகடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை வருந்தத்தக்கது; வெட்கப்படத்தக்கது; அங்கீகரிக்க முடியாதது; ஆதரிக்கப்படவும் முடியாது என்பதே இலக்கிய விமர்சனத்தின் உயர் கொள்கை.

இலக்கியக் கலையில் மொழியின் பங்குப் பணி மிகப் பெரிது. மொழியே கருத்துத் தொடர்பை வாசகனிடத்திலே ஏற்படுத்துவது இன்று மொழி நடையின் வகைமைகள் ஆக்க இலக்கியங்களினூடே அபரிமிதமாகவே பெருக்கெடுத்து ஓடுகின்றன. எனினும் எது சிறந்தது; என்று காணும் தர நிர்ணயம் என்று ஒன்று இல்லாமற் போக முடியுமா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது. மொழியியலாளர்கள் கூறும் பேச்சு மொழி, எழுத்து மொழி, கிளை மொழி வகைமைகள் குறித்த சிந்தனைத் தெளிவும் இலக்கிய வாசகனுக்கு அத்தியாவசியமானதெனினும் சராசரிச் செம்மொழி ஆக்கப் பண்பினை எழுத்துவல்லான் கொள்ள வேண்டும் என்பது சரியான கருத்தாகவேபடுகிறது. மொழியின் பொதுமையியல்புகள், இலக்கணப் பெறுமானங்கள், எழுத்து நடையின் இலட்சணங்கள், தாற்பரியங்கள் என்பன பற்றிய அக்கறை - பிரக்ஞை ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்கு - படைப்பாளிகளுக்கு இருக்க வேண்டுமென்பது அவர்களின் தனிமனித சுதந்திரத்திற் தலையிடுவதாகாது. எனவே மொழியைக் கருவியாகவும் தொடர்புச் சாதனமாகவும் கொண்டு உருவாக்கப்படும் படைப்பிலக்கியங்கள் தரமும், தீரமும் திட்பமும் நுட்பமும் பயனும் பக்குவமுமானதாக அமைவது வரவேற்புக்குரியது. இலக்கியக்கலை நின்று நிலைக்கும் ஆவணமாகும். எழுத்துருவாக்கம் என்பது உன்னதமான பெரும்பணி. எங்கு செல்கிறோம் என்று சிந்திப்பதுதான் இன்றைய அவசர தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# மொழியும் வானொலியும்

'வானொலி' ஒரு வாய்மொழிக் கருவி. டெலிவிஷன் என்று அழைக்கப்படும் 'தொலைக்காட்சிப்பெட்டி' ஒரு கட்புல, செவிப்புலக் கருவி. இருபதாம் நூற்றாண்டின் ஈடிணையற்ற சாதனங்களாக விளங்குபவை இவை. இவற்றின் மூலம் மக்கள் பெறும் பயன்கள் பல. அவற்றுள் ஒரு சிலவற்றை நோக்குதலும் இக்கருவி பயன்பாட்டினால் ஏற்படும் சமூக மாற்றம், வளர்ச்சி பற்றி அறிதலுமே இக்கட்டுரையின் நோக்கமாக அமையும்.

'Mass Communication' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் வாக்கியத்திற்கு 'மக்கள் தொடர்பு' என்று தமிழ்ப் படுத்தலாம். சாதாரணமாக ஒருவர் பிறறொருவருடன் தொடர்பு கொள்ளுதலையும் மக்கள் தொடர்பு என்றுதான் கூறுகிறோம். ஆனால் தொடர்பு கொள்ளும் இருவரையோ அல்லது பலரையோ நேரடியாகவே, கண்முன்னே நிதர்சனமாக நிற்பாட்டித் தொடர்பு கொள்ளுதலே மக்கள் தொடர்பில் பிரதானமான அங்கம் எனலாம். அதாவது இரண்டு பேர் அல்லது இரண்டிற்கு மேற்பட்டோர் நேரடியாகவே உருவத் தோற்றத்தின் மூலம் மொழியைத் தொடர்புக் கருவியாகக் கொண்டு ஏற்படுத்தும் உறவையே இங்கு மக்கள் சனத் தொடர்பு என்று குறிப்பிட்டுள்ளேன். மக்கள் தொடர்பு இயல்பாகவே எவ்விடத்திலும் எக்காலத்திலும் எச்சூழ் நிலையிலும் ஏற்படக்கூடியது என்பதை மட்டும் தற்போது மனங் கொள்வோம்.

மக்கள் தொடர்பு என்பதற்கு நேர்மாறாக இயங்கத் தகும் கருவிகள் தான் வானொலியும், தொலைக்காட்சிப் பெட்டியுமாகும். இவற்றிலே தொலைக்காட்சிப்பெட்டியில் பங்குகொள்ளும் ஒருவரையோ அல்லது பலரையோ கண்ணால் காண்கிறோம். ஆனால் அவரோடு - அக்காண்பவரோடு நாம் (பார்ப்போர்) நேரடியாகவே கதைப்பதில்லை. உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதில்லை. எனினும் தோற்றம், உருவம் கண்முன் தெரியத்தக்க நிலையிலே நிகழ்வுகளை அவதானித்தல் மூலம் பயன்பெறும் கருவியாகவே தொலைக்காட்சி கருதப்படுகிறது. வானொலிக்கருவி தொலைக்காட்சி என்ற கருவியில் நின்றும் சிறிது வேறுபட்டது. சிறப்புத் தன்மை கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமைகள் வளர்க்கக் கூடியது. இவ்வாறு எண்ணும்போது மிக முக்கிய மானதொரு அம்சம் என்னவெனில், வானொலியில் நிகழ்ச்சி தருபவரை நாம் நேரிலே கண்டுகொள்ள முடியாது. அதாவது வானொலி கேட்போர் (நேயர்கள்) நிகழ்ச்சியைத் தருவோனை (பாடகனாகலாம், பேச்சாளனாகலாம், கதாப்பிரசங்கியாகலாம், எவராகவிருந்தாலும்) கண்டு கொள்ளமாட்டார்கள். அப்பொழுது! கண்டறியாத ஒருவரது நிகழ்ச்சியை நாம் ரசிப்பது; உணர்வது; புரிந்துகொள்வது எப்படி? என்ற கேள்வி நிச்சயம் எழும். இந்தக் கேள் விக்குப் பலரும் பலவிதமாகத் பதில் தரமுடியும். ஆனால், கண்டறியாத ஒருவர் வானொலியிலே நிகழ்ச்சியைத் தரும்போது கேட்போர் எந்தவொரு மனநிலையில் இருந்து கேட்க வேண்டும் என்ற சில அறிவியல் பண்புகளை, துறைகளை எமக்குக் கற்பித்துத் தருவதாலேயே வானொலி என்ற கருவியைத் தொலைக்காட்சி என்ற கருவியைவிடச் சற்று முதன்மை வாய்ந்தது என்று காட்டினேன். உலக வழக்கில் ஒரு கேள்வி பொதுவாகப் பலராலும் கேட்கப் பட்டு வருவதொன்று. அதாவது, உருவமில்லாத அரூபியாகிய கடவுளைக் காட்டு பார்க்கலாம்? என்பதே அக்கேள்வி, இப்பொழுது நாம் ஒரு ஒப்பிட் டாராய்ச்சியைச் செய்து பார்க்கலாம். அதாவது வானொலியைக் கொண்டு எப்படி ஒருவன் தனது கலைகளை, கற்பனைகளை, கண்ணியத்தை, கவனத்தை வளர்த்துக் கொள்கின்றானோ அப்படித்தான் அரூபியாகிய கடவுளைக் காணமுடியும் போது தனக்குள் பல கோடி ஆற்றல்களை மேதாவிலாசங்களை மெய்ஞானங்களைப் பெற்றுக்கொள்கிறான். இது மிகவும் பிரதானமான தொரு பணியாகவே இன்றைய நிலைகளில் கொள்ளக் கிடக்கிறது.

சரி, வானொலி என்ற கருவி தரும் நிகழ்ச்சி எப்படிப்பட்டது? அது வழங்கும் அறிவு எத்தகையது? அதனால் சமுதாயம் பெறும் நலன் என்ன? இன்று அதற்குரிய இடம் என்ன? என்பன போன்ற வினாக்களை எழுப்பினால் ஓரளவு இச்சாதனத்தின் பண்பையும் பயனையும் அறிய முயற்சித்தவர் களாவோம்.

வானொலி என்ற கருவி உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் அவ்வவர்களின் விருப்பங்களுக்கும் கொள்கைகளுக்கும் மதசார்புகளுக்கும் வாழ்க்கை முறைமைகளுக்கும் பயன்தரும் வகையில் பணி செய்ய வேண்டிய தொன்று. பொதுவாக ஒரேயின மக்கள் வாழுகின்றவொரு தேசத்தில் வானொலியின் பயன்பாடு செயற்பாடு வெகு இலகுவாக முடிந்துவிடும். ஆனால் பல்லின மக்கள் மதங்கள் ஒருங்கே வாழும் ஒரு தேசத்தில் வானொலி யின் பயன்பாடு மிகவும் சிக்கலானது; பிரச்சினைகளை உருவாக்க வல்லது. ஆனால் ஒரு சிறந்த ஒலிபரப்பாளன் இத்தகு சிக்கல்களுக்குள் தன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்படுத்திக் கொள்ளாது பரந்தவொரு சிந்தனைத் தடத்தில் நின்று பொது மக்கள் விரும்பும் நிகழ்ச்சிகளை வானொலி மூலம் வழங்கவேண்டும். அப்போதுதான் பல்லினத்தவரும் மாறுபட்ட கலாசாரமுடையோரும் கிரகித்துக் கொள்ளக் கூடியதாக வானொலி அமைய முடியும். அதுவே வானொலி பற்றிய மிகவும் நுணுக்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய குறிப்பாகும்.

வானொலியின் பயன்கள் பல எனினும் பிரதான பயன்கள் மூன்று எனலாம். அவையாவன

1. தகவல்
2. கல்வி
3. பொழுதுபோக்கு, மகிழ்வூட்டல்

என்பன.

இவற்றில் ஒன்றையேனும் தரவில்லையானால் வானொலியினால் யாதொரு பயனும் இல்லை. எனவே இதன் பயன்பாட்டில் மனிதகுலம் பெறத்தக்க பலன்கள் முன்னேற்றகரமானவை என்பது புரியும்.

இப்பொழுது வானொலியில் பெறும் தகவல், கல்வி, மகிழ்வூட்டல் என்பன பற்றி மிகவும் சுருக்கமாகப் பார்க்கலாம். தகவல் என்பது உலகில் நடைபெறும் சம்பவங்களைப் பற்றிய உடனடித் தகவல்கள் என்று ஒரே வசனத்தில் கூறலாமாயினும் அவை பற்றி விரிக்கின் பெருகும். விரிவஞ்சிக் கல்வி பற்றி அடுத்துப் பார்ப்போம். வானொலியில் கல்விச்சேவை நிகழ்ச்சி தான் கல்வியை வளர்ப்பதற்கான காரணமென்றும் நினைத்து விடவேண்டாம். வானொலி பெரியார்களுக்கும் சிறார்களுக்கும் கல்வியை ஏககாலத்தில் கொடுக்கின்றது. கல்வி என்ற துறையினை வளம்படுத்தும் நிகழ்ச்சிகளே வானொலியில் அதிகம் இடம்பெறுகின்றன என்று கூறினால் அது பிழையல்ல. ஆனால் இன்றைய இளைய தலைமுறை கொண்டுள்ள சினிமா ரசனை மோகம் சற்றுப் போட்டியைக் கொடுத்த போதிலும் வானொலியைப் பொறுத்த மட்டில் அதன் மாண்புமிகு பயன்பாடு அறிவை வளர்த்தல் என்பதேயாகும். அந்த வகையில் பேச்சுக்கள், உரையாடல்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள், போட்டிகள், சிறுவர் நிகழ்ச்சிகள், உரைச் சித்திரங்கள், நூல் விமர்சனங்கள், கதாப் பிரசங்கங்கள், வில்லுப்பாட்டுகள் என்பன வானொலி மூலமாகவே கல்வித்துறையையும் கலைத்துறையையும் வளர்ப்பனவாகும். மூன்றாவதாக இடம்பெறும் மகிழ்வூட்டல் என்னும் அம்சம் ஒருவனை நல்ல கலாரசிகனாக மாற்றுகிறது. இவை பற்றிய அறிவை ஏற்படுத்துகிறது. அத்தகு பணியிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியத்தகு சாதனைகளை வானொலியினால் சாதிக்க முடியும். இந்த மூவகைப் பயன்பாடுகளையும் வானொலி என்ற கருவியில் நல்ல முறையில் கொடுப் பதற்கு வானொலிக் கலைஞர்கள் பயன்படுத்தும் கருவிகள் இரண்டே இரண்டு தான் அவற்றில் ஒன்று, மொழி, வாய்மொழி, இரண்டாவது வாத்தி யங்கள் ஆகும்.

மொத்தத்தில் பார்த்தால் வானொலி ஒரு மொழிக் கருவி என்று கூறலாம். மொழியைக் குழைவுகளுடனும் கனிவுகளுடனும் நெளிவு சுளிவுகளுடனும் கர்னகடூரத்துடனும் பாவம் அறிந்து பயன்படுத்தும் போது கேட்போன் பயனுறுகிறான். அது மட்டுல்ல கேட்போனுக்கு இதமூட்டுவதற்காக ஏனைய வாத்தியக் கருவிகளையும் பயன்படுத்துகிறான். வானொலி ஒருவனை அறிஞனாக்கும், கலைஞனாக்கும், கவிஞனாக்கும், கலா ரசிகனாக்கும்.

***(நன்றி: 'இனமுழக்கம்' 'தமிழ் இலக்கியக் கழகம்'***
***ஆசிரியர்: அனலை செழியன், 21 கடற்கரை வீதி,***
***யாழ்ப்பாணம் ,வெளியீடு - 1980)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## எழுத்தில் எதனை எளிமைப்படுத்துவது?

நாவலாசிரியன் தனது நாவலை எழுதி முடிக்கிறான். அவன் பொது மக்களிடம் 'கரு'வைக் கேட்பதில்லை. ஆயினும் மக்கட் சமூகத்தின் நடை முறைகள், சம்பவங்கள் நாவலாசிரியரிடத்திலேயும் கதையின் பின்னலை நிர்ணய மாக்குகின்றன. இதனால் நாவலாசிரியரினது படைப்பு பிறரையும் ஈர்த்து, புரியும் படியான ஒரு தன்மையில் அமைந்து ஜனரஞ்சக நாவற் பண்பினுக் குட்பட்டு விடுகிறது. இது இன்றைய இலக்கிய வடிவங்களுள் ஒன்றாகத் திகழும் நாவல் பற்றிய சிந்தனைகளோடு பெறப்படும் எளிமை வாதம் பற்றியதொரு கருத்தாகும். அதாவது நாவல் நிச்சயம் பிறருக்கு விளங்கும் படியாகத்தான் எழுதப்படல் வேண்டும். அப்படியானால் ''எதை எளிமைப் படுத்தல் வேண்டும்'' என்பதுதான் கேள்வி.

விடயத்தை எளிமைப்படுத்துவதா? அல்லது எழுத்திலாயின் மொழி நடையில் எளிமையைப் புகுத்துவதா? அல்லது பொதுசனத் தொடர்பு சாதனங்களிலே எழுதும்போது எளிமையைக் கொள்ள வேண்டுமா? என்பன போன்ற வினாக்கள் நம்முன் எழுகின்றன.

இப்பிரச்சினையில் இன்று மொழிசார்ந்த, இலக்கியம் சார்ந்த துறைகள் மட்டுமன்றி, ஏனைய அறிவியற் துறைகளில் ஆய்வு செய்வோரும் தமது பார்வையினைக் கூர்மையுடன் செலுத்துகின்றனர். இக்கட்டத்திலே தான் 'எளிமை' என்றால் எத்தன்மையானது? என்ற வினாவெழுகிறது.

தமிழிலக்கியத்தில் எளிமை வாதம் உரைநடையின் தோற்றத்தோடு ஆரம்பிக்கிறது. அகத்தியத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் இறையனார் களவியலுக்கும் உரைகள் எழுதப்பட்ட கட்டமே எளிமைப் பண்பின் முதற் கட்டம். எனவே இலக்கியப் படைப்புகள் விளங்கும் படியாக எழுதப்பட வேண்டுமா? என்பதிலேயே இச்சிக்கல் சர்ச்சைக்குள்ளாகிறது. எனவே இப்பிரச்சினைக்குத் தீர்வும் ''தமிழ்த் துறையினது'' ஆய்வுப் பரப்புக்குள் ளேயே வந்தமைந்து விடுகிறது. ஆகவே, மொழியின் எளிமைப்படுத்தப் படும் பண்பென்பது, மொழி வளர்ச்சியின் வரலாற்று ரீதியான தன்மை களினூடாகவே கண்டு தரிசிக்கப்பட வேண்டியது. மொழி வளர்ச்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான கட்டம் 'உரையாசிரியர்களின்' காலகட்டம். சேனாவரையர், இளம் பூரணர், தெய்வச் சிலையார், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் போன்றோரே எழுத்தில் எளிமையைப் புகுத்திய முன்னோடிகள், அத்துடன் கருத்துக் களையும் எளிமைப்படுத்திய தத்துவவாதிகள், கோட்பாட்டாளர்கள் இவ்வடிப் படையில் ஈழத்தில் 'நாவலரது' உரைநடைப் பணி விதந்து குறிப்பிடப்பட வேண்டியதொன்று.

இன்னும் ஒரு படி ஆழமாகச் சிந்தித்தால் மொழியும் மதமும் தமிழில் இணைந்துள்ள பக்குவம் கண்டின்புற வேண்டியதொன்று. தமிழ் கரடுமுரடான மொழியல்ல. இனிமையும் குழைவும் கனிவுமுடைய செந்தமிழ் வழக்கு களைக் கொண்டமைவது.

போதனை, குருகுலக் கல்வி, உபதேசம் புகட்டுதல், பயிற்றுதல், அற முறைத் தருளல் என்ற சைவ சித்தாந்தத்தோடு தொடர்புகொண்ட சொற்கள் 'எளிமை' பற்றிய கருதுகோள்களையுள்ளடக்கியனவே.

இதனை மீறும் - மறுதலிக்கும் - 'அறிவிலக்கிய மேதாவிகள்' மத்தி யிலேயே எளிமைப்படுத்தல் என்பது சிக்கலாக்கியுள்ளது. ஆயினும், 'எழுத்துச் சீர்திருத்தம்' இந்திய தமிழ்நாடு மாநில அரசினால் சட்டபூர்வமாக்கப்பட்டமை போன்று 'கடினமாக - விளங்காமல் எழுதாதீர்கள்' என்று சட்டம் கொண்டுவர முடியுமா? அச்சட்டமுந்தான் தேவைதானா?

மொழியின் பணியும் - எழுத்தின் பணியும் மக்கட் பணியாகிவிடும் போதுதான் கௌரவமும் மதிப்பும் அவதானிப்பும் பெறுகின்றன. அறிவுலகம் தனது கண்டுபிடிப்புக்களால் மனுக்குலத்தை வாழ்விக்க வேண்டும். ஆகவே எளிமையுடன் - விளங்கக் கூடியதாகவே எழுத வேண்டும்.

***(நன்றி - ஈழநாடு, 21.12.1985)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## சாதீயம் எழுப்பிய சிந்தனை

தமிழிலக்கியம் பற்றிய நோக்கிலே நாம் மிகவும் முக்கியமான மூன்று பணிகளை அறிந்தோ அறியாமலோ மேற்கொள்கிறோம்.

சென்னைக் கிறிஸ்தவ இலக்கியக் கழகத்தினர் நடத்தி முடித்த கருத் தரங்குக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்கள் இரண்டு பார்வைக்குக் கிடைத்தன.

(1) தற்காலத் தமிழிலக்கியத்தில் சாதீயமும், வறுமையும்

(2) தற்காலத் தமிழ் இலக்கியத்தில் முற்போக்குக் கருத்துக்கள்

இந்நூல்களை வாசித்ததன் அருட்டுணர்வால் சில கருத்துக்கள் தோன்றின. அவற்றை எழுதுதல் பயனுடையதாகலாம். ஆயினும், இக்கட்டுரை அந் நூல்கள் பற்றிய விமர்சனமல்ல.

நவீன தமிழிலக்கியத்தின் பிரதானமான பண்புகளிலே ஒன்று புதிய சொல்லாட்சிகளைப் பயன் செய்தலாகும். இன்றைய இலக்கிய உலகில் கவிதைகளும் நாவல் சிறுகதைகளும் புதுச் சொற்பிரயோகங்களில் பெய்து எழுதுவனவாகவே தோற்றம் பெறுகின்றன. முன்பு வழக்கிலிருந்த சொற்கள் இன்று அருகியே வருகின்றன. இன்னுமொன்று வாழ்வியல் அனுபவம் மாறுபட்டு வருவதுமாகும். மேலும் இலக்கிய ஆக்கம் சமூக நடைமுறை சார்ந்து விளங்குகையில் அதன் உள்ளடக்கமும் புதுமை கொண்டதாக அமைவது இன்று நாம் காணும் யதார்த்த நிலையாகும். தமிழினது வளர்ச்சி யையும் தமிழ் பயிலும் முறைமையையும் அறியாத பாலர்கள் புதிய பிரயோகங்களைச் சொல்வதும் பயில்வதுமுண்டு. மழலைச் சிறுவர்களது வாயிலே காணுகிறோம்; ஆச்சரியப்படுகிறோம். அதனை ஆய்வுக்குட்படுத்து கிறோம். இது போலவே புதிய சொற்பிரயோகம் புதுமை இலக்கியத்திலே குறிப்பிடத்தக்கதொரு புதிய பண்பாகலாம். இந்தச் சிறுபிள்ளைப் பண்பாடு நினையாப் பிரகாரமாக உந்தி எழுந்து புதுமை செய்கிறதோ, அதே போலவே எவ்வித பிரயோசனமற்ற புத்தாக்கமும் இன்று பவனி வருவதை எழுத்திலும் பேச்சிலும் காணமுடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லடைவுகளை ஆய்வுக்காகக் கோவைப்படுத்துபவர்களது அனுபவம் புதுமை செய்வதாகவேயிருக்கும். பாரதியின் வரிகளை, வசனங்களைப் படிக்கும் எவரும் புதிய சொற்களை வசன அமைப்பை உணர்ந்து கொள்வார்கள். கவிதைப் புதுமை ஒரு புறம் வசன அமைப்புகள் மறுபுறமாகத் தமிழ்ப் புதுமை செய்து இலக்கியம் படைத்தவன் பாரதி. பாரதிக்கு முன் என்று பார்த்தால் செந்தமிழ்க் கவிதை மரபிலே புதுச் சொல்லாக்கமாகவே பழந்தமிழ்ச் சொற்களைக் கொள்ள வேண்டும். கற்றோருக்கு இன்பமும் இனிமையும் பயத்து மொழி வழி திருப்தியைத் தரக்கூடியது செஞ்சொற் கவிகளது சொல்லின்பம். அதுதான் மந்திரச் சொல்லின்பம். கலைக்களஞ்சியம், அருஞ் சொல்லாக்கங்கள், சொல்லடைவுகள் என்பன தமிழாய்வோனுக்கு எவ்வளவு தூரம் முக்கியமானதென்பதனை இவ்விடத்தில் சிந்திப்போம். தமிழிலக்கியம் பற்றி யாரேனும் பேசினால் அதனைக் கூர்ந்து செவிமடுக்கின்றோம் என்ற அம்சம் தொடர்புபடுத்தியுரைக்க வேண்டியது. பேசுகின்ற பொழுது பேச்சு ஓட்டம் கருத்தமைதி உண்டானபோதும், அவை நமக்கு நவீனம் பயப்பவையாகத் தெரியாது. ஆனால், ஒரு புதிய சொற்பிரயோகத்தை நமது செவி உள்வாங்கிவிட்டால், பேச்சாளனது நிலையானது நம்மால் மேன்மைப்படுத்தப்பட்டு விடுகிறது. பேச்சானது பலதரம் செவிமடுப் போனால் உயர்த்தப்பட்டுவிடுகிறது. ஜனரஞ்சகமான சொல்லடைவுகளை விடுத்து சாதீயம் போன்ற சொற்கள் இத்தகு சிறப்பை இன்று கொண்டு விடுகின்றன. இது நிதானமாகச் சிந்தித்தாராய வேண்டிய விடயமாகும்.

உரத்த குரலாக ஒலிக்க வேண்டியதொன்றுண்டு. அதாவது புதிய தமிழ்ச் சொற்பிரயேகம் பழந்தமிழ் சொல்லடைவு முறைமைக்கு மாறுபட்டுக் காணப் படுவதால் புதியவை விகாரப்பட்டு நிற்கின்றன என்ற கருத்தாம். இது விடயத்தில் இலக்கியகாரருக்கு இடையிலே மரபுப் போராட்டம் நிகழ்ந்ததுமுண்டு. மரபுவழித் தமிழறிஞர்களது கருத்தும் இதனையொட்டி ஓங்கி ஒலித்த வண்ணமேயுள்ளது. கல்வி மரபும் பண்பாட்டின் மாறுதலும், சொல்லினது வேரும் (Root) சிதைவுற்றுத் திசை திரும்பிப் போகிற காலகட்டத்தில், மேலாதிக்க நிலையிலே காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்பவும் முன்னுரிமைகளின் காரணமாகவும் புதிய பல சொற்கள் இலக்கியத்திலும் மொழியியலிலும் புகுந்துகொண்டு விடுவதுண்டு. இரு வேறு தமிழிலக்கிய நெறிகளை மறந்து விடக் கூடாது. தமிழைப் படிப்பதும் கேட்பதும் இன்று அருகிக் கொண்டே போகின்றன. எனினும், அண்மைக்கால மாற்றங்கள் சில இதுவரை காலமிருந்து வந்த முறைகளைச் சற்று நெகிழ்வித்தும் புதிய தடத்திலே பயிலுநர்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுநர்களையும் இட்டுச் செல்லக் கூடும். ஆக, இலக்கிய மயக்கம் நீங்கி விழித்தெழ வேண்டும் நமது தமிழ்க் கல்வியுலகு.

இலக்கியத்தினைத் தொழிலாகக் கொண்டோரும், இலக்கிய இன்பத்தை நாடுவோரும், இலக்கியப் படைப்பாளியும், இலக்கிய ஆய்விலே ஈடுபாடு கொண்டோருமே நுணுக்கமான பார்வையினைச் செலுத்தி அதிலே அறிவுக் கூர்மை பெற விழைபவர்களாகலாம். இன்று இலக்கியத்துக்காகவே வாழ் வோர் மிகக் குறைவு. ஒரு சிலர் தாம் போற்றற்குரியர். நாம் பேசும் மொழி யாயிற்றே நமது பண்பாடு, கலாசார நிலைமைகளுக்கெல்லாம் அடிநாத மாயிற்றே என்று பற்றுறுதி கொண்டு மொழியையும் மொழியிலே உண்டான படைப்புகளையும் நேசிப்பவர்கள் அநேகர் உள்ளனர். இக்கருத்துத் தனித்துத் தமிழ் மொழிக்கு மட்டுமே உரியதொன்றல்ல. எம்மொழியிலக்கிய நடை முறையைப் பாரத்தாலும், அவற்றிலே பெரும்பான்மையானோர் செழுமை குன்றாத தத்தமது மொழிப் பண்பாட்டினையும் நேசிக்கின்றனர். வளர்க் கின்றனர். இப்பண்பு தமிழ் மொழி இலக்கியப் பரப்புக்கு வலுவளிப்பதாக உள்ளது. இச்சந்தர்ப்பத்திலேதான் நாம் இன்று ஆய்வுக் களத்தில் முதன்மை பெற்று விளங்கும் சமூகச் சார்பு பற்றிய கருத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும்.

கல்விமான், அறிஞன், ஆய்வாளன் என்பவன் சமூகத்தின் பிரதிநிதி யாகவே திகழ்கிறான். ஆய்வும் ஆய்வினால் பெற்ற உயர்வும் பேறும் சமூகத்தினது நிலைக்களமான தன்மைகளை வலியுறுத்தி நிலைநிறுத்துவதாக அமைதல் வேண்டும். இதுவே கல்விப் பணியின் பண்பும் பயனுமாகக் கருதத்தக்கது. உயர் ஆராய்ச்சியின் முதல் நோக்கம் சமூக நிலைக்களத்தினை உறுதிப்படுத்துவதேயாம். இதனை எவருமே மறுதலித்தலியலாது.

ஆக இலக்கியக் கல்வி, இலக்கிய ஆய்வு, இலக்கிய ஆக்கம் என்பன வெல்லாம் சமுதாய மெய்களாக அமைவதோடு 'சமூகநலம்' பேணும் கருதுகோளையும் முடிவுகளையும் பெரும்பான்மை கொண்டு திகழவேண்டும் என்பதுதான் பொதுவிதியாகலாம். எனவே சமூகச்சார்பென்பது எழுத்தாளன் (படைப்பாளி) சார்ந்துள்ள சமூகச்சார்போ அல்லது விமர்சன உரைகளின் போது விமர்சகரது சமூகத் தனித்துவமோ அல்ல என்பதனை மனதிலே நிலைநிறுத்திக் கொள்ளல் வேண்டும். இக்கருத்தினை இன்னும் சற்று ஆழமாக விளங்கிக் கொள்ள வேண்டுமெனில், கல்விப் பயிற்சி பற்றிய பின்னணித் துணையுடன் விளக்கலாம். அதாவது தனி மனித வரலாறு பற்றியும் இலக்கிய கர்த்தாக்களது வாழ்க்கை வரலாறு பற்றியும் பூரண அறிவுடனும் ஞானத் தோடும் வகுப்பறையிலே பயில்வோனுக்கு அறிவுயர் நிலையில் உயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை அறியச் செய்யும் பொழுது கூறப்படும் வியாக்கியானங்களும் எடுகோள்களும் சற்றுத் தெளிவுடன் கூறப்படுதல் வேண்டும்.

சாதாரண விடயமொன்றை விளக்கும் பொழுது தற்சார்பாகக் கூறுவது விடய விளக்கத்தின் 'உயர்வான பகுப்பொருளை' விளக்குதலாக அமையாது. அது விடயத்தின் உயிர் ஓட்டத்தையே அடித்து வீழ்த்திவிடும். இவ்விடத்திலே கூறுவோனது 'இலக்கிய ஈடுபாடு' என்பது அறிவுநிலை சார்ந்ததாக அமை யாது வெறும் உணர்ச்சி நிலை சார்ந்ததாகவே வெளிப்பட்டு விடுகிறது. 'தாம் கற்ற நூல் அளவேயாகும் நுண்ணறிவு' என அமைதிப்பட வேண்டிய நிலைதான். இது மிக மிக வருத்தத்தைத் தரும் செயலாகிவிடும். அறிவு நிலையிலே உண்மைகள் தெளிவுத் தன்மையுடன் வெளியிடப்படும் பொழுது (இலக்கியமாயின்) அதனின்றும் பேரின்பம் நுகர முடியும். மாறாகச் சிறிது களங்கப்பட்டுக் கூறுவோனது உணர்விலே மெல்லிய சார்பை உண்டாக்கி விடுமானால் அது விகாரமாகி விபரீத எண்ணங்களையும் கருத்துகளையும் உண்டாக்கிவிடும். இதில் இலக்கிய வாசகர்கள் அனைவருமே சிரத்தை கொள்ளுதல் வேண்டும். இதுவே இலக்கிய இன்பத்தின் திறவுகோல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# மணிமேகலை – காப்பியநலன்

மணிமேகலை, காப்பியத்தைச் சமயம் கூறப் பயன்படுத்திக் கொண்ட ஒரு நூலாகும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சோழன் பெருமை கூறித் தொடங்கியமை போன்றே சாத்தனாரும் தொடங்குகிறார். அரசனின் நால் வகைப் படைச்சிறப்பு.

*ஒன்றுவாள் மறவரும்;*
*தேரும் மாவும்*
*களிறுஞ் சூழ்தரக்*
*கண் முயசியம்ப*

என்று விழாவறை காதையில் சொல்லப்படுகிறது. சிலப்பதிகாரத்தைப் போலவே, மணிமேகலையிலும் கதைத் தலைவனை விடவும் கதைத் தலைவிக்கே சிறப்பு மிகுதி மணிமேகலை அரசனுடைய கடமையை நாட்டின் நல்லாட்சியில் அவனுக்குரிய பொறுப்பை வற்புறுத்துகிறது.

*கோல்நிலை திரிந்திடிற்*
*கோள் நிலை திரியும்*
*கோள்நிலை திரிந்திடின்*
*மாரிவறம் கூறின்*
*மன்னுயிரெல்லாம்*
*மண்ணாள் வேந்தன்*
*தன்னுயிரென்னும்*
*தகுதியின்றாகும்.* *(துயிலெழுப்பிய காதை)*

என்று அரசனின் செங்கோலின் பொறுப்பு உணர்த்தப்படுகிறது.

**அரசியற் காப்பியம்**

மணிமேகலையின் துறவினையே அடிப்படைக் கதையாகக் கொண்டுள்ள இக்காப்பியம் நெடுகப் பல மன்னர்களின் கதைகள் சொல்லப்படுகின்றன. ஆபுத்திரன், நல்வினைப் பயனால் புண்ணியராசன் என்ற அரசனாதல் நெடுங்கிள்ளியென்ற சோழ அரசன் பீலி வளையை மணந்தகதை, மணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேகலையில் பழம் பிறப்புத் தொடர்பாகச் சொல்லப்படும் அரச கதைகள் என்று சாத்தனார் அரசர் பலரைக் குறிப்பிடுகிறார்.

மணிமேகலைக்கு அரச குடும்பத்தோடு ஏற்படும் தொடர்பு கதையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அரச குடும்பத்தாருக்கு அறிவுரை கூறிய மணி மேகலை காஞ்சி நகருக்குச் செல்லும் பொழுது 'மந்திரச் சுற்றமொடு மன்னனும் விரும்பி' அவளைப் பணிந்து வரவேற்றதைக் காண்கிறோம்.

மணிமேகலை ஒரு சமய நூலாக இருந்தும் துறவறத்தைக் கருப்பொரு ளாகக் கொண்டிருந்தும், அது ஒரு காப்பியம் என்ற தன்மைக்கேற்ப, அரசர் களைப் பற்றிய செய்திகளையே மிகுத்துக் கூறுகிறது. மணிமேகலையின் காப்பியத் தலைவி கணிகையர் குலத்தைச் சேர்ந்தவள் என்ற குறை, அவள் அரச குலத்தைச் சேர்ந்தவள் என்பதில் நிறைவடைகிறது. பொதுவாகத் தமிழ்க் காப்பியங்களில் அரசியின் பங்கு மிக அதிகமாகவே விளங்குகிறது. இக்காப்பியங்களை ஒப்பிடும் பொழுது சிலப்பதிகாரத்திலும், பெருங் கதையிலும் அரசியல் கதையோடு இணைந்து சிறப்புறுகிறது. ஒப்பீட்டளவில் மணிமேகலையில் அரசியலின் பங்கு மிகக் குறைவு. சிந்தாமணி பல்வேறு அரசுகளைத் தழுவி அமையும் கதையமைப்பினைக் கொண்டிருந்தும் கூட, அக்காப்பியத்திலும் அரசியலின் பங்கு குறைவாகவே அமைந்துள்ளது. சூளாமணி ஒன்றே சுருக்கமான கதை அமைப்பிலும் அரசியலுக்கு மிகுந்த இடம் தருகிறது எனலாம். வள்ளுவர் கூறும் அரசியற் சிறப்புக்களை விரி வாகப் பேசுவது சூளாமணியொன்றேயெனலாம். காப்பியங்களிலே அரசி யலின் பங்கை ஒப்பிடும் போது, முதல் ஐந்து காப்பியங்களைச் சிலப்பதிகாரம், பெருங்கதை, சூளாமணி, சிந்தாமணி, மணிமேகலை என்று வரிசைப் படுத்தலாம்.

**மதப்பிரசார காப்பியம்**

மணிமேகலை முழுமையான சமயக் காப்பியம் என்று சொல்லத்தக்க அளவு தனித்தன்மை பெறுகிறது. காப்பியங்களில் சமயம் என்பதான நிலைமாறிச் சமய நூலில் காப்பிய இயல்புகள் என்று காணக்கூடிய அளவு மணிமேகலை ஒரு சமயக் காப்பியமாகவே திகழ்கிறது. பிற காப்பியங்களில் தலைமை மாந்தர் போராட்டங்களில் வென்று, மணமுடித்து, நல்லாட்சி நடத்தி வாழ்வு முடிவில் துறவறம் மேற்கொள்ளக் காண்கிறோம். மணிமேகலையோ, துறவு மேற்கொண்ட பெண்ணின் கதையாகிறது.

பாத்திரம் பெற்ற மணிமேகலை புத்த தேவனை வழிபடும் பகுதி, புத்த சமய வாழ்த்துப் பாடல் போன்றது. மணிமேகலையில் சாதுசக்கரன், அறவண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகள் போன்ற புத்த சமயத் துறவிகள் குறிக்கப் பெறுகின்றனர். புத்தர் அருளிய அறங்கள் பலவும் குறைந்துவிட்டன. ஏதோ இயன்றவரை புத்தரின் அறிவுரைகளைச் சொல்லி வருகிறேன் என்கிறார் அறவண அடிகள்.

*தருமத் தலைவன்*
*தலைமையில் உரைத்த*
*பெருமைசால் நல்லறம்*
*பெருகாதாகி*
*இறுதியில் நற்கதி*
*செல்லும் பெருவழி*
*அறுகையும் நெருஞ்சியும்*
*அடர்ந்து கண்ணடைத்*
*தாங்கு*
*உயிர்வழங்கு பெருநெறி*
*ஒரு திறம்பட்டது.* *(அறவணர்த் தொழுத காதை)*

புறமத கண்டனம் - மணிமேகலை வஞ்சிக்குச் சென்று சமயக் கணக்கர் தம் திறம் கேட்பதிலிருந்து காப்பியம் முழுமையும் சமயம் நோக்கித் திரும்பி விடுகிறது. அளவை வாதம், சைவ வாதம், பிரம வாதம், ஆசிவக வாதம், நிகண்ட வாதம், சாங்கிய வாதம், வைஷேடிக வாதம், பூத வாதம் ஆகிய பல்வேறு சமயக் கணக்கரின் கருத்துகளையும் மணிமேகலை கேட்கிறாள். சாத்தனார் ஒரு சமயத்தினைச் சிறப்பிக்க காப்பியம் இயற்றினாலும் பிற சமயங்களைப் பற்றியும் தெளிவாக அறிந்திருக்கிறார். மணிமேகலைக் காப்பிய முடிவில் மணிமேகலை புத்த தருமத்தை மேற்கொள்வது குறிக்கப்படுகிறது.

*புத்த தன்ம சங்கமென்னும்*
*முத்திற மணியை*
*மும்மையின் வணங்கிச்*
*சரணாகதியாய்ச் சரண்*
*சென்றடைகின்றாள்*
*பவத்திறமறுகெனப்*
*பாவை நோற்றனள்*

என்று காப்பியம் முடிகிறது. சாத்தனார், சேக்கிழாரைப் போலவே பிற சமயங்களை இழிவுபடுத்துகிறார்.

**மணிமேகலையில் கலைபற்றிப் பேசுமிடங்கள்**

பூம்புகாரில் ‘பேடு’ என்னும் கூத்தினைக் கண்டு நிற்பவரையும் மாளிகை களின் வரையப்பட்ட மிகச் சிறந்த ஓவியங்களைக் கண்டு நிற்பவரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் நமக்குக் காட்டுகிறார். சித்திரங்களில் பொருந்தியுள்ள தெய்வங்கள் பேசுவதை மணிமேகலையில் காண்கிறோம். நகர வருணனையில் நகரத்தின் கலைவளம்,

*பாணர் என்றிவர்*
*பல்வகை மறுகும்*
*வேத்தியல் பொதுவிய*
*லென்றிவ் விரண்டின்*
*கூத்தியல் பறித்த*
*கூத்தியர் மறுகும் மாதகர் சூதர்*
*வேதானிகர் மறுகும்* *(கச்சிமாநகர் புக்ககாதை)*

என்று காஞ்சி மாநகரம் ஆடல் பாடல்களால் நிறைந்திருந்ததாகச் சாத்தனார் விளக்குகிறார்.

**யோகமும் தியாகமும்**

சாதி சமய வேறுபாடின்றி எல்லோருக்கும், எல்லோரும் ஒவ்வொருவருக்கு மாக வாழ்ந்து இன்புற்ற நிலையினைச் சிலம்பும், மேகலையும் உணர்த்து கின்றன. ஒருமைப்பாட்டுக் கொள்கை இளங்கோ, சாத்தனார் காலத்தில் ஓங்கிப் பொலிவுற்றது. சாத்தனார் வணிக மரபைச் சார்ந்தவர். மணிமேகலை அருளைப் பற்றிக் கூறுவது, சிலம்பு பொருளைப் பற்றிக் கூறுவது; சிலம்பில் போகம்; மேகலையில் தியாகம்; சிலம்பில் பற்று; மேகலையில் விடுதலை. விடுதலையாவது துறவு. சிலம்பில் சிற்றின்பம். மேகலையில் பேரின்பம்.

**உடல் தத்துவம்**

உடம்பின் தத்துவத்தினையும் பிறப்பின் தத்துவத்தினையும் பேசுகிற காவியம் மணிமேகலை. சுதமதி உதயகுமாரனிடம் கூறுவதாக அமையும் பாடற்பகுதி மக்கள் யாக்கையினியல்பு கூறுகிறது.

*வினையின் வந்தது*
*வினைக்கு விளைவாவது*
*புனைவன நீங்கிற்*
*புலால்புறத் திடுவது*
*மூப்புவிளிவுடையது*
*தீப்பிணி இருக்கை*
*பற்றின் பற்றிடம்*
*குற்றக் கொள்கலம்*
*புற்றடங்கரவின்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*செற்றச் சேக்கை*
*அவலக்கவலை*
*கையாறு அழுங்கல்*
*தவலா உள்ளம்*
*தன்பால் உடையது*
*மக்கள் யாக்கை*
*இதுவென உணர்ந்து*
*மிக்கோய் இதனைப்*
*புறமரிப்பாராய்* *(பளிக்கறைபுக்க காதை)*

உடம்பின் நிலையாமையைக் கூறவந்த சாத்தனார்,

*பிறத்தலும் மூத்தலும்*
*பிணிபட்டு இரங்கலும்*
*இறத்தலும் உடையது*
*இடும்பைக் கொள்கலம்*
*மக்கள் யாக்கை*
*இதுவென உணர்ந்து*
*மிக்க நல்லறம்*
*விரும்புதல் புரிந்தேன்*

என்று உதயகுமாரன் வாயிலாக உணர்த்துகிறார்.

*பிறந்தோர் உறுவது*
*பெருகிய துன்பம்*
*பிறவார் உறுவது*
*பெரும் பேரின்பம்*
*பற்றின் வருவது*
*முன்னது பின்னது*
*அற்றோர் உறுவது அறிக*

என்னும் பிறப்பிற்கான தத்துவம் மாதவியினால் வசந்தமாலைக்கு எடுத்துக் கூறப்படுகிறது. பஞ்சசீலம் (சத்தியம், பிரமச்சாரியம்; கள்ளாமை; காமுறாமை; கவராமை) போதிப்பது மணிமேகலைக் காப்பியத்தின் நோக்கமாயுள்ளது.

*பிறந்தவர் சாதலும்*
*இறந்தவர் பிறத்தலும்*
*உறங்கலும் விழித்தலும்*
*போன்றது உண்மையின்*
*நல்லறம் செய்வோர்*
*நல்உலகு அடைதலும்*
*அல்லறம் செய்வோர்*
*அருநரகு அடைதலும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உண்டென உணர்தலின்*
*உரவோர் களைந்தனர்*

என்ற பிறப்பிறப்புத் தத்துவம் சாதுவன் நாகர் தலைவனுக்குக் கூறும் அறிவுரையாக அமைந்துள்ளது.

தவநெறித் தத்துவம் சகிப்புணர்வையும், கால உணர்வினையும் நல்கும் என்பதற்கு மணிமேகலை தக்க எடுத்துக் காட்டாக இலங்குகிறாள்.

துன்பத்திற்குக் காரணம் அவாவெனப்படும் ஆசையே. அவா இல்லையெனில், துன்பமும் இல்லை. அவா உள்ள இடத்தில் அறியாமை குடிகொண்டிருக்கும். அறிவு உள்ள இடத்தில் அவா இருக்காது. அவாவிற்கு அறிவின்மையே காரணமாகிறது.

*மண்டினி ஞாலத்து*
*வாழ்வோர்க்கெல்லாம்*
*உண்டி கொடுத்தோர்*
*உயிர் கொடுத்தோரே*
*என்கிறது மணிமேகலை*

பசியின் வருத்துதல்களினால் அதனைப் பசிப்பிணி என்னும் பாவி என்கிறார். சாத்தனார் பசியானது,

*குடிப்பிறப்பு அழிக்கும்*
*விழுப்பங் கொல்லும்*
*பிடித்த கல்விப்*
*பெரும்புணை விடூஉம்*
*நான் அணிகளையும்*
*மாண் எழில் சிதைக்கும்*
*பூண் முலை மாதரொடு*
*புறங்கடை நிறுத்தும்*
*பசிப்பிணி என்னும் பாவி*

என்று விவரிக்கிறார்.

**கருத்தியற் கருவூலம்**

அளவை வாதி கூறிய தத்துவம், சமயவாதி கூறிய தத்துவம், ஆசிவகன் கூறிய தத்துவம், நிகண்டவாதி கூறிய தத்துவம், சாங்கியவாதி கூறிய தத்துவம், வைசேடிகவாதி கூறிய தத்துவம் ஆகியனவற்றின் விரிவும் விளக்கமும் கொண்டிலங்கும் காப்பியம் மணிமேகலையேயாம்.

***(நன்றி: தினகரன், வாரமஞ்சரி, 08.03.1987)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# கனவோ! இது நனவோ!

கனவுக்கு உண்மையில் ஏதாவது கருத்து இருக்குமென்று பெரும்பாலான மக்கள் இப்போது உறுதியாக நம்பி வருகின்றனர். கெட்ட கனவொன்றைக் கண்டவர் காலையில் எழுந்ததும் இடி விழுந்தது போல கையை வைத்துக் கொண்டு வருந்துவதும், மகிழ்ச்சியான கனவொன்றைக் கண்டவர் மற்றவர் களிடம் அது பற்றிப் பிரலாபிப்பதும் வழக்கமாக நாம் காண்பனவாகும். உண்மையில் கனவு என்றால் என்ன? அது எப்படி உண்டாகிறது?

'தொம்சன்' என்பவரது கருத்துப்படி 'துயில்கின்ற நேரத்தில் இரண்டு மணித்தியாலத்திற்கு ஒரு கனவு வீதம் ஒவ்வொருவரும் கனவு காண்கின்றனர். தாம் கனவே காண்பதில்லை என்பவர்கள் தமது கனவுகளை நினைவுபடுத்த முடியாதவர்களேயாவார்.'

கனவுகள் தோன்றுவதற்குப் பேய் பிசாசுகள் காரணமென்று பாபி லோனியர் நம்பினர். கடவுளும், கடவுட் தன்மை நிறைந்தவர்களுமே கனவு கட்குக் காரணமென்று எகிப்தியர் எண்ணினர்.

## ஆய்வாளர் நோக்கு

மனத்தில் தோன்றும் ஆசைகளே கனவுகட்குக் காரணம் என்று பிளாட்டோ எழுதினார். உடலைச் சார்ந்து எழும் எண்ணங்களே கனவின் அத்திவாரம் என்று அரிஸ்டோட்டில் எண்ணினார். கனவும், நனவும் ஒன்றே என்று 'டெஸ்கிரேட்ஸ்' கருதினார். 'ஹொப்ஸ்' என்பவர் 'கனவும் நனவும் சம்பந்தமே யற்ற இரண்டு வெவ்வேறு விடயங்கள்' என்று கருதினார். வீபின்றீஸ் என்பவர், 'நடந்து முடிந்த சம்பவங்கள் உடலையும் உள்ளத்தையும் நினைவு படுத்தி வெளிப்படலே கனவு' என்றார். 'ஹார்ட்மன்' என்பவரோ மனிதனில் உள்ள நனவிலி மனத்தில் இருந்துதான் கனவுகள் வெளிப்படுகின்றன என்று கருதினார். லீபின்றீஸ் என்பவர் நடந்து முடிந்த சம்பவங்கள் உடலையும் உள்ளத்தையும் நினைவுபடுத்தி வெளிப்படலே கனவு என்றார். ஹார்ட்மன் என்பவரே மனிதனில் உள்ள நனவிலி மனத்தில் இருந்துதான் கனவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுகின்றன என்று கருதினார். இப்படியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிவரை கனவு பற்றிப் பல்வேறு முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

**கனவும் காட்சியம்**

கனவைப் பற்றி 'சிக்மென்ட் பிராய்ட்டின்' கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். 'கனவுகள் உள்ளத்தில் அடைந்து கிடக்கும் ஆசைகளையும், பாலியல் உணர்வுகளையும் குறிக்கின்றன' என்றார். நனவிலி உள்ளத்தில் அமிழ்ந்துள்ள உணர்வுகளின் விம்பமே கனவு என்று அவர் விளக்கினார். இதிலிருந்து கனவென்பது மனித உணர்வுகளின் வெளிப்பாடேயன்றி வேறல்ல என்று தெளிவானது. கனவென்பது காட்சிகளின் பின் தொடரலாகும்.

'கல்கின்ஸ்' என்பவரின் பரிசோதனையின் படி 397 கனவுகளில் 240 கனவுகள் பின் தொடரலாகும். ஏனையவை ஏனைய புலன்களால் உணரப் பட்ட சம்பவங்களை பின்னணியாகக் கொண்டிருக்கின்றன.

சம்பந்தமில்லாத சம்பவங்கள் கனவாகுவதே இல்லை. மகிழ்வு மனத்தின் நினைவுத் துண்டுகளே கனவுகளின் வடிவம் என்று 'ஒஸ்வால்ட்' எண்ணுகிறார்.

இன்றைய உளவியலாளரான ஹால் (Hall) கனவை மேல்வருமாறு விளக்குகிறார். 'சிந்தனை என்பது கற்பனையின் ஒரு முறையாகும். அதன் விளைவாக எண்ணம் பிறக்கிறது.'

விழித்திருந்தாலென்ன துயின்றாலென்ன சிந்தனை முறையும் எண்ணமும் ஒரே முறையானவையே. விழித்திருக்கும் போது ஏற்படும் சிந்தனையை எண்ணம் என்கிறோம். நித்திரையில் ஏற்படும் சிந்தனையை கனவு என்கிறோம். ஆகவே கனவு என்பது மனத்தின் சிந்தனையே தவிர தெய்விக மானதோ, பொருள் காட்டுவதோ வருங்காலம் உணர்த்துவதோ அல்ல. எண்ணமும் சிந்தனையுமே கனவாகின்றன.

***(நன்றி: ஈழநாடு, 24.07.1985, ப.6)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## யோகக்கலை – நவீனயுகத்தின் மருத்துவம்

இன்று மேற்குலகின் நவீன மருத்துவமாகவே யோகக்கலை பயிலப்படுகிறது. 'யோகம்', அதன் அடிப்படையே சுவாசம் என்றுள்ள நிலையில் நவீன யுகத்தின் மகோன்னத மருத்துவமாகக் கொளளப்படுவதில் வியப்பேது மில்லை. மேன்மைக் கலைகளில் ஒன்றான 'யோகக்கலை' விஞ்ஞானம் மெத்த வளர்ந்துள்ள மேற்குலகிலேயே அருமையுடனும், பெருமையுடனும், சரியான விளக்கங்களுடனும் இன்று கைக்கொள்ளப்பட்டும் நடைமுறைப் படுத்தப்பட்டும் வருவதனைப் பெருமையுடன் எண்ணிப் பார்க்க வேண்டி யுள்ளது. உடல், பிணி, உயிர் மூன்றையும் பற்றியது மட்டுமல்ல யோகக்கலை, நடைமுறையில் அன்றாடம் நல்லுணர்ச்சிகளையும் தருவது. மருத்துவக் கலை, உளவியல், மனோவசியம், சிகிச்சை முறைமை என்பவற்றுடனும் அத்யந்தத் தொடர்புடையது. சுவாசத்தின் சரியான இயக்கமே 'மூச்சு'ப் பயிற்சி என்ற நிலையில் 'யோகக்கலை' உயிரைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள உதவுகிறது எனலாம். 'யோகக்கலை' நவீன யுகத்தின் மருத்துவம் என்பதனை 'யோகாசனங்கள்' மூலம் நிரூபிக்கலாம். 'ஆசனம்' என்னும் வடசொல் 'இருத்தல்' என்னும் பொருளிலேயும் கருத்து விளக்கம் தருவது. எனவே பிறிதொரு வகையில் 'நிலைபேறு', 'வாழ்தல்' 'சீவித்தல்', என்ற பொருள்களிலும் மிக விரிவான விளக்கம் கொள்ளலாம்.

'கடவுளின் படைப்பு' என்று கூறும் போது அதன் விளக்கம் பஞ்சபூதத் தொடர்புடன் இணைத்துப் பேசப்படுவதால் சைவசித்தாந்தத் தத்துவம் மிக விசாலமாக விளக்கி நிற்கின்றது. 'மனித உயிர் கடவுட் படைப்பே' எனபதன் அர்த்தமே உயிர் சுவாசத்துடன் தொடர்பு பட்டதாகவே உள்ளது என்பதே. அதாவது இயற்கையின் பெரும் வியா பிதமாய் உள்ள 'வளி', 'காற்று', 'வாயு' என்பது நம்மையறியாமலேயே மூக்கால் நமது சுவாசக் குழாய் வழியே உள் நுழைந்து சுவாசத்தை நிரப்பி மனித உயிர்க்கு அடிப்படையாய் மனிதரை வாழ வைக்கிறது. எனவே, பேரியற்கையுடன் தொடர்புற்று உயிர்ச் சீவியம் நடைபெறுவதற்கு 'யோகக்கலை' என்னும் உயரிய மருத்துவம் வேண்டியதாயுள்ளது. மனித உயிரின் 'திடம்' 'உறுதிப்பாடு' என்பவற்றிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகக்கலை உறுதுணை புரிவதாகும். உடற் பலம், உளப்பலம், உயிர்ப்பலம் என்பனவற்றை நல்குவது யோகக்கலையாகும். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதுடன் அவரே யோகியாயும் பேர் பெற்றுள்ளமை இத் தொடர்பில் ஆழமாகவே சிந்தித்தற்குரியது. இத்தொடர்பில் போகி, யோகி, ரோகி என்னும் சொற்கள் பெரிதும் சிந்தனைக்குரியனவாகின்றன. நுண்ணாய்வுக்கு உட்பட வேண்டியவை. சிவனே யோகி, சிவனே போகி, உடல் 'ரோகி' உயிர் 'ரோகி'. 'யோகம்' என்பதனைச் செய்பவனே 'போகி', 'போகம்' என்பதனைச் செய்பவனே 'போகி', உடலுக்கு ஏற்படும் வருத்தம் 'ரோகம்', 'ரோகம்' என்பது வட சொல். வருத்தங்கள் அல்லது நோய்களின் பெயராலேயே ரோகங்கள் சுட்டப்பட்டுள்ளன. உதாரணமாக குஷ்டரோகம், வாதரோகம், சன்னிரோகம், உதரரோகம், பித்தரோகம், என்று வரும் பெயர்களை நோக்கலாம்

> நோய் என்பது தளர்ச்சி, மெலிவு, நொய்மையைச் செய்வது. உள்ளம் எதனையும் சரியாக ஆராய விடாமற் பிணிப்பது பிணி. உடம்பு நொய்த்து ளேகும் படி செய்யும் நோயை வராமல் மறுப்பது தான் மருத்து.[1]

என விளக்குகிறார் டாக்டர். இ. மு. சுப்பிரமணியபிள்ளை.

திருமூலர் எண்ணாயிரம் என்னும் நூலிலே,

> *மறுப்பது உடல் நோய் மருந்து எனல் ஆகும்*
> *மறுப்பது உளநோய் மருந்து எனல் சாலும்*
> *மறுப்பது இனிநோய் வாரா திருக்க*
> *மறுப்பது சாவை மருந்தெனல் ஆமே*

என்ற பாடல் இடம் பெற்றுள்ளது. இப்பாடலின் பொருள்,

> வந்த நோயை மறுத்து வரும் நோயினையும் மறுத்து
> இயல்பாக வந்து சேரும் சாவினையும் மறுத்து
> நிலையான இன்பத்தை அருள்வதே மறுந்து

என்று திருமூல நாயனார் கூறுகிறார். 'உடம்பினை அழியாது வைத்து இயங்கச் செய்யும்' மருந்து முறையே வைத்தியம் எனப் பெறும்.

அறநூல்கள், காவியங்கள், இலக்கியங்கள், புராணங்கள், மருத்துவ நூல்கள், சித்தர் பாடல்கள், தனிப்பாடல்கள், பழமொழிகள், மூதுரைகள், முதுமொழிகள், மகா வாக்கியங்கள், என்பன யோகக்கலை, மருத்துவக்கலை, வாழ்க்கை நெறிக் கொள்கைகளை விளக்கி நிற்கின்றன. 'மருத்துவம்' ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையேயாகும். உலகிலே பல்வேறு மொழிகளிலும் பல்வேறு பகுதிகளிலும் நிலவிய ஒழுக்கநெறியை (Customary Morality) இவை விளக்குகின்றன.

அறநூல்களும் ஒரு வகையில் மருத்துவ நூல்களே. மனம், அறிவு, அனுபவம், நடைமுறை என்பனவற்றை அவை கொண்டுள்ளமையால் 'ஒழுங்கு', 'நீதி' என்பவற்றையும் கொண்டமைகின்றன. சொல்லாலும், பொருளாலும் கருத்தை உணர்த்தும் முறையாலும் தனித்துவ மிக்கன அற நூல்கள். அறத்தின் அருமை பெருமைகளை அவை அறிவுறுத்துள்ளன. அறநூல்களில் உணர்த்தப்படும் கருத்திற்கே முதலிடம் தரப்படும். எனவே அறநூல்களுக்கு உயிராக இருப்பது கருத்து.

'யோகக்கலை' ஒழுக்கத்தின் அடிப்படையில் இயல்வது. வாழ்க்கையிலே ஒழுங்கு முறைமை இல்லையென்றால் பயனில்லை, மனித குல வரலாறு களும், விழுமியங்களும், இலக்கியப் போதனைகளும், அறநூற் கல்விப் போதனைகளும், சமய, தத்துவ நூற் போதனைகளும், எல்லாமே ஒழுக்கத் தையே வலியுறுத்துகின்றன. மனித இனத்திற்கேயுரிய தனிப்பண்புகள் பல. அவற்றுள் ஒழுக்கம் முதன்மையானதாகப் போற்றப்படுகிறது. 'ஒழுக்கம்' என்னுஞ் சொல் 'ஒழுக்கு' என்னும் வேர்ச் சொல்லடியாகப் பிறந்ததாகும். 'ஒழுகு' என்னுஞ் சொல்லிற்கு 'இடையறாது கடைப்பிடித்தல்' என்பது பொருள் இடையறாது நீர் ஒழுகுவதை 'ஒழுக்கு' என்று கூறுவதைப் போல வாழ்க்கையில் உயர்ந்தவையெனக் கருதப்படும். நெறிமுறைகளை எக் காலத்தும் எவ்விடத்தும் இடையறாது மேற் கொண்டொழுகுவதையே 'ஒழுக்கம்' என்பர். எனவே யோகக்கலை, அறிவியலுடனும், ஒழுக்கவிய லுடனும் தொடர்புடையது.

**மருத்துவக் கலை**

''இன்று இந்தியா முழுவதிலும் ஆயுர்வேத - யுனானி மருத்துவப் புலவர் பயன்படுத்துகின்ற சிலாசித்து என்னும் மருந்து மொஹஞ்சதாரோவிற் கிடைத் துள்ளது. சிந்துவெளியின் சம்பர் (Sambur) மான் கொம்புகளைப் பொடியாக்கி மருந்தாகப் பயன்படுத்தினர். மான் கொம்புகளும் மாட்டுக் கொம்புகளும் சில கிண்ணம் போலக் குடையப்பட்டுள்ளன. அவை மருத்து வைத்துக் கொள்ளப் பயன்பட்டவையாகும். இன்ன பிறவற்றால் இன்றுள்ள ஆயுள்வேத மருத்துவக்கலை பற்றிய மூல உணர்ச்சிகள் சிந்துவெளி மருத்துவர்களிட மிருந்தே தோற்றமாயின என்று கூறுவர் டாக்டர் மா. இராசமாணிக்கம் பிள்ளை''[2]. மிகப்பழைய கலையாகவும் அதேவேளை நவீன கண்டுபிடிப்பு களான மருந்துகளைக் கொண்டதோர் கலையாகவும் மருத்துவக்கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளிருகிறது. 'அகமருத்துவம்' யோகக்கலை என்று விளக்குவது பொருந்தும். விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்னும் இரு கொள்கைகளும் மருத்துவக் கலையோடு பொருத்திப் பார்க்கத் தக்கவை.

## திருமந்திரத்தில், மருத்துவக் குறிப்புகள்

'சரவோட்டம்' என்பது சுவாசம் தொழிற்படும் போது இடம்பெறும், 'நாடியோட்டம்' ஆகும். இவை குறித்த செய்திகளைத் திருமந்திரப் பாடல்கள் கூறும் முறைமையை நோக்கலாம். 'சிவயோகி' பற்றியும், அறிய விரும்பு வோர் மேல் வருஞ் செய்யுட்களைத் தெரிந்திருத்தல் வேண்டும். இவை யோகக் கலையுடன். நெருங்கிய தொடர்புடையவை.

*பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்று போய்*
*ஓர்க்கின்ற வுள்ளம் உருக அழல் மூட்டிப்*
*பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே*
*சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே*[3]

*விந்துவும் நாதமும் விளைய விளைந்தது*
*வந்த இப் பல்லுயிர் மன்னுயிருக்கெலாம்*
*அந்தமும் ஆதியுமாமந் திரங்களும்*
*விந்து அடங்க விளையுஞ் சுலோகமே*

திருமந்திரம் மிகச் சுருங்கிய வடிவில் விரிந்த தத்துவங்களை விவரிக்கும் நூலாகும்.

திருமந்திரம் எட்டாந் தந்திரம் 'உடல்விடல்' என்பது பற்றிப் பேசுகிறது. 'நாடிசாஸ்திரம்' யோகக்கலையுடன் மிக நெருங்கிய தொடர்புடையது. பிராணன் என்பது வாயு; காற்று; உயிர்; மூச்சு என்று பொருள்படும்.

*பண்ணாகுங் காமம் பயிலும் வசனமும்*
*விண்ணாம் பிராணன் விளங்கிய சத்தமும்*
*புண்ணாம் உடலிற் பொருந்து மனத்தையும்*
*அண்ணாந்து பார்க்க அழியும் உடம்பே*[5]

*அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண்*
*கழிகின்ற காலவ் விரதங்கள் தானம்*
*மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி*
*ஒழிகின்ற ஊனுக் குறு துணை யில்லையே*[6]

*இலையா மிடையில் எழுகின்ற காம*
*முலை வாய நெஞ்சத்து மூழ்கும் உளத்துத்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தலையாய மின்னுடல் தாங்கித் திரியுஞ்*
*சிலையாய சித்தஞ் சிவமுன் னிடைக்கே*[7]

## மோன சமாதி

சமாதி கைகூடல், நிட்டை கைகூடல், என்று உலக வழக்காற்றிலே கூறுவ துண்டு.

*நின்றார் இருந்தார் கிடந்தார் என வில்லை*
*சென்றார் தஞ் சித்த மோன சமாதியாம்*
*மன்றேயு மங்கே மறைப் பொருளொன்றுண்டு*
*சென்றாங் கணைந்தவர் சேர்கின்றவாறே*[8]

திருமந்திரத்தால் அறியப்படும் தமிழ் மருத்துவக் கருத்துகள் சமய தத்துவத் துடனும், மெய்ஞ்ஞானத்துடனும், சைவசித்தாந்தத்துடனும், யோகக்கலை யுடனும், சித்தர் கொள்கைகளுடனும் இணைத்தும், பொருத்தியும், ஒப்பிட்டும் ஆராயத்தக்கன. தமிழகத்திலே நிலவிய சித்த தத்துவ மரபு ஈழத்திலும் நிலவியது என்பதற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.

உயிர்ப்பின் ஓட்டத்தைச் 'சரம்' என்பர். அது வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில் இடமூக்கின் வழியாகச் செல்லுதல் வேண்டும். சனி, ஞாயிறு, செவ்வாய்க்கிழமைகளில் வலமூக்கின் வழியாக ஓடுதல் வேண்டும். வியாழக் கிழமைக்கு வளர்பிறையில் இட மூக்கும் தேய்பிறையில் வல மூக்குமாக ஓடுதல் வேண்டும் என்று பாடுகிறது திருமந்திரம். அப்பாடல் மேல்வருமாறு.

*வெள்ளி வெண் திங்கள் விளங்கும் புதனிடம்*
*ஒள்ளிய மந்தன் இரவி செவ்வாய் வலம்*
*வள்ளிய பொன்னே வளரும் பிறையிடந்*
*தெள்ளிய தேய்பிறை தான் வலமாமே.*[9]

'காயத்துக்கூனமில்லை' என்றும், 'வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத்தானே' என்றும் உறுதிபடக் கூறும் திருமந்திரப் பாடல் மேல்வருமாறு:

*வெள்ளி வெண் திங்கள் வளங்கும் புதன் மூன்றுந்*
*தள்ளி இடத்தே தயங்குமே யாமாகில்*
*ஒள்ளிய காயத்துக் கூனமிலை யென்று*
*வள்ளல் நமக்கு மகிழ்ந்துரைத் தானே*[10]

'யோகக்கலை' உடம்பையும், உயிரையும் வளர்க்க உதவும் மார்க்கங் களைப் பற்றிக் கூறுவது என்பது திருமந்திரந்தால் அறியப்படும். நம்முடம்பு திருவடியுணர்வு பெறுதற் பொருட்டே தரப்பட்டது. அவ்வுடம்பை மெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுணர்வு வழியில் பழக்கி அத்திருவடியுணர்வினைப் பெறுதல் வேண்டும். அதனை வீணே அழிய விட்டால் உயிர் பயனடையாது. அதுபாற் கலத்துப் பாலைப் பருகுவதன் முன் அழியவிடுவதை ஒக்கும். அவ்வுடம்பை வளர்க்கும் வழிவகை திருவைந்தெழுத்தெண்ணல். அதனை இடையறாது தியானித்துக் கொண்டிருப்பதே உடம்பை வளர்க்கும் உபாயம் அதனாலேயே உயிர் வளர்ச்சியுண்டாம்.

| | | |
|---|---|---|
| உயிர் வளர்ச்சி | - | மெய்யுணர்வு, |
| உபாயம் | - | வழிவகை |
| உச்சுவாசம் | - | மூச்சை உள்ளிழுத்தல் |
| நிச்சுவாசம் | - | மூச்சை ஒடுக்குதல் |

**இந்திய முறை மருத்துவம்**

'யோகக்கலை' அரியதோர் இந்திய முறை மருத்துவமாகும். ஆயினும் இன்று அது உலகளவிலே விசாலித்து நவீன யுகத்தின் மருத்துவமாகப் போற்றப் படுகிறது. டாக்டர் பிருந்தா மேல்வருமாறு எழுதுகிறார்.

> இந்தியர்களது சிறப்புக்குரிய நாகரிகத்தில் முகிழ்த்தது ஆயுர்வேத மருத்துவம். இந்த மருத்துவத்தைப் போன்ற ஒரு பழமையும் பெருமை யும் வாய்ந்த மருத்துவமுறை நம்மிடையே இன்று இல்லை.

சித்த மருத்துவமும் இந்திய மருத்துவமே. எனினும் அதுவும் உலகளவிலே விசாலித்துப் பல் மதச் சார்புடனும், பன்னாட்டுத் தொடர்புடனும் இயங்குகிறது.

மனிதனுக்கு உணவு அத்தியாவசியமாகும். 'யோகக்கலை' யில் உணவு உண்ணும் நேரம், உணவுக்கும் சமிபாட்டுக்கும் உள்ள தொடர்பு என்பன முக்கியமாகின்றன. திருக்குறள் உணவு முறை பற்றிக் கூறும். திருவள்ளுவர் 'மருந்து' அதிகாரத்தில் நோய் வராமற் காப்பதற்காகக் கூறும் உணவுக் கட்டுப்பாட்டு முறைக்கும் 'மாறுபாடில்லாத உணவுகளை உட்கொள்ள வேண்டும்' என்பது முக்கியம் பெறுகிறது.

> *நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்*
> *வாய்நாடி வாய்ப்பச் செயல்.*

என்பது திருவள்ளுவர் குறிப்பிடும் சிகிச்சை முறையாகும். சித்த மருத் துவம் திருக்குறள் குறிப்பிடும் பரிசோதனை முயற்சிகளையும் இணைத்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியுள்ளது என்றும் கருதும் ஆய்வாளர் பெ. கிருஷ்ணன் எட்டு வகையான சோதனைகளைச் சித்த மருத்துவம் கூறும் என்பர். அவையாவன:

1. நாடி பிடித்து அறிதல்
2. ஸ்பரிஸ உணர்ச்சி மூலம் அறிதல்
3. உடலின் தன்மை (வெப்பம், குளிர்ச்சி, பருமன்) காணல்.
4. ஒலி (பேச்சின்) கொண்டு அறிதல்
5. கண் தோற்றம் - கண் நிறமாற்றத்தைக் கொண்டு நோயறிதல்.
6. சிறுநீர் நிறம் மூலம் அறிதல்
7. நாக்கில் வெண்மை படிந்திருப்பதன் மூலம் அறிதல்
8. மலத்தின் தன்மை கொண்டறிதல்

'யோகக்கலை நிபுணர்' ஒருவருக்குள்ள நோயறியுந் திறன் நுட்பமயமானது. தினப் பயிற்சியால் திடமாயமையுந்திறன் கொண்டது. ஆன்மிகமும் பக்குவமும் கொண்டமைவது. அம்முறையே 'நாடி சாஸ்திரம்' எனப்படுகிறது. அம்முறை பற்றிய சிறு விளக்கம் இடம் நோக்கிப் பிரதானமாகிறது.

> நோயாளியின் உள்ளங்கைக்குக் கீழே சுமார் ஓர் அங்குலம் தள்ளி, கணுக்கையில் கட்டை விரற் பக்கமாக அதாவது கையின் ஓரமாக நமது ஆட்காட்டிவிரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகிய மூன்றையும் சேர்த்துப் போல் வைத்து அழுத்திப் பார்த்தால், அதாவது கணுக் கையின் நடு நரம்பிற்குப் பக்கமுள்ள பள்ளத்தில் கையை வைத்து அழுத்திப் பார்த்தால் ஒரு கைத்துடிப்பை அறியலாம். இந்தத் துடிப்பு இரத்த நாளத்தின் துடிப்பேயாகும்.

இது, இருதயம் எப்படி வேலை செய்து கொண்டிருக்கிறது என்பதை ஒருவாறு அறிவிப்பதாகக் கொள்ளலாம். இதை நாட்டு மருத்துவர்கள் 'நாடித், துடிப்பு' என்று கூறினார்கள்.

ஆட்காட்டி விரலால் அறியப்படும் துடிப்பு வாதநாடி என்றும், நடு விரலால் அறியப்படும். துடிப்புப் பித்தநாடி என்றும், மோதிர விரலால் அறியப்படும் துடிப்பு சிலேட்டும் நாடி என்றும்அழைக்கப்பட்டு வருகின்றன. வாதநாடி என்பது இந்தப் பூத உடம்பிலே உயிர்ச்சக்தி நன்கு இடம் பெற் றிருப்பதைக் காட்டுவதாகும். அதாவது, இந்தப் பூத உடம்பிற்கு இன்றி யமையாது வேண்டப்படுகின்ற அனைத்து வகை உணவுச் சத்துக்களும் சரியான விகித அளவுகளில் இடம் பெற்றுருப்பதைக் காட்டுவதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தம் என்பது உடம்பின் வெப்பநிலையைக் குறிப்பதாகும். சிலேட்டுமம் என்பது உடம்பின் தட்ப நிலையைக் குறிப்பதாகும்.

வாதநாடி, பித்தநாடி, சிலேட்டும நாடிகளின் துடிப்புக்களும் நல்ல ஆரோக்கியமான துடிப்பில் வருமாறு இருக்க வேண்டும் என்று கூறுவர். அதாவது. வாதநாடியின் துடிப்பில் பாதியளவு துடிப்பைப் பித்தநாடி பெற்றிருக்க வேண்டுமென்றும், அது போல பித்தநாடியின் துடிப்பில் பாதி அளவுத் துடிப்பைச் சிலேட்டும நாடி பெற்றிருக்க வேண்டுமென்றும், அனுபவ ரீதியாக அறியப்பட்டு வந்திருக்கின்றன. இந்த மூன்று நாடிகளின் துடிப்புக் களின் அளவுகளில் மாறுதல் ஏற்படும்போது நோய்களுண்டாகின்றன. அதாவது, நோய்கள் உடம்பில் உண்டான பிறகே அந்த மூன்று நாடிகளின் துடிப்பில் வேற்றுமைகள் ஏற்படுகின்றன என்பது தான் வெளிப்படை.

இவ்வாறு நாடி மூலம் நோயை அறிதல் பற்றிச் சித்த மருத்துவம் சிறப்புற விளக்குவதுடன் 'யோகக்கலை'யும் இதனையுணர்த்துகிறது.

**சித்த மருத்துவமும் யோகக்கலையும்**

'யோகம்' 'தவம்' இரண்டும் 'மன ஒருமைப்பாடு' சாதனைகளிரண்டுடனும் பெரிதும் தொடர்புடையனவாயுள்ளன. சித்தர்களாலே தோற்றுவிக்கப்பட்ட மருத்துவமே சித்த மருத்துவமாகும். 'வாசி என்னும் மூச்சடக்கி யோகத்தால் ஆறு ஆதாரங்களிலும் மனதை நாட்டிக் குண்டலினி சக்தியை எழுப்பிப் பற்பல அனுபவமும் வெற்றியும் கண்டு அப்பால் உள்ள எல்லாமேயான பொருளில் நிலைத்துச் சித்தி பெற்றவரே 'சித்தர்' எனப்படுவரென்று விளக்கு கின்றார் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்.

சித்தர்கள் அட்டமா சித்திகளிலும் வல்லவர்கள். இவர்கள் மருத்துவத் திற்குத் தேவையான பல விடயங்களையும் அறியக் கூடியளவு அகக் காட்சி பெற்றிருந்தனர் என்பதை அட்டமா சித்திகள் மூலம் அறிந்துணர்ந்து தெளிய முடியும். அட்டமா சித்திகளும் வருமாறு:

1. அணிமா - அணுவைப் போலச் சிறிதாதல்
2. மகிமா - மேரு போலப் பெரிதாதல்
3. இலகிமா - காற்றுப் போல் இலேசாதல்
4. கரிமா - பொன் போல் பருவாதல்
5. பிராப்தி - எல்லாவற்றையும் ஆளுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பிரகாமியம் - கூட்டுவிட்டுக் கூடு பாய்தல்

7. ஈசத்துவம் - விரும்பியதனையெல்லாஞ் செய்து முடித்து அனுபவித்தல்

8. வசித்துவம் - எல்லோரையும் வசப்படுத்தல்

இச்சித்திகளில் வல்ல சித்தர்கள் அகக் காட்சி மூலம் பிறதுறையாகிய விடயங்களையும் அறிந்து கொண்டமை போன்று, மருத்துவம் பற்றிய விடயங்களையும் அறிந்து சித்த மருத்துவ முறைமையைத் தோற்றுவித்து வந்தார்கள் எனக் கருத முடிகிறது. இவ்விடத்தில் நவீன மருத்துவத்துறை யுடனான ஒரு பிரதான வேறுபாடு தெளிவாகப் புலனாகிறது. நவீன மருத்துவத் துறை ஆராய்ச்சிக் கருவிகளின் துணையுடன் காரியங்களுக்கான காரணங் களைப் புறத்தே ஆராய்வதன் மூலம் மருத்துவ உண்மைகளைக் கண்டறிந்து கூறியது. இதனால் கருவிகள் ஆராய்ச்சி என்ற ரீதியில் விஞ்ஞானத்துடன் தொடர்புபட்டது. ஆனால், சித்த மருத்துவமோ புறத்தே கருவிகள் துணை யுடன் நிகழ்த்தப்படுகின்ற ஆராய்ச்சிகள் மூலமாக அல்லாமல் சித்தர்களின் அகக்காட்சி மூலமாகவே தான் மருத்துவ உண்மைகளைக் கண்டறிந்தது. நாளடைவில் அவர்களின் அனுபவங்களும் சில உண்மைகளைச் சித்த மருத்துவத் துறைக்கு வழங்கியிருக்கலாம். சித்தர்களின் அகக்காட்சி அடிப் படையே இம்மருத்துவம். பிறிதொரு வகையிலே விவாதித்தால், சித்தர்களின் அகக்காட்சி அடிப்படையே இம்மருத்துவத் துறைக்கு மெய்ஞ்ஞானச் சார்பையும் வழங்கியுள்ளது என்கிறார் மு. பசுமலையரசு.[13]

மிகத் தொன்மைக் காலந் தொட்டே சித்தர்கள் இந்தியாவில் இருந்து வந்துள்ளனர். ஆதலால் அவர்களாலே தோற்றுவிக்கப்பட்ட சித்த மருத்துவத் தின் தோற்றக் காலத்தை சரியாக வரையறுக்க முடியவில்லை என்பர் ஆனந்த குமார்.[14] தோற்றக் காலம் அறியப்படாததால் 'இறைவனிடமிருந்தே எல்லாம் தோன்றிய நிலை பெறுகின்றன' என்னும் இந்தியச் சமயக் கொள்கையின் அடிப்படையில், சித்த மருத்துவம் சிவனிடமிருந்தே தோன்றியது என்ற கருத்து உருவாகலாயிற்று. சிவன் பார்வதிக்கும், பார்வதி நந்தி தேவருக்கும் நந்திதேவர் அகத்தியர் முதலிய சித்தர்களுக்கும் சித்த மருத்துவத்தினைப் போதனை செய்தனர் என்று நூல்கள் சில குறிப்பிடுகின்றன என்பர் பசுமலையரசு.[15]

சிவனிலிருந்து தோன்றியதாகச் சொல்லப்படும். இக்கருத்தின் உண்மை பொய்மை ஒரு புறமிருக்க, இதிலிருந்து அறியப்பட வேண்டிய விடய மொன்றுள்ளதைக் கவனித்தல் - கருத்திற் கொள்ளல் வேண்டும். அது, சித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ வரலாற்றில் அகத்தியர் முதலிய சித்தர்கள் பெறும் இடமாகும். இவர்கள் பலராவர்.

மருத்துவச் சித்தர்கள் பலர் இந்திய தேசத்தில் வாழ்ந்துள்ளனர். சிவயோக சுவாமிகள் எனப்படும் யோக சுவாமிகள் ஈழத்து யாழ்பாணக் கொழும்புத் துறையை வதிவிடமாகக் கொண்ட பெருஞ் சித்தர். சிவயோக சுவாமிகளது மகா வாக்கியங்களும், சித்துக்களும் உலகப் பிரசித்தமானவை. அமெரிக்கா வரை பரந்து சென்றுள்ளமை உணரத்தக்கது.

சித்தர்களியற்றிய சித்தமருத்துவ நூல்கள் பெரும்பாலும் ஆக்கிய சித்தர்களின் பெயர்களோடு இணைந்த பெயர்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் அகத்தியர் குணபாடம், அகத்தியர் சிந்தாமணி, அகத்தியர் பதார்த்த குணசிந்தாமணி, அகத்தியர் பதார்த்த குணம், அகத்தியர் மருந்து பாரதம், அகத்தியர் இரண்டாயிரம், திருமந்திரம், போகர் நிகண்டு, தேரையர் குண பாடம்,தேரையர் யமகவெண்பா, தேரையர் தைல வருக்கச் சருக்கம் என்பன சில நூல்களாகும்.

தேரையர் என்பாருக்கு வழங்கப்படுகின்ற 'தேரர்' என்கிற பெயர் இன்னுமொரு சிந்தனையைத் தருகிறது. தமிழ் நாட்டிலே சங்கமருவிய காலத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்த அவைதிக நெறிகள் மக்க ளுக்குச் செய்த தானங்களுள் ஔடத தானமும் ஒன்று என்பதையும் அவைதிக நெறிகளுள் ஒன்றான பௌத்த மதத் துறவிகளுக்குத் தேரர் என்று பெயர் வழங்கப்பட்டிருந்தமையையும் இங்கு நோக்குதல் வேண்டும். இதிலிருந்து சித்த மருத்துவ வளர்ச்சிக்கு அவைதிக நெறியாளர்களின் பங்களிப்பும் இருந்ததென அறியலாம். ஆகவே காலப்போக்கின் தன்மைகளால் சித்த மருத்துவம் அனைத்து மக்களதும், மதத்தவர்களதும் நடைமுறையாகவே பரிணமித்தது எனலாம். இதேபோலவே யோகக்கலையும் இன்று உலக ளாவிய ரீதியிலே பெரும் கணிப்பையும் மதிப்பையும் பெற்று உலகெங்கும் நடைமுறையிலேயுள்ளது.

**சித்த மருத்துவமும் யோக மருத்துவமும் தமிழர் சொத்துக்களே**

சித்த மருத்துவமும் யோக மருத்துவமும் தமிழர் தம் கலைகளே என்பதிற் கருத்து வேறுபாடிருக்க முடியாது. பலருடைய பங்களிப்புகளையும் பெற் றிருந்த சித்த மருத்துவம் தமிழர் மருத்துவமாகக் கொள்ளப்படுவதற்கும் மேல்வருங் காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சித்த மருத்துவம் வகுத்த சித்தர்கள் தமிழ் நாட்டில் இருந்தமை.
2. தமிழில் மட்டுமே சித்த மருத்துவ நூல்கள் இருக்கின்றன.
3. சித்த மருத்துவ முறை பண்டைய நாளிலிருந்தே தமிழ் நாட்டிலேயே பயிலப்பட்டு வருகின்றமை.

சித்த மருத்துவம் மருந்தை மட்டும் நம்பியிராமல், தன்னம்பிக்கை, பிராணாயாமம், உடற்பயிற்சிகள், உணவுக் கட்டுப்பாடுகள், பத்தியம் போன்ற பலவற்றையும் கருத்தில் கொள்கிறது. அது இயற்கை நெறிகளை உணர்ந்து, தனித்தனி மனிதனை மையமாகக் கொண்டு உடல், உள்ளம், காலநிலை என்பவற்றையும் கருத்திற் கொண்டே ஆரோக்கியத்தைப் பேணுகிறது.

விண், மண், காற்று, தீ, நீர் ஆகிய ஐம்பூதங்கள் பற்றிய ஆராய்ச்சியையும் கொண்டிருக்கும் சித்த மருத்துவம், நாடித்துடிப்பு மூலம் நோயறிவும் முறையை உலகத்திற்கு வழங்கிய சிறப்புடையது என்பர். பெ. கிருஷ்ணன். இதனால் சித்த மருத்துவம் 'இயற்கை நல மருத்துவம்' எனப்படுகிறது. யோகக்கலையும் இயற்கை நல மருத்துவமாகவே இன்று கொள்ளப்படுவதுடன் அரியபல சாதனைகளையும் நிகழ்த்த வல்லது.

**ஆன்மிகமும் இன்றைய யோக மருத்துவ அறிவியலும்**

சித்த மருத்துவம், தமிழ் மருத்துவம், யோக மருத்துவம் என்பன இன்று பெரிதும் பாராட்டைப் பெற்றுள்ளன. இம்மூன்றுமே அடிப்படையில் ஆன்மிகக் கருத்துக்கள் கொண்டவை. அதேவேளை அறிவியற் பண்புகளும் இணைந்தவை. உடற்பிணி, உளப்பிணி என்பன மனிதன் உருவாகிய காலம் தொட்டு இருந்து வருவன. இந்தப் பிணிகளை நீக்கும் முறைகளை மனிதன் அறிந்துள்ளான். இந்தப் பிணிகளைக் களைய அறிவியல் கொண்டு வெகுவாகக் குணமடையும் தன்மையை உணர்ந்த மனிதன் வெகு வேகமாகத் தனது ஆராய்ச்சியினைச் செய்து தினந்தினம் புதுமைகளைக் கண்டு உடல் நோய் நீக்கும் திறமையை உயர்த்தியுள்ளான்.

உயிரியிக்கம் - மூச்சு - வாழ்வு - காலத்தை அடிப்படையாகக் கொண்டதென்பது விஞ்ஞானம். காற்றுள்ளிறுத்து இரத்தோட்டம் நிகழும் பொழுது இதயம் துடிக்கிறது. இதயத்துடிப்பே நாடி சாஸ்திரம் எனப்படுவது. இது நேரம், காலம் - எனும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டமைவது என்ற கொள்கையை யோகக்கலை வல்லார் எடுத்துரைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விசும்பிற் காற்று இல்லை, உடம்பில் காற்று உண்டு. இதுவே யோகக் கலையின் மகத்துவம்**

வானில் பூமிக்கு மேல் 200 மைல்களுக்கு அப்பால் காற்று மண்டலம் இல்லை என்பது விஞ்ஞான முடிவு. இக்கருத்தைப் புறநானூற்றுச் செய்யுள் 35 இல் காணுகிறோம். உலகத்தைப் பற்றிப் பேசுகிறான் கவிஞன். நீர் சூழ்ந்த உலகம் இவ்வுலகம். இதற்கு மேல் வானம் உள்ளது. அங்கே காற்றுப் போவது இடையாது என்பதை மேல் வரும் புறநானூற்றுப் பாடல் உணர்த்துகிறது.

*நாரியிரு முந்நீ ரேணியாக*
*வளியிடை வழங்கா வானஞ் சூடிய.*[16]

என்ற வரிகளிற் காண்கிறோம்.

விண்வெளி ஆராய்ச்சி முடிவுகளின் படியும் வானவெளியில் காற்று இல்லை என்பது நன்கு விளங்குகிறது. எனவே இன்று மண்ணுலகில் பல பிணிகளிலிருந்தும் விடுபட யோகக்கலையில் ஈடுபாடு காட்டுவது மிக மிக அவசியாகவே தோன்றுகிறது.

**இயற்கையை நிறுவும் இலக்கியச் சான்றுகள் சில**

*நீர் நிலம் தீ வளி விசும்பொடு ஐந்தும்*
*அளந்து கண்ட அறிவினும் அளப்பு அரும் குறியை.*[17]

என்ற வரிகளினால் ஐம்பூதங்களும் அளந்து காண்பதற்கு மக்களால் இயன்றது என்னும் கருத்துப் புலப்படும். நிலம் பல அணுக்களால் செறிந்தது என்றும், ஆகாயம் அந்த நிலத்தில் உயர்ந்து பரந்து விளங்குவது என்றும், காற்று அவ்வாகாயத்தைத் தடவிக்கொண்டு வரும் என்றும், காற்றினின்றும் தீ பிறக்கும் என்றும் தீயொடு மாறுபட்டு நீர் விளங்கும் என்றும்முரஞ்சியூர் முடி நாகராயர் விளக்குவர்.

> பேரறிஞர் வினோபாவே மேல் வருமாறு கூறுவர். ஆன்மிகம், விஞ்ஞானம், இலக்கியம் என்னும் முத்துறைகளின் கூட்டுறவாலே மனித வாழ்வு முழுமை பெறுகின்றது.

என்றார். ஆனால் இந்த நவீன யுகத்திலே 'யோகக் கலையின் மூலமே மனித வாழ்வு முழுமை பெறுகின்றது' என்று கூறத் தோன்றுகிறது.

உலகின் முதற்றோன்றிய மொழி தமிழ்மொழி என்பதால் இலக்கியம் என்பது முதுமொழியும் தமிழ்மொழியினெழுந்த இலக்கியங்களையே குறிக்கும். தமிழ் மொழிக்கும் விஞ்ஞானத்திற்குமிடையிலான இணைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நேற்றுத் தோன்றியதல்ல. இற்றைக்கு ஈராயிரமாண்டுகட்கு முன்னரே விஞ்ஞான உலகில் வீறுநடை போட்டவர்கள் தமிழர்கள். நமது கவிதை களிலும், பேச்சுகளிலும், செயல்களிலும் விஞ்ஞான அறிவுடையவர்களாக இருந்தமை கண்கூடு. இவற்றிற்கு உதாரணமாகப் பற்பல பழமை மிக்க காப்பியங்களைக் கொள்ள முடியும்.

பெரும்பாணாற்றுப்படை பதிற்றுப் பத்துப் போன்ற இலக்கிய நூல்களை நோக்கின் விஞ்ஞானக் கருத்துக்கள் விரவியிருப்பதைக் காணலாம். அவை முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சியிலும் உள்ளன. மதுரைக்காஞ்சியிலே மண்ணும் விண்ணும் தோன்றிய வரலாறு சிறப்புற எடுத்துக் காட்டப்பட் டுள்ளது. வால் வெள்ளியைத் தமிழர்கள் 'தூமகேது' என்றனர்.

புதிய கண்டுபிடிப்புகளுள் ஒன்றான வலவன் அற்ற ஆகாய விமானங்கள் தமிழருக்குப் புதிய விடயமொன்றல்ல. இதற்குப் பல காப்பியங்கள் சான்றா யமைகின்றன. புறநானூறு 'வலவன் ஏவா வானூர்தி' என்று கூறும். விமானி இல்லாத விமானங்கள் என்ற கருத்துப் புலப்படுகிறது. சீவகசிந்தாமணியில் திருத்தக்கதேவர் சீவகனின் தாய் மயில் போன்ற ஓர் இயந்திரத்தில் மூலம் அரண்மனையிலிருந்து தப்பியோடினாள் என்று குறிப்பிடுகிறார். உமறுப் புலவர் திருமணி மாலையில் 'நமுறூது' விமானமொன்றில் உயரப் பறந்து சென்று கீழே விழுந்தான் என்று கூறப்பட்டுள்ளது.

யோகக்கலையுடன் பூமி வழிபாடு, சூரிய வழிபாடு, சிவ வழிபாடு, மற்றும் தியான முறைமை என்பனவும் தொடர்புபட்டுள்ளமை மனதில் கொள்ளப்பட வேண்டியதாகும். சூரியனை வைத்துக் கொண்டு நேரத்தைக் கணக்கிட்டனர்.

முதலில் விசும்பு தான் இருந்தது. அங்கே சூரியக் குடும்பங்கள் தொடங்கின. அவை சுழலும் போது தீ உண்டாயிற்று. அதிலிருந்து ஒளி பிறந்தது. அச்சூரியக் குடும்பங்கள் உதிர்ந்த தீப்பிழம்புகள், கோள்கள் ஆயின அவை சுழலும் போது காற்று ஏற்பட்டது. காற்றோடு கலந்த கோள்களில் தண்ணீர் கிடைத்தது. அக்கோள்கள் குளிர்ந்த பின்னே மண் உண்டாயிற்று. இந்த அறிவியல் நியதி இன்று விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவற்றையெல்லாம் விட இறைவன் பெரியவனாகத் தோன்றினான். ஆதலினால் இறைவனை அகத்துள்ளே - உள்ளத்துள்ளே - மனத்துள்ளே காண்பதற்கு யோகக்கலை பெருத்துணை புரிந்து வருகிறது. அண்டத்தி லுள்ளதைப் பிண்டத்திற் காணும் அரும்பெருங்கலையே யோகக்கலை.

யோகக்கலை மெய்ஞ்ஞானச் சார்புடையது. ஆத்ம சாதனை மூலம் அமர நிலையெய்துவிக்க வல்லது. ஒழுக்கம், செல்வம், மோட்சம் இவற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய அத்திவாரமே ஆரோக்கியமே. நல்லறிவின் முயற்சிப் பேறுடையோராய், ஞான முதிர்ச்சியுடையேராய் விளங்கிய முனிவர்கள் நோய்களைக் குணப்படுத்தும் தாவர வகைகளையும் யோகக்கலையும் போற்றியுள்ளனர்.

> நல்வாழ்வு அல்லது ஆரோக்கியம் (Health) என்பது என்ன? நோய் நொடியில்லாது இருப்பது மட்டுந்தான் நல்வாழ்வா? இல்லை என்கிறது ஐ.நா. சபையின் உலக நல்வாழ்வு அமைப்பு (WHO), அது கூறும் விளக்கம். நல்வாழ்வு என்பது நோய்நொடியில்லாது இருத்தல் மட்டுமன்று, உடலாலும்; மனத்தாலும், சமூக நிலையாலும், முற்றும் முழுமையாக நன்கிருக்கும் (நன்கு விடும்) நிலையாகும்' என்பர் இராமசுந்தரம்.

'யோகக்கலை' பற்றி மறைமலையடிகள் மேல்வருமாறு கூறுவர்.

உடம்பின் கண்ணுள்ள ஐயும் பித்தும் வளியுமாகிய முதற் பொருள்களை ஒப்படைத்துக் கொள்வதற்கும் நுரையீரலை வலுப்படுத்தி இரத்தத்தைத் தூய தாக்குவதற்கும், நாடோறும் ஒன்பாற் புழைகள் வழியாக வெளிப்படும்நச்சுப் பொருட்கள். உடம்பிற் சிறிதுந் தாங்காமல் வெளிப்படுதற்கும், நமது அறிவை விரிவு செய்து விளக்குதற்கும், உடம்பிற்றட்ப வெப்பங்கள்என்றும் ஒரு நிலையாக இருத்தற்குங் கட்டாயமாகச் செயற்பாலது மூச்சுப்பழக்கமேயாகும். மூச்சுப் பழக்கமானது விடுதல், இழுத்தல், நிறுத்தல் என்னும் மூன்று உறுப்புகளோடு கூடி நடைபெறுவதாகும். இவற்றுள் விடுதல் என்பது உடம்பின் உள்நின்ற காற்றை வெளியே கழித்தல். இழுத்தல் என்பது வெளியே உள்ள தூய காற்றை உடம்பினுள்ளே விளங்குதல். நிறுத்தல் என்பது அங்ஙனம் உள்ளிழுத்த காற்றை உடம்பினுள்ளேயே சிறிது நேரம் நிலைப்பித்தல். இவ்வாறு காற்றை மூக்குப் புழைகளால் மாறிமாறிப் புறங்கழித்து உள்ளிருத்து உள்நிறுத்துதலால் உடம்பில் விந்து நாதங்களாகிய மிக நுண்ணிய தட்ப வெப்பங்கள் ஒரு நிலையாகப் பரவிக் கருவிகளை வலுப்படுத்தி உடம்பைப் பொன்போற் தூயதாக்கும். இங்ஙனம் உடம்பு பொன்னியல் பானவனுக்கு வலுபட்டுப் உடம்பிற் பளபளப்பான பொன்னிறமும் மையைப் போன்ற கறுத்த மயிரும் காணப்படும். அவனை நரை, திரை, முப்பு, பிணி, சாக்காடு அணுகா. அழியா இயல்பைத் தரும் இம் மூச்சுப் பழக்கத்தை மெய்க் குரு முகமாகக் கேட்டுப் பழகுவதே எல்லார்க்கும் நன்றாகும் என்று எழுதுகிறார் மறைமலையடிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியபிள்ளை, இ. மு., *பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்*, ப. 211.
2. இராசமாணிக்கம்பிள்ளை, மா., *மொஹஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம்*, ப. 185.
3. *திருமந்திரம்*, கழக வெளியீடு, அபின் அச்சகம், சென்னை, செய். 1937.
4. மேலது செய். 1969.
5. மேலது செய். 2139.
6. மேலது செய். 2140.
7. மேலது செய். 2141.
8. மேலது செய 2936.
9. மேலது செய். 770.
10. மேலது செய். 771.
11. பிருந்தா, டாக்டர்., 'இந்திய முறை மருத்துவம்', சுத்தானந்தம், வவுனியா, ப.169.
12. கிருஷ்ணன் பெ., பக் . 59-60.
13. பசுமலையரசு, மு., *செந்தமிழும் சித்த மருத்துவமும்*, கர்நாடக மாநிலம், ப.36.
14. ஆனந்தகுமார், ஆ., *தமிழும் சித்த மருத்துவமும்*, ப.110.
15. *பசுமலையரசு*, மு. கு.நூ, ப. 187.
16. *புறநானூறு*, செய் 35.
17. *பதிற்றுப்பத்து*, 24: 15-16.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# பெண்மையரசு

## இந்திரா காந்தியின் பணியும் பயனும்

அரசியற் களப்பயிற்சியும், கல்வி, துணிவு, காருண்யம், வினைத்திட்டம், அன்புடைமை, பண்புடைமை முதலியனவும் பெண்மைக்குரிய பேரியல்பு களும் வாய்க்கப் பெற்ற மாபெரும் தலைவி ஸ்ரீமதி இந்திராகாந்தி. வலிமையும் உறுதியும் பெற்ற தீரமிக்கவராகவும் மகா கீர்த்தி பெற்ற மனுக் குலத் தெய்வமாகவும் போற்றப்படுபவர் திருமதி காந்தி. தனது மதியூகத்தால், பணிகளின் வீச்சால் நிதான மனப்பான்மையுடன் சாதுரியமாகவும் சமத் காரத்துடனும் தன்னுணர்வுடனும் இயங்கிய புதுயுகத்தின் விடிவெள்ளி இந்திரா காந்தி. நிரம்பிய மேதாவிலாசமும் தீர்க்கதரிசனமும் மாமேதைப் பண்பும் மிக்க இந்திராகாந்தியின் வாழ்க்கையையும் பணிகளையும் நாம் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்? இக்கேள்வி இன்றைய சூழ்நிலைகளில் நன்கு சிந்திக்க வேண்டிய அத்தியாவசியத் தேவையொன்றாகிறது. இதற்கான காரணங்கள் இரண்டு உள. ஒன்று, இன்று மேலாண்மை செலுத்திக் கொண்டி ருக்கின்ற பயங்கரவாதத்தின் தீவிரவாதத்தின் தீர்ப்பு. மற்றையது மனித வாழ்க்கையினதும் அனுபவத்தினதும் தொகுப்புகளிலிருந்து நம் மனுக்குலம் பெற்றுக்கொள்ளும் படிப்பினை. இவை தாம் இன்று நம்மை அதிக விழிப்புடன் இருக்கச் செய்துள்ளன. கழிவிரக்கமும் கொள்ளச் செய்துள்ளன.

## இந்திராவின் சாணக்கியம்

இன்றைய அறிவுலகம் நாகரிகச் செயல் மிக்கதொன்று என்றே நம்புகின்றனர். உயரிய கோட்பாடுகளைக் கொண்டுள்ளவர்களை மதிப்பதும் தொடர்புறுவதும் அறிவுலக நடைமுறைகளை எனக் கருதப்படுகின்றது. இந்திய தேசத்தின் குலவிளக்கு இந்திராகாந்தியும் இந்திய நாடும் உலகத்தின் மதிப்பில் உன்னத இடத்தைப் பிடித்துள்ளதை அனைவரும் ஒப்ப உவந்தேற்பர் பாரதப் பண் பாட்டின் எடுத்துக் காட்டாகவும் அரசியல் விஞ்ஞானத்தில் குலமரபின் செம்மை சான்ற தலைவியாகவும் தலைசிறந்த ராஜதந்திரியாகவும் சதுரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுடையவராகவும் அகில உலக தரிசனமும் அனுபவமும் பெற்றவராகவும் அணிசேரா இயக்கத்தின் தலைவியாகவும் தனித்துவம் பெற்று விளங்கியவர் அன்னை இந்திராகாந்தி.

அறிஞர்கள், சிந்தனையாளர்கள், மகான்கள், தேசபக்தர்கள், தியாகச் செம்மல்கள், வீரர்கள், விஞ்ஞானிகள், தொழில் வல்லுநர்கள், மேதைகள் வாழ்வினால் தான் ஒரு நாடு புகழடைகிறது: பெருமை பெறுகிறது. இத்தகு பேராளர்கள் வரிசையில் புகழுடம்பு எய்திய நாட்டுக்காக உழைத்த மிக நல்ல பெண்மணி அன்னை இந்திரா காந்தி. உயரிய பண்பாட்டின் இலட்சணத்தைத் தம் இளம் பராயத்திலேயே தந்தை ஜவஹர்லால் நேருவுடன் கூடயிருந்து கசடறக் கற்றதன் காரணத்தினாலும், அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டிலே தன்கால்களைப் பதித்துத் தொண்டு புரிந்த காரணத்தினாலும் மக்கள் மத்தியில் மாமனிதராக மதிப்பார்ந்த மகோன்னத பிரதமர் இந்திரா பல்லின பலமத - குலமக்கள் வாழும் பரந்த உபகண்டத்தின் பெருந்தலைவி. பிரதமர் இந்திரா தலைசிறந்த பேச்சாளர். தலைமையுரைகள், மாநாட்டுப் பேருரைகள், ஐ.நா. உரைகள், பொது நலவாயக் கூட்ட உரைகள், அறிக்கைகள் கூட அவரது வாக்குச் சாதுரியத் திறனையும் அரசியற் சாணக்கியத்தையும் பறை சாற்றுவன கருத்துக்களை ஒழுங்காகக் கோவைப்படுத்திப் பேசுபவர்களில் இவரும் ஒருவர். இனிமையும் சாந்தமும் கொண்ட குரலிலே பெண்மையின் குணவிஷேடத்துவம் கேட்பொருக்குப் புரியும் படியாக பௌவியமாகப் பேசும் மொழியாரே இந்திராகாந்தி. உள்ளுணர்வுகளின் வெளிப்பாட்டினைப் பேச்சுச் சாதனத்தின் துணைகொண்டு நாகரிக அரசியல் வாழ்வையும் செயலில் துணிந்து மதிப்புப் பெற்ற பெருந்தலைவர் இந்திராகாந்தி.

## ஏழைகளின் தோழி

உயர்குலப் பிறப்பும், ஆங்கில நாகரிகத்தின் செல்வாக்கும், மேல்தட்டு வாழ்க்கைச் சூழலும் திருமதி காந்திக்குக் கிடைத்திருந்தும் பெண்மை அரசின் சிறப்பியல்புகளையெல்லாம் உலகம் காணும்படியாக நிகழ்த்திக் காட்டிய பாமர மக்களின் தோழியாகவும் தலைவியாகவும் மிளிர்பவர் பிரதமர் இந்திராகாந்தி. செம்மை சான்ற - மாண்புடைய இந்திரா பிரெஞ்சு நாட்டுப் பெண் மணி ஜோன் ஆப் ஆர்க் போல விளங்க வேண்டும் என்று கொண்டு நாட்டு விடுதலைக்காக வீரமுடன் போராடினார். இவை அவர் கற்ற கல்வியின் பயனாகக் கிடைத்த ஒரு சில பேறுகள் சிறைக்கூடத்தையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விக் கூடமாக மாற்றியமைத்து அடைக்கப்பட்டுக் கிடந்த பெண்களுக்கு சீர்திருத்த விடுதலையுணர்வை 'அறிவூட்டல்' மூலம் ஏற்படுத்தியவர் பிரதமர் இந்திராகாந்தி.

பிரதமர் இந்திராகாந்தியினதும் தந்தை ஜவஹர்லால் நேருவினதும் குணாம்சங்களை ஒப்பீடு செய்துள்ள வெங்கட்ராம் மேல்வருமாறு எழுதுகின்றார்.

> தந்தைக்கும் மகளுக்கும் பல வகைகளில் ஒற்றுமை இருக்கிறது. அது சாதாரண ஒற்றுமையல்ல. விசித்தரமான ஒற்றுமை. இருவருமே செல்வமாக வளர்ந்தவர்கள், ஜவஹர் நவம்பர் மாதத்தில் பிறந்தார், இந்திராவும் அப்டியே! சிறுவயதிலேயே ஜவஹர் நிறையப் புத்தகங்கள் படித்தார், கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார். இந்திராவும் சிறுவயதிலேயே எண்ணற்ற நூல்களைப் படித்தார், நூலறிவைப் பெருக்கிக் கொண்டார். இங்கிலாந்தில் கல்வி பயின்றவர் ஜவஹர். இந்திரா உயர்தரக் கல்வி பெற்றதும் இங்கிலாந்தில்தான். ஜவஹர் விடுதலைப் போரில் கலந்து கொண்டார். இன்னல் பல பெற்றார். இந்திராவும் தந்தை வழியைப் பின்பற்றி விடுதலைப் போரில் ஈடுபட்டார். பலமுறை சிறை சென்றார். பல இன்னல்களுக்கு ஆளானார். ஜவஹர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தார். இந்திராவும் அந்தப் பதவியை வகித்திருக்கிறார். இந்தியா விடுதலை பெற்ற நாள் முதலாக இறக்கும்வரை ஜவஹர் பிரதமராக இருந்தார். இந்திராவும் இறக்கும்போது பிரதமராகவே இருந்தார் மக்கள் இன்று நேருவை நேசித்தனர். இன்று இந்திராவை நேசிக் கின்றனர். சாதி, மதவெறி அற்றவர் நேருஜி. இந்திராவும் அப்படியே. மூடப் பழக்கவழக்கங்களை நேருஜி அறவே வெறுத்தார். அவை களைக் கடுமை யாகச் சாடி வந்தார். இந்திராவுக்கும் மூடப் பழக்க வழக்கங்கள் கொஞ்சமும் பிடிக்காது. நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் உடையவர் ஜவஹர். அதே போல் நேர்மையான உள்ளமும் உரமான நெஞ்சமும் உடையவர் இந்திரா.

மோதிலால் நேருவின் அருமைப் பேத்தி இந்திரா ஒரு தடவை காங்கிரஸ் கட்சி மாநாடு லாகூரில் கூடிய போது ''இவன் என் அருமைப் பேரன். என் மகன் ஜவஹரின்பிள்ளை'' என்று நண்பர்களிடம் கூறினார் மோதிலால் நேரு. பேத்தியையே பேரனாகக் கண்டு மகிழ்ந்து துணிவூட்டி வளர்க்கப் பட்டவர் இந்திராகாந்தி.

பிரதமர் இந்திராகாந்தி தமது பன்னிரண்டாவது வயதிலேயே தீவிரமாகக் கட்சி அரசியல் அரங்கிற்கு வர ஆர்வம் கொண்டார். உள்ளத்திற் கொண்ட ஊக்கதினாலும் உத்வேகத்தினாலும் குழந்தைகளுக்காகிய காட்சியொன்றைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவக்கி அதன் தலைவராகியதுடன் தாயார் கமலாவின் சிபாரிசின்படி 'வானர சேனை' என்றும் அக்கட்சிக்குப் பெயரிட்டார்.

''தம் தந்தையுடன் சென்று இந்திரா பல அறிஞர்களைச் சந்தித்தார். அவர்களுடைய அறிவுத்திறனை எண்ணி வியந்தார். அரசியல் வாதிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் ஆகிய பலரையும் சந்தித்தார். ஐன்ஸ்டீன், பெர்னாட்ஷா, சார்லி சர்ப்ளின் போன்றவர்களையும் இந்திரா நேரிலே கண்டார்.''

''அறிஞர்களுடன் ஜவஹர் உரையாடிய போதெல்லாம் இந்திரா அதைக் கூர்ந்து கவனித்தார். அவர் பலவித அனுபவங்களைப் பெற்றார். அவை அவருடைய கல்வியின் ஒரு பாகமாகவே அமைந்தன.''

தன்மையும் ஜனநாயக அபிவிருத்தியும் அத்தியாவசியமானது என்று மனப்பூர்வமாக நம்பும் மேல்நாட்டினர்க்குப் புதுச் சுதந்திர ஆசியாவையும் ஜவஹர்லால் நேருவின் உள்ளத்தையும் மனத்தையும் அனுதாபத்துடன் அறிந்து கொள்வதற்கு முயற்சிப்பதைவிட வேறு சிறந்த வழி ஒன்றிருப்பதாக நான் நினைக்கவில்லை. (பக். 153, 177) மொழி பெயர்ப்பு தினமணி உதவி ஆசிரியர் என். ராமரத்தினம்.

குடி மக்கள் சொன்னபடி குடி வாழ்வு நடத்தியும், குடி தழீ இக்கோ லோச்சும் மாநில மன்னனாகவும் விளங்கியதோடு ஜனநாயகியாக சர்வதேச அரசியல் வானில் பேரொளி பரப்பிக் கொண்டிருந்த 'பாரத மாதா' அணைக்கப்பட்டு விட்டது மகாத்மா காந்தி அடிகள் நிலைக்கு உயர்ந்து விட்ட மனிதத் தெய்வம் இந்திராகாந்தி.

*இடுக்கட் படினும் இளி வந்த செய்யார்*
*நடுக்கற்ற காட்சியவர்*

அரசியல் நேர்மை, செங்கோன்மையுள்ளவரை இந்திராவின் புகழ் நீடு நிலைக்கும்.

**(நன்றி: ஈழநாடு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# பெண்ணின் மாண்பும் பெண்மை நலன்களும்

**தாய்க்கு நிகராவதெது?**

உலகிலே முதன் முதலிலே தோன்றியது பெண் தான் (பூமாதேவி). சூரியனும் சந்திரனும் போலவே உலகியற்கை ஆணையும் பெண்ணையும் இணைத்தது. பகலும் இரவும் போலவே ஆணும் பெண்ணும் குடும்பம் என்றிணைந்தது. சிந்து வெளியிலே தாய்த் தெய்வமேமுதன் முதலிலே அகழாய்விலே கண்டு பிடிக்கப்பட்டது. (Fertility cult) கருவளம் பெண்களிடத்திலே இயல்பாயுண்டு. பெண்ணின் மாண்பும் பெண்மை நலன்களும் தெய்விக மானவை, போற்றத் தக்கவை, வர்ணிக்கத்தக்கவை, வணங்கத்தக்கவை, பெருமதிப்பிற்கும் பெருமிதத்திற்குரியவை. 'தெய்வப்பாவை', 'இறைப் பண்பு நலன்கள்', 'நற்குணங்கள்' 'அடக்கம்', 'தாய்மை', 'அன்பு', 'பாசம்', 'பரிவு', 'நேசம்', 'ஒழுக்கம்', 'பக்தி', 'ஆசாரம்', 'தூய்மை' 'வாய்மை', 'கல்வி', 'கவனம்', 'அவதானம்', 'மதிப்புக்கொடுத்தல்', 'கவர்ச்சி', 'காதல்', 'ஊடல்', 'கூடல்' என்னும் சொற்கள் பெண்களின் மாண்புடனும் பெண்மை நலன்களுடனும் பெருந் தொடர்புடையன. இந்து மதம் - சைவசமயம் ஆணையும் பெண்ணையும் தனித்தனியும், இணைத்தும், பேராற்றலுடனும், தெய்விக மாகவும், கண்டுள்ளது. போற்றி வருகிறது. 'சிவன்' என்றும் 'சக்தி' என்றும் கூறினர். ஆண் தெய்வங்களுக்குரிய பெண் தெய்வங்களை வேதகால முதலே படைத்துக் காட்டி இயற்கையைப் போற்றியுள்ளனர். அர்த்தநாரீஸ்வரர் என்றும், உமையென்றும், பார்வதி என்றும் துர்க்கை, முத்துமாரி, இலக்குமி, சரஸ்வதி, ராஜராஜேஸ்வரி, கருமாரி, காளி, மனோன்மணி, சர்வ பூததமணி, பலப்பிரதமணி, பலவிகரணி சேட்டை, ரௌத்திரி, அபிராமி, அன்னபூரணி, காமாட்சி, விசாலாட்சி,மாதாங்கி, நாகபூஷணி, பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி, புராந்தகி, திரியம்பகி, புங்கவி, சிவசங்கரி, நாயகி, நாதாந்தசக்தி, காத்யாயினி, பைரவி, சாம்பவி, சாமுண்டி, வீரலட்சுமி, விஜயலட்சுமி, சந்தானலட்சுமி, சாந்தலட்சுமி, கனகலட்சுமி என எத்தனையோ பெயர்கள் சக்தித் தெய்வத்திற்கு, அம்பாளுக்குரியவையாகச் சைவ சமயத்திலே கொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. வடமொழிச் சுலோகங்களிலே அம்பாள் அந்தணர்களிடையே அர்ச்சிக்கப்படுகிறாள். தமிழ்ப்பெண்களாலும், கவிஞர்களும், பாவலர்களும் நாவாரப் பாடிப் பெண்மை நலன்களைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

குழந்தை தாயிடத்தில் தான் உருவாகிறது. கருவில் சுமந்து பெற்று வளர்த்து வளமாக வாழ வைக்கும் தெய்வம். தாயின் அரவணைப்பிலும் பிள்ளை வளருகிறது. பயமற்றுத் துள்ளி விளையாடுகிறது. மனித உணர்விலே மட்டுமன்றி கோழி, மாடு, நாய், பூனை, என்பவற்றின் 'தாய்' த் தன்மையை உலகியலிலே நோக்குகிறோமல்லவா. பருந்து குஞ்சைத் தூக்க வரும் போது கோழி - பெட்டைக் கோழி - தனது சிறகினுள் குஞ்சுகளை அரவணைத்துப் பாதுகாத்துக் காப்பாற்றுகிறது அல்லவா. தாய் குட்டி போட்டிருந்தால் குட்டியைத் தாயின் முன்னாலே சென்று தூக்கவோ, பார்க்கவோ முடியாது. 'தாய் நாய்' உடனே மனிதரைக் கடித்து விடுமல்லவா? குரங்கு தன் குட்டியைத் அது பற்றிப் பிடித்திருக்கும் போது மரக்கிளைகளில் குட்டியுடன் தாவுகிறது அல்லவா? தாயின் அரவணைப்பைக் குரங்குக் குடும்பமே காட்டுகிறது. அவுஸ்திரேலியக் கங்காரு தாயின் பைக்குள் கங்காருக் குட்டியைக் சுமக்கிறது. இன்று மனிதப் பெண்கள் குழந்தையைத் தமது வயிற்றிலும், முதுகிலும் கட்டிக் கொண்டே நடக்கிறார்கள்; சுமக்கிறார்கள், தள்ளு வண்டில்களிலும், சிறு குழந்தைகளை வீதியில், பிரயாணத்தில் தள்ளிக் கொண்டு செல்வார்கள். பிள்ளைகளின் சுக துக்கங்களிலே முதலில் பங்கெடுப்பவள் தாய் தான். சிவன் தாயினும் சிறந்த தயவான தத்துவன்' என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்தில். பிள்ளை எந்நிலையை அடைந்தாலும் தாய் தாய் தான். மாறாத அன்புடையவர் தாய் என்றெல்லாம் தாயன்புக்கு நிகரே இல்லை.

உலகிலே மிகப் பெரிய அறிவாளிகள், புலவர்கள், கவிஞர்கள், சிந்தனை யாளர்கள், கல்விமான்கள், ஞானிகள், யுக புருஷர்கள், தத்துவ மேதைகள், நடிகர்கள், நடிகைகள், வித்துவான்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், கலாநிதிகள், பேராசிரியர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள், அதிபர்கள் அனைவரையும் உலகிலே தந்தவள் 'தாய்' மட்டுந்தானே என்பது தெளிந்த பேருண்மை எத்தன்மையிலிருந்தாலும், எத்தொழில் செய்தாலும், 'அம்மா' அம்மாவே தான். தாயே ஒருவருடைய முதல் கண் கண்ட தெய்வம். மாதா, பிதா, குரு, தெய்வம், என்ற முறைமை காணத்தக்கது. நம் தாயை, அன்னையை, மாதாவை, வணங்கிப் போற்றி வழிபட வேண்டும். தினமும் பிள்ளைகள் வீட்டில் தாயை வணங்க வேண்டும். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்ற முதுமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நீங்கள் அறிந்து கொண்டு வாழக்கையிலே அப்போதனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்கத்துடன் வாழ உதவுபவள் 'தாய்'. எம்மைப் பத்து மாதம் தனது (உதரத்தில்) வயிற்றிலே சுமந்து பல்வேறு கஷ்டங் களையும், வேதனைகளையும், துயரங்களையும், வருத்தங்களையும், தாங்கி எம்மைப் பெற்றெடுத்தவள் அன்னையாகிய 'தாய்' தான். பாலூட்டித் தாலாட்டி, சீராட்டி வளர்த்து உலகிலே உயர்ந்த பண்புகளையும் ஊட்டுபவள் எங்களைப் பெற்ற தாய் தான். அன்னையின் அரவணைப்பிலே பாலராக, பிள்ளையாக, பராயமடையாதவர்களாக வாழும் நாம், பராயமடைந்து வயதுக்கு வந்து, பெரியவர்களாக வாழ்ந்து பெருவாழ்வு காணும் போதும் பெற்ற அன்னையை, தாயைப் பேணுபவர்களாக வாழ வேண்டும். தன் பிள்ளைக்கு நோய், வருத்தம், பிணி வந்தால் தான் பத்தியம் காத்துக் கொட்டும் மழையும், கொழுத்தும் வெயிலும் எம்மிலே படாது பாதுகாத்து வளர்ப்பவள் தாயாகிய அம்மா தான். பள்ளிப் பருவம் வந்ததும் எம்மைப் பக்குவமாய்ப் பாட சாலைக்கு அனுப்பி வைப்பவள் அம்மா. அதுமட்டுமா நாம் பருவம் எய்திப் புதியதோர் உலகத்திப் புகும் பொழுது எமக்குத் தக்க வாழ்வு பெற்றுத் தருவரும் நம் அன்னையே. அப்படியான பாச நெஞ்சுடைய அன்னையை விட இந்த உலகத்தில் எமக்கு அன்பு பாராட்டுகள் வேறு யாரும் இருக்கவே முடியாது. அம்மாவின் இரத்தத்தில் உருவானவர்களே நாம். எவரையும் எவ்வகையில் பெறுதல் இலகு. ஆனால் தாயின் அன்பை, தாயன்பை எங்கும் விலை கொடுத்து வாங்க முடியாது. 'ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம், அம்மாவை வாங்க முடியுமா?' என்று வரும் சினிமாப் பாடல் வரிகளில் தான் எத்தனை உணர்வு!

தாயன்பின் உன்னத நிலையை உணர்த்த இறைவனையே தாயானவன்; 'தாயுமானவர்' என்றெல்லாம் அறநெறி நூல்களும் சமயநூல்களும் உணர்த்திக் காட்டுகின்றன. 'அம்மையே அப்பா' என்றும், 'தாயாய் முலையைத் தருவானே' என்றும், தாயினும் நல்ல தலைவர் என்றும் அல்லது தாயின் அன்பினைக் கடவுளின் கருணைக்கு இணையாகப் பேசுவர்கள். தாய் சக்தி தருபவள். எம்மை இந்தத் தரணிக்கு அளித்தவர். தாய் அன்பின் திருவுரு என்பதால் மிகப் பழைய காலம் முதலே அனைவரும் தாய்மை வழிபாட்டைப் போற்றி யுள்ளனர். தாயின் மனம் நோக நாம் நடக்கக் கூடாது. பெற்றதாய் முதிய வயதையடைந்தாலும் எந்தப் பருவத்தை எய்தினாலும் அவர்கள் சொற்கேட்டு அவர்கள் காட்டும் வழிநடத்தலிலே நடத்தலே மேலான - உரிய சிறந்த பண்பாகும். தாய் உலகிலே உயிர் வாழும் போதே அவர் எங்களைப் பெற்றதால் கிடைத்த மகிழ்ச்சியைப் பெற வைக்க வேண்டும். நம் சுகதுக்கங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் பிறந்த நாள் முதல் இறக்கும் வரை பங்கு கொள்பவள் தாய். 'பெற்றவள் அறிவாள் பிள்ளையின் அருமை' என்றொரு பழமொழி உண்டு. தாய்க்கு முன்னால் தன் பிள்ளைகள் எவ்வயதினை அடைந்தாலும் குழந்தைகள் போலவே தெரிவர். பெண் குழந்தைகள், பெண்பிள்ளைகள் புத்தி தெரிந்து அறிவு வந்து உடம்பால் பெரியவராகும் போதெல்லாம் அவர்களுக்கு அருகிலிருந்து ஆலோசனை தந்து, அரவணைத்து, அன்பு காட்டி, பயத்தைத் தெளிவித்து, தன்னம்பிக்கையை ஊட்டி வாழும் வழியைக் கற்பித்துத் தருபவள் தாயல்லவா?

'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' என்ற சினிமாப் பாடல் அன்னையொருத்தியின் அற்புதமான வளர்ப்பின் இரகசியத்தை விளம்புவதேயாகும். 'பெற்ற மனம் பித்து' எனப்படும் ஒரு மொழி எவ்வளவு உண்மையானது. பிள்ளைகளாகிய நாம் அறிந்தோ அறியாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, புரிந்தோ புரியாமலோ செய்யும் குற்றங்கள், குறும்புகள் எல்லாம் சகித்துத் தனக்கேயுரித்தான கருணை உள்ளத்தோடு எம்மை ஆதரித்து வளர்க்கும் தாயன்புக்கு நிகராக எதைத் தான் கூற முடியும். தாய் - அம்மா, அன்னை, பெற்றவள் தமக்குச் செய்த உதவிக்கு நம்மால் எதையுமே ஈடாகத் தர முடியாது. ஆகவே அம்மாவிடத்திலே நாம் என்றும் அன்பும், பணிவும், பாசமும், நேசமும், கவனமும் உடையார்களாகவே இருத்தல் வேண்டும். 'தாய் சொல் துறந்தால் வாசமில்லை' என்னும் கூற்றிலே வரும் உண்மையை நாம் என்றுமே மறவாது இருத்தல் வேண்டும். தாய் சொல்லைத் தட்டி நடக்கக் கூடாது. 'மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்' என்று அருந்தமிழ் அம்மை ஔவைப் பிராட்டியார் சொன்ன அறிவுரையின் பிரகாரம் அன்னையைக் கண்கண்ட முதல் தெய்வமாகத் தளாரது மதித்து வாழ்வோம்.

*ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்*
*சான்றோனெனக் கேட்ட தாய்*

என்று திருவள்ளுவர் வாக்கின்படி ஒரு தாயன்பைப் பெறக் கூடிய மகிழ்வும், திருப்தியும், தன் பிள்ளை நல்லவனாக, வல்லவனாக, சான்றோனாக, வாழ்கிறான் எனக் கேட்பதிலேயே தங்கிவுள்ளது. அன்னையாகிய தாயின் அன்பை என்றும் மறவாது நன்றியோடு வாழ்வோம்.

பரம்பொருளைத் தாயாக வழிபடும் மரபிலே சக்தி வழிபாடுகளுக்குரிய சிறப்பான நாட்கள் - ஒன்பது நாட்கள் - நவராத்திரி என்று இந்து சமய - சைவசமயத்தார்களால் அனுஷ்டிக்கப்படும். கொலுவைத்தல், கோலமிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரம், செல்வம், கல்வி, எனும் பேறுகளைத் தந்து. மகிஷாசுரன் எனும் அசுரனை மர்த்தனம் - (அழித்து) செய்து, கலைகளின் எழுச்சிக்கும் உரிய நாட்கள் நவராத்திரியாகும். எம்மை ஆண்டு அருள் புரியும் இறைவனைப் பெண்ணாகத் தாயுருவில் வழிபட்டு வரும் மரபில் உயர்ந்தவர்கள் நம் தமிழ் மக்கள். அன்பின் முழுவடிவமான தாயன்புக்கு நிகர் - இணை - வேறில்லை, அம்பிகைக்குரிய பண்டிகைகளில் முக்கியமானதும் சிறப்பு வாய்ந்ததுமாக போற்றப்படுவது நவராத்திரி. இது புராட்டாசி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி ஈறாக வரும் ஒன்பது நாட்கள் அனுஷ்டிக்கப்படும். நாம் அனுஷ்டிக்கும் எல்லா விரதங்களிலும் பக்தி பூர்வமானதும் முக்கிய மானதுமான விரதம் நவராத்திரி விரதமாகும். கலை வளம் செழிக்கும் நாட்கள் நவராத்திரி விரத நாட்கள். அனைவரிடத்திலும் பக்திப் பிரவாகமும், களிப்பும், குதூகலமும், பீறிட்டோடும்.

> முதல் மூன்று நாளும் வீரத்தை வேண்டித் துர்க்கையை (மலைமகள்) வழிபடுவர். அடுத்து வரும் மூன்று நாட்களும் செல்வத்தை வேண்டி இலக்கு மியை வழிபடுவர். 'நீரும், நிழலும், நெற்கட்டும், பேரும், புகழும், பெரு வாழ்வும், ஊரும் பெருந் திருவும், வாழ்நாளும்' வஞ்சமில்லாத தன் அடியார்களுக்குத்தரவல்லவள். மகாலட்சுமி. திரு மகள், அலைமகள், எனப்படுவாள். இறுதி மூன்று நாட்கள் கல்விக்கரசி கலைவாணிமாகிய சரஸ்வதியை வழி படுவர். தூய வெள்ளையுடன், கையிலே வீணையேந்திவளாக உருத்திராட்ச மாலையும், ஏடும் கரங்களில் கொண்டவளாகக் காட்சி தருபவள் சரஸ்வதி. சகலகலாவல்லி, வெண்டாமரை ராணி, வாணி, கல்விக்கரசி, கலைமகள் என்றெல்லாம் ஏந்தியும் போற்றியும் வழிபடும் தெய்வம் சரஸ்வதி தேவியே. நவராத்திரியின் சிறப்பம்சங் களிலொன்று கொலு வைத்தல். கொலு என்பது பல படிகளைக் கொண்ட மேடையில் விதம் விதமான பொம்மைகளை நேர்த்தியாக அடுக்கி அலங்கரித்து வைக்கும் இட மாகும். 9 படிகளைக் கொண்ட மேடை அமைப்பது நலம் 'மண்ணிலே கிடைக்கும் செல்வங்கள் பூசிப்பவர்களுக்கு வந்தடையும்' என்பது அம்பாளின் கூற்று. நவராத்திரியில் துர்க்கா தேவி மகிஷாசுரன் என்ற கொடிய அரக்கனுடன் எட்டு நாட்கள் போர் செய்து ஒன்பதாவது நாளிலே அவனை வதம் செய்தாள் என்று கூறப்படுகிறது.

இது மகாநவமி, மானம் பூ, எனப்படுகிறது. ஏடு தொடக்குதல், கலைகளைக் கற்பார்களுக்கு வித்தியாரம்பம் செய்தல், புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கம் என்பவற்றுக்கு மிகச் சிறந்த நாளாகும். நவாராத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினங்கள் வாழ்வுக்கு அருள் தந்து நம்பிக்கையையூட்டுகின்றன. தாய்மையைப் போற்றும் நாட்களான இந்நவராத்திரித் தினங்களில் நம் உடல், உள, சக்திகளுக்குப் புத்துயிரூட்டுவோம். உலக இயக்கத்துக்கு உந்துதல் ஈய்ந்து செயற்படுத்தும் தாய்மைப் போற்றினால் இச்சக்திகள் எம்மைத் தேடி வரும். தரனியில் மகிழ்வும் சாந்தியும் சமாதானமும் தளைக்கும். ஆக்கம் தரும் அறிவை நாடி மாணவர்களாகிய நாம் இந்நாட்களில் அன்னை பராசக்தியை வழிபட்டு உய்வோம்.

## சங்க இலக்கியத்திற் பெண்கள்

சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை என்பவற்றில் நெய்தல் மகளிர் இடம் பெறுகின்றார். 'பரத்தியர்', 'உமட்டியர்', 'நுளைமகள்' என்று அழைப்பர். இவர்கள் சுருங்கிய இடையினர் அசைகின்ற கூந்தலையுடைய வராயும் காணப்பட்டனர். இவர்கள் வேல் போன்ற கட்பார்வை உடையவர். பெரும்பாணாற்றுப்படையில் பாலை நில மகளிர் குறித்த செய்திகள் உள்ளன. 'எயிற்றியர்', 'அயிற்றியர்', எனப்பட்டனர்.

சங்க காலத்தில் வரைவில் மகளிராகிய பரத்தையரும் வாழ்ந்தனர் 'பரத்தையர்' ஏழிசை யாழை வாசிக்கும் இன்னிசைக் கலையில் சிறந்தி ருந்தனர். இவர் தம் கொண்டையிலே வெண்ணிறப் பூக்கள் அணிந்து கொள்வர். பழுத்த மரத்தைத் தேடி அலையும் பறவை போல மேலும் பொருள் தரும் பிறரை நாடித் தம்முயிரைப் பாதுகாக்கின்ற பரத்தமை வாழ்க்கையிலே நிலைத்து நின்றனர். மதுரைக் காஞ்சி, இவரை' நெஞ்சு நடுக்குறூஉக் கொண்டி மகளிர் (மது 559 - 589) என்கிறது. புலவியால் கற்பு வாழ்க்கை சிறந்தார்க்கு இப் பரத்தையர் ஏதுகை உள்ளனர் என்றும். தமிழை ஆராயாதார் பயனை உணர்ந்து கொள்ளப்பட்டார் என்று கற்பொழுக்கப் பரத்தையரையும் வாழ்வின் ஓர் அங்கமாகப் பரிபாடல் குறிப்பதும் ஈண்டு கருதற்பாற்று. ஆண் மக்களுடைய மனை விட்டுப் பிரிதல் நிகழ்ச்சியில் 'பரத்தையர் பிரிவு' ஒன்று என்பது தொல்காப்பியச் (பொரு:28) சூத்திரம்.

*பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே*
*நிலத்திரிபு இன்று அஃது (தொல் : பொரு: 28)*

சங்க இலக்கியங்களில் மகளிர் கூந்தலை உலர்தல் பற்றிக் கூறப்படுகிறது. பெண்கள் குளித்தவுடன் பலகாலும் எண்ணெய் தடவிப் போற்றிய தம் கூந்தலுக்கு மயிர்ச்சாந்து பூசி, அந்த ஈரம்புகாதபடியாக விரலால் அம் மயிரைக் கோதிப் பிணிப்பை விடுத்து, அகிற் புகையையும் ஊட்டுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிப் பாட்டு: 107 -120) இப்பழக்கத்தை, எண்ணெய் நீவிய கரிவளர் நறுங்காழ்த் தன் நறும் தகரம் கமழ மண்ணி' என்று வரும். சங்காலத்தில் பெண்கள் நீண்ட ஒற்றையாடலை நிலத்தைத் தொடும்படியாகத் தழைய உடுத்தினர் என்று கொள்ளலாம். என்பதற்குக் கலித்தொகையில் ஆதார முள்ளது. 'நிலம் தாழ்ந்த பூங்கரை நிலம் தழீஇ' என்பது செய்யுள் வரி. நிலத்தைத் தொடும் படியாக உடுத்த நீல ஆடை நடக்கும் போது கால் களுக்குத் தடையாயிராதபடி இந்தப் பெண் கையால் சிறிது மேலேறத் தழுவிக் கொண்டு செல்கிறாள். ஆகவே ஆடையை நிலம் தோய உடுத்தலும், வண்ண ஆடைகளை அணிதலும் பெண்களியல்பு என்று தெரிகிறது.

பெண்கள் - வயது வந்த - பருவமடைந்த ருதுவாகிய பெண்கள் மார்பில் கச்சுக் கட்டும் பழக்கம் உடையராய் இருந்தனர். இன்று ஆங்கிலத்தில் மார்புக் கச்சுக்குப் 'பிறசியர்' என்று பெயர். கச்சுகளை நெய்தபின் அதன் விளிம்புகளை முடிதலும் ஒரு கைவினையாகும். இத்தொழில் புரிவோர் வம்பு நிறை முடிநர் (மதுரைக்காஞ்சி - 514) எனக் குறிப்பிடுவார். இக்கச்சு பூத் தொழிலால் அழகு செய்யப் பெற்றிருக்கும். காந்தள் மலர் பரந்து கிடக்கின்ற நிலம் பல கச்சுப் பரந்த களம் போலே அழகு பெறப் பொலிவுற்று விளங்குகிறது என்கிறார் கபிலர் (குறிஞ்சி பாட்டு 193 - 199). பெண்கள் தங்களது மார்பிலுள்ள முலையை மறைத்துக் கச்சினை இழுத்துக் கட்டுவது மரபு.

சங்ககாலப் பெண்கள் 'தொய்யில் எழுதுகை' யில் பயிற்றப்பட்டவர்கள் என்பது குறுந்தொகையாலும், கலித்தொகையாலும் உணர்த்தப்பட்டுள்ளது. 'தொய்யில் எழுதுவது' என்றால் மகளிர் தம் முலை மீதும் தோள் மீதும். வண்ணக் குழம்பினால் முறையே தொய்யிலும் கரும்பும் எழுதிக் கொள்வது என்று பொருள். இவற்றைத் தம் காதலியர்க்குக் காதலர்கள் எழுதினர் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

*உருத்து எழுவன முலை ஒளிபெற எழுதிய*
*தொய்யில் காப்போர் அறிதலும் அறியர்* *(குறுந் 276: 2 - 4)*

*இளமுலைமேல் தொய்யில் எழுதவும் வல்லன்* *(கலித் 143: 31 - 34)*

சங்க கால மகளிர் 'கூந்தலலங்காரம்' செய்து கொள்வதில் பெரிதும் அக்கறை காட்டியுள்ளனர். 'ஐம்பால்' என்று ஐந்து வகையில் பிரித்து அழகு செய்து கொண்ட குறிப்புக் கலித்தொகையில் உள்ளது. கூந்தலின் ஐவகை அலங்காரமாவது கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்பனவாம். உச்சியில் கட்டி முடிக்கும் முடியை முச்சி' எனவும் வழங்கினர் என்பது மலைபடுகடாம், ஐங்குறுநூறு என்பவற்றால் அறிய முடிகிறது. புறநானூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(61:1) 'கொண்டைத் தண் தழைக் கடைசியர்' என்பதனால் கடைசியர் கொண்டையிட்டு மயிரை முடிக்கும் வழக்கினராயிருந்தனர். கூந்தலில் வகிடு எடுத்துப் பின்னிப் பின்புறமாகத் தொங்க விட்டுக் கொள்ளும் பின்னல் முடியும் பெண்களிடைப் பழக்கமாய் இருந்தது. என்ற செய்தி கலித்தொகை, நெடுநல்வாடை, அகநானூறு என்பவற்றில் வருகிறது. விறலி ஒருத்தியின் பின்னல் பெண் யானையின் கைப்போல் உள்ளது. என்று சிறுபாணற்றுப் படையில் வர்ணிக்கப்பட்டுள்ளது. (190 - 191), மாலையாகக் கட்டாமலும் விடுபூவைத் தனியாகத் தலையில் சேர்த்து அணிவதும் உண்டு. மாலை பெண்களணிவது கண்ணி அலங்கல் 'தார்' ஆடவர் அணிவன.

திலகம் - பொட்டு வைத்தல் பற்றிக் கலித்தொகையிலும் பரிபாடலிலும் சான்றுகளுள.

*நெற்றி விழியன நிறை திலகம் இட்டாளே*
*கொற்றங் கோலம் கொண்டு ஓர் பெண்*

என்கிறது பரிபாடல் (11: 99-10). மகளிர் வெவ்வேறு வகையில் தம்மை அலங்காரம் செய்து கொண்டனர் என்று குறித்தும் பல குறிப்புகள் சங்க பாடல்களில் உள. காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றதான உடை, அணிவாசம் முதலியவற்றை மேற்கொண்டனர். வையையில் புதுப்புனல் வரவு காணச் சென்ற மகளிர் கொண்ட கோலத்தைப் பரிபாடல் 'ஓசனை கமழும் வாச மேனியர்' என வருணிக்கிறது.

சங்க கால மகளிர் பலவகை விளக்குகளை ஏற்றி வீட்டை அலங்கரித்தும் வழிபட்டும் வந்தனர் மாலைக் காலத்தில் 'பூ' முதலியவற்றைத் தூல விளக்கினை வழிபட்டு வந்தனர்.

தீட்டுடை மகளிர் பற்றிப் புறநானூறு கூறுகிறது. தூய்மையில்லாத - வீட்டுவிலக்கான மாதவிடாயுற்ற பெண்கள் வீட்டுப் பொருட்களை - பாண்டங்களைத் தொடுவதில்லை. தீட்டுடையோர் வி லகியே இருப்பர். கோவில்களுக்கும் இவர்கள் செல்வதில்லை. முனிவர்களை அடுத்தோர் தம் தூய்மை இன்மை காரணமாக அவர்களை நெருங்காது விலகிச் செல்வது மரபு என்கிறது குறுந்தொகை.

சங்ககாலப் பெண்கள் கற்பிற்கு அறிகுறியாக முல்லை மலரை அணிவது மரபு. 'முல்லை சான்ற கற்பு' என்று சிறுபாணற்றுபடை, நற்றினை, அகநானூறு சிறப்பிக்கின்றன. மகளிரின் வாழ்க்கைச் சிறப்பு அவர் தம் கணவருக்கும் பெருமையளித்தது. கற்புடைய மனைவியின் சிறப்பால் கணவன்மார் பெரு மிதத்துடன் வாழ்ந்தனர். அவரது பெருமிதத்திற்குக் காரணம் மாநலமிக்க மனைவியைப் பெற்றது. எனக் கருதினர். கணவன்மார்க்கு மட்டுமல்ல அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் தந்தையர்க்கே மகளிரால் பெருமை வரும். பெண்கள் எப்பொழுதும் தாங்கள் புகும் இடத்திலேயே பெருமதிப்புடன் போற்றத்தக்கவர்கள். மலையில் பிறந்த சந்தனமும், நீருள் பிறந்த முத்தும் யாழில் பிறக்கும் இசையும் அவற்றைப் பெறுவோக்குப் பயன்பட்டுப் பெருமை பெறுகின்றன. பெண்கள் நிலவும் இவற்றை ஒத்ததே (கலித்தொகை 9:12- 20) பாடல் இவ்வாறுள்ளது.

*பல வுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கல்லதை*
*மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என் செய்யும்!*
*நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு அணையளே*
*சீர்கெழு வெண் முத்தம் அணிபவர்க்கு அல்லதை*
*நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்!*
*தேருங்கால், நம்மகள் நுமக்கு ஆங்கு அனையளே*
*ஏழ்புணர் இன்னிசை முரலபவர்க்கு அல்லதை*
*யாழுளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என் செய்யும்*
*சூழுங்கல் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே*

*(கலித்தொகை)*

## காதல் இன்பம் தரும் பெண்கள்

இயற்கை சில இரகசியங்களை உள்ளடக்கி வைத்துக் கொண்டு வேடிக்கை காட்டுவது போல் இதயமும் எண்ணற்ற கனவுகளைப் படைத்தும், மகிழ்ந்தும், தூண்டும், ஒன்றையொன்று கவர்ந்து வாழும் காதல் போன்ற உணர்வுகளை வளர்த்தும் பேணியும், மனித சமூதாயத்தை நெகிழ வைத்திருக்கிறது. உணர்ச்சி மயமான மனித வாழ்வில், காதலை போல் மென்மையும் கூர்மையும் கொண்ட உணர்வு வேறொன்றில்லை. ஆண், பெண் இருபாலாரையும் ஒன்றாக்கிப் பெரியதொரு அறவாழ்வைத் தலைமேல் ஏற்றி வைத்து விடு கிறது. அந்த இரகசியம் இரகசியமாகவே இருக்குமே. அதனால் கிடைக்கப் பெறும் இன்பத்தேன் ஒன்றே போதுமானது.

*அணங்கு கொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர் கொல் மாலும் என் நெஞ்சு*

ஒருவர் காதல் ஒரு தலைக் காமம். இருள் நெஞ்சமும் இணைந்த பின்னரே ஐந்திணைக் காதல் என்பர் தமிழச் சான்றோர். அதனையே உண்மைக் காதல் எனலாம். தன் நெஞ்சில் ஏற்பட்ட இன்ப உணர்வும், அன்பின் நெகிழ்ச்சியும் அவர் பால் ஏற்பட்டதோ என அறிந்து கொள்ள விரும்பினான். அறிவும் அறிவுடைய கயவர்களும் உண்மையைக் கண்டு பிடித்து விட்டனர். கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் போல் பொல்லாதவையுண்டோ? உட்கிடக்கையை எவ்வளவு நலமாகப் பறைசாற்றி விடுகின்றன.

*இரு நோக்கு இவள் உண்கண் உள்ளது, ஒரு நோக்கு*
*நோய் நோய்க்கு, ஒன்று அந்நோய் மருந்து*

அவள் தனது இரு கண்களையும் நோக்கினாள். நாணத்தால் தலை இறைஞ்சி நின்றாள். காதலை வரவேற்று நிற்கும் வணக்கம் அன்புயிர் வளர அவள் வார்த்த நீராயிற்று. அவளை ஏறெடுத்துப் பார்த்தபோது நிலம் நோக்கி நின்றாள். அதனைத் தெரிந்து கொண்டு சிறிது பார்க்காமல் நிற்கவே. என்னை நோக்கி மெல்ல நகைத்தாள். கடைக்கண்ணால் நோக்கிச் சிரித்தது, உண்மை. விரிந்து தாமரைக் கண்கள் சுருங்கி நின்று காதல் கதையை விரித்துப் பேசுவதையும், காணாதது போல் கண்டு மகிழும் காரிகையின் இயல்பையும் உணர்த்த, சிறக்கணித்தாள் போல நகும் என்றுரைக்கும் இலக்கியச் சித்திரம் எவ்வளவு தத்ரூபமாக அமைந்து விட்டது.

சங்க கால பெண்கள் இலக்கிழத்தியராயும், அன்பு, ஒழுக்கம், கற்பு, விருந்தோம்பல், சுற்றத்தை உபசரித்தல் முதலிய குணங்களைப் பெற்று விளங்கினார். தலைவனுக்கேற்ற நற்குண நற்செய்கைகளுடைய வாழ்க்கைத் துணைவியாயும் அமைந்தாள், பெண்கள் நாணமுடையார்கள். நாணம் மகளிர்க்கு உயிரை விடவும் சிறந்தது. அந்தநானத்திலும் சிறந்தது. அவர்தம் கற்புடைமை. கற்புடைய பெண்ணே தெய்வம். சிலப்பதிகாரத்துக் கண்ணகி வாழ்வு இளங்கோவடிகளால் 'சிலப்பதிகாரம்' நூலிலே உள்ளது. திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை என்பனவும் மகாபாரதமும், இராமாயணமும் பெண்மை நலன்களையும், பெண்ணின் பேராற்றலையும் எடுத்துரைத்துள்ளன. திருக்குறளில் 'இல்லறவியல்' அனைத்துப் பெண்களும் ஆழமாகக் கற்க வேண்டிய அத்தியாவசிய இலக்கியப் பகுதிகளாகும். அன்பு வாழ்வு காதல் வாழ்வு எனப்பட்டது. குறுந்தொகையில் 'அன்புடை நெஞ்சம் தாம் கலந் தனவே' (குறு 40: 1-5) என்று வருகிறது. ஒருவரை ஒருவர் கண்ணால் காணாமலேயே ஒத்த உணர்ச்சியுடையார்களிடத்து அன்பு பிறக்கும்.

ஒருவனுடைய நல்வாழ்வுக்கு நல்ல வாழ்க்கைத் துணையும் அறிவு நிரம்பிய மக்களும் தன்னோடு ஒத்துழைக்கும் ஏவலாளர்களும் அறநெறி வழுவாத அரசனும் சான்றோர்களும் துணையாக அமைகின்றனர்.

காதல் வேட்கையில் புணர்ச்சியின்பத்தின் பின் தலைவன் கூறுவதாகத் திருக்குறள் குறிப்பிடும் நயம் சுவைத்தற்குரியது. அனுபவித்தற்குரியது. பெண் என்னும் பேரமுதை நினைத்து நினைத்து மகிழ்கிறான். அவள் அழகைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு மகிழ்ந்தன கண்கள். அத்தான் என்ற இனிய சொல்லைக் கேட்டு மகிழ்ந்தன செவிகள். இதழமுதம் உண்டு சுவைத்தது நெஞ்சம். நறுமணம் கமழும் மேனி; வாசனை பொருந்திய கூந்தல், முல்லை மணக்கும் நெற்றி, இவற்றோடு சூடி மகிழ்ந்த மலர்கள் அனைத்தும் பேரின்ப மணத்தை அள்ளி வீசின. அவற்றை நுகர்ந்து மயங்கிற்று மூக்கு. பவள உடல், தந்தத்தை வெல்லும் தளிர் மேனி, அதனைத் தொட்டு மகிழ்ந்தன கைகள். அதில் பட்டுத் தளிர்த்தது தன்னுடல், எவ்வளவு இன்பம். கேட்டதும், உணர்ந்ததும், நுகர்ந்ததும், இல்லை. ஐம்புலனும் இன்பமடையும் இரகசியத்தைத் தெரிந்து கொண்டு பாராட்டுகிறான். இன்னமுதாய் உயிர் வளர்க்கும் அன்பு மகளோடு - காதலியோடு உறவாடி, தன்னை மறந்த நிலையில்,

*கண்டு கேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்*
*ஒண்டொடி கண்ணே உள*

என நெஞ்சு தழைக்கக் கூறுகிறான். அணியிழையின் இன்ப உறவு இதயத்திற்கு எவ்வளவு இதமளிக்கிறது. பொறியை வெறுத்து உடலை வருத்தி இன்பம் பெறுவதை விட அதனோடு பொருந்தி நின்று இன்பம் துய்த்து இவள் காதலில் கண்ணுறங்கும் பேறு பெரிது தான். இதயக் கோவிலில் இவள் ஏற்றி வைத்த காதல் சுடர் எவ்வளவு விசித்திரமானது. இன்பமளித்த பெண்மைக்கு இதயங் கனிந்த பாராட்டுக்கள். பாலோடு தேன் கலந்த இதழ்ச் சுவையும் கனிமொழியரின் பணிவும் ஆண்மகனின் நெஞ்சைப் பிணிப்பதில் அதிகமில்லை. பெண்மையென்னும் அருட்கோலத்தின் அடக்கம். அதற்கேற்ற இனிய மொழி, இரண்டையும் நினைத்தே பணிமொழி என்று பாராட்டுகிறான். கண்ணுள் மணியென அவளைக் காக்க முயல்கிறான்.

## சிலப்பதிகாரக் காவியத் தலைவி பத்தினித் தெய்வம் கண்ணகி

கண்ணகியெனும் தெய்வப் பெண்ணைக் காவியத் தலைவியாக்கிய பெருமை சிலப்பதிகாரத்தைப் பாடிய இளங்கோவடிகளுக்குரியது. சிலம்பில் கண்ணகி, மாதவி என்னும் இரு பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. 'சிலம்பு' என்று பெண்களணியும் பாத அணி. ஐம்பெருங் காப்பியங்களும் தமிழ்த் தாயின் அணிகலன்கள். சிலம்பு, மேகலை, சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, என்பன அவை.

மாதவிக்கு அவளது தாய் சித்திராபதி ஏழு ஆண்டுகள் ஆடற்கலை பயிலச் செய்தார். பன்னிரண்டாவது வயதில் வெற்றிக் கழல் அணிந்த வீர மன்னன் முன்னிலையில் ஆடல் அரங்கேற்றம் செய்ய எண்ணினார். இவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடற்கலை பயிற்றுவித்தார்கள், இசை பயிலுனர்கள், ஆசிரியர், மத்தளம், மற்றும் கருவிகளிசைப்போரின் திறன்களும் அளவிட முடியாதவை, சிலம்பில் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், மூன்றையும் காணலாம்.

நிலா முற்றத்தில் கோவலனும் கண்ணகியும் வண்டுகள் தேனுண்ண வந்து மொய்க்கின்ற புத்தம் புது மலர்கள் பரப்பிப் பாங்குற அழகு அணி செய்யப்பட்டிருந்த கட்டிலில் மட்டற்ற மகிழ்ச்சியுடன் அமர்ந்தனர். எப்படி யிருக்கும் கண்ணகியின் மனம்? மலரின் மணம், நிலாமுற்றம், பனிமலர் பரப்பிய பஞ்சணை உணர்வுகளின் இனிமை இருவருளே தனிமை, பேச்சில், கனிவு, நாணத்தில் குனிவு, இருப்பினும் இருமனங்களிலும் துணிவு, நடத்தை களில் பணிவு, அறிவுசார்ந்த மனம் நிறை செறிவுடன் விளங்கியபோது, உல்லாசம், உணர்வு, காதல், கணிரசம் மீதூரக் கோவலனும் கண்ணகியும் உடல் சேராமல் ஆரத்தழுவி இன்புற்றனர் என்கிறார் இளங்கோவடிகள்.

> மாசறு பொன்னே வலம்புரி முத்தே! காசறு விரையே, கரும்பே தேனே! அரும் பெறற்பாவாய் ஆர்உயிர் மருந்தே! பெருங்குடி வணிகன் பெரு மடமகளே! மலை இடைப் பிறவா மணியே என் றெல்லாம் கனிவுடன் கனி நனி சிறக்கப் புகழ்ந்து கொண்டே யிருந்தான்.

ஆடல் மகளிர் குலக்கொடி மாதவி என்பாள் ஆடினாள். பரிசிலாக பச்சைப்ப தக்க மாலையைப் பெற்றனள். பின் அம்மாலையை விற்றனள். மாலையை வாங்குவன் அவருடன் வாழ்வன் என்றும் கூறினார். கோவலன் அதை விலை கொடுத்து வாங்கினான். விலை மாதர் கூத்துச் சிகாமணி மாதவியையும் சேர்த்து வாங்கினான். வினை விளைகாலம் வந்தது. இன்ப இல்லறத்தில் துன்பம் புகுந்தது. கோவலனைக் காணாது கண்ணகி கண்ணீரால் உடலை நனைத்தாள். இடையாடையில் மேகலை இல்லை. கண்கள் மையை இழந்தன, நெற்றி திலகத்தையிழந்தது. பொன் நகையுமில்லை முத்துப் பல்வரிசையில் புன்னகையும் இல்லை. நீண்டு படர்ந்த கருங் கூந்தலில் வாசனை நெய்யும் பூசவில்லை. அழுதாள் தொழுதாள் அரற்றியபடியே மனதுக்குள்ளேயே சுமையைத் தாங்கித் தவித்தாள்.

கோவலன் கள்வன் என்று நீதி பிழைத்துத் தண்டனையும் வழங்கப் பட்டது. பாண்டவர் தீரவிசாரியாது செய்த பிழை குற்றமே என்று கண்ணகி வெகுண்டெழுந்து சீறிய கற்பாக மாறினாள். முதலில் பாண்டியனும் பாண்டிமா தேவியும் இறக்கவும் மதுரை எரியூட்டவும்பட்டன. தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் வானுறையும் தெய்வத்தாலும் போற்றப் படுவாள் என்று உறுதியாக, கற்புக்கரசி கண்ணகி தெய்வமான பத்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் உணரமுடிகிறது. இதனால் தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண் என்று வலியுறுத்தப்படுகிறது. மண்ணகத் தில் பெண்களுக்குக் கற்புக்கு அணியாகத் திகழ்ந்த கண்ணகி விண்ணவர்க்கு விருந்தினராய் வானுலகம் புகுந்தாள். தன்னொளி வீசும் வெண்ணிலவு போன்ற முகம் பெற்ற கண்ணகியின் கதை. மண்ணவரையும் விண்ணவரையும் ஈர்க்க வல்லதாய் உள்ளது. இலங்கையில் முதலாம் இராஜ சிங்கன் 48 கண்ணகி கோவில்கள் கட்டுவித்தானாம். கிழக்கிழங்கையில் காரை தீவு, வீரமுனை, தம்பிலுவில், பட்டிநகர், செட்டிபாளையம். ஆரையம் பதி, துறை நீலாவணை, சித்தாண்டி, வேலனைக் குடியிருப்புப் போன்ற இடங்களில் கண்ணகி ஆலயங்கள் உள்ளன. முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரும் கண்ணகி மீது பாடல்கள் பாடியுள்ளார். மயிலிட்டி, புன்னாலைக்கட்டுவன், உடுவில், கோப்பாய், சுழிபுரம், தீவுப் பகுதிகளிலும், புங்குடுதீவிலும் கண்ணகி கோயில்கள் உள்ளன. உவர் மணல் கண்ணகி அம்மன் கோவில் மிகப்பழமை வாய்ந்தது. வண்ணாங்குளம் கண்ணகி அம்மன் பழமையானது. வன்னி மண்ணின் சக்தி வழிபாட்டுத் தலங்களில் வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் கோயில் ஈழத்திலேயே மிகப் பிரசித்தி பெற்ற ஆலயமாகும்.

மாதவியும் கண்ணகியும் ஒரு சக்தியின் இருகூறுகளே. இருவரும் தாய்வழிச் சமுதாயத்தில் பெண்ணுக்கு ஏற்பட்ட இழிவுகளின் இன்னலின் எதிர்க் குரல்கள். சிலப்பதிகாரத்தில் கண்ணகியோடு மாண்ட கோவலன் பேசுகிறான். இருவரும் விண்ணோக்கிச் செல்கிறார்கள். இந்தப் புராணிய மரபு சாவில் முடிந்த முடிவாகக் கொள்வதில்லை. சாகடிக்கும் சக்தி அன்புக்கு இருக்கிறதோ என்னமோ வாழ்வுக்கு அர்த்தம் தரும் ஆற்றல் அதனிடம் தான் உள்ளது என ஆர்னல்ட் ரொயின்பி கூறுவர்.

## காவியச் செல்வி மணிமேகலை

மணிமேகலைக் காப்பியம் குறிக்கும் மணிபல்லவம் இன்றும் புகழ்பெற்று விளங்கும் நயினாதீவே என்பதற்கையமின்று. மணிபல்லவத்தில் மணி மேகலா தெய்வத்தாலும் மணிமேகலையையும் பின்னர் புண்ணியராசனாலும் வணங்கப்பட்ட புத்த பீடிகை என்றே யாவரும் கருதி வந்தனர். உரையாசிரியர் களும் அவ்வாறே கருதினர். ஆபுத்திரனின் மரணத்துக்குக் காரணமாக இருந்தமையால் தன்னைப் பீடித்த பிரமஹத்தி தோஷத்தை நீக்க இந்திரன் அமைத்து வழிபாடாற்றிய சக்தி பீடமே மணிபல்லவத்திலுள்ள ஸ்ரீ நாக பூஷணி அம்மன் கோவில் என்று கருதுகின்றனர் ஆய்வாளர். மணிபல்லவத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலை தந்தையை நினைத்துப் புலம்பி அழுதபோது அவருக்கு முன்னே இந்திரனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட புவனேஸ்வரியின் பீடம் தோன்றியது. (மேலதிக விபரங்களுக்கு பார்க்க கதிரித்தம்பி, சி. ஆ. ஆபுத்திரனும் அமுதசுரபியும், (1980), செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்). பௌத்தக் காப்பியமான மணிமேகலையைச் சீத்தலைச் சாத்தனார் இயற்றினார்.

## ஒருவர் வெற்றியின் பின்னர் ஒரு பெண்/ஆண்

உலகிலேயே வெற்றியடைந்த அதிசயங்களின் வாழ்விலே பெண்கள் ஆற்றிய தியாக வாழ்வும் அன்பான கோபமும் எந்தளவு முக்கியமானது என்பதை ஆராய்வது இங்கு முக்கியமாகிறது. அன்னையாய், மனையாளாய் ஆன்மிக சேவகியாய்ப் பாரிலே பல்வேறு வெற்றிக்கும் காரணமாய் இருக்கிற பெண் களின் பங்கு மிக முக்கிய காரணியாய் இருக்கிறது மட்டுமல்லாது அவர்கள் தம் இனிய உறவுகளுக்கு உதவிய பங்கு மறுக்க முடியாத உண்மைகளாகும். வள்ளுவரும் வாசுகியும், மகாத்மா காந்தியும் கஸ்தூரிபாயும், லூயிபாஸ்டரும் மாறியும், ஆபிரகாம்லிங்கனும் மேரிட்டாட்டும், 1867 இல் கனடாவின் பிரதமராயிருந்த சேர். ஜோன். எ. மக்டொனல்ட்டும் மனைவி அக்னேஸ் வேணாட்டும் மாபெரும் புரட்சிச் சீர்திருத்தவாதி லெனினும் அவரது மனைவி குரூப்ஸ் கயாவும் என்போரது வரலாறுகள் கணவனுடைய இலட்சிய வெற்றிக்கு மூலாதாரம் ஆனதை உலகறியும். மாணவமணிகள் இவற்றையும் அறிய வேண்டும். உலகம் என்ற போர்க்களத்தில் இடர்கள் என்ற தடைகள், பிணி, மனத்தாங்கல், ஆதரவின்மை, ஏமாற்றம், நம்பிக்கை மோசம், பண மின்மை போன்றன பல்வேறு ரூபத்தில் வரும். அதேவேளை நான் இருக் கிறேன் என்று ஒருவர் பின் நின்று கூறுவது ஒரு பாரிய வெற்றியாகும். அதற்குத்தான் பெண்கள் உகந்த சீவன்கள்.

## கம்பன் கண்ட பெண்கள்

பெண்கள் இல்லையேல் காவியம் இல்லை. சீதையில்லையேல் இராமாயண மில்லை. திரௌபதி இல்லையேல் மகாபாரதமில்லை. தமயந்தி இல்லையேல் நைடதமில்லை, கண்ணகியில்லையேல் சிலப்பதிகாரமில்லை; மணிமேகலை இல்லையேல் மணிமேகலை இல்லை, சகுந்தலை இல்லையேல் சாகுந்தல மில்லை. அகலிகை, கைகேயி, சீதை, ஜானகி, சூர்ப்பனகை, மண்டோதரி, கூனி (மந்தரை) என்பன இராமாயணப் பாத்திரங்கள். பெண்ணின் கண்ணீரில் கரையாத மனமுடைய ஆடவன் யார்? தசரதனும் கரைந்தான் என்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமாயணம். இராமன் காடேகப் போனபோது சீதை, ஈண்டுநின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்றாள். வஞ்சனைக் குணமுடையவளாகப் படைக்கப் பட்ட பெண் சூர்ப்பனகை. விஷம் போன்றவள் என்று சூர்ப்பனகையைக் கம்பன் வர்ணிக்கிறான்.

*பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்கச்*
*செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடியளாகி*
*அஞ்சொல் இள மஞ்ஞை யென அன்னமென மின்னும்*
*வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்*

இராமனிடம் சூர்ப்பனகை சொல்வாள்:

''நான் சூர்ப்பனகை என்னும் ராக்ஷஸி நினைத்தபடி வடிவம் கொள்ள வல்லவள். வீரனும் விச்ரவசுவின் குமாரனும் ராஷஸ ராஜாவுமான இராவணன் எனக்கு உடன் பிறந்தான். எப்பொழுதும் தூங்கும் கும்பகர்ணனும் எனக்குச் சகோதரன். தர்மாத்மாவான விபீஷணனும் என் உடன் பிறந்தவன். போர்களில் பிரசித்தமான கரதூஷணர்களும் எனக்குச் சகோதரர்கள் என்பதற்காக நீ பயப்படாதே. நான் என்னிஷ்டப்படி அவர்கள் எல்லோரையும் மீறி நடப்பவள். அப்படிப்பட்ட எல்லோரையும் விட்டு என்றுங் காணப்படாதவனும் புருஷ சிரேஷ்டனுமான உன்னை என்மனத்தில் கணவனாக வரித்து விட்டேன் என்றாள் சூர்ப்பனகை.

சூர்ப்பனகையை இராமனும் இலட்சுமணனும் ராஷஸி என்று அறிந்து கொண்டனர். இராமனின் உத்தரவின் பேரில் மூக்கு காதுகள் மட்டும் அறுத்து விடுகிறான் லட்சுமணன். சூர்ப்பனகை சீதையைத் தூக்கி வருமாறு இரா வணனுக்கு உபதேசித்தாள். இராவணன் சீதையின் தலைமயிரை இடக் கையினாலும் தொடைகளை வலக்கையினாலும் பிடித்துத் தூக்கிக் கொண்டு போனான் என்பது வான்மீகி இராமாயணம். அந்தத் துஷ்டனின் கை துடியிடையாளின் மீது படக்கூடாதென்ற நிலையில் சீதையைத் மலையுடன் சேர்த்துப் பெயர்த்தெடுத்துப் போனான் என்று கம்பன் கூறுகிறான். இராமனை விட்டுப் பிரிந்ததனால் சீதையும் கண்ணுறக்கமின்றி நீராட்டமின்றி மேனிநிறம் மழுங்கி அரக்கிகள் கூட்டத்தின் நடுவே புலிக்குழாத்து நடுவே அகப்பட்ட மானைப் போல நடுங்கி நின்றாள். கும்பன் பாடுகிறான்.

*விழுதல் விம்முதல் மெய்யுறு*
*வெதும்புதல் வெருவல்*
*எழுதல் ஏங்குதல், இரங்குதல்*
*இராமனை எண்ணித்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொழுதல் கோடுதல், துளங்குதல்*
*துயர் உழந்து உயிர்த்தல்*
*அழுதல் அன்றி மற்று அயல் ஒன்றும்*
*செய்குவது அறியார்*

சீதாபிராட்டி இராமனை எண்ணி அவனிருந்த திசையை நோக்கி வணங்குதலும் கீழே விழுதலும், விம்முதலும், உடம்பு மிகவும் செம்மை கொள்ளுதலும் அஞ்சுதலும், எழுந்திருந்தலும், ஏங்குதலும், பரிதவித்தலும் சோர்தலும், தூங்குதலும் (நடுங்குதலும்) துயர் உழந்தும் (துன்பத்திலிருந்து) பெருமூச்சு விடுதல், அழுதலும் அன்றி மற்று அயல் ஒன்றும் (வேறு யாதொன்றும்) செய்வதறியாதிருந்தாள்.

அரக்கியர் மத்தியில் சீதை திரிசடை என்பவளிடம், திரிசடை எனது இடது புருவம் இடக்கண் இமை துடிக்கின்றன. ஆகையால் எனக்கினியேனும் நல்ல காலம் பிறக்குமோ? அந்த ஆசையை விளைவித்துப் பிறகு ஏமாற்றி துன்பத்தை அதிகமாக்குமோ? தெரியவில்லையே' என்றாள். ''முன்பு இராம பிரான் மிதிலைக்கு வந்தபோது இப்படியே என் புருவமும் தோளுந் துடித்தன. அப்பொழுது நல்லது விளைந்தது. அப்படியே இப்பொழுதும் விளையுமோ? என்றும் வினவினாள். இதற்கு மறு உத்தரம் சொன்னாள் திரிசடை அம்மா உனக்கு உண்டான மங்கலக் குறிகள் சில மிகவும் நன்மை தருவன. உன் துணைவரான கணவனை நீ சீக்கிரம் சேர்தல் நிச்சயம். அதுவு மல்லாமலும் நான் சொல்லுவதை மேலும் கேள்'' என்று இயம்பினாள்.

சீதை தீயில் இறங்கினாள். அவள் கற்பூரத் தீயினால் அனற் கடவுள் வெந்து துன்பத்திற்குள்ளானான். அப்படித் தவிப்படைந்த அக்கினிதேவன் சீதாபிராட்டியைக் கையிலேந்திக் கொண்டு இராமபிரானை நோக்கி அபயம் வேண்டிக் கதறிக் கொண்டே எழுந்தான். அக்கினிப் பரீட்சையில் தேறியவரும், தீக்குளித்தால் மேனி சிறிதும் வாடாதவருமான பிராட்டியை இராமபிரான் ஏற்றான். தேவர்கள் மகிழ்ந்தனர். பிரமன் இராமனுக்கு எடுத்துச் சொன்னான்; நீ தான் நாராயணன் எனப் பிரம்மா சொல்லியும் இராமன் தனது அவதார ரகசியத்தை விடாமல் நான் என்னை மனிதனென்றே எண்ணுகிறேன் என்றான். இராமன் இத்தனை பெருமையைத் தனக்குத் தந்த கைகேயன் தனயை முந்தக் காலுறப் பணிந்தான். (கைகேயின் தாளை முதலில் வீழ்ந்து பணிந்தான்), பிறகு தாய்மார்கள் கால்களில் விழுந்து பணிந்தார்கள். அவர்களும் சிவந்த கண்களுடைய இராமனை ஆரத் தழுவி, தங்கள் மலர்க் கண்களில் நீரால் மஞ்சள் நீராட்டுதலையும் செய்தார்கள். அயோத்தி அலங்கரிக்கப்பட்டது. பட்டாபிஷேகங்கள் பிரமாண்டமாக நடந்தன. பிரமாவின் கட்டளையினால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயன் மகுடாபிஷேக மண்டபம் அமைத்தான். அனுமன் நாற்கடல் நீர் கொணர்ந்தான். இராமபிரான் சீதையோடு பளிங்கு மாடத்திட்டப் பீடத்தில் விளங்கினான். தேவர்கள் எம்பிராஜனுக்கு அபிஷேகம் நடத்தினார்கள். முனிவரும் சுக்ரீவாதியரும் அபிஷேகம் செய்தார்கள். வசிட்டன் திருமுடி சூட்டினான். கம்பன் பாடினான்,

*அரியணை அனுமன் தாங்க*
*அங்கதன் உடைவாள் பற்ற*
*பரதன் பெண் குடை கவிக்க*
*இருவரும் கவரி வீச*
*விரை செறி கமலத்தாள் சேர்*
*வெண்ணெய் மன் சடையன் தங்கள்*
*மரபுளோர் கொடுக்க வாங்கி*
*வசிட்டனே புனைந்தான் மௌலி*

சீதையின் பேரழகே ராவணனைப் பித்தனாக்கிப் பிழைபடச் செய்தது. அவளது கற்பே அவளை அழித்தது. அப்பேரழகு இல்லாமல் சீதை கற்புடையவளாய் மட்டும் இருந்திருந்தால் இராவணன் காதல் கொண்டிருக்கவே மாட்டான்; அழிந்திருக்கவும்மாட்டான். சீதை மென்மையும் திண்மையுமுடையவள். பெண்மைக் குறியீடு சீதை. சீதை என்ற சொல்லுக்கு பொருளே உழுபடைச்சா என்பதாகும். உழுகின்ற கொழு முகத்தின் தோன்றினவாதலாளே சீதை என்பது காரணப் பெயராகிறது. ஜனகன் கண்டெடுத்து வளர்த்த மகளாதலாலே 'ஜானகி' என்பதும் காரணப் பெயரே. மதிலா நகரின் அரசகுமாரி என்பதாலே மைதிலி. விதேக நாட்டு அரசி மகள் என்பதாலே 'வைதேகி' என்ற பெயரும் காரணப் பெயரே. சீதையின் கதையே பெண்மையின் (Women hood) பரிணாம வளர்ச்சி; பெண்ணியத்தின் (Feminism) வளர்ச்சியுமாகும்.

**புதுமைப் பெண்ணைப் படைத்த மகாகவி பாரதி**

- மாதர்க்குண்டு சுதந்திரம்
- அறிவு கொண்ட மனிதவுயிர்களை அடிமையாக்க முயல்பவர் பித்தராம்.
- ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்அறிவிலோங்கி இவ் வையம் தழைக்குமாம்.
- ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம். பெண்மைத் தெய்வத்தின் பேச்சுக்கள் கேட்டீரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குலத்துமாந்தர்க்குக் கற்பியல்பாகுமாம்.
- நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்.
- வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாரெடி
- பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா! பெண்மை வெல் கென்று கூத்திடுவோமடா!
- வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா! மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள் கலியழிப்பது பெண்களைமடா! கைகள் கோர்த்துக் களித்து நின்றாடுவோம்
- ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந் தாள் மாய்த்து விட்டார்; வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.
- கற்புநிலை யென்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்; வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்.
- பட்டங்கள் ஆள்வதும் சட்டங்களை செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப் பின்மை காணென்று கும்மியடி.
- வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வேண்டி வந்தோமென்று கும்மியடி; சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வச் சாதி படைக் கவும் செய்திடுவோம்.
- காதலொருவனைக் கைபிடித்தே - அவன் காரியம் யாயினும் கைகொடுத்து மாதரறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வமடி.

**சூடிக் கொடுத்த சுடர்க்கொடி (ஆண்டாள்)**

காரைக்காலம்மையார் தொடக்கி வைத்த பக்தி இயக்கம் நாயனார்களாலும், ஆழ்வாளர்களாலும், வளர்க்கப்பட்டுப் பின்னர். ஞான சிரேஷ்டர்களாலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்களாலும், தாயுமானர், அபிராமிப்பட்டர், குமரகுருபரர், பாலன் தேவராயர், பட்டினத்தார். அருணகிரிநாதர், நல்லை நகராறுமுகநாவலர், சுவாமி சத்தியசாயி பாபா, அம்மா பகவான், ஸ்ரீலஸ்ரீ ஆனந்தமயி அம்மையார், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, ஆத்மஜோதி நா. முத்தையா என்போரால் பெரிதும் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. சைவ நிறுவனங்களும் சைவங் காக்கும் பணியில் ஈடுபாடு காட்டுகின்றன. பருத்தித்துறையிலுள்ள சாரதாதேவி ஆச்சிரமம் குறிப்பிடற்பாலது.

தலைவன், தலைவி முறையில் இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கு ஆழ்வார்களுள் பெண்ணாகப் பிறந்த ஆண்டாளே சிறந்த எடுத்துக் காட்டாவர். அழகியல் முறையில் (Aesthetic approach) இறைவனையடையச் செய்யும் முயற்சி இடர்ப்பாடுடையது. ஆனால் கவர்ச்சி வாய்ந்தது. பக்தி நூல்கள் இறைவனை மன்மதனுக்கும் மன்மதனாகவும் புவன சுந்தரனாகவும் பேசு கின்றன. அநுபூதிமான்கள் பலர் தலைவி செலுத்தும் அன்பு முறையை மேற்கொண்டு இறைவனை மணமகனாகக் கருதுகின்றனர். இறைவன் ஒருவரே ஆண். ஏனைய உயிர்களெல்லாம் அவருடன் ஒப்பிடும் போது பெண்களே என்றாலும் பெண் அடியார்கள் பிறப்பாலேயும் பெண்களா கையால் தலைவி முறை அவர்களுக்கு இயற்கையாக அமைந்து விடுகிறது. இதனால் ஆண்களை விடப் பெண்கள் வசதிமிக்கவர்களாகிறார்கள். ஆண்டாள் அறியாப்பருவமுதற் கொண்டே இறைவனான தம்மை முழுவதும் கண்ண னிடம் யாதொரு தடைகளுமின்றிக் கொடுத்துவிட்டார். கோதை துளசிச் செடியருகில் குழந்தை வடிவில் கிடந்ததைப் பெரியாழ்வார் கண்டார். (காலம் 7 ஆம் நூற்றாண்டிடைப்பகுதி) கோதை வளர்ந்தாள். விஷ்ணுவிடம் இயல்பாகவே அன்பு பிறந்தது. இளமை தொட்டே கோதை தம்மை ஸ்ரீ ரங்கநாதரின் பிராட்டியாக நினைத்து வந்தார். வயது வரவர ஸ்ரீ ரங்கநாதரின் பிராட்டிவதற்கு எல்லா வகையிலும் தகுதி பெற்றுத் வருவன தவிர வேறொன்றில் கருத்திலரானார். ஸ்ரீ வல்லிபுத்தூரில் கோயில் கொண்டுள்ள பெருமாளுக்குத் தம் தகப்பனார் கொடுக்கும் மாலைகளைத் தாம் நாள்தோறும் அணிந்து கண்ணாடியில் பார்த்துக் கொண்டு இறைவன் எழிலுக்குத் தாம் ஈடானவரேயென்று அமைவு கொள்வார். பிறகு மாலைகளைக் கழற்றி முன் போல பூக்கூடைகளில் வைத்து விடுவார். தம்மகள் அவற்றையணிந்த செய்தி தெரியாது விஷ்ணு சித்தர் அவைகளைக் கோயிலுக்கு எடுத்துக் சென்று பெருமாளுக்கு அணிவிப்பார்.

ஆனால் ஒரு நாள் தம்மகள் சொல்வதைக் கண்டு இச்செய்கை இறை வனுக்குக் குற்றமான தென்று நினைத்து மகளைக் கடிந்து விட்டுக் கோயிலுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைகளையெடுத்துச் செல்லவில்லை. இறைவன் அவருக்குக் காட்சி கொடுத்து அன்று ஏன் மாலைகள் கொண்டு வரவில்லை என்று கேட்டார். பெரியாழ்வார் நிகழ்ந்ததைக் கூற, இறைவன் கோதை அணிந்த மாலைகளே தமக்கு மிக உகந்தன என்றும் அவற்றைத் தமக்குத் தருவது தவறில்லை என்றும் கோதையின் செய்கை மிகவும் தூய்மையானதென்றும் கூறினார். இறைவன் கட்டளையைத் தம் மகளிடம் தெரிவித்து மாலைகளைக் கோயிலுக்கு எடுத்துச் செல்லு முன் கோதை அவற்றையணியும்படி தாமே கூறுவார். கோதை விஷ்ணுவின் பிராட்டியென்றுணர்ந்த பெரியாழ்வார் மாலைகளைத் தாம் அணிந்து இறைவனுக்குக் கொடுத்தமையால் சூடிக் கொடுத்த நாச்சியர் என்ற பெயர் பெற்றனர். ஆண்டாள் வளரவளர இறைவனிடத்தில் அவள் கொண்ட அன்பும் வளர்வதாயிற்று. அவள் எண்ணமெல்லாம் இறைவனை மணஞ் செய்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றியிருக்கும். கனவெல்லாம் இறைவனுட னிருக்கும் இன்பத்தைப் பற்றியிருக்கும். திருப்பாவை, நாச்சியார், திருமொழி, என்பன ஆண்டாள் இயற்றிய பிரபந்தங்களாகும். இவை காதற்பாக்கள், முழு ஏக்கம், தவிப்பு முதல் தலைவனோடு கூடியதால் உண் டாகிய கட்டுக் கடங்கா மகிழ்ச்சி, அமைதியான இன்பம் வரை பல உணர்ச்சி நிலைகளைக் காட்டுவன. தலைவன் இங்கே இறைவன் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

### துர்க்கா துரந்தரி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி

தங்கம்மா ரீச்சர் 7.1.1925 ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை அப்பாக்குட்டி தாயார் தையற்பிள்ளை. 1944 இல் பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர்களாவர். 1964 இல் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு இடமாற்றம் கிடைத்தது. 1961 இல் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் திருப்பணிச்சபை அங்கத்தவரானார். 1964 இல் யூனியன் கல்லூரிக்கு இடமாற்றலாகி ஆசிரிய ரானார். 1966 இல் பொருளாளர் பதவி கிடைத்தது. 1976 இல் தலைவரானார். தலைமைப் பதவியிலிருந்த போது உட்பிரகாரக் கொட்டகை தேர்முட்டி, சித்திரத் தேர், அலுவலகம் சண்டேசுவரர் கோயில், ஞான சுரபி மண்டபம், இராச கோபுரம், அலங்கார வெளிவாயில், அன்னபூரணி மண்டபம், துர்க்கா புஷ்கரணித் தடாகம், தீர்த்த மண்டபம், கல்யாண மண்டபம் சுற்று மதில் ஆகியன பத்து ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்பட்டன.

ஆன்மிகச் சொற்பொழிவாளர், மாநாட்டுத் தலைமையேற்று நடத்துபவர், அறப்பணிகளிலே முனைப்புடன் ஈடுபடுபவர் ஆதலால் இவருக்குப் பல கௌரவப் பட்டங்கள் உலகளாவிய ரீதியில் கிடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1966 | : | செஞ்சொற் செம்மணி |
| 1970 | : | சிவத்தமிழ்ச் செல்வி |
| 1972 | : | திருவாசக் கொண்டல் |
| 1973 | : | சிவஞான வித்தகர், துர்க்கா துரந்தரி |
| 1982 | : | சமாதான நீதவான் |
| 1991 | : | கலாசூரி |
| 1998 | : | கௌரவ கலாநிதி |
| 1999 | : | கவிஞோத்தமி |
| 2007 | : | உலக ஆன்மிக மறுமலர்ச்சியாளர் |

எனும் பட்டங்கள் கிடைத்தன.

1978 இல், 'கந்தபுராணச் சொற்பொழிவு' என்ற நூலுக்கு இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது. 1985 இல் மணிவிழாவும், 2000 இல், பவள விழாவும், 2005 இல் முத்து விழாவும் கொண்டாடப்பட்டன. பேச்சுவன்மை, நிர்வாகத்திறன், நாணயம், என்பவற்றுக்கப்பால் அவரது மக்கட் பணியே அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்தசக்தியாக இருந்தது. சக்தி வழிபாட்டை வளர்த்தெடுத்த அம்மையார் ஈடுபட்டு வருபவர்க்கெல்லாம் உந்து சக்தியாகவே இருந்தார். அவரது மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு, பெண்மையின் மாண்புகளை நாமும் அறிந்து செயற்படுவதே அம்மை யாருக்குச் செலுத்தும் நன்றியாகும்.

## படைப்பிலக்கியங்களில் பெண்ணியச் சிந்தனைகள்

1980 க்குப் பின்னர் தான் தமிழில் பெண் எழுத்தாளர் என்ற பிரவேசம் பரவலாக்கப்பட்டது. 1980 வரை பெண்கள் வீட்டுக்குரியவர்களாகவே வரையறுக்கப்பட்டனர். மகள், தாய், மனைவி, சிறுமி, குமரி, கிழவி என்ற பெயர்களில் வாழ்ந்து கொண்டிருந்தார். இன்று மகள், தாய், மனைவி என்ற பாத்திரங்களுக்கப்பால் கல்விப் பெறுபேறுகளால் தாதி, அதிபர், ஆசிரியர், டாக்டர், பிரதமர், ஜனாதிபதி, பீடாதிபதி, துறைத் தலைவர், துணைவேந்தர், விமான ஓட்டி என்றெல்லாம் பொறுப்புக்களில் உள்ளார்கள். நீண்ட காலம் பெண்கள் பற்றிய சிந்தனை அகம் சார்ந்ததாகவும், உடல் சார்ந்ததாகவும், பாலியல் சார்ந்ததாகவும், கணவனுக்கு மனைவியாகவும், அமைந்தன. வெளியுலகத் தொடர்புகள் மறுக்கப்பட்டன. சமூகத்தில் கல்வி, மறுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலம் வரை 29, 30 பெண் புலவர்களே இருந்துள்ளனர்.

20 ஆம் நூற்றாண்டில் தான் பெண் எழுத்தாளர்களைக் காணமுடிகிறது. பெண் கல்வி பெண் விடுதலையை, அழிவு நிலை என்பவற்றை நோக்கிச் சிந்திக்க வைத்த தெனலாம். கட்டை உடைக்காமல், கட்டுப்பாடே 'சரி' என ஏற்றுக் கொண்டு பழைய விதிக்கப்பட்ட நிலைமைகளையே எழுதிய பெண் எழுத்தாளர்களும் உளர். பெண்களின் சமூகப் பங்களிப்பு தாய், மனைவி, மகள் என்று இருந்ததன் காரணமாக அவர்களின் எழுத்துக்கள் பெரும்பாலும் அவை சார்ந்ததாக இருந்தன. பின்னரே பெண் தன்னைப் பற்றிச் சிந்திக்கிறாள். அத்துடன் 'வர்க்கம்' செயல்படுவது பற்றி அண்மைக் காலமாகச் சிந்திக்கப் படுவதை அவதானிக்கலாம். 'தலித்பெண்ணியம்' 'கறுப்புப் பெண்ணியம்' போன்றவை அவ்வாறான சிரத்தையின் விளைவாகத் தோன்றியவையே. பெண் அடக்குமுறை, பெண் உரிமை மறுப்பு தனிச் சொத்துடைமையுடன் ஆரம்பித்தது என்பர். கணவன் தனது சொத்தை தனது மகனுக்கே கையளிக்க வேண்டுமெனில் மனைவி கற்புள்ளவளாக இருக்க வேண்டும் என எதிர்பார்க் கபட்டது. எனவே தான் இந்தச் சொத்துடைமையுள்ளவர்களின், நீதிகள், பெண்களின் ஒழுக்க விதிகளாக மாற்றப்பட்டன. 1950 இன் பின் பெண்களின் எழுத்துகளில் மெல்ல மெல்லத் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தத் தொடங்கினார். ஆயின் அவை அவர்களின் தீமைகள் பற்றிச் சொல்வன வாகவும், அல்லது பணிதல் பற்றிச் சொல்வனவாகவும் அமைந்திருந்தன எனலாம். பவானி போன்ற மிகச் சிலரே பெண்களின் பிரச்சினைகளைச் சொல்லத் தொடங்கினர்.

**ஔவையார்**

ஔவையார் பெண்பாற் புலவர்களும் குறிப்பிடத்தக்கவர். இப்பெயரில் இருவர் இருந்தனர் என்பர். முன்னவர் சங்ககாலத்திருந்தார். பின்னர் கம்பர் காலத்திருந்தவர். ஔவையார் பாடிய பாடல்களாகச் சங்க நூல்களில் 59 பாடல்கள் உள்ளன. நற்றிணையில் 7, குறுந்தொகையில் 15, அகநானூற்றில் 4, புறநானூற்றில் 33 மொத்தம் 59 செய்யுட்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் இரண்டொன்று வஞ்சிப்பாக்கள். மற்றவையெல்லாம் அகவற்பாக்கள் திருக் குறளுக்குச் சிறப்பு பாயிரமாகச் சங்கப் புலவர் செய்த திருவள்ளுவ மாலையில் ஔவையார் வெண்பா ஒன்றுண்டு. அதைச் சேர்த்தால் முன்னௌவையரின் பாடல்கள் 60. ஔவையார் பாணர் குடியிற் பிறர்ந்தவராயிருக்கலாம் என்பது சில அறிவாளர் துணிபு. அப்படியில்லை என்பதும் சிலர் கொள்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, நன்னெறி என்னும் அறநூல்கள் எழுதிய ஔவையார் தமிழ் மக்களாலே நன்கு அறியபடுபவ ராவர். இன்றும் ஔவையார் பாடல்கள் நமது சமுதாயத்தில் பயன்பாட்டுக் குரியவையாகவுள்ளன. அவ்வை, உப்பை, உறுவை, வள்ளி என்னும் பெண்பாலாரோடு திருவள்ளுவரும் பிறந்தார் என்று ஒரு கதையும் வழக்கில் உண்டு. 'அவ்வைக் கிழவி நம் கிழவி அமிழ்தின் இனிய சொற் கிழவி' என்று சிறுவர்களும், குழந்தைகளும் பாடியாடுவதுமுண்டு. சந்திரனில் அவ்வையர் இருப்பதாகவும் தாய்மார் 'கிழவி' வடிவத்தைக் கற்பித்துக் கற்பனையாகவும், சிந்தனை பூர்வமாகவும் கூறுவதுண்டல்லவா? இன்றும் அவ்வையின் வேடம் வெண்நரை, வெள்ளைச்சேலை என்பனவற்றுடன், ஒரு கைத்தடியுடனும் தான் இடப்படுகிறது. பெண்களைப் பற்றி அவ்வையாகிய பெண் புலவர் பல பேருண்மைகளைக் கூறியுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

**பண்பாட்டைக் காப்பாற்றும் பெண் மகளிர்**

கிராமியப் பெண்கள் தமது பண்பாட்டைப் பேணுபவர்களாகக் காணப் பட்டனர். நகரத்தில் பெண்கள் மேல் நாட்டு நாகரிகத்தால் சமய, பொருளாதார மேலீட்டினால் தமது பழக்கவழக்கங்களை மாற்றியமைப்பதைக் காணலாம். கிராமியப் பெண்கள் தமது உணவு, உடை பழக்கவழக்கங்கள் என்பவற்றில் தமது பண்பாட்டைப் பேணுபவர்களாக இருந்தனர். கிராமப்புறத்துப் பெண்கள் வயலில் பெறப்படும் நெல் அரிசியையே உணவாகப் பெறுகின்றனர். அரிசி மாவைக் காலை உணவாகப் பயன்படுத்துவர். கிராமப்புற நகர்ப்புறப் பெண்களின் உணவு வகைகள் வேறுபடுவதை நோக்கலாம். கிராமத்தில் பெண்கள் சேலை அணிவதையே தமது பண்பாடாகக் கொண்டனர். அத்துடன் குங்குமப் பொட்டு, தாலி, என்பவற்றை மணமாகிய பெண் தமது பண்பாட்டுச் சின்னங்களாகப் பேணுவதைக் காணலாம். நகர்ப்புறப் பெண்கள் சேலைக்குப் பதிலாக சுரிதார், பாவாடை, சட்டை, ஜீன்ஸ் அணிவதையும் ஒட்டுப்பொட்டு, தாலி அணிந்து செல்வதையும் காணலாம். நாகரிகம் மாற்றமுடைய அவர்களின் உடையிலும் மாறுதல்கள் உண்டாவதைக் காணலாம். இன்று, கிராமத்துப் பெண்களின் நடை உடை பாவனையில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்து வருவதைக் காணலாம்.

இலங்கையிலுள்ள சிறுபான்மைத் தமிழர் பிரச்சினைகளும், அரசியல் இனவாதக் கெடுபிடிகளும், பாதுகாப்பு அற்ற தமிழ்ப் பெண்களது பயப் பீதியும் பெண்களின் நடை, உடைகளின் மாற்றத்திற்கு ஒரு காரணமாகிறது. தமிழ்ப் பெண்கள் தாங்கள் தமிழர் என்பதை மாற்றங்களுக்குக் காட்டக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது (உயிர்ப் பயம்) என்பதற்காகத் உடை நடையில் மாற்றத்தை உண்டாக்குகின்றனர்.

**மலையக இலக்கியம், பண்பாடு, சமயம், சமூகம் எதிர்காலம்**

இலங்கையில் தமிழர் நாட்டார் இயல் சம்பந்தமான ஆய்வு முயற்சிகள் 1875 ஆம் ஆண்டளவில் மேற் கொள்ளப்பட்டதாக அறிகிறோம். 1980 யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையினர் நாட்டுப்புறவியல் பற்றிய ஆய்வு முயற்சிகள் மேற் கொண்டனர் 1993 இல் இலங்கைத் தமிழ் சாகித்திய விழாவினையொட்டி நிகழ்வொன்றை மிகவும் சிறப்பாக நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

மலையகத் தமிழர்கள் தென்னிந்திப் பூர்விகத் தமிழ்க் குடிகளாவர். தொழில் நிமித்தம் 19 ஆம் நூற்றாண்டின் முதல் பகுதியில் இலங்கைக்குப் புலம் பெயந்தவர்கள். சுதேசிய மக்களின் பாரம்பரிய கிராமிய குடிசைத் தொழிலுக்கப்பால் மரபு ரீதியிலான விவசாயம், கால்நடைத் தொழிலுக் கப்பால் பணப் பயிர் ஏற்றுமதி, விவசாயம் என்னும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கென வந்தேறு குடிகளாகப் பிரித்தானிய வெள்ளைக் காரரால் அழைத்து வரப்பட்டவர்கள். இந்தப் புறச் சூழலில் இங்கு குடியேறிய மக்கள் தாங்கள் அனுபவித்த முகம் கொடுத்த துயரங்களைப் புலம்பல், அழுகை, குமுறல் எனத் தங்களது உணர்ச்சிப் பிரளயங்களை வெளிக் காட்டியமையே, பாடல்களாகத் தென்பட்டன. மகிழ்ச்சி குதூகலத்துக்குரிய பாடல்கள் மிகமிகத் தாமதமாகவே இவர்கள் மத்தியில் பாடப்பட்டன.

மலைப் பிரதேசத்தின் காடுகளை அடைந்து, கூடாரங்களாக அமைந்து குடி அமரும் வரை ஏற்பட்ட பயங்கரமான துயர நிகழ்வுகள் பற்றியும், காடுகளை அழித்து, கோப்பி, தேயிலைப் பயிர்களை உண்டாக்கிய பின்னர் ஏற்பட்ட வாழ்க்கை மாறுதல்கள் பற்றியும், பிரிட்டிஷ் வெள்ளை வியாபாரி களின் கைக்கூலிகளாக கங்காணிகளிடமே தொடர்புகள் வைத்துக் கொண்ட மக்கள், கங்காணிகளின் ஏமாற்று, களவு, ஒடுக்குமுறை, இலங்கைக்கெதிரான உணர்வுகள், இவை பற்றியே ஆரம்பக் காலப் பாடல்கள் அமைந்தன.

பிஜித் தீவுகளில், மேற்கிந்தியத் தீவுகள், மொறிசியஸ், பர்மா, கயானா, மலேசியா, தென்னாபிரிக்கா, இலங்கை என்று கடலில் இறங்கினார்கள். கடல் பயணத்தின் போது அழிந்து போன மக்களின் துயரங்களாய் பாடிய பாடல்கள் சில கவிமணி சி. வி. வேலுப்பிள்ளையின் ஆங்கிலப் பாடல்களாக இருக்கின்றன. 1920 களுக்குப் பின் கோ. நடேசையர் போன்ற சமூக வாதிகள் இலங்கைக்கு வந்த பின்னர், மலையக மக்கள் வாழ்வில் ஆரம்ப இலக்கியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தோன்றலாயின. நடேசையரின் துணைவியர் திருமதி மீனாட்சியம்பாள் பாடிய பாடல் ஒன்றின் மூலம் கடற் பயணத்தின் துயரத்தை அறியலாம்

*பாய்க்கப்பல் ஏறியே வந்தோம் - அந்நாளே*
*பல பேர்கள் உயிரினை*
*இடை வழி தந்தோம்*

பாய்க்கப்பல் என்றும் வள்ளம், தோணி என்னும் பாதுகாப்பு ஒழுங்கு எதுவுமின்றிப் பணத்துக்காகப் படகுகளில் நிறையப் பேர்களை ஏற்றி நடு கடலில் மூழ்கிப் போன சம்பவங்கள் அடிக்கடி தொடர்ந்தன. அவர்களுள் அபூர்வமாகத் தப்பித்துக் கரை சேர்ந்தவர்கள் தங்களின் உறவுகளை ஏற்றி வந்த வள்ளங்களை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த கண்ணீர்க் கதைகளும் ஏராளமுண்டு.

*கோணத் கோண மலை யேறி*
*கோப்பிப் பழம் பறிக்கையிலை*
*ஒரு பழம் தப்பிச்சினு*
*ஒதைச்சானே சின்னத் தொரை*

பிரிட்டிஷ் வெள்ளைக்காரத் தோட்ட அதிகாரியின் கொடுமை ஒரு கூலிப் பெண் இங்கே கூறுகிறாள். மலையகக் கோமாளிப் பாடல்,

*கண்டின்னா கண்டி - நாயக*
*பொழைக்கலந்த கண்டி - எங்க*
*அயித்த மக குண்டி - அது*
*சோத்துப் பானை தண்டி!*

தோட்டங்களில் நாளுக்கு நாள் தொழிற் சங்கங்களுக்கும், புதிய புதிய அரசியல் கட்சிகளும் உருவாகி தொழிலாளர்களின் ஒற்றுமையைப் பிரித்து, பேதங்களை உருவாக்கும் புதிய பிரச்சினைகள் பற்றியும், மக்களின் சமூக வாழ்க்கை நிலை பற்றியும் கோமாளி தனது பாடல்களில் பாடிக்காட்டுவான்.

*சிங்கம் போல் வளர்ந்த குணம்*
*தங்கம் போல் பிறந்த குணம்*
*சங்கத்தால் அழிந்ததேயடி*
*ஞானத் தங்கமே*
*சங்கத்தால் அழிந்ததே யடி*

என்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாரியம்மன் வழிபாடு**

தமிழ் நாட்டிலும், இலங்கையில் மத்திய மலை நாட்டிலும் பெரும்பாலான சிற்றூர்களிலும், நகரங்களிலும் மாரியம்மனுக்கு எனத் தனிக் கோயில்கள் உள்ளன. மழை வளம் வழங்கும் தெய்வம் என்றும், அம்மை முதலிய நோய் நீங்கி அருள் வழங்கும் இறைவி என்றும், சிற்றூர்களில் காவல் தெய்வம் என்றும் மலேசியா, சிங்கப்பூர், பர்மா, ஜாவா, முதலிய கீழை நாடுகளிலும் தமிழ் மக்கள் அதிகமாக வாழும் சில மேலை நாடுகளிலும் மாரியம்மனுக்கெனத் தனிக் கோயில்கள் உள்ளன. மாரி, என்ற சொல்லால் குறிக்கப் பெறுபவர். ஜமதக்கினி மா முனிவரின் துணைவியாகிய இரேணுகை. இவரை ரேணுகாதேவி என்றும் குறிப்பர். மாரியம்மன் எழுந்தருளியுள்ள சிறப்புடைத் தலமாகத் தமிழகத்தில் சமயபுரம், ஒலுங்கை, மங்கலம், வலங்கை மான், சென்னைத் திருவேற்காடு எனப் பலவுள.

**மலையகத் தமிழ் இலக்கியத்தில் பெண்கள்**

தமிழர்கள் எங்கு வாழ்ந்தலும் வேதனையும், சோகமுமே மேலோங்கிக் காணப்படுகிறனர். தமிழ்த் தொழிலாளர்கள் பல நூற்றாண்டுகளைத் தமது தாயகத்திலேயே தமது இனத்தாராலேயே சாதி, குலம், சமயம், சாத்திரம், தெய்வம் முதலியவற்றின் பெயராலே தயை தாட்சண்யமின்றிச் சுரண்டப் பட்டும், வஞ்சிக்கப்பட்டும், கொடுமைக்குக்குள்ளாக்கப்பட்டும், வாழ்வு பறிக்கப்பட்ட நிலையில் வேறுவழியின்றித் தனது வயிற்றுத் தீனியைத் தணித்தற் பொருட்டு இதயக் குமுறலுடன் கலங்கிய கண்களுடனும் தாயகத்தை விட்டு வெளியேறினர்; வெளியேற்றப்பட்டனர். கூலிகள் என்றும் கள்ளத் தோணிகள், என்றும் வடக்கத்தையார், தோட்டக் காட்டார், இந்தியாக்காரர், என்றும் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்டனர். இம்சிக்கப்பட்டனர். 1970 களில் பூரணி, நயீமா ஏ. பஷீர் புசல்லாவை, இஸ்மாலிகா, சரஸ்வதி, மகேஸ்வரி, திலகா பழனிவேல், மாத்தளை ரோகினி குறிப்பிடத்தக்க பெண் படைப்பாளிகளாவர். 1960 களில் கவிதை, புதுக் கவிதை, ஹைக்கூக் கவிதை, எழுதுவோருள் பூரணி, இஸ்மாலிகா குறிப்பிடத் தக்கவர்கள். புதுக்கவிதையில் பிரமிளா கந்தையா, நட. தாரணி(கவிதா) நாகபூஷணி கருப்பையா, மணமகள், ஸ்ரீதேவிப்பிரியா, இராஜலட்சுமி குமரவேல், எஸ். விஜயா, கலைமகள், ஹிதாயா, நீலா பாலரஞ்சனி குறிப்பிடத்தக்கோராவர். மலையகக் கவிதை பற்றி அந்தனி ஜீவாஆய்வு செய்துள்ளார். தோட்டத்துப் பெண் தொழிலாளர் களே சொல்லொணாத் துயரங்களுக்கும் அவஸ்தைகளுக்கும், இம்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். நவீன துச்சாதனர்களாகவும், கோவலர் களாகவும், துஷ்யந்தர்களாகவும் விளங்கும் தோட்ட அதிகாரிகளும் பிறரும் தவித்த முயலை அடிப்பது போல தமது உடல் வேட்கையைத் தீர்ப்பதற்காக, அடிமை நிலையில் விளங்கும் தொழிலைப் பெண்களுக்குச் செய்யும் கொடுமைகள் சொல்லுந்தரமன்று. குடும்பச் சுமையுடன் வேலைப்பளு வறுமைக் கொடுமை, அதிகாரிகளின் அடாவடித் தனங்கள், கணவன்மாரின், பொறுப்பற்ற செயல்கள் முதலியவற்றால் வாழ்க்கையே தாங்கொணாச் சுமையாகி அவதியுறும் தொழிலைப் பெண்களின் அவலங்களையும், அவர் களது உள்ளக் குமுறல் களையும் நெஞ்சக் கொதிப்பையும் பொருத்தமான குறியீடுகளையும் படிமங்களையும் கையாண்டு புதுக்கவிதைகளிலும், சிறு கதை நாவல்களிலும் வெளிப்படுத்தி வருகின்றனர். பிறிதொரு சந்தர்ப்பத்தில் மலையகத்துச் சிறுகதைகள், நாவல்களில் பெண்கள் குறித்த சம்பவங்களை எழுதலாம் என்று நினைக்கிறேன்.

**பின்னிணைப்பு**

பட்டினத்தடிகளின் தாயார் இறந்தபோது 'எப்பிறப்பிற் காண்பேன்' என்று வாய்விட்டரற்றி அழுதார். பிள்ளைப் பருவத்துக் அன்னையர் தன்னை வளர்த்த பான்மைகளையெல்லாம் பாடிப்பாடி அழுதார். சுடுகாட்டில் அன்னைக்குத் தான் ஈமக்கடன்களைச் செய்தபோது, ஒவ்வொரு சடங்கிற்கும் மனமுருகிப் பாடி அழுதார்.

*ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்று (ப்)*
*பையல் என்ற போதே பரித் தெடுத்து (ச்)*
*செய்ய இரு கைப்புறத்திலேந்திக் கணகமுலை தந்தாளை*
*எப்பிறப்பிற் காண்பேன் இனி*

என்று சொல்லி ஏங்கி ஏங்கி அழுதார். சுடுகாட்டில் தாயின் உடலுக்குத் தன் கையால் தீ முட்ட நேர்ந்த போது "தொந்தி சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ எரியத் தழல் மூட்டுவள்" என்றும்.

*கட்டிலிலும் தொட்டிலிலும் மார் மேலும் தோள் மேலும்*
*வைத்தென்னைக் காதலித்த தாய்க்கோ விறகிலிட்டுத் தீ*
*மூட்டுவேன்.*

என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நொந்து சுமந்து பெற்று நோகாமல் ஏந்தி முலை தந்து*
*வளர்த்தெடுத்த தாய் தமக்கோ மெய்யில் தீ மூட்டுவேன்*

என்றும் சொல்லிச் சொல்லி அழுதார்.

*தாய்க்கு வாய்க்கரிசி போட நேர்ந்த நேரத்திலே, ருசியுள்ள தேனே! அமிர்தமே! செல்வத் திரவியப் பூ மானே*

என்றெல்லாம் அழைத்த வாய்க்கு அரிசியோ நான் இடுவேன், என்றும் மெள்ள முகம் மேல் முகம் வைத்து முத்தமிட்டு 'எந்தன் மகனே' என அழைத்த வாய்க்கு நான் அள்ளி இடுவது அரிசியோ! என விம்மி விம்மி வேதனைப்பட்டு அன்னைக்கு வாய்க்கரிசி இட்டார்.

பாவியேன் வைத்த தீயால் அன்னை அலறியழுதார். 'ஈ, எறும்பு நாடாமல் பிள்ளைப் பருவத்திலே என்னைக் காத்து வளர்த்தெடுத்த கையும் எரிகின்றதே'' என்று புலம்பினார். 'என்னை ஈன்றெடுத்த தாய் வெந்தாளோ? சோணகிரி வித்தகா நின் பதத்தில் வந்தாளோ? என்னை மறந்தாளோ? என்று சொல்லி அலறுகிறார்.

பிள்ளைப் பருவத்திலே, தான் கையற எடுத்து மார்புறத்தழுவிக் கன்னத்தில் முத்தமிட்டு வளர்த்த ஒரே மகனுடைய உடல் சுடுகாட்டில் தீப்பற்றி எரிவதைக் காணும் போது மனம் என்ன பாடுபடும்! அந்தக் கொடுமையான காட்சியை வயிறாரச் சுமந்து பெற்ற தாய் சுடுகாட்டில் இருந்து காண்பாளாயின், அவருடைய உயிர் உடலை விட்டு அக்கணமே பிரிந்து போய் விடும். அதனாற்றானோ என்னவோ, சுடுகாட்டிற்குப் பெண்கள் வரும் பழக்கத்தை இந்துக்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை!

### சான்றாதாரங்கள்


1) சண்முகம்பிள்ளை, மு., (1997), *சங்கத்தமிழர் வாழ்வியல்*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

2) வரதராசன், மு., (மறுபதிப்பு, 1994) *திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்*, பாரி நிலையம், சென்னை.

3) ஆண்டியப்பன் தே., (1978), *குறள் கண்ட நாடும் வீடும்*, வானதிபதிப்பகம் சென்னை.

4) தெய்வேந்திரன், பொன்., (2002), *சிலம்பின் செய்தி*, வவுனியா.

5) கதிரித்தம்பி சி., ஆ., (1980), *ஆபுத்திரனும் அமுதசுரபியும்*, செட்டியார் அச்சகம், யாழ்ப்பாணம்.

6) சாண்டில்யன், (1985), *கம்பன் கண்ட பெண்கள்*, ஸ்ரீ பரமேஸ்வரி பிரஸ், சென்னை.

7) மஹாதேவன், T.M.P., (1959), *மெய்யடியார்கள்*, பாரதம் பிரஸ், சென்னை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8) அம்மன்கிளி முருகதாஸ், 'பெண் எழுத்தாளர்களின் புனைவு இலக்கியங்களில் பெண் நிலை நோக்கு: கவிதை பற்றிய சிறப்பு நோக்கு', *தமிழ் உலகு*, (2003), 29-42.

9. கனகராஜையர், நா., (1936), *தமிழ்ப் புலவர் வரலாறு*, (முதற்பகுதி மதுரை).

10. கலாநிதி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம், 'யாழ்ப்பாணத்துப் பண்பாட்டுப் பேணலில் பெண்கள்', *யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும் ஓர் அறிமுகக் கையேடு*, பேராசிரியர் கலாநிதி எஸ் சிவலிங்கராசா அவர்களின் மணிவிழா மலர், ஹரிகனன் பிறின்டர்ஸ் யாழ்ப்பாணம், 2006, பக். 125- 128.

11. அருணாசலம், க., (1994), *மலையகத் தமிழ் இலக்கியம்*, இளவழகன் பதிப்பகம், சென்னை.

12. சிவஞானம், ம. பொ., (1986), *இலக்கியங்களில் புத்திர சோகம்*, வெற்றி அச்சகம், சென்னை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

## 'சூல் கொண்ட எழுத்துமுகில்' பால. வைரவநாதன்

(அணிந்துரை)

'வாழ்வியல் வசந்தங்கள்' என்னுமிந்நூல் தமிழ் கூறும் நல்லுலகிற்கும் சிந்தனையுலகிற்கும் சீர்திருத்த உலகிற்கும் மிகப் பெருங் பங்களிப்பாகும். தினக்குரல் பத்திரிகையிலே ஞாயிறு தோறும் வெளிவந்த ஒன்பது ஆக்கங்கள் மீளவும் நூல் வடிவம் பெறுகின்றன. கலாபூஷணம் சிந்தனை வல்லார் புயல்வேக எழுத்தாளர் பருத்தியூர் பால. வைரவநாதன் எடுத்துரைக்கும் கருத்துகள் 'என்றும் நிலைபேறுடையன' என்பது என் கருத்து. அதே முடிவுக்குத் தான் நீங்களும் வருவீர்களென்பது இதன் உள்ளடகத்தைப் படித்து முடித்ததும் நீங்களும் ஏகோபித்து முடிவெடுப்பீர்களென்பது என் துணிபு.

வாழ்வியல் வசந்தங்களில் திருடுதல், ஞானம், நகைச்சுவை, தற்பெருமை, ரசனை, தனித்துவம் உங்களை விரும்புங்கள், மறதி, மனிதன் தான் உயர்ந் தவன் என்பன பெறும் முதன்மை குறித்து ஆசிரியர் அலசுகிறார். இவ் வலசலுக்குத் தன்னனுபவம், உலக இலக்கியச் செய்திகள், தகுந்த முன்னு தாரண எடுத்துக்காட்டுகள், தருக்கரீதியாக விவாதிக்கும் உத்தி, வாசகனிடத்தும் வினாத்தொடுத்துக் கருத்துக் கேட்கும் ஜனநாயக முறைமை, உசாவல், சரியெனப்படுவதை நிறுவியுரைக்கும் உறுதிப்பாடு, இழிசெயல்களையும் நெறிமுறை வழிகாட்டல்களையும் எடுத்துரைத்துச் சரியான தடத்தையை விண்டுரைத்தல் என்னும் பண்புகளை அடித்தளமாகக் கொண்டு தமது கொள்கையை நிறுவும் திறன் விதந்து பாராட்டியுரைக்கத்தக்கது. சான்றாக, 'திருடுதல்' குறித்த கருத்துகளை எழுதும்போது, அலட்டு வியாதியால் அவஸ்தைப்படும் சிலர் மிகவும் பெறுதற்கரிய நேரத்தை (காலத்தை) வீணடிக்கும் செயலும் திருட்டே என்று கூறுகிறார். 'ஏமாற்றும், வஞ்ச எண்ணத்தால் ஒரு நபரை வருத்தியும் வாழும் வாழ்வில் எவரும் உருப்பட்டதாக வரலாறு இல்லை' என்று எழுதுகிறார். ஏமாற்று நடவடிக் கைகளும் திருட்டே. இலக்கிய விஷயத்தைக் களவாடுவதும் திருட்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் நலனுக்குத் தீங்காயின் அவையெல்லாம் திருட்டே என எழுதுகிறார். ''நோய்கள் பரவுதல், வெள்ளம் பெருக்கெடுத்தல், காட்டுத்தீ, நிலநடுக்கங்கள், ரயில் விபத்துக்கள் ஏன் அடிக்கடி நடக்கின்றன என்பதனை நாட்டின் தலைமைகள் உணருதல் வேண்டும்'' என்கிறார். (ப. 13) 'இன சுதந்திரத்தை' அபகரிப்பதும் தலையீடு செயலும் சகிக்கவொண்ணா மனித மனங்களைத் தகிக்க வைக்கும் காரியங்களே என்று அபகீர்த்தியான திருட்டுக் குற்றங்கள்'' என்பதை அரசினர் உணர்வார்களா என்பதே இக்கட்டுரையின் எதிர்பார்ப்பு.

'ஞானம்' என்பது அறிவின் எதிர்வும் அதனிலும் மேலானதாம். அறிதலுடன் உள்உணர்வினை ஊட்டி அதன்மூலம் ஒளிபெறச் செய்தலே ஞானம். ஞானம் வரலாற்றில் சந்தேகம் கடந்த உண்மை நிலையை உருவாக்குகிறது. ஞானிகள் நித்திய சிரஞ்சீவிகளாகவே ஜீவிப்பதும் புதுமையானது அல்ல வேயல்ல என்று முடிக்கிறார்.

'நகைச்சுவை' உள்ளத்திற்கும் உடலுக்கும் சமூக விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்ற தனிக் கலை. நகைச்சுவையை உளவளச்சிகிச்சையாளர், ''வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப்போம்'' என்பது முதுமொழி என்பதையும் எடுத்துக் காட்டுகிறார்.

'தற்பெருமை' காலத்தையும் செயற்றிறனையும் விரயமாக்கும். நாம் சார்ந்த மதம், மொழி, நாடுகள் மட்டுமே மேன்மையானது. ஏனைய எவையும் புனிதமற்றது என எண்ணுதல், பேதமை பொருந்திய தற்பெருமைதான். உளவளத்தை வளர்க்கத் தற்பெருமையை அகற்ற வேண்டும். தற்பெருமை அகந்தையில் உற்பத்தியாகிறது. அடுத்தவர் மன இயல்புகள் புரியாதவர் தற்பெருமையாளர். தற்பெருமை சுயபுராணம் ஓதும். தற்பெருமை கொள்ளுதல், என்பதெல்லாம் ஒரு மனிதப் பலவீனம். அறியாமையினால் தற்பெருமை பேசும்போது கோபம், குரோதம், வெறுப்பு, அருவருப்புத் தான் தோன்றும். எங்கள் திறமைகளை, எமது வாயினால் இழந்துவிடக் கூடாது. பல திறமைசாலிகள் இதனையே செய்து வருகிறார்கள். பொய்யான செய்திகளை சொல்வது தான் தவறு. ஒருவரின் பெருமைகளைத் தக்க சமயத்திற் பாராட்டிக் கௌரவிப்பது மானிடர்கள் பண்பாகும். உண்மையாளர்கள் உலகில் பூத்து உண்மைகளில் உலகில் முத்து எழுந்தால் சத்தியத்தின் அற்புதங்களைத் தரிசித்துக் கொள்ளலாம்.

'ரசனை' பற்றிய கட்டுரையில், ரசனையற்ற, புத்துணர்ச்சியூட்டும் ஒருவரின் இன்பங்களைக் கண்டு ரசிப்பதே நல்ல ரசனை. கலையுணர்வு மனிதனை என்றும் இளமையுணர்வுடன் இயங்க வைக்கும். ரசனை உயிர்களுக்குப் போஷணையூட்டும். ரசனை உணர்வின்றி வாழ்க்கை ருசிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல இலக்கியங்களைப் படிக்கும் வாசகர்கள் குறைந்துவிட்டார்கள். முன்னைய இலக்கியங்களைப் போல் நாம் ஏன் இன்னமும் எம்மால் படைக்க முடியவில்லை.' முன்பு பார்த்த அதே கலை வடிவங்கள் சிற்பங்களையே இன்றும் பார்க்கிறோம்; ரசிக்கிறோம். அவ்வண்ணமே உருவாக்கவல்ல முழுமையான சிற்பிகளை நாம் இன்னமும் உருவாக்கவில்லையே? ஏன்? (ப.53) ''தமிழ் இனத்திற்கான நோபல் பரிசை எந்த ஒரு தமிழரும் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை. ஆனால் உலகத்திலேயே அற்புதமான காவியங் களைப் படைத்த எம் முன்னோர்களின் படைப்புகளைப் பார்த்தும் இன்னமும் உலகை ஈர்க்கும் வண்ணம் இலக்கியத்தை எதற்காகப் படைக்காமல் இருக்கி றோம்'' (ப.53). ரசிக்கின்ற நாம் படைக்கும் பிரம்மாக்களாக உருவாக வேண்டும். எமது படைப்புகளால் உலகம் மேன்மை, பெருமையடைய வேண்டும். (ப.53) நல்ல ரசனை வளர்க்கும் பூமியாக இது இல்லை. (ப.54). ''மனிதன் சிரிக்காமல் விட்டால், அவன் நித்திய அழுமூஞ்சியனாகி விடுவான்.'' '' இரவு நேரத்தில் சந்தோஷமூட்டும் எண்ணங்களுடன் உறக்கத் திற்குச் செல்லுங்கள். உடலைச் சுத்தமாக வைத்து நல்ல இனிமையான இசை களைக் கேட்டபடியே கண் அயர்ந்து படுங்கள். அந்தச் சுகானுபவத்தைவிட வேறென்ன வேண்டும். சிரித்துக் கொண்டே உறங்குக. அழுதபடி படுக் கைக்குப் போக வேண்டாம்.'' (ப. 56).

'தனித்துவம்' குறித்த கருத்துகளில், ஆணவம், செருக்குடன் சனங்களுடன் சேராமல் வாழ்வது தனித்துவமல்ல, ஒழுக்கத்துடனான தனித்துவம் புனிதத் துவமாகும். அந்நிய தேசங்களுக்குப் புலம் பெயர்ந்தோ, தற்காலிகமாகச் சென்று வரும்போதோ தமது நாடு, மொழி, கலாசாரங்களை மறந்து வாழ்தல் பெரும் கௌரவமாகவும் கொள்கிறார்கள்'' (ப. 61) 'உங்களை விரும்புங்கள்' என்ற கட்டுரையில், 'உங்களில் நீங்கள் அக்கறை கொள்வது போல், பிறரிடமும் கரிசனை காட்டுவீர்களாக!' என்கிறார். முதலில் உங்களை நீங்கள் ரசனையுடன் ரசிப்பீர்களாக! (ப. 73). தன்னை நேசிப்பது வேறு, மமதையால் மற்றவர் களுடைய மனதைத் துன்புறுத்தல் வேறு, 'மறதி' பற்றிய கட்டுரையில், 'தீயவைகளை மறப்பதே சிறப்பு. மறதியை இறைவன் கொடுத்துள்ளார்' கண்டதையும் போட்டு மூளையைக் குடையாமல் இருக்க மறதி எமக்குத் துணை செய்கிறது. 'மனிதன் தான் உயர்ந்தவனா?' என்ற கட்டுரையில் இயற்கையை சகல உயிர்களை நேசிப்பவனே உயர்ந்த மனிதன். மனித இனம் தான் உன்னதமானது. ஏனைய ஜீவராசிகள் எல்லாமே தாழ்ந்தது என்று எண்ணிக் கொள்வது உண்மையை மறக்கும் பொய்மைக் கூற்று ஆகும். சிந்திக்கவும் வார்த்தைகளைச் சிந்தவும் தெரிந்தவன் மனிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணபயம் மனிதர்க்குப் பகையானது. மிருகங்கள், வாழும் காலம் வரை மகிழ்வோடு வாழும். (ப. 99). 'மனித இனத்திற்கு எத்தனை வருடங்கள் பயிற்சிகள் வழங்கினாலும், உபதேசங்கள் செய்தாலும் இவர்கள் நன்கு பயில்கிறார்களா? கேட்கிறார்களா? எத்தனை ஞானிகள், தீர்க்க தரிசிகள் புவியில் அவதரித்துப் பாடம், உபதேசம் செப்பிப் போயுள்ளார்கள். செவி மடுத்தார்களா? மதச் சண்டை, மொழிச்சண்டை, நிலத்திற்காக, நீருக்காக எத்தனை எத்தனை விஷயங்களை முன்வைத்துச் சண்டையிட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

மனிதனை விட வேறு எந்த ஜீவராசிகளும் உபதேசங்களைக் கேட்ப தில்லை. ஆயுதங்களைக் கையில் எடுத்து ஆரவாரமாக மோதுவதில்லை. மிருகங்கள் எதுவாயினும் கல்லால் எறிந்து பொல்லால் தாக்கித் தம்முள் பொருதியது உண்டோ? ''ஆண்டவன் பார்வையில் அனைத்தும் ஒன்றே. காரணம் இன்றி எதுவுமே படைக்கப்பட்டதுமில்லை'' (ப. 103). உலகை ஆள எண்ணும் நாம், உலகை ரசிக்கலாம், உலகை அனைத்து உயிர்களை நேசிக்கவும் கருணை காட்டவும் முனைப்புடன் செயற்பட்டால் தான் அவன் மானுடம் போற்றும் மாமனிதன்'' (ப. 104) என்று நிறைவு செய்கிறார்.

***(19-08-2012)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# கவிஞர் பு. நிஸாந்தின் 'பனி விழும் இரவுகள்' கவிதைத் தொகுப்பு

[அணிந்துரை]

உலக மொழிகள் பலவற்றுள் 'இயற்றமிழ்' என்னுட் கவிதைவளம் கொழிக்கும் செம்மொழி தமிழ்மொழியாகும். கவிதை, செய்யுள், பா, வசனகவிதை, புதுக்கவிதை, ஹைகூ கவிதை, மொழிபெயர்ப்புக் கவிதைகள் என்றெல்லாம் இக்கவிதையின் வளர்ச்சி வரலாறு மிக மிக நீண்ட, தொன்மையான பாரம்பரிய முடையது. காலத்திற்குக் காலம் 'கவிதைச் செல்நெறி' வெவ்வேறு வடிவங் களிலும் (உருவங்களிலும்) பொருளடக்கத்துடனும் (உள்ளடக்கத்துடனும்) மாற்றமடைந்து வளர்ச்சியும், புதுமையும் நுட்பமும், நுண்மான் நுழைபுலமுங் கொண்டதாய் விளங்குகிறது. மனிதமொழியின் பிறப்புக் கவனிக்கப்பட வேண்டியது. மனித முயற்சியால் இயல்பாகவே மூடப்பட்டுள்ள வாய் திறக்க வெளிவரும் காற்றினூடே 'ஒலி' அல்லது 'ஓசை' அல்லது சத்தம் என்பது வெளிவருவது அடிப்படை ஆதார இயல்பாகிறது. ஒழுங்கு படுத்தப்பட்ட ஓசை கவிதையாகிறது. மௌனமும் ஒரு வகை நிசப்தக் கவிதையே. வசன முறையும் முறிவும் கூட கவிதையே. எனினும் சொற் களாலே எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒருவகை நுட்ப ஆக்கத்திறனுக்குக் 'கவிதை' என்று கூறுவர். கவிதையின் வீச்சுகள் இரு வகைகளிலே அமையலாம். 1. கற்பனைச் சொல்லடுக்கு 2. உள்ளடக்கக்கனதிப் புனைதிறன். கவிதையிலே - கவிதைக் கலையிலே கவிதையுணர்ச்சியும், அறிவுணர்ச்சி அல்லது சிந்தனையுணர்ச்சியும் இணைகின்றன.

மேலைத்தேச ஆங்கிலக் கவிதை மரபு என ஒன்று உண்டு. அதேவேளை தாகூர், கம்பன், நாயன்மார், ஆழ்வார்கள் பாடல்கள் என தமிழிலே கனதியான தமிழ்க்கவிதை மரபும் உண்டு. மேலைத்தேயக் கோட்பாடுகளுக்கும் புனை திறன்களுக்கும் வித்திட்ட பெருமை தமிழ்க்கவிதை மரபுக்கு உண்டு. இந்நோக் கிலே தமிழ்க்கவிதை வரலாறு இன்று தம் மனக்கண்முன் விரிகிறது. இன்றைய உலகின் இலக்கியச் செல்நெறி (main stream) உரைநடையிலமையும் புனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் (Fiction literature) என்று ஆய்வறிஞர்களும் விமர்சகர்களும் குறிப்பிடுவர். எனினும் 'கவிதை', 'வசனகவிதை' 'எண்ணங்களின் வீச்சு', 'மனவோட்டத்தின் புலப்பாடு', 'கற்பனை ஊற்று', 'புறநிலைக் காட்சி அனுபவம்', 'நுட்பமான சிந்தனைத்திறன்', 'பன்முக அனுபவ விதிர்ப்பு', 'மெல்லுணர்ச்சி உந்துதல்' என்பன இன்றைய கவிஞர்களது விதந்துரையாக புனைவுகளாக அமைவதனையும் புறந்தள்ளிவிடுதல் முடியாது. மருத்துவ அறிவியல் வளர்ச்சி வேகம், அறிவியற் கண்டுபிடிப்புகள், விஞ்ஞான மேன்மை, வெகுஜன ஊடகங்களின் பரம்பல், கணினி உலகத் தகவல் நுட்பம் என்பன பற்பல புதிய - நவீன எண்ணவோட்டங்களையும், சிந்தனைகளையும், மேதாவிலாசங்களையும், பன்முக வளர்ச்சிகளையும் கல்வியுலகிலே இணைந் துள்ளன. விரிவான - விசாலமான பல்துறைப் பார்வைகள் விசாலித்துள்ளன. இவற்றின் ஊடுருவல் - சங்கமிப்பு என்பன மாணாக்கருக்கும், கவிஞர் களுக்கும், புலவர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் சீர்திருத்தவாதி களுக்கும் புதுப்புதுக் கருத்துகளை உற்பவிக்கத் தூண்டுகின்றன. இப்பார்வை விரிவு - விசாலித்த நோக்கு - கவிதையின் பாடுபொருளையும் பல்வேறு புதிய சிந்தனைத் தடங்களையும் இனங்காணச் செய்துள்ளன.

''பனி விழும் இரவுகள்'' எனும் கவிதைத் தொகுதியைத் தனது கன்னி இலக்கிய முயற்சியின் அறுவடையாக எழுதி அச்சிட்டு வெளியிடும் கவிஞர் பு. நிஸாந் வளரும் ஆர்வமுள்ள, சிந்தனைத் துடிப்புள்ள ஓரிளங் கவிஞன். மொத்தம் அறுபத்தொரு (61) தலைப்புகளிலே நிஸாந்தின் நோக்கு நிலை மதிப்பீடுகள் இத்தொகுப்பிலே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவர் கவிதை களுக்கு இட்டுள்ள தலைப்புகள் வருமாறு:

அடக்குமுறை மட்டுமா இல்லை இல்லை அநீதியும் கூட, அதோ தெரிகிறான் பின்வரிசையில் அவன்தான், எனக்கு நீ அத்தியின்பூ, உனக்கு நான் சகாராவில் ஊற்று, இனி பூப்பூக்கும் காலம், இயற்கைத் தாயின் இந்த அகோரம் ஏன்? காதலியின் சின்னம், காற்றிற்கென்ன வேலி, கைத்தலம் இழக்கேனே, கனவின் மடியில், கண்ணீரால் ஒரு கடிதம், பட்ட மரத்தில் துளிர்த்த காதல், மனைவி முத்தத்தின் முகவரி, நீ கொடுத்ததும் கெடுத்ததும், பிரிவெனும் மறுபெயர் கொண்ட காதல், பெண்ணோர் கவிதை, புரிந்திடடா மானிடா, ரோஜாமுள் சிரிப்பு, உள்ளவள் என்பவள் யார், வரதட்சணை, வசந்தகாலம் அள்ளித் தந்த அழகு, அகரம், மீட்டு, தொலைந்துபோன முகவரி, உனக்குச் சமர்ப்பணம், பூப்பெய்தியபனுவல், காதலும் சாதலும், நிறைந்துள்ள நினைவுகள், சீப்புக் கனவு, புன்னகை பிரசவித்த புஷ்பம் நீ, காதல் அணுக்கள், கேட்கிறாள் அன்பை அல்ல ஆயுளை, கண்ணீரும் சிரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது, மடமை, காலத்திடம் விடப்பட்ட கேள்வி, அறிவினை அருள பிரி வினை வாதம், எதற்கு, தென்றல், உன்னிடம் அனுமதி கேட்டதா? முரண் பாட்டு மூட்டை, புறம் போக்கு என்தலைவி(தி), கேள்விக்கணை, வணிகக் க(ள்)ளி, சான்றோன் செயல், விழுதுகள், பனிவிழும் இரவுகள், உன்னிடத் தில் ..., அகதி, சமகாலம், கனவில் நானும் பிரம்மன், கல்லறை நோக்கிய கருவின் பயணம், இறைவனின் இருப்பிடம், கோடைநிலவு, தகுதியெங்கே செல்கிறது, எனக்கும் ஒரு நண்பன் இருந்தான், அதில் விழுந்த வண்டு, நாவிதம் செய்ய வேண்டிவை, அவளுக்கு ஆண் இடை, உடை, வாடா மல்லிகைகள், உலகுக்கெல்லாம் ஓர் சொந்தம் அம்மா, சிற்றின்பம், தொடா மலே சென்றுவிட்டால் என்னும் 61 தலைப்புகளில் இத்தொகுதிக் கவிதைகள் இயல்கின்றன. இவற்றின் பொதுப்பண்புகளைச் சுருக்கமாக நோக்கலாம்.

கவிஞர்களும் புலவர்களும் பாவலரும் நாவலரும் நுட்பமாகவே சம்பங் களையும் உலகையும் நோக்கிக் கவி படைப்பவர்கள். 'கவிஞர்கள் பாடாத பொருளே இல்லை' என்பர். கவிக்கு வெளிப்பொருள் (தூலப்பொருள்) ஒன்று. சூக்குமமான (மறைபொருள்) இன்னொன்று என அந்நுட்பம் அமையும். கவிஞர் நிஸாந் ஒரு கட்டிளமைப்பருவ வயதையுடையவர்; இளைஞர்; மாணவன்; இலக்கிய ஆர்வங்கொண்டவர்; ஆக்க இலக்கிய உந்தல் கொண்டவர்; புலமை மிக்கவர். வர்த்தகத்துறை அல்லது முகாமைத்துவத் துறையைப் பயின்ற போதிலும் தமிழிலக்கியங்களிலும், தமிழ் விழாக்களிலும் ஈடுபாடுடையவராகவும் கவிதைகளை எழுதும் ஆக்கத்திறனுடையவராகவும் விளங்குகிறார். 'திருக்குறள்' விழாவிலே நான் அவருக்கு அறிமுகமானேன். அன்றிலிருந்து நிஸாந் என்மீதும், எனது சொற்பொழிவிலும் ஈடுபாடும் விருப்பமுங் கொண்டார். என்னுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்ட அன்பன்; நண்பன்; பண்பன்.

தம்முட் கிடந்து குமைகின்ற உணர்ச்சிகளை, எழுச்சிகளை மொழிமூலம் படைப்போர் கலாமேதாவிலாசங் கொண்டவர்களாகவும், கலை வல்லவர் களாகவும் சிந்தனைச் சிற்பிகளாகவும் அமைவர்; உலகப் பொதுமைக்குட் தம்மைப்பிணித்துக்கொள்வர். உலகின் கலைப்பெறுமானங்களை அறிந்துணர் வோர். அவற்றின் உயிர்த்துடிப்புகளையும் - ஜீவகளையையும் இரசிப்போர். கலாசிருஷ்டிகளின் இலயிப்பினால் வாழ்விலே இன்பத்தையும், நிம்மதி யையும், அமைதியையும் பெறுவர். 'Spontaneous overflow of the powerful feelings' என்று கவிதைக்கு வரைவிலக்கணம் ஒன்று உண்டு. ''உள்ளத்துள்ளது கவிதை இன்ப உருவெடுப்பது கவிதை'' என்பர் கவிமணி தேசிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகம்பிள்ளை. 'கவிதைகள் உணர்ச்சியின் பிம்பங்கள்' என்று குறிக்கப் படும் இப்பண்பு நிஸாந்தின் கவிதைகளிலே பெரிதும் தென்படுகின்றன.

'எது கவிதை' என்னும் வாதப் பிரதிவாதங்கள் இலக்கிய உலகில் ஆழமாகவும் நீளமாகவும் எதிரும் புதிருமாகவும் தர்க்கமாகவும் உண்டு. சங்க இலக்கியங்கள் முதல் திருக்குறள் சிலப்பதிகாரம், பக்தி இலக்கியங் களான ஆழ்வார்கள் நாயன்மார் பாசுரங்கள், கம்பராமாயணம், குற்றாலக் குறவஞ்சி, சித்தர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் பாடல்கள், கவியரசு கண்ணதாசன் பாடல்கள், கவிஞர் வாலியின் பாடல்கள், கவிஞர் வைரமுத்துவின் பாடல்கள், நாட்டார் பாடல்கள் என்று எத்தனையோ வகையறாக்கள் தமது தமிழ்க்கவிதை மரபில் செறிவாக உள்ளன. இவை ஒவ்வொன்றிலிருந்தும் கவிஞர் நிஸாந் தமது கவிப்பொருள் எண்ணக்கூறுகளை எடுத்தாண்டுள்ளார். எனவே நிஸாந்த அவர்களின் பாடுபொருள்கள், சமூகத்தளத்தையும், இயற்கையையும், அகப்பொருள் அன்பினைந்திணை மரபினையும் கருப்பொருள்களாக வரித்துக் கொண் டுள்ளன. சுட்டியுரைக்கத்தக்க உள்ளத்துணர்ச்சிகள், பொங்கிப் பிரவகிக்கும் துடிப்புடனான கவிதைகளை நிஸாந் படைத்தளித்துள்ளார். எவற்றிலிருந்தும் விட்டு விடுதலையாகிய நிலையிலல்லாது வாழத்துடிக்கும் லயிப்பில், கவிஞரொருவன் பாடும் குரலோசை நிஸாந்தின் கவிதைப் புனைவுகளிலே கேட்கின்றன. குயில் கூவாதிருக்க மாட்டாமையில் கூவுகிறது. அதன் இனிய குரலோசையைக் கேட்டு ரசிக்கும் வல்லபம், ஈர்ப்பு, ஆவல், ஆசை, துடிப்பு, வேணவா, தவிப்பு, ஆர்வம் என்ற உந்தல்கள் அனைத்து இளையோருக்கும் ஏற்படவேண்டும்; முகிழ்க்க வேண்டும்; முனைப்புபெற வேண்டும்.

கவிஞர் நிஸாந்தின் கன்னிப்படைப்பு 'பனிவிழும் இரவுகள்'. அறிவு முதிர்ச்சி, வயது முதிர்ச்சி, அனுபவ முதிர்ச்சி, பார்வை (நோக்கு நிலை) முதிர்ச்சி, சிந்தனை முதிர்ச்சி என்பன இக்கவிஞரைப் புடம் போடும் என்பது எனது நம்பிக்கை. 'மானுட அனுபவ வெண்சூடு' என்பது 'தங்கத்தை உருக் குவது போன்ற' காரியம், கிரியை, தங்கக்கட்டி எவ்வளவு சூடாக்கப்படுகிறதோ அவ்வளவுக்குத் அது இளகும்; உருகும். அதுபோல் அனுபவத்தின் வெண்சூடு 'கவிதா ஆளுமையை' மெருகூட்டும். இது வளர்ச்சி நியதி. கவிஞர் மேன்மேலும் பல படைப்புகளைத் தமிழிலே புனைந்து தமிழ்ப்பணி செய்து புகழடைவாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தமிழ்ப் பண்பாடும்

தமிழ் பேசும் மக்கள் பெருமளவு வாழுகின்ற தமிழ்ப் பிரதேசமான யாழ்ப் பாணப் பகுதியில் பல்கலைக்கழகம் ஒன்று இருப்பது மிகுந்த பெருமை யளிக்கத்தக்க விடயமாகும். ஆனால் கடந்த சில தினங்களாக அப்பல் கலைக்கழகத்தின் நிர்வாகத்தினருக்கும் மாணவர்களுக்கும் இடையே ராக்கிங் பிரச்சினைகள் தொடர்பாகவும், பிற வசதிகள் தொடர்பாகவும் துலக்கம் பெறாத மூடுண்ட சிக்கல்கள் இருந்து வருவதை ஆழமாகச் சிந்திப்பவர்கள் நிச்சயம் கண்டு கொள்வார்கள். இவற்றுக்கான பரிகாரங்களைக் கண்டு, நிலைமை முற்றி மோசமடையாமலேயே தீர்த்துவைக்க வேண்டிய பொறுப்பு பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் அதன் ஆளுநர் சபைக்குமுரியது.

ஒற்றுமையின் கீழ் ஒன்றுபடும் இரு வர்க்கங்களுக்கிடையே பிரச்சினை நிகழ்கிறது என்பதை நினைத்துக் கொள்வது அவசியம். இந்நோக்கு இன்னு மொரு உண்மையினைத் தெளிவாக்கும். அதாவது தமிழ் மக்கள் மத்தியில் கல்வியில் வல்ல அறிஞர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் சில முரண் பாடுகளுள் அகப்பட்டுக் கொண்டு திணறுவதாகவே தெரிகிறது. இத்திணறலைத் தீர்த்து வைப்பதில் தான் எமது பல்கலைக்கழகத்தினது சுபீட்சமே தங்கியுள்ள தென்பதை நெஞ்சார உணர்ந்துகொள்ள வேண்டும். இளைஞர்களுக்கு, சிறப்பாகப் பட்டதாரி மாணவர்களுக்குப் பல்வேறு கஷ்டங்கள் இருப்பது அம்மாணவர்களது நிலையிலேயே நின்று நோக்குவோருக்குத் தெற்றெனப் புலனாகும். ஆனால் கால மாற்றத்தினதும் அதிதீவிர போக்கினதும் காரண மாகத் தங்களை அறியாமலேயே மாணவர்கள் சில தவறுகளை இழைத்து விடுகின்றனர். இப்போக்கின் கூர்மை தலைமைத்துவ மாணவர்களுக்கும் அதன் பின்னர் பல்கலைக்கழகத்தில் சேரும் புதிய மாணவர்களுக்கும் அவர்களை அறியாமலேயே பீடித்துக் கொள்கிறது.

இதனால் விளையும் அனர்த்தங்களுக்கு அடிமுடி தேடுவதென்றால் மிகவும் கஷ்டம். ஏற்படும் காரணம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னுள் கொண்டுள்ள மாணவ சமுதாயம் தனித்து ஒரு பிரதேச வாரியிலானதல்ல. முழுத் தேசத்தினதும் தமிழ்ப் பாரம்பரியத்தினடியாகவே பிறந்து வளர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் என்பதை ஈண்டு சுட்டுவது அவசியமாகிறது. இந்த நிலையில் தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கொண்டுள்ள மாணவர் சமூகம் முழு இலங்கையிலிருந்தும் பல்லினத்தன்மையுள்ள மொழி வாரியாகவோ, மத ரீதியாகவோ தெரிவு செய்யப்பட்டவர்களல்ல. இதனைத் தமிழ்ப் பேசும் மக்களும் மாணவர்களும் அதிகாரிகளும் பொறுப்புணர்ச்சியுடன் கவனத்தில் எடுத்தல் வேண்டும். ஆயினும், தற்பொழுது குழுநிலை மனோபாவம் மாணவர்களிடையே இல்லையென்றோ அல்லது உருவாக முடியாதென்றோ கூறுவதற்கில்லை. அக்குழு நிலை இயக்கத்தின் செயற் பாடுகள் எவ்வாறிருந்த போதிலும், அவற்றால் ஏற்படுத்தப்படும் தாக்கம் அவ்வளவு பெரிதாக அமையப் போவதில்லை. ஆயின் இப்போக்கு அர சாங்கத்திற்குச் சில யோசனைகளை உருவாக்கி விடுவதற்கு உந்து காரணியாக அமையலாம் என்பதிலும் உண்மை இல்லாமலில்லை.

ஏனைய பல்கலைக்கழகங்களில் நிகழும் நடவடிக்கைகளில் நாம் அதி களவு அக்கறை கொள்வதில் யாதொரு பயனுமில்லை. ஏனென்றால், நமக் கென்றோர் கடமையுண்டு, நமக்கென்றோர் கலாசாரமுண்டு, நமக்கென்றோர் பொறுப்புண்டு, நமக்கென்றோர் வாழ்வுண்டு, நமக்கென்றோர் தனித்துவ முண்டு. இவற்றினை நாம் தொடர்ந்தும் பேண வேண்டுமானால், நமதனை வரினதும் சிந்தனை நம் வாழ்வின் எதிர்காலத்தின் மீது படிய வேண்டும். அவ்வாறு பதிப்பதினால்தான் அரசாங்கத்தினாலும் தென்னிலங்கை மக்களி னாலும் நாம் பாதிக்கப்படாமல் இருக்க முடியும். பொதுவாகவே முன்னு தாரண நடவடிக்கைகளுக்கும் பிறருக்கு வழிகாட்டி ஆதரவாகவும் இருக்க வேண்டிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களும் நிர்வாகமும் பத்திரிகைகளில் முரண்டு பிடிப்பது பல்கலைக்கழக வளர்ச்சியைத் தடை செய்யச் சாட்டாக அமையாலாம். அவ்வாறு பல்கலைக்கழகத்தின் வளர்ச் சிக்குக் குந்தகம், இடையூறு ஏற்படுமானால் அது தமிழ் மக்களின் கேவலமான நடவடிக்கைகளையே கோடிட்டுக் காட்டி நிற்கும். இச்சந்தர்ப்பத்தில் தமிழ்ப் பேசும் இளைஞரும் பல்கலைக்கழக மாணவர் சமூகமும் தான் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

சாதாரணமாக ஒரு மாணவன் தனது உயர்கல்வியை விருத்தி செய்யும் காலங்களில் தன்னைத் தான் உணர்ந்து கொள்பவனாக மாறிக்கொள்ள வேண்டும். பல்வேறு வகையான தன்மையான உளவியல், அறிவியல், அரசியல் நோக்குகளோடும் விரும்பியோ விரும்பாமலோ தன்னை இணைத் தும் தோய்த்துக் கொள்ளும் மாணவர்கள் தன்னை மறந்த நிலையில் செயல் படுவது தான் நிதானிக்கப்பட வேண்டும். எது சித்தாந்தமும் முறையானதும் சரியானதுமான நோக்கினை இலக்கினை நோக்கிய மனித குலத்தை நெறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்த வேண்டும்; அச்சிந்தாந்தமே வளம் பெறும்! வாழ்வும் பெறும். இவை மாணவர்களது மனதிலே ஊன்றிப் பதிய வேண்டிய கருத்துகள். பல்கலைக் கழக மாணவன் ஒவ்வொருவனும் நமது பாரம்பரியத்திற்கு எடுத்துக் காட் டாக விளங்கிக் கொள்ளப் பாடுபட வேண்டும். கல்வித்துறையின் இயல்பு களும் சில வேளை தடுமாற்றத்தினை உண்டு பண்ணிவிடுவதுமுண்டு. எது எவ்வாறாயினும், எம் மாணவன் எத்துறையைத்தான் பயின்றாலும், பயின்று பட்டம் பெற்றாலும் அவன் ஒட்டு மொத்தமான முழுச் சமுதாயத்தினது மனிதப் பிரதிநிதியே என்பதை மறந்திடாது ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். மருத்துவம், பொறியியல், மானிடவியல், கட்டடக்கலை, கணிதம், கணக்கியல், சட்டம், அரசியல் இன்னும் எத்தனை எத்தனையோ துறைகளில் பாண்டித்தியம் பெற்றாலும், அன்பிலும் பண்பிலும் பாண்டித்தியம் பெறுவது இவர்கள் அனைவரும் பயிலும் துறைகளுக்கும் பொதுவான அங்கங் களாகும். இவ்விடத்தில் புத்தியும் சாதுரியமும் விவேகமும் சொல்லாண் மையும் புகழும் மதிப்பும் ஆளுக்கு ஆள் வேறுபட, மக்கட் பண்பு என்ற ஒன்றுதான் அனைத்திற்கும் மேலாக பொதுமை பெற்று நிலைபெறும் பண்பாக வுள்ளது. அரம் போலும் கூர்மையுடனிருப்போராயினும் மக்கட் பண்பு இல்லாவிடில் அவர் மரம் என்பது ஒரு குறட் கருத்து.

தத்துவ அர்த்தங்கள் அல்ல இங்கு முக்கியம். அவ்வர்த்தங்களின் நடைமுறை இயக்கமே பிரதானம். நடைமுறையில் ஒழுங்கையும் அன்பையும் கட்டுப்பாட்டையும் மனிதப் பண்பையும் தமிழ்க் கலாசாரத்தினையும் இன்னும் தமிழனுக்கேயுரிய சொன்ன நெறிமுறைகளைப் பேணுபவராகவும் வளர்த் தெடுப்போராகவும் மாணவ சமுதாயம் மறுமலர்ச்சி பெறவேண்டும். அம் மலர்ச்சியைத் துரிதப்படுத்தவும் பேணவும் தாய், தந்தையர் முன்வர வேண்டும். இப்பொழுது எமது கலாசாரத்தினையே நாம் வெறுத்து ஒதுக்குபவர்களாகவும் எமது மரபுகளையே மறுசீரமைப்போராகவும் கடமை புரிகின்றபோது நமக்கு அருகிலேயுள்ள பிரிதொரு கலாசாரத்தினரின் சில போக்குகளையும் தாக்கங் களையும் எவ்வாறு வென்று வாழப்போகிறோம் என்பதே நம் முன்னுள்ள கேள்வியாகவுள்ளது. 'தமிழ் மொழி' பிற மொழிகளின் தாக்கங்கள் பெற்ற போதும் தனித்தியங்கும் பெருமையும் தன்மையும் கொண்டதென்பது மொழி வல்லார் கருத்து. ஆனால் தற்போது தமிழ்ப் பல்கலைக்கழகம் தனித்தியங் குமா? என்பதே சிந்திப்போர் மத்தியிலுள்ள கேள்வியாகும். இவற்றிற் கெல்லாம் தீர்வுகள் இல்லாமலில்லை. நிச்சயம் தீர்வு கண்டு விசாலமான மனப்போக்குடன் வாழவேண்டும். அத்துடன் தான் வாழ்ந்து பிறர் மாழ வேண்டும் என்ற மனோபாவம் ஒழிய வேண்டும்.

***(நன்றி: ஈழநாடு, 31.10.1979)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இந்து தருமம் –96

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் 1995/96 ஆம் ஆண்டிற்கான 'இந்து தருமம் 96' மலர் அண்மையில் தைப்பூசத் திரு விழாவையொட்டி வெளியிடப்பட்டது. 'மேன்னை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்' என்ற மேற்கோள் வாசகத்துடனும் 'எழுமின் விழுமின் கருதிய கருமம் கைகூடும் வரை தளராது உழைமின்' என்ற சுவாமி விவே கானந்தரது மகாவாக்கிய குறிக்கோளுடனும் வெளிவந்துள்ளது இம் மலர்.

செல்வன் வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாஸன் மலராசிரியர். 'அருள் பொழியும் மதகரியின் செஞ்சரணம் காப்பதாமே' எனத் துதிக்கும் காப்புச் செய்யுளுடன் மலர் தொடங்குகிறது.

'வாழ்க்கைக்கு வழி காட்டும் ஒளி ஞானிகள் வாழ்க்கையே' எனும் தெளிவான விளக்கத்தை அட்டைப்பட விளக்கமென்ற பகுதியிலே பொறி யியற் பீடத்தைச் சேர்ந்த செல்வன் எஸ். மஹிந்தன் தெளிவுபடுத்தியுள்ளார்.

'இந்து தருமம் 96' இன் விடயப் பரப்பின் முதலாவது பகுதி 'வரலாறும் தத்துவமும்' என்பதாகும். இதனுள் இந்து மதத்தின் வரலாற்று ரீதியான தத்துவத் தேடல்களைக் கொண்ட கட்டுரைகளை இயன்றளவு தொகுத் துள்ளேன். இரண்டாவது பகுதி மதமும் விழிப்புணர்வும் என்ற தலைப்பின் கீழ் பிரதான கருவுடன் தொடர்பான ஆக்கங்களை உள்ளடக்கியுள்ளது. மூன்றாவது பகுதி 'கலைகளும் வழிபாடுகளும்'. இதனுள் இந்துமத கலை கலாசாரங்களை ஓரளவு பிரதிபலிக்கக் கூடிய ஆக்கங்களையும் தொகுக்க முயன்றுள்ளேன் என்று இதழாசிரியர் தமது பணியினை வகைப்படுத்தி விளக்கியுரைத்துள்ளார். எனினும் 'எவ்வளவு வெற்றி கண்டுள்ளேன் என்பது தெரியவில்லை' என்ற மன ஆதங்கமும் அவரது எழுத்திலேயே ஐயத்துடன் வெளிவந்து விட்டது. இத்தொனி சூசகமாக 'சரி பிழை' என்பது ஏற்காதது பற்றிய அவாவுதலையும் புலப்படுத்துகிறது. அறிவுத் தளத்தில் நின்றுகொண்டு சமயத்தை விமர்சிப்பது முடிவற்ற ஆய்வும் தான்.

இம்மலரிலிடம் பெறும் முக்கியமானவை, முக்கியமானவர்கள் என்று இம் மேற்கோட் பந்தியைக் கருதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இருக்கு வேதத்தின் தத்துவ சிந்தனை பேராசிரியர் திருமதி மகேஸ்வரி அருட்செல்வம், சத்து - சித்து - ஆனந்தம்' வை.நந்தகுமார், 'கௌடில்ய அர்த்த சாஸ்திரம் - நவீன அரசியற் கலையின் முன்னோடி' செல்வன் ஆ.யோகராஜ் 'வருணக் கோட்பாட்டின் இன்றைய நிலை' - ஒரு கண்ணோட்டம், செல்வி. இரா. ஷர்மிளாதேவி, 'வேதங்களின் வழிவந்த இந்துப் பண்பாட்டு மரபுகள்' - செல்வி கி.உமா; 'ஆன்ம ஈடேற்றத்தில் புருடார்த்தங்கள்' செல்வன் பொ.சகாதேவன்; 'சங்கராச்சாரியாரின் வேதம் - ஓர் அறிமுகம்' செல்வன் ஏ.எல்.முஹமட் றியாழ், 'இறையருள்' கலாநிதி - க.அருணாசலம் - 'நற்றமிழ் வளர்த்த நாவலர் பெருமான்' செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி; 'ஓர் இந்துவின் சிந்தனைக்கு......' செல்வன் வ. சிவலோகதாசன்; 'இந்துமதம்' செல்வி து.விஜயரேணுகா; 'நாவலர் என்ற மானுடம்' செல்வன் கு.சோ. செந்தில் குமார்; 'இந்து மதத்தின் தூர நோக்கு சில கண்ணோட்டங்கள்' செல்வன் சி. மகேஸ் வரன்; மகாத்மா காந்தியடிகள் கூறும் 'சமயமும் சத்தியமும்' செல்வி ஏ. சிவனேஸ்வரி; 'மதங்களின் அறிவியல் சிந்தனை களும் ஆன்ம ஈடேற்றமும்' செல்வி க. யோகேஸ்வரி; 'திரையிசையில் பக்தி மரபு' - கலாநிதி துரை மனோகரன்; 'கலைத்துறையில் ஆனந்த குமாரசாமி அல்லது ஒப்பியல் நோக்கு' திருமதி மல்லிகா இராசரத்தினம்; 'பக்தி இயக்கமும் தமிழும்' திரு. வ. மகேஸ்வரன்; 'முருக வழிபாடு - சங்ககாலம் ஒரு பார்வை' செல்வி த.மணிமேகலா; 'தஞ்சைப் பெருங் கோயில் சமூக சமய பண்பாட்டு நோக்கு' செல்வி பி. தேவகுமாரி; 'கண்ணகி வழிபாடும் மட்டக்களப்புப் பிரதேசமும்' செல்வன் சே. சிங்காரவேல். மாணவர்களின் ஆக்கங்களே அதிகளவில் இடம்பெற்றுள்ளது. எனினும் விரிவுரையாளர் திருமதி மல்லிகா ராஜரத்தினம், தமிழ்த் துறையின் தலைவர் கலாநிதி க.அருணாசலம், விரிவுரையாளர் வ. மகேஸ்வரன் போன்றோரது நோக்கு நிலைகள் மலருக்கு விடயக் கனதியைக் கொடுத்துள்ளன. 'மெய்ஞானத் தேடல்' இவர்களது எழுத்திலே கிளர்த்தப்படுகிறது.

நாட்டின் யுத்தச் சூழல் தமிழ் மக்களின் மனோநிலை, அகதி அவலம், முகாம்களின் சோகம், மனஉளைச்சல் நிம்மதியிழப்பு மரணபயம் (யமபயம்) விதியின் கொடுமை கலியுகக் கோலம், இறை நம்பிக்கையீனம், வினைப் பயனின் தாக்கம், இரக்கமற்ற மனிதத்துவ வெளிப்பாடுகள், நிஷ்டூரம், மனிதாபிமானமற்ற தன்மைகள், வாழ்வில் நம்பிக்கை இழப்பு, வரட்டுச் சித்தாந்தம் என்றெல்லாம் விழுமிய நெகிழ்வு நிலையிலும் இந்து தருமம் 96 வெளியிடப்பட வேண்டுமா? என்ற முனைப்பான கேள்விக் கணையுடனும் பொறுமையுடனும் எதிர்ப்புக் கோஷமெழுப்பி நிற்கும் பட்டதாரி மாணவர் சிலரது சினமிகு கர்ச்சனைகளுக்கும் திட்டல்களுக்கும் ஏச்சுக்களுக்குமிடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேயும் இந்து மாணவ சங்கச் செயற்குழு மலர்க்குழு 'விழித்தெழுந்து' செயற்பட்டமையால் உருவானதே 'இந்து தருமம் 96' என்ற இந்த மலர். உள்ளெதிர்ப்பினுள்ளேயும் பீறிட்டெழுந்த ஆக்கப்பாடு நோக்கிய தரும இதழ் இந்து தருமம் 96 என்றால் அதில் மிகையொன்றுமில்லை. வேண்டாம் இந்தச் சோலி என்று சோர்ந்து சோம்பியவர்களிடையேயும் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று அறிவுற்பத்தி ஆன்மிகப் பணியில் உறைப்பு மிகு வேகங் கொண்டதன் விளைவே இந்து தருமம் 96. இந்நோக்கிலணுகும் போது இம்மலர் வெளியீடு முயற்சியின் வெற்றி தேவையானது. மிகவரிய, பயனுள்ள தகவல்கள் உள்ளன. கூறியது கூறலில்லை. புதுமை நல நோக் குண்டு; சீர்திருத்த வேகமுண்டு. எனினும் கருத்துகளுக்குக் கருத்துக் கூறத்தக்க தாகவும் எதிர்க்கருத்து அல்லது மாற்றுக் கருத்துகளைப் பொருத்திப் பார்க்கக் கூடியவாறும் கட்டுரைகள் சில அமைந்துள்ளமை மனங் கொள்ளத் தக்கது. 'பழுத்த அனுபவம்' என்பது விமர்சனம் செய்யத்தக்க தகுதியுடையது. வெறும் 'கருத்து' அறிவுத் தளத்திலிருந்து புறப்பட்டு வெளியுலகினுக்கு வெளியிடப்படுவது. இம் 'முரண்' சில கட்டுரைகளிலுண்டு. 'சமயத்தின் உயிர்ப்பை' யார் அறிவார்? என்ற வினாவை எழுப்பினால் அதற்கு விடை யளிப்பது கஷ்டம். அதைப் போன்றதே கடவுள் பற்றிய ஆராய்ச்சியும். 'முடிவற்றதோர்' தேடல் என்ற உண்மையை மறந்தால் அது கொச்சைப் படுத்தப்பட்டு விடும். பொது நோக்கில் இக்குறைபாடு சில கட்டுரைகளிலே தொனிக்கிறது. ஆதலினால் சமயச் சார்பானவற்றை வெகுநிதானமாக பய பக்தியுடன் கையாள வேண்டும் என்ற கருத்தை இம்மலர் விமர்சன நோக்கிலே அழுத்தியுரைக்க வேண்டும் போலுள்ளது.

மிகமிக ஆழமான நுட்பமான நுண்ணிய முடிவற்ற சூசகமானவைகள் இந்து தர்ம வளர்ச்சி வரலாற்றிலே பரவி மண்டிக் கிடக்கின்றன.

அவ்வாறானவற்றிலேயும் கவனஞ் செலுத்தப்பட்டிருந்தால் 'சமயமலர்' என்ற தரத்தில் கனபதி பெற்று இன்னும் பல பயன்களை இம்மலர் தந்திருக்கும். அத்துடன் காலத்தின் கோலத்திற்கேற்பச் சில உத்திமுறைகளைக் கையாண்டு, சில ஒப்பீடுகளையும் செய்து இந்து தருமத்தின் உயர்வை மேலும் நிறுவிக் கீர்த்தியும் புகழும் பெற்றிருக்கலாம். மேலும் இறைக் கோட்பாட்டினை நிறுவும் மனங்கொண்டு அற்புதற்களினூடேயும் அருளாடல்களினூடேயும் கடவுட் கொள்கையை வெற்றி பெற நிறுவியிருக்கலாம். இன்னும் விஞ் ஞானப் பார்வையுடன் 'இந்து தருமம்' வெல்லற்கரியது என்ற உண்மை நிலையை 'ஆங்கில மொழி' மூலமும் ஆய்வுலகுக்கு, அறிவுலகுக்கு, நூலுலகுக்கு வழங்கியிருக்கலாம். சவால்களை எதிர்கொண்டு போராடி வாழும் தன்மையை மெய்ப்பித்திருக்கலாம்; காலத்தால் எட்டாத நிலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவத்தை நிலை நிறுத்தியிருக்கலாம். தொல்லியலாய்வு; திருமுறை ஆய்வு, அருளாளர் சாதனை என்பன பல்கலைக்கழக அஞ்ஞான நோக்கில் மலரில் மருந்துக்குக் கூட இடமில்லாது போய்விட்டது. 'சமயத்தில் இவைதான் இல்லாதிருக்கலாமா' என்ற வெறுமை மலரைப் படித்து முடித்ததும் 'டபக்' என்று பட்டது.

புராண இதிகாசங்கள் இறை நிலைப்பாட்டை அழுத்துவன. ஆனால் அருளாளர்களின் திருமுறைகள் இறைவனையே உருக்குவன; உள்ளொளி பரப்புவன; நெக்குருகி வழிபடப் பண்ணுவன. இந்நினைப்பு கலையுணர் வினாலேயே பரிமளிப்பது; அது சக்தியினால் அருளப்படுவது, அனைத்துயிர் களையும் ஈர்த்து நிற்பது. ஆதலினால் இவ்வம்சம் கவனிக்கப்பட வேண்டாமா? மெய்ப்பாடுதான் சமய உணர்வின் அடிப்படையாகும். அதற்குரிய இடம் வேண்டும். சமயம் வெறும் சடமல்ல; அதுவும் ஒரு கலையாகலாம்; அற்புதக் கலை; அழகு மிளிர் அருங்கலை.

மலர், மலராசிரியரின் நுண்மான் நுழைபுலத்தையும் தரத்தையும் தகுதி யையும் தூக்கி நிறுத்தவல்லது. 'திருப்தியே இல்லாதவர்களது' ஏற்றுக் கொள்ளக் கூடாது என்ற வரையறையோடு அமையும் கட்சிக் கொள்கையானது? சார்புநிலை என்பன பார்த்தே படைப்புக்களை படைப்பாளிகளைத் தூக்கு வதும் உழக்குவதும் (கைவிடுவதும்) நிகழ்ந்து வரும் விமர்சன உலகில் இவ்வகைக் கீழ்த்தர நோக்குகளின்றித், தாரதம்மியம் காண்பதே அறிவுநிலை விமர்சனம். இன்றைய தேவைகளுள் ஒன்று.

பல்கலைக்கழக வெளியீடு அது எத்துறைகள் சார்ந்ததாயினும் இரக சியத்திற்குரியதொன்றல்ல. எப்படி சமயம் வாழ்வுக்கு வழிகாட்டும் நெறியோ அதேபோல் சிந்தனை செயல்வழி காட்டி நிற்பவை. இத்தகு மலர்கள். வளமான சமயவாழ்வு நம்மிலும் மிளிர வேண்டும். அதுவே செழுமைமிக்கது. உயர்வானது; உண்மையானது; உன்னதமானது.

இந்துதருமம் 96 மலர் மாணவர் சிந்தனையில் முகிழ்த்தது. அநுபவத்தால் இளைஞர்களது (இளையவர்களது) ஆக்க முனைப்பு. அதற்கு நல்லாதரவு கொடுத்தனர் விளம்பரதாரர்கள். ஊக்குவித்தோர் உத்தமர்கள். 'இந்துதருமம் 96' பெரியோரையும் கனஞ் செய்துள்ளமை காணத்தக்கது.

சுவாமி ஆத்மகனானந்தா, 'வெறும் பேச்சளவிலும் கொள்கையளவிலும் உள்ள சமயத்தை வாழ்க்கை நெறியாக மாற்றியமைக்க வேண்டிய அவசர காலகட்டம் இது' என்று தமது ஆசிச் செய்தியிலே நெறிப்படுத்தியுள்ளார்.

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள் மேற்படிப்பிற்காகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகம் போகும் மாணவர்கள் நல்ல சிந்தனையில் வாழ்கின்றார்கள் என்பதையும் அந்த மலர் எடுத்துக் காட்டுகின்றது என்கிறார்.

''சத்தைவிட்டுச் சக்கையையே பெற்றுக்கொண்டு வந்துள்ளோம். இது சமயத்தின் குற்றமல்ல; சமயிகளின் குற்றமாகும். இந்தச் சஞ்சிகையில் இந்து மதக் கோட்பாடுகளின் பெருமையினையும் தொண்டுகளின் மகிமையையும் மனிதநேய ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தும் விடயதானங்கள் இடம் பெறுவது மிகவும் வரவேற்கத்தக்கது'' என்று சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் முன்னரேயே நெறிப்படுத்தியுள்ளார்.

குறிஞ்சிக்குமரன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. நித்தியானந்தக் குருக்கள் தமது ஆசியுரையிலே, ஆன்மீகத் துறையில் மாற்றங்களையும் ஈடுபடுத்தித் தம்மை அடியொற்றி வருவோரும் பயன்பெறும் வண்ணம் இம்மலரை வெளியிடுகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார். பெருந்தலைவர் பேராசிரியர் இ. சிவகணேசன் தமது வாழ்த்திலே,

மாணவர் மத்தியில் சமய அறிவுகளை வளர்க்கவும் எழுதும் திறனை ஊக்குவிக்கவும் (கட்டுரைகள்) வழிகோலுகின்றன என்கிறார்.

பெரும் பொருளாளர் கலாநிதி செ. திருச்செல்வம், ''பல்கலைக்கழக இந்து மாணவர்கள் குறிஞ்சிக் குமரனின் நித்திய நைமித்திய வழிபாட்டிலும் திருவிழாக்கள் கூட்டுப் பிரார்த்தனைகளிலும் காட்டிவரும் ஆர்வம் பெருமைக் குரியது'' என்று குறிப்பிட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இந்துமத தர்மத்தின் விசாலமான தொரு செயற்பாடாகவே பொருளாதார நெருக்கடிக்குள்ளான இந்து மாணவர் களுக்கான புலமைப் பரிசில் திட்டம் அமைகிறது: மலரிலே இது குறித்திட பெற்றுள்ள செய்தி குளிர்மை தருகிறது.

**சுவாமி விவேகானந்தரது கம்பீரமான தியான நிலைத் திருவுருவம் மலரில் இடம்பெற்றிருப்பது மனவடக்கம் நல்கவல்லது.**

இம்மலர் வெளியீட்டின் போது சுவாமி ஷியாம்ஷர், கல்வி நிறுவனத்தின் கல்வி ஆலோசணை நிபுணர் கு. சோமசுந்தரம், பேராசிரியர் சி. தில்லை நாதன், பொறியியற் பீடத்தின் பேராசிரியர், விரிவுரையாளர்கள், பல்கலைக் கழக மாணவ மாணவியர் சமூகமாக இருந்தனர். எம்மை மலர் விமர்சனம் நிகழ்த்தவென அழைத்த பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவ சங்கத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

மலரின் விலை ரூபா 100/= மட்டுமே.

***(தொடர்பு: செல்வன் பா.சஞ்சயன்***
***தலைவர், இந்துமாணவர் சங்கம், பல்கலைக்கழகம் பேராதனை, (1996))***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## இந்திய காங்கிரஸ் வளர்ச்சியில் சில போக்குகள்

ஆசியாவைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், பலதரப்பட்ட சர்ச்சை நிறைந்த, விரும்பத்தக்க தன்மையுடைய நேருவைத் தெரிந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியமாகும்.

ஜவகர்லால் நேருதான் இந்தியாவின் அரசியல். 1952 இல் காங்கிரஸ் பிரமுகர் மேல்வருமாறு குறிப்பிட்டார். எங்கள் சர்க்கார் பலம் பொருந்தியது. காரணம் நேரு இருப்பதே. சோஷலிஸ்ட் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரும் இந்திய அரசியலிலுள்ள ஒரே மனிதர் நேருதான் என்பதில் சந்தேகமில்லை என்று அன்றைய காலத்தில் பட்டவர்த்தனமாக ஒப்புக்கொண்டார்.

நேரு எங்கு போனாலும், பல மைல்களிலிருந்து பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும் தொழிலாளர்களும் அவரைப் பார்க்க வருகிறார்கள். அவர் எவ்வளவு நேரம் பேசினாலும் மௌனமாக உட்கார்ந்து கொண்டு கேட்கிறார்கள். கடைசிக் கோடியில் அமர்ந்திருப்பவர்களுக்கு அவர் பேசுவதைக் கேட்காவிடிலும், அவர் பேசும் பாஷை புரியாவிட்டாலும் கூட தூரத்தில் மேடை மீது நின்று கொண்டு பேசும் அந்த கம்பீரமான உருவத்தின் அங்க அசைவுகளைப் பார்த்தே மக்கள் திருப்தியடைந்து விடுகிறார்கள். நேரு வாழ்ந்த காலகட்டத்தில் இந்தியாவின் சுதந்திரத்திற்காக நடந்த ஐம்பது வருடப் போராட்டத்தில் இருமுக்கிய சக்திகள் இருந்தன. ஒன்று கல்வி பயின்று, ஆட்சியில் பங்கு கொண்டிருந்த சிறுபான்மையினர்; மற்றது கல்வி யறிவில்லாத விவசாயிகள், தொழிலாளர்கள். இவ்விரு பிரிவினருமே நேருவைப் போற்றிக் கொண்டாடுவார்கள். இவை இரண்டும் தான் அவரது செல்வாக்கின் இரகசியம்.

இந்தியாவில் படித்தவர் எனப்படுவோர் அநேகமாக ஆங்கிலேய, பிரிட்டிஷ் முறையில் கல்வி பயின்றவர்கள். மேல்நாட்டு தாராளக் கொள்கைகளில் ஊறியவர்கள். நேருவினுடைய அனுபவமும் அவர்களுடையதைப் போன்றதாகவே தான் இருந்தது. சற்று உயர்ந்த அளவில் இருந்திருக்கலாம் என்பதுதான் இதிலுள்ள வித்தியாசம். இதனால் நேரு இந்தப் படித்த வகுப்பினர் ஆதரவைச் சுலபமாகப் பெற முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருவும் இங்கிலாந்திலேயே மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு பள்ளிக் கூடத்தில் படித்தவர். பிரித்தானிய யுத்தகாலப் பிரதமராகவிருந்த சேர் வின்ஸ்டன் சர்ச்சில் படித்த ஹாரோவிலும், பின்னர் கேம்பிரிஜ் இலும் கல்வி பயின்றவர் நேரு. அந்தக் காலத்தில் படித்த இந்தியர்களும் இங்கிலாந்து, இந்தியா, கிழக்கு, மேற்கு என்ற முரண்பாடுகள் சகஜமாக இருந்தன. நேருவும் இதற்கு விதிவிலக்கல்ல. இந்தியர்களின் உள்ளங்களில் தோன்றியிருந்த முரண்பாடுகளை நன்கு புரிந்து கொண்ட நேரு மேல்வருமாறு எழுதி யிருந்தார்:

> நான் கிழக்கும் மேற்கும் சேர்ந்த ஒரு விசித்திரக் கலப்பாகி விட்டேன். எந்த இடத்திற்கும் நான் பொருத்தமாயில்லை. ஒன்றிலும் ஒட்டிக் கொள்ள முடியவில்லை. வாழ்க்கையைப் பற்றி என்னுடைய திருஷ்டி கீழ்நாட்டுப் பாணியில் இல்லை; மேல் நாட்டுப் பாணியிலேயே இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் இந்தியா என்னை விட்டு விடவுமில்லை. தன்னுடைய குழந்தைகளில் யாரைத்தான் அது விடுகிறது? மேல்நாடுகளில் நான் ஓர் அந்நியன். நான் அவர்களில் ஒருவனாக முடியாது. ஆனால் என் சொந்த நாட்டிலேயே கூட சில சமயங்களில் ஒரு பிரஷ்டனைப் போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்படு கிறது. தூக்கத்தில் நேரு பேசினால் ஆங்கிலத்தில்தான் தான் பேசு வாரென்று காந்தி கூறியிருக்கிறார்.

நீண்ட சுதந்திரப் போராட்டம் இந்தியாவில் ஆரம்பமான போது நேருவும் அதில் குதித்தார். அவர் காட்டிய ஆர்வமும் தீரமும் தம் சொந்த நாட்டிலேயே அந்நியர்கள் போலிருந்து படித்த இந்தியர்கள் மீண்டும் இந்தியாவையும் அதன் போராட்டங்களையும் சேர்ந்தவர்களாக்குவதற்கு வழிகாட்டின.

இவ்வாறாகப் படித்தவர்களில் இளம் இந்தியத் தலைமுறையினர் நேருவைத் தெய்வமாகக் கொண்டாடிப் பழகிவிட்டனர். அவருடைய நடவடிக்கைகளை பயபக்தியுடன் கண்காணித்து வந்தார்கள். அவர் எழுதிய பல புத்தகங்களையும் ஒரு விதமான போதையுடன் படித்தார்கள்.

ஜவஹர்லால் தான் என்னுடைய அரசியல் வாரிசு என்று காந்தி அடிக்கடிச் சொல்லியிருக்கிறார்.

மிகச் செல்வந்தர்களான ஓர் உயர்தரப் பிராமண குடும்பத்தில் பிறந்தவர் நேரு. ஆனால் அந்த வாழ்க்கையைத் துறந்து தன்னுடைய நாட்டின் சுதந்திரப் போராட்டத்தில் இறங்கினார். தன்னுடைய மாளிகையை காங்கிரஸுக்குத் தானம் செய்தார்; சிறை சென்றார். 1920 க்கும் 1945 க்குமிடையே அவர் வாழ்நாட்களில் பாதிக்கு மேல் சிறையிலேயே கழிந்தது. அவர் பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட உணர்ச்சிகளும் கொண்டவர். ஆசிய அரங்கத்திலுள்ள தலைவர்களில் முக்கியமானவரும், வசீகரமான வராகவும் இருந்தவர் நேரு. பல வழிகளில் புதிராய் இருப்பவரும் அவர் தான்.

நேரு மிக அதிகமாக நேசிப்பது கேஷ்(காஷ்)மீரைத்தான். கழுத்து வரையில் பொத்தான் போட்ட ஒரு நீண்ட இந்திய முறை மேலங்கியை அணிந்து கொண்டிருப்பார் நேரு. சட்டையில் நறுமணம் கமழும் ஒரு ரோஜாப்பு சொருகப்பட்டிருக்கும். தாம் தினமும் 40 சிகரெட் பிடிப்பதாக அவரே ஒரு முறை கூறியிருக்கிறார். இதைக் குறைப்பதற்கு சிகரெட்டைக் குழாய்க்குள் பொருத்துகையில் அதைப் பாதியாக வெட்டிவிடுவது வழக்க மாயிருந்தது.

எதையும் ஆராய்ந்து பாராமல் ஒப்புக்கொண்டு விடுவதில்லை என்ற அவருடைய மனோபாவம், உண்மை என்ற பல ரூபங்களையுடையது என்ற ஹிந்து மதத் தத்தவத்தில் ஆழமாக வேரூன்றியது. ஆனால் மற்றவர்களின் நம்பிக்கைகளுக்கும் மதிப்புக் கொடுப்பதென்ற மேல்நாட்டு விபரங்களில் ஜனநாயகக் கொள்கைகளும் அவரிடம் இடம்பெற்றிருந்தன. அவருடைய ஆராய்ந்தறியும் மனப்பான்மை ஜனநாயகத்திலுள்ள அவருடைய ஆழ்ந்த நிலையான நம்பிக்கைகளுக்குக் குறுக்கே நின்றதில்லை.

ஒரு பரம்பரைப் பிரபுவிற்குள்ள பல தன்மைகளும் நேருவிடம் இல்லாம லில்லை. தன்னைப் பற்றியே குறை கூறி அனாமதேயமான கட்டுரை ஒன்றைக் கூட ஒரு சமயம் அவர் எழுதியிருந்தார். ஆனால் அவருடைய உயர் மனப் பான்மையை மிகைப்படுத்தி விடுவதற்கில்லை. தனக்கெதிரில் யார் உட்கார்ந்து கொண்டு பேசினாலும் அவர் சொல்வதை மரியாதையுடனேயே கேட்கிறார். ஒருவரை நம்பலாம் என்று நேரு ஒரு தரம் முடிவு செய்துவிட்டால் அவர் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொண்டு விடத் தயாராயிருப்பார் போல் தோன்றுகிறது.

நேருவின் மிகப்பெரிய சாதனைகளில் ஒன்று மதப்பற்றற்ற அரசை ஸ்தாபித்ததுதான். பாகிஸ்தானுக்குப் போகாமல் இந்தியாவிலேயே தங்கிவிட்ட 45 இலட்சம் முஸ்லிம்கள் அமைதியாக வாழ்க்கை நடத்தவும் தமக்கிஷ்டமான மதக் கோட்பாடுகளை அனுஷ்டிக்கவும் உரிமையுண்டு என்பதை மெய்ப் பித்துக் காட்டியவர் நேரு.

மத சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவதோடு மட்டும் நேரு நிறுத்திக் கொண்டு விடவில்லை. பிரிவினைக் காலத்தில் ஏற்பட்ட கலகங்களின்போது அபாய கரமான கட்டடங்களில் சிதறிக் கலைந்துவிடுவதுமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்காளத்தில் உணர்ச்சிகள் ஓங்கி பாகிஸ்தான் மீது யுத்தம் தொடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் அபாயகரமகான அளவிற்கு அதிகமாக்கிக் கொண்டிருந்தபோது நேரு தன்னுடைய நண்பர்கள், சகபாடிகளின் வேண்டு கோள்களையும் எச்சரிக்கைகளையும் பொருட்படுத்தாமல் கல்கத்தாவின் அபாயப் பிரதேசங்களுக்குச் சென்றார்.

ஆட்சி மன்றத்தில் தனது காலத்தில் ஒரு கம்யூனிஸ்ட் அங்கத்தவரின் தாக்குதலுக்குப் பதிலளிப்பதற்காகப் பல சமயங்களில் நேருவே எழுந்திருப் பார். அவர் பாராளுமன்றத் தந்திரங்களில் கைதேர்ந்தவர்.

மாக்ஸீய நூல்களைத் தமது இளமைப் பருவத்திலேயே வாசித்துக் கிரகித்துக் கொண்டவர் நேரு. ஆங்கிலேயரை எதிர்த்து நடத்திய நீண்ட போராட்டத்தில், ஏகாதிபத்தியம் பற்றிய மாக்ஸின் விமர்சனம் உபயோகமான ஒரு கருவியாயிருந்தது.

**வளர்ச்சியும் தொடர்ச்சியும்**

இன்றைய இந்தியாவின் நிலைமையும் ஒரு ஸ்திரத்தன்மையுடைய அரசை ஸ்தாபிப்பதிலேயே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேருவின் அரசியல் பண்ணையில் ஊறித் திளைத் தவர். மாபெரும் தலைவர் ஒருவருக்கு இருக்க வேண்டிய விசேஷ குணநலன் களோடு இந்திய மக்களது வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் ஏற்ப மாற்றீடு கண்டு ஆட்சி செலுத்த வல்லவர் அவர். அவரது நவீன சாக்களுடனான தலைமையில் அரசிலும் இந்திய ஜனநாயகம் பேணப்படும் என்பதுதான் அரசியல் அவதானிகளின் நம்பிக்கை. எது எவ்வாறாயினும் இந்திரா காந்தியின் கடந்த கால வாழ்வின் படிப்பினைகளும் மறக்க முடியாத அனு பவங்களும் மனத் தெம்பும் அவரை ஒரு மெருகுபடுத்திய அரசியல்வாதி யாக மாற்றிவிட்டிருக்கலாம் என்ற உள்ளார்ந்தமான திருத்தல் வாதக் கருத்துக்கு அழுத்தம் கொடுப்பது பொருத்தமானதாகவே அமையும். குளம்பிய குட்டை யாகக் காணப்படும் இந்திய அரசியலில் தனது கட்சியில் யார் யாரையெல்லாம் விலக்கி விடவேண்டும் என்று திருமதி இந்திராகாந்தி நினைத்திருந்தாரோ அவர்களையெல்லாம் தனது வாயாலேயே வெளியேற்றாமல் அவர்களே தற்றுணிபின் தவறுதல் உணர்ந்து நீங்கினர்.

***(ஈழநாடு கட்டுரை)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## தமிழர்களின் கல்வித்தரம்

### தமிழ்க் கல்விச் சிந்தனையில் நடைமுறையில் மாறுதல்களின்றேல் தமிழர்களின் கல்வித்தரம் சீரழிந்து பாழ்படும்

இக்கட்டுரையைச் சிந்தித்து எழுதுவதற்கு ஆரம்பித்த வேளை வீரகேசரி நாளிதழிலே தமிழறிஞரும் சிறந்த சொற்பொழிவாளரும் ஆசிரியருமான சிந்தனையாளர் தமிழருவி த. சிவகுமாரன் அவர்கள் ஆற்றிய 'தமிழ்க் கல்வி' பற்றிய அருமைமிகு கருத்துகளடங்கிய சொற்பொழிவைச் செய்தியாகப் படிக்க முடிந்தது. வவுனியாவில் இடம்பெற்ற ஒளவையார் விழாவிலே பேசிய பேச்சின் சாராம்சம் வருமாறு:

> எடுத்ததற்கெல்லாம் மேலைத்தேயக் கல்வியியலாளர்களை, ரூசோ, சிக்மன், பிறொய்ட் ஆகியவர்களின் பெயர்களைக் கூறத் தயங்காத எமது கல்வியலாளர்கள், மறந்துங்கூட எமது பண்டைய தமிழ்ப் புலவர்களின் கல்விச் சிந்தனைகளை எண்ணிப் பார்ப்பதும் கிடை யாது; கற்பிப்பதுங் கிடையாது. ஒளவையாரின் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் போன்றவை சூத்திர வடிவில் அமைந்தவை. அவை ஏன், எதற்கு? யாருக்கு? என்ற கேள்விகளாகிய திறப்புகளைக் கொண்டு திறந்து பொருள் காண வேண்டிய அரிய பொக்கிஷப் புதையல் களாகும்.'இளமையிற் கல்', 'கேள்வி முயல்', 'சொல் சோர்வு படும்', 'நூல் பல கல்', 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்', 'கைப் பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி', 'ஓதாதவர்க்கில்லை உணர்வோடு ஒழுக்கம்', 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' முதலான ஒளவையாரின் வாக்குகள் இன்றைய ஒழுக்கக் கல்வி, தொழிற் கல்வி, தொழில்நுட்பக் கல்வி என்பனவற்றிற்கு நுட்பமாகப் பொருந்தக் கூடியனவாக உள்ளன. இவ்வடிகளை விரித்து பொருள் கண்டு கற்பிக்க வேண்டும். அவ்வாறே வள்ளுவரின் 'கற்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> கசடு அற' என்னும் குறளடி, மாணவர்கள் கற்கும்போது ஏற்படுகின்ற ஐயம், திரிபு என்பன ஏற்படாதவாறு கற்க வேண்டும், கற்பிக்க வேண்டும் என்ற இன்றைய கல்வி நோக்கத்தையே எடுத்துக் கூறு கின்றது. கம்பனின் நாட்டுப்படலப் பாடலில் 'பெருந் தடங்கண் பிறை நுதலார்க்கு எலாம் பொருந்திச் செல்வமும் கல்வியும் பூத்தலால்' என்ற தன் அடியினூடாக பெண் கல்வி பற்றி அன்றே வற்புறுத்தி யமையை எண்ணித் தமிழன் இறும்பூதெய்த முடிகிறது. ஆகவே எமது தமிழ்ப் புலவர்களின் பாடல்களில் அமைந்து மறைபொரு ளாகவும், வெளிப்படையாகவும் காணப்படுகின்ற கல்விச் சிந்தனை களை வெளிக்கொணர்ந்து கற்பித்துத் தமிழ் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தமிழ்ப் புலவர்கள் மீதும், தமிழ்மொழியின் மீதும் பற்றையும் மதிப்பையும் ஏற்படுத்த வேண்டியது தமிழ்க் கல்வி யாளர்கள் காலத்தால் செய்ய வேண்டிய கடமையாகும்.'' (வீரகேசரி, 17.08.2012, ப. 14.)

பண்பாடற்ற, மலட்டுக் கல்வியை விதைத்தும், தூக்கியும் பிடித்து, அடிமை யுணர்வு தலைக்கேற, எவ்வித உயர் பெறுமானங்களுமற்ற மேலைத்தேயச் சிந்தனையை முற்றிலும் விழுங்கிய நிலையிலேயே கல்விச் சிந்தனையாளர் போக்கு உள்ளது என்பது முற்றிலும் முக்காலமும் உண்மை. ஆயினும் அவர்களது வித்துவப் புலமையும், செருக்கும், பாண்டித்தியமும், சமூக நலநாட்டமற்ற 'அறிவுடைமை' என்ற தனிமையும் தமிழ்மொழியின் இனிமையை நிராகரித்த போக்கும், நவீனமுமே தமிழர்க்கு விமோசம் தரும் என்ற கிறிஸ்தவ மொழிப் பற்றும் பேரழிவையும், தமிழ்க் கல்வியைப் பாழ்படுத்தும் கொள்கைகளாக விளங்கி வருகின்றன. நாவலர் பெருமானும், சி. வை. தாமோதரம்பிள்ளையும், கரோல் விஸ்வநாதபிள்ளையும், சுவாமி விபுலாநந்தரும், பேராசிரியர் வண. தனிநாயக அடிகளாரும், பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தனும், பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளையும், கமில் சொலபிலும், பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனாரும், பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன், டாக்டர் உ.வே. சாமிநாதையர், வாகீசகலாநிதி கி. வா. ஜகந்நாதன், காந்தியடிகள், சுவாமி விவேகானந்தர் போன்றோர் நல்ல கல்விச் சிந்தனையாளர்களாவர். இவர்கள் என்றும் நிலைபேறான மதத்தை யும், மொழியையும் அடைவு வைத்துவிட்டு எழுதியோரல்லர்; பேசியோ ரல்லர். தலைசிறந்த தலைமையான கல்விமான்கள். அவர்களது தடத்தையும், தகைமையையும் விளங்குவதற்கும் பக்குவம் மிக வேண்டும். தனித் தகைமை, நுண்மான் நுழைபுலம் இருக்க வேண்டும். 'வினை' எங்கே வருகிறது என்றால், உண்மை உறங்கி, பொய் மேலெழும்போது - கீழைத்தேயத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைமிகு சிந்தனைகள் தாழ்வுற்று - மேலைத்தேயச் சிலுசிலுப்புகள் மேலெழுந்து கோலோச்சும்போது தடம் பிறழ்கிறது; பொருளற்ற - உண்மை யற்ற- செழுமையற்ற - மலட்டுச் சிந்தனைகள் தான் மதிப்பானவை; கற்க வேண்டியவை; கற்பிக்கப்பட வேண்டியவை என்று எண்ணி விடுகின்றனர் உயர் கல்விமான்கள். இதனால் வந்த அழிவை நிவர்த்தி பண்ண இன்னும் எத்தனையோ யுகங்கள் கடும் முயற்சியெடுத்துப் பிரயத்தனம் செய்ய வேண்டும்; தமிழ்க் கல்வியைப் பிறரெவருமே அழித்து ஒழிக்க வேண்டிய தில்லை.

இனி, நாம் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கை தான் என்ன? நெறி பிறழாக் கல்வி, விழுமிய சிந்தனைக் கல்வி, பண்பாட்டுக்கல்வி, ஒழுக்கக் கல்வி, சீர்திருத்தக் கல்வி, இலக்கியக் கல்வி, மதவிழுமியக் கல்வி, மொழி வழிக்கல்வி, சுய சிந்தனைக் கல்வி, கீழைத்தேயக் கல்வி தாய்மொழிக் கல்வி, தமிழ்க் கல்வி மரபு பேணும் கொள்கைவழிக் கல்வி என்ற இவை பற்றிச் சிந்திக்க வேண்டிய அவசிய தேவை உண்டாகிறதல்லவா? இது வேண்டுமா? வேண்டாமா? நாம் தான் தீர்மானித்து முடிவெடுக்க வேண்டும். நிலைபேறான கல்வியைக் கட்டியெழுப்ப வேண்டாமா? சிந்தித்துச் செயற்பட வேண்டாமா? சீரழிவுகளைத் திருத்துவது யார்? சிக்கல் நிறைந்த இவற்றைத் தீர்க்கவல்ல வர்கள் தான்யார்? என்பதே நம் முன்னுள்ள வினா!

கல்வி உள்ளச் செம்மையையும் உணர்வுச் செம்மையையும் நல்கவல்ல தாயமைய வேண்டும் என்பது ஒப்ப முடிந்த முடிவு. மரபார்ந்த தடம் பிறழாத கல்விவழி வந்த மாணவ பரம்பரை இடையிலே தடம் பிறழ்ந்த - மேலைத் தேய மலட்டுக் கல்வியிலே ஈர்ப்புக் கொண்டு நிலைபேறான சிந்தனைகளைச் தூசியென வீசிவிட்டு வெறும் உலகக் கல்வியை - உலோகாயதக் கல்வியைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு உழல்கின்றனர். மொழியையும் கடன் வாங்கி விடுகின்றனர்; விபரீதம் அதிகரித்தது. அழிவே கூடியது; பயனின்றிச் சமூகம் சீரழிந்தது. நன்மை தீமை, நல்லது தீயது எதுவென்பதே கலக்கமாயிற்று. வேண்டாதவை மலையெனவும், மலைச் சிகரமெனவும் உயர்ந்தன; உண்மை யொழிந்தது.

இனி, நன்மை தருவது, நாம் கற்க வேண்டியது, நம்முன்னுள்ள பயன்தரு சிந்தனைகளை எவை என்பதனைச் சுருக்கமாகக் காண்போம். நாம் இந்து சமயத்தையே பிறப்பாற் கொண்டவர்கள். சமயம் இல்லாத சமயி இல்லை. உலக மனிதர்கள் ஒவ்வொருவருமோ ஏதோவொரு சமயச் சார்போடேயே விளங்குகின்றனர். ஆனால் கல்வியியலாளர்களும், சில புத்திஜீவிகளும் தமது நோக்கு நிலையிலே 'சமயச் சார்பற்ற நுண்நோக்கு வேண்டும்' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிந்து இடர்செய்யும் துணிச்சலால் கல்வி சீரழிக்கப்பட்டது; பாழாக்கவும் பட்டது. தத்தம் கோட்பாடுகளை ஏற்றும் கொள்கையில் பேரிடர் விளை வித்தனர். தம்மை விழுந்து கும்பிட்டு உய்ய வேண்டும் என்ற மாணவர் களுக்கு ஈர்ப்பை உண்டுபண்ணி நாசம் விளைவித்தனர். கல்வி வேறு, சமயம் வேறு, மொழி வேறு என்று உளறினர். இதன் விளைவு கலகமாகவே - மரணமாகவே முடிந்தமை வரலாறு. பெற்ற பெரும் பயன் அழிவேயாகும். மூலகாரணம் மரபை - பாரம்பரியத்தை இழுத்து விழுத்திச் சிதைத்துச் சின்னாபின்னப்படுத்தினர். தமிழ்க் கல்வி மரபு சொல்லொணாத் துயர் உற்றது. தாம் செய்வதே முற்றிலும் ஏற்புடைமையானது என்று முறுக்குற்றனர்.

இந்துக்களின் கல்விக் கொள்கையானது பண்டைக் காலம் தொட்டுச் சமயக் கல்வி மரபுடன் தொடர்புபட்டதொன்றாகவே வளர்ந்து வந்துள்ளது. சமயம் என்பது உண்மையில் 'சமையம்' என்று தான் பொருள்படும். 'சமைத்தல்' எனின் உணவினைப் பதப்படுத்தல், பக்குவம் செய்தல் என்ற பொருள்தான் ஆதிமுதல் உணர்த்தி வந்துள்ளது. அவ்வாறே 'சமயம்' என்றாலும் உன்னதத்தை உள்ளுறையும் தெய்வீகத்தைப் பக்குவப்படுத்தல், வெளிக் கொணர்தல் என்பதற்காகவே உபயோகத்தில் வந்திருக்கிறது. இவ்வாறே இந்துக்கள் தமது கல்விக் கொள்கையினை மனிதனைப் பக்குவப் படுத்துவதுடன் அவனுக்குள்ளே உறைகின்ற ஆன்மீக மேம்பாடுகளை வாழ்விலே கடைப்பிடித்து ஒழுகுவதன் அவசியத்தையும் உணர்த்துவ தாயிற்று. வேதசாத்திரங்கள் கல்வி பாடத்திட்டத்தில் சிறப்பான இடத்தை வகித்தன. வேதம் என்பது வித்தை எனப்படுவதால் பிரபஞ்ச ரகசியத்தினை அதன், ஒளிமயமான ஆற்றலை இதயங்களில் கண்டு அனுபவித்த ரிஷிகள் மனித குலத்திற்கும் அந்த வித்தையைக் கற்றுக்கொடுப்பதன் மூலம் மற்றவர் களுக்கும் தெரிந்த மொழி, மந்திரம், ஒலி, ஓசை முதலிய ஊடகங்களைப் பயன்படுத்தி ஆனந்தத்தில் மூழ்குகின்ற உள்ளார்ந்த ஆத்ம வித்தையைக் கற்பதற்குத் தூண்டுகோலானது.

இப்பிரபஞ்சத்திலே எது அமைதியை ஏற்படுத்துமோ எது குறுகிய நோக்கங்களை விளக்க உதவுமோ - எது ஒற்றுமையை வளர்த்தெடுக்க வழிவகை செய்யுமோ - அதன் மூலம் ஒருமித்து வாழவும், ஒத்திசைவுடன் வாழவும் உதவுகின்றதோ அதுவே உண்மைக் கல்வியாகும். பிரம்ம வித்தை எனவும், ஆத்ம வித்தை எனவும் அழைக்கத் தகுந்த கல்வி முறையாகும் என்பதனை மனித மேம்பாட்டுச் சிந்தனையாளர்களும், அவதார புருஷர் களும் ஆணித்தரமாக விளக்கியுள்ளனர். வேதங்கள் என்றால் ஞானம், ஒளி, ஒருவரின் இருப்பு என்றெல்லாம் அர்த்தமாகின்றது. ஒளி அல்லது வெளிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் இது இயற்கையான சூரிய, சந்திர, அக்கினியின் ஒளி அல்ல. இதய ஒளி எனப்படும். ஞானம் என்பது விஞ்ஞானம் அல்ல; இதயத்தில் ஏற்படும் மாற்றம். திருப்புமுனையே வேதத்தில் விஞ்ஞானம் எனப்படும். இருப்பு என்பது உடல், உள்ளம், புலன், பொருள், மனம் யாவையும் சுமந்தவன் என்ற சத்தியத்தின் இருப்பை உணர்வதே 'existence' என்பதன் அர்த்தமாகும் என்பதே வேதக் கல்வியின் தாற்பரியம் ஆகும்.

வேத இலக்கியங்களின் அனைத்து பிரிவுகளிலிருந்தும் பெறப்பட்ட மிகத் தொன்மையான அறிவின் சாரமே 'வித்யா' எனப்பட்ட வித் + யா என்பதில் 'வித்' என்பது ஜகஜோதியான பிரகாசம். 'யா' என்றால் இது எது? என்பதாகும். எது நமக்கு வாழ்விற்குப் பிரகாசத்தைத் தரவல்லதோ அதுவே வித்தை எனப்பட்டது. எனவே, வித்தைகளில் நான் ஆத்மவித்தையாக இருக்கிறேன் என்றார் கீதையிற் கிருஷ்ண பகவான். இதற்குப் பின்னும் 'மார்க்ஸிஸம்' பற்றி விளக்கத் தேவையுண்டா வென்று சிந்திப்பது சிந்தனைத் தெளிவைத் தரத்தக்கது. பொருளாதாரத் துறையின் ஒரு கூறு; சாதியாற் தாழ்ந்தோரது கல்வி மேம்பாட்டிற்கு உதவியது என்னும் மாயையிலே 'serious' ஆகிவிட்டது. 'மார்க்ஸிஸம்' பற்றிய நுண்ணறிவுத் தளம்பல். இதுவும் சிந்தனைக்குரியதாகிறது. மார்க்ஸிஸவாதிகள் உளவியல் - உளப்பகுப்பு வாதம் என்றெல்லாம் தமக்கும் விளங்காத, பிறருக்கும் விளங்க முடியாத சொற்களை நெட்டுருச் செய்து வருகின்றனர். வித்தை என்பதனைப் பர வித்தை, அபரவித்தை என வேதநூல்கள் இரண்டாக வகுத்தன. அபரவித்தை உலகியற் கல்வி விடயங்களைத் தழுவியதாகும். அங்கு அஸ்திர வித்தை சாஸ்திர வித்தையுடன் கலை, சமயம், தத்தவஞானம் அனைத்தும் படிக்கப் பட்டன. பரவித்தைக்கு பிரஸ்தானத் திரயம் எனப்படும் உபநிடதம், கீதை, பிரம்ம சூத்திரம் என்பன ஆணிவேராக அமைந்தன.

குருகுலங்களும் ஆரண்யங்களுமே பண்டைக் காலத்தில் பள்ளிகளாக, பாடசாலைகளாகவும், பிரபஞ்சமே பல்கலைக்கழகமாகவும், ரிஷிகள், ஞானியர் அங்கு ஆசிரியர்களாகவும், இயற்கையே அவர்களின் மெய்ஞ் ஞானக் கல்வியின் திறந்த புத்தகமாகவும் விளங்கியது. வேத சத்தியத்தை வாழ்விலே அடிப்படையாகக் கொண்டு தனது ஞானத்தினால் அவை அறத்தின் வழிகள் என அறிந்து ஒழுகுபவனே உண்மையான கல்வியாளன் என மனு நூலும் விளக்கியுள்ளது. சத்யம்வத, தர்மம்சர, மாத்துறுதேவோபவ, பித்துறு தேவோ பவ, அதிதி தேவோ பவ என்பன போன்ற உபதேசங்களில் வேதநூல்கள் குழந்தைகளிடத்துப் பெற்றோர்மீதும், சமூகத்தின் மீதும் செலுத்தி வாழக் கற்றுக் கொடுத்தன. குருகுலவாசத்தின் முடிவிலே உபநிடதங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கட்குக் குருவானவர் விடைகொடுத்து அனுப்பும் நிகழ்ச்சியில் "நாமனை வரும் இனி ஒன்றாகவே பழகுவோம். ஒன்றாகவே வாழ்வோம். அப்படிக் கலந்து, பழகித் தெரிந்து கொண்ட அறிவினைப் போற்றிக் காப்பாற்று வோம். இணைந்து பழகி, ஒருவருக்கொருவர் நட்புடன் வாழ்வோம்" என்ற அறிவுரையினை வழங்கி வாழ்த்துகின்ற பண்பினைக் காணமுடியும்.

எதைக் கற்க வேண்டும்? எதைக் கற்பிக்க வேண்டும்? என்ற தெளிவு நமக்கு வேண்டும். திருக்குறளும், உபநிடதங்களும் நாவலர் பெருமானும் இது குறித்துப் பரக்கக் கூறியிருப்பது பற்றி பிரக்ஞையற்றவர்களை 'வாழ்ந்து போதீரே' என்று வாழ்த்தும் மரபினர் யாம். உபநிடதக் கல்வியின் குறிக் கோளை - நோக்கத்தை - உயரிய லட்சியத்தைப் பின்வரும் சுலோகத்திலே கண்டு கொள்ளலாம்.

*அஸதோ மா ஸத் கமய*
*தமஸோ மா ஜோதிர் கமய*
*ம்ருத்யோர் மா அமிர்தம் கமய*

என வரும் அடிகளில்:

> இருளிலிருந்து ஒளிக்கு என்னை அழைத்துச் செல். அறியாமை யிலிருந்து அறிவிற்கு என்னை அழைத்துச் செல். மரணத்திலிருந்து அமிர்தமாகிய இறவாமைக்கு என்னை அழைத்துச் செல் என்னும் இத்தகைய உயர்ந்த கல்வியின் குறிக்கோளில் வாழ்க்கைத் தத்து வத்தையே முன்னோர் அறிவித்து வைத்தனர். உபநிடதங்களிலும் அறிவானது அபரஞானம், பரஞானம் என்ற பிரிவிலே உலகியற் கல்வியும், ஆன்மீகக் கல்வி போதனையும் இணைந்தே நடைபெற்றன. இவ்வுலக வாழ்விற்கு உலகியற் கல்வி அவசியமானது போல அவ்வுலகவாழ் விற்கு ஆன்மீகக் கல்வி அவசியமாகும் என்பதனை உபநிடதகால நிகழ்வுகள் இல்லறவாழ்வினை மேற்கொண்டு ஒழுகிய வாறே வாழ்ந்து காட்டினர்.

மனவலிமையினை ஊட்ட வல்ல கல்வியானது அறிவுதிறன், மனப்பாங்கு ஆகியவற்றினை வளர்ப்பதுடன் பண்பு, நடத்தை போன்றவற்றிலும் உயர் வான மேம்பாடுகளை உருவாக்குவதில் வெற்றி காண முடியும். அதனால் இவற்றினால் ஒருவரது சிந்தனை, சொல், செயற்பாங்கு போன்றவற்றில் மாற்றம் ஏற்படுகிறது. சமுதாய ஆளுணர்வையும், அறிவுசார் திறன்களையும் கொடுக்கவல்லதான கல்வியே தற்காலத்திலும் இன்றியமையாது வேண்டப் படுவதாகும். அதனால் கல்விக் கொள்கைக்கு அடிப்படையாக அமைவது வாழ்வியல் கோட்பாடாகும். எனவே 'வாழ்வியற் தத்துவமே கல்வித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவத்தின் அடிப்படையாகின்றது' என்பதனை ஜோன்டூயி போன்ற அமெரிக்கக் கல்வியாளர்களும், ஏற்றுக் கொண்டுள்ளனர். அந்தவகையிலே புராதன இந்துக்களின் கல்வி சிந்தனையானது தனிமனிதனது உள்ளார்ந்த பண்புகள், குணநலன்கள், ஒழுக்க நிலைகள் ஆகியவற்றினை வளர்ப்பதில் அதிக அக்கறை செலுத்தி வந்துள்ளன.

ஆன்மீகம், அரசியல், அறிவியல், துறவியல், பண்பாடு, நாகரிகம், கலாசாரம் முதலியவற்றிலே காணப்படும் மேம்பாடுகள் அனைத்தையும் தமது கல்வித்தளத்திலே புகுத்தி வைத்தனர். அதனால் சமயஞானம், தத்துவ ஞானம், கலைஞானம் போன்றவற்றிலும் அத்தகைய மேம்பாடுகளை - ஒழுக்கப் பண்புகளை - வெளிக்கொணர்வதில் அதிக அக்கறை செலுத்தப் பட்டது.

> மனிதனை மனிதனாக்காத கல்வி, மனிதனை மனிதனாக்காத மதம்; மனிதனை மனிதனாக்காத தத்துவம். இவை மனித குலத்திற்குத் தேவையற்றவை என விவேகானந்தரும், வாழ்வியலோடும் சமூகத் திற்கு நன்மை பயக்காத விடயங்களையும், கண்டனம் செய்தமை கவனத்திற்குரியது. உண்மை, சத்தியம், நீதி, அஞ்சாமை, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற மேம்பாடுகளை ஏற்று வாழ்வில் நடைமுறைப்படுத்தும்போது சமுதாயத்திலும் சிறந்த மாற்றங்களை அவை உருவாக்கும்.

புற உலக - உலகயில் அறிவை மட்டும் வளர்ப்பதனைக் கல்வியின் நோக்க மாகக் கொள்ளாது, பயன்பாடு உணர்ந்து கல்வியைப் பயன்படுத்துவதற்குக் கல்வியானது பயிற்சிக் கல்வியாக அமைய வேண்டுவது அவசியமாகும்.

> கல்வி என்பது மூளைக்குள்ளே பல விடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. வாழ்க்கைச் சவால்களைச் சமாளிக்கக்கூடிய மனிதப் பண்புகளை வளர்க்கக்கூடிய, நல்ஒழுக்கத்தை வளர்க்கக்கூடிய கருத்துகளைக் கிரகித்து, அவற்றினை வாழ்விலும், நடத்தையிலும் ஊடுருவி நிற்கச் செய்தால், ஒரு பெரிய நூல்நிலையம் முழுவதையும் மனப்பாடம் செய்வதனைவிட இப்படியானவன் அதிகம் கற்றுத் தேர்ந்தவனாகிறான்.

என்ற சுவாமி விவேகானந்தரின் அறிவுரை இந்துக் கல்விப் பாரம்பரியத் தைச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளது எனலாம்.

இந்துக்களது கல்வி பற்றிய சிந்தனைக் கருவூலங்களை திருமந்திரத்திலும் காண முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கற்றறிவாளர் கருதிய காலத்துக் கற்றறிவாளர்*
*கருத்திலோர் கண்ணுண்டு*

என்ற பாடலில் கற்றறிந்தோர் என்பார் கருத்திலே மூன்றாவது கண் எனப்படும் அறிவுக் கண்ணுடையராதல் வேண்டும் எனக் கல்வியின் குறிக்கோள் விளக்கப்பெற்றுள்ளது. இன்னுமோர் இடத்திலே "முகத்திற் கண் கொண்டு காண்கின்ற மூடர்காள் அகத்தில் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" என மீண்டும் கல்வியின் இலக்கு எது என்பதனை வலியுறுத்துவதனையும் காணலாம். அத்துடன் கற்றறிவாளர்களாக இருப்பினும் அவர்களிடத்துச் சிவஞானமாகிய அன்புநெறி இல்லாது போனால் அவர்களைக் கற்றோர் என்று கூறுதல் பொருந்தாது என்பதனைக் 'கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள், சுற்றமும் விடார் துரிதசறார் மூடர்' என சாடியுள்ளார். கல்வியும் மேம்பாடும் இணை பிரியாது பிரிப்பின்றி அமைய வேண்டும் என்பது வள்ளுவரது குறிக்கோளாக உள்ளது.

அதனால்தான் கற்ற கல்வி ஒழுக்கத்திற்குத் தக்கவாறு நெறி நின்று ஒழுகுவது கற்றவர்களது சிறப்பாகும் என்ற வள்ளுவர் கருத்தினை யாவரும் அறிவர். திருக்குறள் நீதி நூல்கள் போன்றவை கல்வியின் பயன் ஒழுக்கமும், இறைநெறி நிற்றலும் என்பதனையே வற்புறுத்துவனவாகவே உள்ளன. எனினும் புராதன கல்வித்திட்டம் பற்றி அவற்றிலே விளக்கங்களைக் காண்ப தரிதாகும்.

இந்துசமய இலக்கியங்களில் குறிப்பாக ஐந்து வகையான கல்வி மரபு சிறப்பாகப் பேணப்பட்டது என்பதனை ஸ்ரீ அரவிந்தர் அவர்கள் தனது 'இந்துக் கல்வி' பற்றிய ஆய்வுகளில் எடுத்துக் கூறியமை ஈண்டு குறிப்பிடத் தக்கது. உடற்கல்வி, பிராமணனின் கல்வி, மனக்கல்வி, சத்தியக் கல்வி, ஆன்மிகக் கல்வி என அவற்றினை விளக்குவதிலிருந்து புறப்பொருள் நாட்டக் கல்வி, அகவிழிப்புணர்வுக் கல்வி என இரு நிலைகள் பெறப்படு கின்றன. பாரத நாட்டிலே கல்வித் தத்துவமானது வாழ்க்கை நெறியாக ஆன்மிக விழிப்புணர்வை அடைதற்குரிய ஓர் மார்க்கமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. இந்துக்களது கல்வி மரபிலே அன்புநெறிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதனை,

> எல்லா உயிர்களையும் நான் என் நண்பனாகக் கருதுவேனாக. எல்லா உயிர்களும் என்னையும் தனது நண்பனாகக் கருதட்டும் என்னும் யசுர் வேதப் பாடல் அதற்கோர் சான்றாகும். இயற்கையின் புனிதத் தைப் பேண வேண்டும்; இயற்கையை நேசிக்க வேண்டும் என்ற மேம்பாட்டுச் சிந்தனையானது அதர்வவேதத்திற் சிறப்படைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததை, ''பூமி நமது தாய். நாம் பூமியின் புதல்வர்கள்; வானம் நமது தந்தை. அவை நம்மைப் புனிதமாக்கி நமக்குச் சக்தியை அருளட்டும்'' என்ற சுலோகம் இவ்வாறு விளக்கியுள்ளமை காணலாம்.

இந்துக்களின் மரபு என்பதில் 'மரபு' என்ற சொற்றொடரை விளங்கிக் கொள்வதும் அவசியமாகும். மரபு, இலக்கணம், முறைமை, தன்மை, பாரம் பரியம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்பர் நச்சினார்க்கினியர். எனவே மரபு என்பது 'தொன்று தொட்டு வரும் வழக்கு' என விளக்குவர். நச்சினார்க் கினியர் என்பாரின் கருத்திலே மரபு போலிகளைக் கடந்தது; காரணகாரிய தொடர்புடையது; மாற்றங்களை உள்வாங்கும் இயல்பு கொண்டது. பின்னதை வளப்படுத்தும் தன்மை வாய்ந்தது'' என அறிய முடிகிறது. எனவே மரபு என்பது மாற்ற முடியாத ஒன்று அல்ல என்பது புலப்படுகிறது. இதனைப் பேராசிரியர் க. கைலாசபதி, ''உண்மையான உயிர்த்துடிப்பான மரபு என்பது கடுமையான வரையறையற்றது. அது காலத்திற்குக் காலம் தன்னைத் தானே புதுப்பித்தும் தனக்கு வேண்டிய ஜீவ சக்தியினைப் பெற்றும் இயங்கிச் செல்வதேயாகும்'' எனத் தெளிவுபடுத்தியுள்ளார். 'மரபு' என்பது காலந்தோறும் மற்றவர்களை உள்வாங்கித் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தன்மை யானதாகும் என்பதனால் இந்துக்களினதும் கல்வி மரபும் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்பதற்கேற்றவாறு காலவோட்டத்தில் அணு விஞ்ஞானத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிகளையும் உள்வாங்கிச் செயலூக் கத்திற் தன்னைப் புதுப்பித்து வளர்ந்து செல்லும் தகைமை கொண்டு விளங்குவது புலனாகும்.

இந்துக்களது கல்வித் திட்டத்தில் இதற்கமைவாகவே என்றுமே கவனத் திற் கொள்ள வேண்டிய ஒழுக்க மேம்பாடுகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. பெற்றோர், பெரியோர்களை மதித்து ஒழுகுதல், சுத்தம், ஆரோக்கியமான உடல் நலம் பேணுவது, மனதையும் உடலையும் அடக்கியாளும் வல்லமை பெறுவது, உயர்ந்த பண்புகளையும் பழக்கங்களையும் கற்றுக் கொள்வது, ஆன்மிக வழிப்பட்ட கல்வியுடன் இணைத்துக் கொண்டு எண்ணம், சொல், செயல் முதலியவற்றிலே சமநிலை பேணும் தன்மையினை வளர்த்துக் கொள்வது போன்ற விழுமியங்களைப் பின்பற்றி ஒழுகுவது, அன்றைய கல்வி முறையின் அத்திவாரமாக இருந்தது. ஒழுக்க மேம்பாடுகளைக் கவனத்திற் கொள்வதன் அவசியமும் கல்விக் கொள்கையில் விளக்கப்பட்டது. உலகின் உயர்வான இலட்சியங்களை அமைப்பதற்கும், சிறந்த குடிமக்களை உருவாக்குவதற்கும், மாணவர்களின் தனி ஆளுமை விருத்தி, திறமைகளை வளர்ப்பதற்கும் அன்று பாடப் பகுதிகளுடன் இத்தகைய ஒழுக்க மேம்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணங்களுடனும் இயற்கை அணுகுமுறைகளுடனும், சிறு சிறு கதைகளூடா கவும், ஆன்மிக விழுமியங்கள் இணைக்கப்பட்டிருந்தமையை உபநிடத கால இதிகாசபுராணகால மரபுகள் எடுத்துக்காட்டியுள்ளன. உபநிடதங்களில் வரும் ஆலம்பழமும், ஆலமரமும், உப்புக் கல்லும் தண்ணீரும், பசு வளர்ப்பும் அன்பு நெறியும் இயற்கை வளமும் மாணவர் பணிகளும் என்றிவ்வாறு குருசீட சம்பாஷணைகளில் வரும் பரிசோதனை முறைகளும் விடைக்கொத்தும் அக்கால மாணவர்களைத் தன்னலமற்ற தன்னம்பிக்கையுள்ள சமுதாய நலம் பேணும் சிறந்த ஆத்மஞானியராக, இல்லற யோகியராக உருவாக்கித் தந்துள்ளது. இவற்றிற்கு ஜனகமகாராஜாவும், நாரதரும், யக்ஞவல்லியர் - கார்க்கியும், உத்தாயகர் - சுவேத கேதுவும், சத்தியகாமன் கௌதம மகரிஷியும் மிகச் சிறந்த ஆசிரிய மாணவ உறவுப் பாலங்களாக விளங்கியமை நல்ல தொரு எடுத்துக்காட்டாகும். இச்சிந்தனைகளைக் குறித்து, 'இந்துக் கல்வி மரபும் ஒழுக்க மேம்பாடும்' என்னும் அருமைமிகு கட்டுரையொன்றிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர், கலாநிதி கலைவாணி இராமநாதன் எழுதியுள்ள பயன்தரு கருத்துகள் இவ்விடத்திலே மேற்கோளாகவே எடுத்தாளப்படுகிறது.

> தற்காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி மிகவும் அபிவிருத்தி யடைந்துள்ளது. இதன் பயனாக மக்களின் வாழ்க்கைத் தரம், பொருளா தார ஆடம்பரங்கள் என்பவை செழித்து வளர்ந்துள்ளன. ஆனால், மக்கள் வாழ்விலோ அமைதி, மகிழ்ச்சி, சமாதானம் என்பன காணப்படவில்லை. மனித வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றம் உலகியல் தேவைகளை நிறைவுசெய்வது ஆன்மிகத் தேவைகளை வளர்த்தெடுப்பதிலும் ஆகிய இரண்டிலும் சமவளர்ச்சி ஏற்படச் செய்தல் ஆகும். மனிதனிடத்து மறைந்து கிடக்கும் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவது சமயம். மனிதரிடத்து ஆழ்ந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வியாகும் என்றார் சுவாமி விவேகானந்தர். விஞ்ஞான அறிவும் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியும் நிச்சயமாகத் தேவைப்படுபவை என்பதில் மாறு பாடு கிடையாது. ஆனால் இவற்றுடன் ஆன்மிகமும் இணையும் போது தான் இவை ஆக்கத்திற்குப் பயன்படுவதுடன் அழிவிற்குத் துணை போகாமலும் இருக்கும்.

பேராசிரியர், கலாநிதி கலைவாணி இராமநாதன் மேலும் எழுதுவதாவது,

> உலகியற் கல்வியும், ஆன்மிகக் கல்வியும் இணையும்போது வாழ் விலே எதனையும் இலகுவாக சாதிக்கும் தன்னம்பிக்கை, தற்றுணிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> வளர்கிறது. கால்பந்து விளையாட்டு மைதானத்திலே இரண்டு பக்கமும் இரண்டு கம்பங்கள் நட்டிருக்கும். பந்து கம்பங்களுக்கு இடையே போனால்தான் கோல் கிடைக்கிறது. அவ்வாறே வாழ்க்கை என்ற விளையாட்டிலும் உலகியற் கல்வி, ஆன்மிகக் கல்வியும் இரு பக்கத்தையும் குறிக்கும். இலக்குகளாகவும் (கோல்)இந்த இரண்டிற்கு மிடையே தான் வாழ்க்கை இலட்சியம் என்ற பந்து அடிக்கப்பட வேண்டும். பந்திலே காற்று உள்ளவரை அது நன்கு உதைபடும். காற்று என்பது அகங்காரம். காற்றுப் போன பந்து கையால் எடுக்கப் படுகிறது. பின் அடிபடுவதில்லை. அது போல் வாழ்க்கை விளை யாட்டிலே அகங்காரம் இருக்கும் வரை துயரங்களினாலே அடிபட நேரிடும். அதனைச் சவாலாக்கி வெற்றி காண்பதற்கு ஆன்மிகக் கல்வியால் மனதிலே அன்பினை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதனைச் சத்தியசாயி மேம்பாட்டுக் கல்வியில் பகவான் அழகுற விளக்கியுள்ளார்.

என்கிறார் பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன்.

நவீனகாலக் கல்வி முறையில் உலகியல்விடயங்களுக்குத் தான் அதிக அழுத்தம் கொடுக்கப்படுகிறது. ''அறிவினை மூலதனமாகக் கொண்ட சமுதாயம் (Knowledge based society) தான் இன்றைய தேவையெனக் கல்வி யாளர்கள் வித்தோதுகின்றனர். மனிதனுக்குக் கல்வி முதுகெலும்பு போன்றது. கல்வியில்லாமல் ஒருவன் வாழ்வில் நிமிர்ந்து நிற்பது கடினமே. கல்வி என்பது அஞ்ஞானத்தை அழிக்க வேண்டும். அவிவேகத்தை விலக்க வேண்டும். இன்று தரப்படும் கல்வியினால் மனிதர்கள் செல்வத்தை, வசதி களை, புகழை, தற்பெருமையைச் சம்பாதிக்கிறார்கள். உண்மையான ஆத்ம வித்தையை ஆத்மிக செல்வத்தை நாடுவதில்லை; நயப்பதுமில்லை. ''வித்தை ததாதி வினயம்; வினயம் ததாதி வித்தை'' என்பது ஒரு முதுமொழி. கல்வி ஒருவருக்குப் பணிவைத் தர வேண்டும். பணிவு ஒருவருக்குப் படிப்பினைத் தர வேண்டும். இன்றைய மாணவர்கள் வித்தியார்த்திகளாக இல்லாமல் விஷயார்த்திகளாகப் புலன்களுக்கு மகிழ்வு தரும் காரியங்களில் ஈடுபடு கிறார்கள். வித்தை முக்கியம் எனக் கருதுபவர்கள் மிகக் குறைவு.

இன்று கோடிக்கணக்கானவர்கள் கல்வியாளர்களாகப் புலமைத்துவ நிபுணர்களாக உள்ளனர். ஆனால் நமது கல்வி புத்தக அறிவோடு மட்டும் நின்றுவிடக் கூடாது என்பதில் இந்துக் கல்வியாளர்கள் அதீத அக்கறை செலுத்தினர். பால கங்காதர திலகர், ரவீந்திரநாத் தாகூர், தயானந்த சரஸ்வதி, ராஜாராம் மோகன்ராய் போன்ற மேதைகள் பலர் படித்துப்பட்டம் பெற்றிருந் தனர். இவர்களது பெயர்கள் எல்லாம் புத்தகங்களில் தான் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் படிப்பேயில்லாத ராமகிருஷ்ணர், ரமணர், புத்த பகவான் போன்றோர் மனித மனங்களில் எல்லாம் பிரதிஷ்டை பண்ணப்பட்டிருக்கின்றனர். காரணம் அவர்கள் ஆன்மிகக் கல்வியில் சிறந்து விளங்கியதுடன், உலக மக்களின் துயரங்களையும் தாமே ஏற்று மக்களின் தேவைகளைப் பூர்த்தி பண்ணுமாறு சேவைகளை விரிவுபடுத்தி அவர்களது வாழ்விலே அமைதியை, மகிழ்வை ஏற்படுத்தியவர்கள். எனவே எந்த வகைக் கல்வியாக இருப்பினும் உலகிய லான, பௌதிகமான, ஆன்மிகமானவை என்னும் மூவகை ஞானமும் அவசியமாகும். இவற்றின் துணையின்றிப் பெறும் கல்வியானது பயன்படாது போவதால் கற்றதனால் ஆய பயன் என் கொல்? என்பதனை முறைப்படி உணர்வது அவசியமாகும். அன்பெனும் சேவை என்னும் கலாசாரமே கல்வியின் ஆணிவேராக விளங்குமானால் நாளைய சமூகம் சாந்தி, சமாதானம், அன்பு, ஆன்மிகம் இவற்றிலே நிலைபெற்றிருத்தல் நிச்சயமாகும்.

பேராசிரியை கலாநிதி கலைவாணி இராமநாதன் கூறும் 'உண்மையான வாழ்க்கைக் கல்வி' எது என்டிதனை வலியுறுத்தி முடிப்பாம். அவர் எழுதுகிறார்:

> சைவசித்தாந்தமும் மூவகை அறிவினையும் பசு ஞானம், பாச ஞானம், பதி ஞானம் என மூவகையாக விளக்கி அன்பெனும் சிவ தத்துவத்தை இவ்வாறே நிலைபெறச் செய்துள்ளது. எனவே மனித குலம் முழுவ தையும் ஒன்றாக நேசித்து அனேகத்துவத்திலும், ஏகத்துவத்தைக் காணும் வளர்ச்சியுடன் இசைவாக்கம் பெற்றப் பயனடைவதுதான் உண்மையான வாழ்க்கைக் கல்வியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

## விழுமியக் கல்வி பற்றிய கூர்த்த சிந்தனைகள்

''மனிதன் எந்த அளவு அறிவினைப் பெருக்குகிறானோ அந்த அளவு, தூய அறநெஞ்சத்தை வளர்த்துக் கொள்ளவில்லை எனில் அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்தில் போய் முடியும்'' என்கிறார் தத்துவஞானி பேட்ரண்ட றஸல். இக்கூற்றில் உண்மை இன்று தெளிவாகத் தெரிகிறது.

'கல்வியே கருந்தனம்' என்று ஆன்றோர் கூறி வைத்த 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்றார் வள்ளுவர். கல்வியின் நோக்கம் சான்றோனை உருவாக்குதல் என்று நம்முன்னோர் கொண்டனர். கல்வி, கேள்வி ஒழுக்கங் களில் சிறந்தவனாக விளங்குபவனே சான்றோன். அறிவோடு, அறம் பரப்புபவன் சான்றோன். கல்வியினால் அடையப்பெற்ற அறம், பொருள், இன்பம் ஆகிய வாழ்க்கைப் பயன்களைப் பிறருடன் பகிர்ந்து துய்த்து பல்லுயிர் ஓம்பி வாழ்பவன் சான்றோன். கல்வியினால் எழுகின்ற அன்பு, தீமை செய்வதற்கு நாணுதல், ஒப்புரவு, கண்ணோட்டம் வாய்மை என்னும் ஐந்து சால்புகளையும் கொண்டு வாழ்க்கையில் ஒழுகி வருபவன் சான்றோன். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் குணப்பண்பு நலம் கொண்டவர் சான்றோர். 'உலகை ஒன்றாகக் காண்பதே கல்வி' எனக் கல்விக்கு வரை விலக்கணம் வழங்கியவர் ஔவையார். அந்தவகையில் கல்விப் பயனாக வடிவெடுத்த சான்றோன் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்னும் மகுட வாசகத்தின் பொருளை நடைமுறையில் வாழ்ந்து காட்டுவதன் மூலமாக உணர்த்தி உலகக் குடிமகனாகத் திகழ்பவன்.

'குணநலம் சான்றோர் நலமே' என்பது வள்ளுவம். உடல்நலம், மனநலம், அறிவுநலம், திறன்விருத்தி, ஆன்மிக நலம், குணப்பண்பு நலம், சமூக நலம், நல்லொழுக்கம் என்பனவற்றில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மனிதனில் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொள்வது கல்வி. அதுவே முழுமைக் கல்வி. உலகியல் சார்ந்த நோக்கங்களும் ஆன்மிகம் சார்ந்த நோக்கங்களும் இணையப் பெற்ற கல்வியே விழுமியக் கல்வியாகும். இவை சமநிலையில் விளங்கி, செழுங்கலவைக் கல்வியாகப் பரிணமிக்கும் போதே முழுமைக் கல்வியாக நிறைவுபெறும். இத்தகைய முழுமைக் கல்வியையே தற்கால உலகம் எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து நிற்கிறது. அது வாழ்வில் இன்பம், மகிழ்ச்சி, சாந்தம், அமைதி என்பவற்றை உருவாக்கும் கல்வியாக விளங்கும்.

கல்வியிலே பழமையும் புதுமையும் ஒன்றிக்க வேண்டும். ஆன்மிகமும் உலகியல் அறிவும் ஒன்றிக்க வேண்டும். கல்வி, மனித வரலாற்றில் ஆரம்பிக் கப்பட்ட காலத்திலிருந்து விழுமியக் கல்வியாகவே கற்பிக்கப்பட்டும், கற்கப்பட்டும் வந்தது. கல்விக்குப் பயன் அறிவு. அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்ற நிலைப்பாட்டினைப் போற்றிப் பாதுகாத்து வந்தது, வருவது விழுமியக் கல்வி.

கல்வியாளர் பலரும், கடன்வாங்கிய கல்விக் கொள்கைகளிலே அமிழ்ந்து கிடக்கும் புத்திஜீவிகளும், மரபுசார் சிந்தனைகளையும், சமயஞ்சார் கொள்கை களையும் நிராகரிப்போரும், உண்மை மறுப்போரும் சுயநலப் பிசாசு பிடித் தலைவோரும், கீழ்மைப் பண்புகளால் வளர்க்கப்பட்டவர்களும் ‘பழைமை' என்பது பிற்போக்கு என்று பிதற்றிக் கூறுகின்றனர். உண்மையில் அது பின்னோக்கு ஆகும். பிற்போக்கு அன்று. நாம் கடந்தகாலத்தைப் பின்னோக்கி ஆராய்ந்து பார்க்க வேண்டும். தற்காலத்துக்கு வேண்டியவனாக இருப்பின் அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வாதன தாமாக கழிந்து விடும். பழையன எல்லாமே கூடாதன அல்ல. எனவே நம் முன்னோர் நமக்களித்த கல்விச் செல்வங்களையும் பண்பாட்டுச் செல்வங்களையும் ‘பழைமை' என்ற ஒரே காரணத்திற்காகப் பிற்போக்கு என்று அவற்றைத் தள்ளிவிடுதல் - ஒதுக்கி விடுதல் அறிவுடைமையாகாது. எனவே கல்வியின் மூலம் பண்டைய காலத்துக்குரிய மடைமைக் கருத்துக்களை உற்றுநோக்கி ஆராய்ந்து பார்த்து சீர்செய்து பக்குவப்படுத்தி. நிகழ்காலத்திற்குரியதாக்க வேண்டும். பண்டுதொட்டு மனிதரை மனிதத் தன்மைகளோடு கூடிய மனித ராகச் சீர்செய்து பண்பட்டோராக வளர்த்துவந்த ஆன்மிகம் சார்ந்த விழுமியக் கல்வியின் தேவை நிகழ்காலத்தில் பெரிதும் உணரப்படுகிறது. வேண்டவும் படுகிறது.

நிகழ்காலத்தில் கல்வி பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. அக்கல்வி மனிதரின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும், விஞ்ஞான ஆராய்ச்சி அறிவைப் பெருக்கிப் பல அற்புத கண்டுபிடிப்புகளைச் செய்யவும் உதவி வருகிறது. அறிவியல் அறிவு, தொழில்நுட்பத் திறன் என்பவற்றில் மனித இனம் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. பல அரிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மனிதனுடைய விஞ்ஞான தொழில்நுட்ப, கணினி அறிவு பன்மடங்கு மேலோங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை, மனித வாழ்வியல் துன்பங்கள், பிரச்சினைகள், பகை, பிணக்கு, போர், வன்முறை, சாதி அடக்குமுறை, மிலேச்சத்தனம் குழப்பங்கள் தினம் தினம் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இன்பம், மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம், நிம்மதி என்பன மனித இனத்திடமிருந்து விடைபெற்று வெகுதூரம் சென்ற வண்ணம் இருக்கின்றன. எங்கும், எதிலும் மனிதரின் சுயநலவேட்கை, பேராசை, பொறாமை, ஆரோக்கியமற்ற போட்டிமனப்பான்மை, சுரண்டல் பாங்கு, முறையற்ற வழியில் பொருள் தேட்டம், வஞ்சகம், பகைமை, வெறுப்புணர்ச்சி, மேலாண்மை செலுத்துகின்றன. மனிதர்கள், பெரும்பாலான கல்விமான்கள் இத்தீயசக்திகளின் வயப்பட்டுப் பேய்பிடித்தவர்களின் நிலையில் உள்ளனர்.

ஓரறிவு முதல் ஐயறிவு வரை கொண்ட உயிரினங்களிடம் காணப்படும் அறிவு இயல்பூக்க அறிவு எனப்படுகிறது. ஆனால், மனித இனம் ஆறறிவு டையது. அந்த ஆறாவது அறிவு, பகுத்தறிவு எனப்படுகிறது. பகுத்தறிவு ஆராய்ந்து அறியுந் திறன் உடையது. சரி எது, பிழை எது என்று பிரித்துக் காட்டக் கூடியது. மனிதன் தன்னை உணர்ந்துகொள்ள அறிவு உதவுகிறது. மனிதனின் இந்த அறிவு, அவன் வாழ்கின்ற இயற்கையைப் பற்றியும் பௌதிகச் நூல் பற்றியும் இயற்கை செயல்படும் நுட்பங்கள் பற்றியும் ஆராய்ந்தபோது அது விஞ்ஞான அறிவு ஆகியது. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவு, மனித சமூகம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளப் பேருதவியாக இருந்து வருகிறது. அதேவேளை மனிதரின் மகிழ்ச்சி, அமைதி என்பவற்றைக் குலைக்கவும் மனிதருக்கு உதவுகிறது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவுப் பெருக்கம், அபரிமித வளர்ச்சி ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பயன்படுத்தப்படுகிறது. தவறு மனிதனுடையது, விஞ்ஞானத்தினுடையது அல்ல. விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினைக் கையாள்பவன் மனிதன். தனது ஆராய்ச்சித் திறன்மிக்க பகுத்தறிவைப் பயன்படுத்தி, மனிதன் நல்லது கெட்டது பிரித்துணர்ந்து விஞ்ஞான அறிவினை ஆக்கத்திற்கு மட்டும் பயன்படுத்தி வந்தால் தரமானதும் வசதிகள் நிறைந்தது மான வாழ்க்கையினையும் அமைதி, மகிழ்ச்சி, சாந்தி நிறைந்த மனிதர் களையும் உலகினையும் விரைவிலே காணமுடியும்.

மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் மனிதனில் இணைகின்றன. அஞ்ஞானம் மனிதனை விட்டுவிலகி விடுகின்றது. மனிதனிடத்தில் அதுவரை மறைந்திருந்த விலங்கினத் தன்மை நீங்கப் பெற்று, மனிதத் தன்மை மலர்ச்சி பெறுகிறது. மனத்தூய்மை, சொற்றூய்மை, செயல் தூய்மை பெற்று, மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம் மனிததன்மைகளோடு நடந்துகொள்ளும் நிலையில் பரிணாம வளர்ச்சி முழுமை எய்துகிறது.

மனிதன் விஞ்ஞான அறிவினை வளர்த்துக்கொண்ட அளவிற்குத் தனது பகுத்தறிவினையும் அதன் ஊடாக மனிதப் பண்புகளையும் வளர்த்திருப் பானாயிருந்தால் இன்று உலகில் இத்துணை குழப்பங்களும் அட்டூழியங் களும் அழிவுகளும் அனர்த்தங்களும் ஏற்பட்டிருக்கமாட்டா. மனிதன் முழுமையான தூய அறிவினை அடையக்கூடிய தகுதிப்பாட்டினை பெற்றிருக் கிறான். ஆனால் அதற்கேற்ப மனித இனம் இயன்றவரை மனிததன்மை களோடு கூடிய மனிதர்களாக வாழும் நிலையை எய்தவில்லை. மனிதர்கள் உருவ அமைப்பில், அங்க அடையாளங்களில், மட்டும் விலங்கினத்திலிருந்து வேறுபட்டிருக்கிறார்களே தவிர, மனித வடிவம் பெற்றிருக்கிறார்களே தவிர, குணத்திலோ, பண்பிலோ அறிவின் தரத்திலோ மனிதனாக உயரவில்லை. விளைவுகளிலிருந்து, செயலின் தன்மை நல்லதோ, கெட்டதோ என்பதை அறிந்து கொள்ளலாம். அவ்வாறே, தற்கால உலக சமுதாயங்களில் இடம் பெறுகின்ற எதிர்மறை விளைவுகள், இதனைச் சுட்டிக்காட்டுகின்றன.

தற்காலத்தில் விஞ்ஞான, தொழில்நுட்ப விருத்தி அதிக அளவில் வளர்ச்சியும், முன்னேற்றமும் கண்டிருக்கும் நிலையில் அந்த அளவிற்கு ஈடுகொடுக்கும் வகையில் மனிதப் பண்பு விருத்தி, மனிதரில் ஏற்படவில்லை என்பதே எல்லோரினதும் ஆதங்கமாக உள்ளது.

அண்மைக் காலத்துக் கல்வி முன்னேற்றம் மனிதரை மனிதப் பண்புகள் கொண்ட மனிதராகப் பண்படுத்துவதில் படுதோல்வி கண்டுள்ளது. விஞ்ஞான அறிவையும், தொழில்நுட்பத் திறனையும் கணினியைத் திறம்பட, நுட்பமாக, இயக்கும் வல்லமையையும், மாணாக்கரில் அதிஉச்ச அளவிற்கு எப்படி விருத்தி செய்யலாம் என்று அக்கறையும், சிரத்தையும் கொள்ளும் தமது தற்காலக் கல்விமுறை, நல்ல உள்ளங்களை நல்ல மனிதப் பண்புகளை நல்லொழுக்க நன்னடத்தைகளை, நற்செயல்களை உருவாக்குகிற மனித விழுமியக் கல்வியையும் மாணவர்களுக்கு வழங்கவேண்டும் என்பதில் அத்துணை அக்கறையோ, சிறிதளவில் தன்னிலும் சிரத்தைகளோ எடுத்ததாகத் தெரியவில்லை. இந்நிலையைத் தொடரவிடக்கூடாது என்பது ஒரு சில உயரிய கல்விச் சிந்தனையாளர்களது கருத்து. நமது கல்விமுறையில் சம நிலைத் தன்மை இன்மையாலேயே, இத்துணை சீர்கேடுகளும் அமைதியின் மையும், அவலங்களும், நடத்தைப் பிறழ்வுகளும், கொடுமைகளும், குணநல மின்மையும், வன்முறைக் கலாசாரமும் உலகில் பல்கிப்பெருகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுமியக் கல்விச் சிந்தனைகள் பலவுள. தற்காலத்துக் கல்விமுறையில் நன்மையும் தீமையும் உள்ளன. தீமைகள் துன்பங்களைத் தரக்கூடியது. அதனால் அவை அகற்றப்பட வேண்டும். நன்மைகள் வாழ்க்கைக்குத் தேவையானவை. அதனால் அவை பேணிக் காக்கப்பட வேண்டும். தற்காலக் கல்விமுறை மனிதரை இயந்திரமாக்கியுள்ளது. அதனால் மனிதன், தான் மனிதன் என்பதை மனதில் கொள்ள மறுக்கிறான். மனித ஒழுக்கம், நன்னடத்தை, தான் மனிதன் என்ற உணர்வு குறையும்போது 'நான்' என்ற அகந்தை மற்றும் சுயநலப்பற்றும், 'எனது' என்ற மமதை, மற்றும் பொருள் பற்றும் மனிதனில் தோன்றுகின்றன. இப்பற்றுக்கள், மனிதரில் பேராசை, கோபம், தற்பற்று, முறையற்ற பாற்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய தீயகுணங்கள் போன்றன தோன்ற வழிவகுக்கின்றன. இக் குணங்கள் தனக்கும் பிறர்க்கும் தீங்கு விளைவிக்கின்றன.

விழுமியக் கல்வியினால் உண்டாகப் போகும் பயன் - பலன் என்ன என்று சிலர் வினவலாம். தற்கால வாழ்க்கை முறையில் மனிதரின் இடம் பெற்றுள்ள தீயகுணங்களை - அழுக்குகளை - உயர் குணங்களாக - விழுமிய குணங்களாக மாற்ற வேண்டும். அதற்குக் குணங்கள் சீரமைக்கப்பட வேண்டும். முறைப்படுத்தப்பட வேண்டும். கல்வியே உறுதுணையாக வரவேண்டும். விழுமியக் கல்வியை தற்காலக் கல்விமுறையுடன் இணைத்துக் கொண்டால் அதன் மூலம் போதிய வலுவைப் பெற்று தன்னிலை உணரப் பட்டு, தீய குணங்கள், நலம் விளைவிக்கும் உயர் குணங்களாக மாற்றம் பெற வழி ஏற்படும். விழுமியக் கல்வி நிகழ்ந்தால் ஆசை, நிறைமனமாகவும், கோபம் சகிப்புத் தன்மையாகவும், தற்பற்று ஈகையாகவும் முறையற்ற பால் கவர்ச்சி கற்பு ஆகவும், உயர்வு தாழ்வு மனப்பான்மை சமத்துவ நிலையாகவும் வஞ்சம் மன்னிப்பாகவும் மாற்றமடையும்.

தீய குணங்களையும் சிந்தனைகளையும் மனதில் சுமந்து கொண்டிருக்கும் வரை, மன அமைதி கெடும். தொடர்ந்து குடும்பத்தில் அமைதி, சமூகத்தில் அமைதி எல்லாமே கெட்டுவிடும். தீய குணங்களை முற்றிலுமாக ஒழித்து விடுவது என்பது மனிதர்க்கு முடியாத காரியம்.

அதனால் மனிதன் பரிணாமவளர்ச்சியின் பயனாகப் பெற்றுக்கொண்ட பகுத்தறிவைப் பயன்படுத்தி, விளைவுகளை ஆராய்ந்து பார்த்து, தீய குணங்கள் தேவையற்றவை. தீய விளைவுகளை ஏற்படுத்துபவை என்பதைத் தெளிந்து குணங்களைச் சீர்செய்து முறைப்படுத்தி தமது வாழ்க்கையை நெறிப்படுத்தி வாழ்தல் உத்தம வாழ்வு ஆகும். ஒவ்வொரு தனிமனித உள்ளத்திலும் ஏற்படும் இந்த நன்மாற்றம் அமைதியையும் இனிமையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி, குடும்ப, சமூக, உலக அமைதிக்கும் வழிவகுக்கும். எல்லா நிலைகளிலும் இனிமை, மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம் என்பவற்றை மனிதர்கள் அடைவதற்கு உறுதுணையாகத் தூய நற்கல்வி அமைய வேண்டும். விழுமியக் கல்வியே தூயநற் கல்வியாகும்.

'விழுமியங்கள்' எவை என்ற வினா எழுதல் தவிர்க்க முடியாதது. விழுமியங்கள் பெறுமதி மிக்கவை. அனைவராலும் மதிக்கப்படுபவை. பொருள் விரயம், பண விரயம் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும். பொருட்களின் மதிப்பு, பெறுமானம், உணராதவர்கள் வாழ மறுப்பவர்கள், வாழத் தகுதியற்றவர்கள் ஆவர். வீடுகளில் உணவுகள் விரயமாக்கப்படுதலைக் காண்கிறோம். பலரின் பசியைப் போக்கக்கூடிய உணவுகள் தினமும் வீசி எறியப்படுகின்றன. அவ்வாறு செய்ய எமக்கு உரிமையில்லை. அவ்வாறு உணவை வீணாக்குவது பாவகாரியம் மட்டுமல்ல; மனித குலத்திற்குச் செய்யும் துரோகம் ஆகும். நீரைத் தினமும் விரயஞ் செய்கிறோம். அது தவறு என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். காடுகளை அழிக்கின்றனர். பல்வேறு இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன. எத்தனையோ தலைமுறைகளுக்குப் போதுமான வளங்கள், இவ்வுலகில் உண்டு. அவற்றை இந்தத் தலைமுறையிலேயே அளவுக்குப் பன்மடங்கு அதிகமாக எடுத்துக் கொண்டால் அதுவும் வீண் விரயம்தான். இயற்கை வளங்கள் பொதுவானவை. மனிதகுலம் முழுவதற்கும் உரித்தானவை. எதிர்காலத் தலைமுறையினரின் பயன்பாட்டுக்காகப் பாதுகாத்துச் சேமித்து வைக்கப்பட வேண்டியவை என்னும் பண்பாடு எம்மிடையே வளர வேண்டும். அது விழுமியஞ் சார் பண்பாடு ஆகும்.

செல்வம் மிகினும் குறையினும் துன்பத்திற்கு ஏதுவாகும். பொருளைப் போற்றி அளவறிந்து பேராசை கொள்ளாது அறவழியில் ஈட்டி பிறர்க்கும் உதவி, வீண்விரயம் செய்யாது, தாமும் செம்மையாக வாழ்தல் சிறந்த மனித விழுமிய வாழ்வாகும். பொருளைப் பொறுத்தளவில் ஏற்பது இகழ்ச்சி, ஐயமிட்டுண், ஒப்புரவொழுகு என்னும் ஔவையின் அறிவுரைக்கிணங்க ஒழுகினால் ஒரு பொல்லாப்பும் இல்லை.

விழுமியஞ்சார் பண்பாட்டிலே, மனிதன் அறிவையும் திறனையும் பெற்றிருந்தால் மட்டும் போதாது. சிறந்த மனப்பாங்குகளையும் மனிதப் பண்புகளையும் மனித விழுமியங்களையும் உடையவராகவும் விளங்கும் போதே நிறைமனிதன் ஆகின்றான்.

எமது கடமைகளைச் சரிவரச் செய்வதன் மூலம், பிறர் வாழ்க்கையில் எத்துணை மகிழ்ச்சியையும் நிறைவையும் எம்மால் ஏற்படுத்த முடியுமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அளவிற்கு நாம் பெற்ற கல்வி, பெறுமானம் மிக்கதாக இருக்கும். நாமும் பிறரால் மதிக்கப் பெறுபவர்களாக விளங்குவோம். பதவியிலோ அதிகாரத்திலோ தலைமையிலோ இருந்து இறங்கிய பின்னரும் நாம் மதிக்கப் பெறுவோம். பிறரைக் கண்டு ஒதுங்கியோ அஞ்சியோ வாழ வேண்டிய நிலைமையும் ஏற்படாது. ஒருவரை அவர் கொண்டுள்ள பதவிக்காகவோ அதிகாரத்திற்காகவோ மதிப்பவர்கள், அவை நீங்கிய நிலையில் அவரை மதிப்பதில்லை. ஆனால், பதவியையோ அதிகாரத்தையோ துஷ்பிரயோகம் செய்யாது தம் கடமைகளையும் ஆற்றிப் பொறுப்புக்களையும் நிறைவேற்றி வருபவர்கள் என்றென்றும் பெருமதிப்பிற்குரியவர்களாகவே இருப்பர். அவர்களே கற்றறிந்தவர்கள்.

இன்றைய உலகு வேண்டி நிற்பது விழுமியக் கல்வியேயாகும். இன்று பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் யாவும் இளைய சந்ததிக்குக் கல்வியை வழங்குகின்றன. கல்வி ஸ்தாபனங் களின் தொகையும், கல்விக்காகச் செலவிடப்படும் பணத்தின் தொகையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கல்வியை வழங்குவதிலும், பெறு வதிலும் நாட்டம் கூடிவருகின்றது. கல்வியில் யாவருமே அக்கறை கொண் டுள்ளனர். கல்வியைத் திட்டமிடுவதிலும் அத்திட்டங்களைச் செயற்படுத்து வதிலும் மீண்டும் மீண்டும் மாற்றியமைப்பதிலும் புதிய மாற்றங்களைப் புகுத்துவதிலும் மீள்பரிசீலனை செய்வதிலும் பல்வேறு நிபுணத்துவ நிலை யங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆக்குவதும், அழிப்பதும், மாற்றுவதும் எனக் கல்வி எத்தனங்கள் நிகழ்ந்தபடியே உள்ளன. கல்வியைப் பற்றிப் பேசப்படும் அளவிற்கு வேறு எந்தத் துறைசார்ந்த விடயம் பற்றியும் பேசப்படு வதில்லை. காரணம் சிறியோர் முதல் வளர்ந்தோர் வரை ஏதோ ஒருவிதத்தில் கல்வி எல்லோரையும் பாதிக்கின்றது. கல்வியைப் பற்றிக் கருத்துச் சொல்லக் கூடியதாக யாவரும் இருத்தல் மற்றொரு காரணம்.

கல்வி குறிப்பாக இந்த நூற்றாண்டில் வழங்கப்பட்டு வருகின்ற கல்வி பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திக்குத் துணை செய்து வந்திருந்தபோதிலும், மனிதப் பண்பாட்டு வளர்ச்சிக்கு, மனித விழுமியங் களைப் பேணுவதற்குரிய அறிவு ஆற்றல் வளர்ச்சிக்கு, இன்னும் சொல்லப் போனால் 'மனித ஆக்கத்திற்கு' உதவவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடாக உள்ளது. மேலான கல்வி கற்றோரின் ஆணவத்தையும் அகந்தை யையும் போக்கும்; அறியாமையை அகற்றும். பணிவுடையன், இன்சொலன் ஆகக் கற்றோர் விளங்குவர். அத்தயை கல்வி கற்றோர் நற்குண நற்செய்கை களுடைய மேலோர் ஆவத் திகழ்வர். மனிதனை மனிதத் தன்மைகளுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாக உயர்த்த உதவுகின்ற கல்வியையே கற்க வேண்டும். 'கற்றோர்க்கு அழகு கருணையே' என்கிறது நீதி வெண்பா. கல்வியின் மூலம் 'மனித ஆக்கம்' ஏற்பட வேண்டும் என்று கூறியுள்ளார் சுவாமி விவேகானந்தர். கல்வி, ஒருவனை அருள் நிறைந்தவன் ஆக்க வேண்டும் என்கிறார் திருமூலர்.

'விழுமியக் கல்வி' எவற்றைக் கற்பிக்கிறது? என்பது வினா. ''பணி செய்; உயிர்களை நேசி; பகிர்ந்து உண்; பிறர்மீது கரிசனை கொள்; மனத்தை ஒருவழிப்படுத்து; நடுவுநிலைமையில் நில்; இன்னா செய்யாதே; இன் சொல் பேசு; நல்லனவற்றையே நாடு; நல்லனவற்றையே புரி; நல்லாருடன் சேர்; இரக்கம் கொள்; கருணை காட்டு; அறங்கள் செய்; கோபத்தைத் தணி; பொறுமையாகப் பேசு;'' என்பனவற்றைக் கற்பிக்கிறது. மனித விழுமியக் கல்வி இவற்றைத் தான் கற்பிக்கிறது. எல்லா மனிதருக்கும் மிகப் பொருத்த மான கல்வியின் சாரமாக இது மிளிர்கின்றது. கற்க வேண்டிய கல்வியைக் கற்றவர்களால் தான் இவ்வாறு ஒழுக முடியும். இக்காலத்தவர்களின் ஒழுக்கம் அவ்வாறு அமையாமைக்குக் காரணம் ஒழுக்கம் சார்ந்த சமய விழுமியக் கல்வியைக் கற்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாமையே ஆகும். மேலே கூறிய விழுமியங்கள் எவற்றையேனும் தற்காலக் கல்வி மாணவர்களுக்குப் புகட்டுகிறதா? இல்லை. ஒழுக்கத்தைக் கற்பிக்காத கல்வி, கல்வியாக மாட் டாது. கல்வி கற்றும், கற்றோர் சமுதாயத்தில் அமைதி இல்லையென்றால், மனிதத்துவம் வலுவிழந்திருந்தால், நீதி, நேர்மை, நியாயம் என்பன ஓரங் கட்டப்பட்டிருந்தால் இந்தக் கல்வியால் ஒரு பயனும் இல்லை. அக்கல்வி யைக் கற்ற காலம், கற்பதற்குச் செலவு செய்த பணம், மனித சக்தியாகிய கடும் பிரயாசையுடனான உழைப்பு யாவுமே விரயம்தான்.

மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும். 'கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான்'. 'கல்வியை இளமைதொட்டு மரணபரியந்தம் விடாது கற்க வேண்டும்'. 'பாடை போகினும் ஏடதுகைவிடேல்' என்பது முதுமொழி. கல்வி என்னும் போது வள்ளுவர் அடிச்சுவட்டில் நின்று கற்க வேண்டியவற்றைக் கற்றல் என்பதே கல்வி, என்ற நிலைப்பாட்டினைக் கொண்டவர்கள் அச்சான்றோர்கள். கல்வி மூலம் சான்றோர்களைக் கொண்ட சமுதாயம் ஒன்றினை உருவாக்குவதே அவர்களின் கல்வி நோக்கம் ஆகும். சூழ்ச்சி, சூது, அண்டிக் கெடுத்தல், ஏமாற்றுதல், திமிர் என்பன மனிதர் களுக்குப் பகையானவை. மனித இனத்திற்கு உரிமையானவையல்ல. ஆனால் தற்காலத்தில் இவற்றிற்குத்தான் உரிமை கொண்டாடப்பட்டு வருகிறது. இவை யாவும் சுயநலத்தினின்றும் எழும் ஆசைகள். மனித குலத்தை அழிக்க வந்தவை இவை என்பதை, மனித அறிவு ஏனோ மனிதர்களுக்குச் சுட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்ட மறுத்து வருகின்றது என்பதுதான் விடுவிக்க முடியாத புதிராக இன்று உள்ளது. எமக்கு உதவக் கல்விதான் - விழுமியக் கல்விதான் முன்வர வேண்டும்.

மாணவர்கள் சமூக சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். வெறும் புத்தகப்படிப்பு, விஞ்ஞான அறிவு, உலகாயதத்தை வளர்க்கின்றன. உள்ளங் களைப் பண்படுத்தாமல் விட்டு விடுகின்றன. அன்பு, கருணை, இரக்கம் என்னும் மனித உணர்வுகள் மழுங்கிய நிலையில் மனித உயிர்ப்பு இருக்காது. மனிதர்கள் இயந்திரங்கள் அல்ல; வெறும் ஜடங்களுமல்ல என்பதைக் கல்வி உணர்த்தத் தவறியமையினால் தான் மனித நெஞ்சங்களில் ஈரம் காய்ந்து வருகின்றது. பக்தி தவ மேம்பாடுள்ளவர்களைத் தெய்வச் சேக்கிழார் பெரிய புராணத்தில் 'ஈர நெஞ்சினர்' என்பர். இன்றைய மாறுபடும் கல்வியாளர்கள் இறை மறுப்புக் கொள்கையுடைய பகுத்தறிவுவாதிகளென்பதால் மனிதச் செழுமை நலம் (ஈரம்) காய்ந்தவர்களாகவே உள்ளனர். கல்வி உள்ளத்திற்கு வேண்டும். மனித விழுமியங்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள உதவு வதாகக் கல்வி அமைதல் அவசியம். அத்தகைய விழுமியக் கல்வியை ஒழுக்கக் கல்வியை பண்பாட்டுக் கல்வியை, மானுடம் சார்ந்த கல்வியை, தூய நற்கல்வியை, இன்றைய உலகு வேண்டி நிற்கின்றது என்பதை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

''மாணவர்கள் ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்ளக்கூடிய வாய்ப்பினை அளிக்கும் அதேவேளை, அவர்களுக்கு அவர்களுக்குள்ளே மறைந்திருக்கும் தெய்வீகத்தையும் வெளிக்கொணரக்கூடிய இயல்புகளும் உள்ளதாய் அமைந் திருப்பதே முறையான கல்வியாகும்''

என்று கூறுகிறார் பகவான் சத்யசாயி பாபா.

உலகினை அழிவின் விளிம்பிற்குக் கொண்டு செல்லும் துர்ச்சிந்தனைக் கல்வியைத் தடுத்து நிறுத்துவதற்குக் கல்வி முறைமையில் விழுமியக் கல்வியை இடம்பெறச் செய்ய வேண்டுமென்பது அறிஞர்கள், கல்வி யாளர்கள், ஆன்மிக நெறியாளர்கள் ஆகியோரின் கருத்தாக உள்ளது.

விழுமியங்கள், விழுமியக் கல்விசார் வரைவிலக்கணங்களைச் சற்று விவரிப்பது இவ்விடத்திலே மிகவும் பொருத்தமானதாகும். விழுமியங்கள் (Values) என்பதற்கு மதிப்பு, பெறுமதி, பெறுமானம் எனப் பொருள் கொள்ளப் படுகிறது. பணம், பண்டம், பொருள், நிலம் என்பன உலகியல் ரீதியில் மதிப்பு, பெறுமானம் வாய்ந்தவை. இவற்றைச் 'செல்வங்கள்' என்றும் அழைக்கின்றனர். இவை ஒவ்வொன்றினதும் மதிப்பு, பெறுமானம், பெறுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இடத்துக்கிடம், காலத் துக்குக் காலம் அவை மாற்றமடைகின்றன.

'Values' என்னும் ஆங்கிலப் பதம் 'விழுமியங்கள்' என்ற தமிழ்ச் சொல்லினாலும் உணர்த்தப்படுகிறது. விழுமியங்கள் விழுப்பம் (மேன்மை) தரலால், அவை உயர்வானவை, மேன்மையானவை. அதி உன்னதமானவை. எமது உயிரினும் மேலான பெறுமதியுடையவை. விழுமியங்களின் மதிப்பு நம் உயிரைவிட, உறவைவிட இவ்வுலகில் எவ்வெப் பொருள்களைப் பெறு மதியும், பெறுமானமும் மிகுந்தன என்று கொண்டாடி மகிழ்கின்றோமோ, அவற்றின் மதிப்பைவிடப் பன்மடங்கு உயர்ந்து காணப்படுகிறது. எனவே, எந்த நிலையிலும் விழுமியங்களை இழந்துவிடலாகாது. விழுமியங்கள்தான் மனித அடையாளங்கள். மிருகத்திலிருந்தும் ஏனைய உயிரினங்களிலிருந்தும் மனிதரை வேறுபடுத்திக் காட்டும் குறிகாட்டிகள். 'மனித நாகரிகமானது வெறுமனே செங்கற்களாலும் சாந்தினாலும் இரும்பினாலும் இயந்திரங் களினாலும் கட்டியயெழுப்பப்படுவதன்று. மனிதர்களினாலும் அவர்களின் நற்குணப் பண்புகளினாலும் நல்லொழுக்கத்தினாலும் உருவாக்கப்படுவதே நயத்தக்க நாகரிகம் ஆகும்' என்பர் இந்தியத் தத்துவஞானி சர்வப்பள்ளி இராதாகிருஷ்ணன்.

இங்கு நற்பண்புகள், நல்லொழுக்கம் என்று குறிப்பிடப்படுபவை மனித விழுமியங்கள் ஆகும்.

**விழுமியங்களை இனங்காணல்**

(Dackawish) - டக்கவிஷ் (1959) என்பவர் பன்னிரு (12) அடிப்படை விழுமியங்களை இனங்கண்டுள்ளார் என்று எழுதியுள்ளார். கல்வி ஆலோ சனை நிபுணர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் (2010:207) அவையாவன:

1. மனித நேயம்
2. பெரியோரைக் கனம் பண்ணல்
3. மனித நல்லுறவுத் திறன்கள்
4. மகிழ்ச்சி
5. நேர்மை
6. நன்மனப்பான்மை
7. பணிவுடைமை
8. சமயத்திறன்
9. உணர்ச்சிக் கட்டுப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சாந்தம்
11. உண்மை
12. நடுநிலைமை என்பனவாம்.

Ramji - ராம்ஜி (1986) என்பவர் மேல்வரும் பத்து (10) விழுமியங்களை மாணாக்கரிடத்திலே விருத்தி செய்யப்படவேண்டியவை எனச் சுட்டிக் காட்டுகிறார்.

1. தைரியம்
2. உண்மை
3. அன்பு
4. தொழில் மகத்துவம்
5. சேவை
6. சுத்தம்
7. மனத்தூய்மை
8. மரியாதை
9. சமாதானம்
10. இன்பம்

என்பனவாம்.

பகவான் சத்யசாயி பாபா இனங்கண்டுள்ள அடிப்படை மனித விழுமி யங்கள் வருமாறு:

1. சத்தியம்
2. தருமம் (நன்னடத்தை)
3. சாந்தி (சமாதானம்)
4. பிரேமை
5. அஹிம்சை

என்பனவாம்.

இவ்வாறு மேலும் பலர், மனித விழுமியங்களை இனங்கண்டுள்ளமை யுடன் சமூக, ஒழுக்க, ஆன்மிக, சமய, கலாசார, பொருளாதார, மனித விழுமியங்கள் என வகைப்படுத்தியும் காட்டியுள்ளனர். மேலும் விழுமி யங்கள் மனவெழுச்சி ஆட்சியுடன் தொடர்புபட்டவை என்பதும் குறிப்பிடத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கது. ஒருவரின் மனஎழுச்சி ஆட்சியே அவரின் நடத்தையைக் கட்டுப் படுத்தவும் இயக்கவும் பொறுப்பாகவுள்ளது. எனவே, மாணவரின் முழுமை யான அபிவிருத்திக்கு மன எழுச்சி ஆட்சி, அறிதல் ஆட்சி, உள இயக்க ஆட்சி என்பன ஒருங்கிணைக்கப்பட்டு அவை சமமாக விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் உணர்ந்திருத்தல் அவசியமாகும்.

மாணவரில் விருத்தி செய்வதற்கு மனித விழுமியங்களை இனங்காணும் ஆசிரியர்கள் இலங்கை ஒரு பல்லின, பல்சமய, பல்கலாசார சமூகங்களை உள்ளடக்கிய நாடு என்பதைக் கவனத்திற் கொளளுதல் அவசியமாகும். இன, மத, பிரதேச சார்பற்ற அதேவேளை முரண்பாடுகள் இல்லாத எல்லாச் சமூகங்களும் ஏற்றுக்கொள்கின்ற உடன்பாடான, நவீன முற்போக்குச் சமூகச் சிந்தனைகளுக்குப் பொருந்தக்கூடிய மனித விழுமியங்களை இனங்காணுதல் இன்றியமையாதது.

## விழுமியம் சார் கல்வியின் பண்புகள்

சமாதானம், சகவாழ்வு, நல்ல மனித உறவுகள், நட்பு, இனங்களுக்கிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, மனித நேயம், பல்லுயிர் ஓம்புதல், பகிர்ந்து அனு பவித்தல், வளங்களைப் பாதுகாத்தல் என்பன விழுமியம்சார் கல்வியினூ டாகவே எய்தப்பட முடியும். சமாதானத்துக்கான கல்வி என்பது மனித விழுமியங்களை விருத்தி செய்வதற்கான கல்வியேயாகும். உடல், உள, விவேக உணர்வு, ஒழுக்க ஆன்மிக பண்பாட்டு கலாசார, சமூக, பொருளாதார விருத்தி, சமநிலையில் ஒருங்கிணைந்த முறையில் மாணவரில் கல்வி ஏற் படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. விழுமியம்சார் கல்விப் பண்புகளையும், கல்வி இணைத்துக் கொள்ளும்போதுதான் எதிர்பார்ப்பு நிறைவுபெறும்.

கல்வியின் ஊடாக விழுமியங்களைத் தெரிதல் (அறம் தெரிதல்) விழுமி யங்கள் அல்லாதவற்றைத் தெரிதல் (மறம் தெரிதல்) என்பன நிகழ்தல் வேண்டும். அப்போதுதான், விழுமியங்களை ஏற்று வாழ்வில் மேற்கொள் ளவும் அல்லாதவற்றை விலக்கிக் கொள்ளவும் முடியும். கல்விச் செயன் முறையில் கற்றல், கேட்டல், உணர்தல், தெரிதல், நிற்றல் என்பன முட்டின்றி நடைபெறும்போதே பூரண, நிறைவான கல்வியாக அது கொள்ளப்படும்.

## விழுமியம் சார் கல்வியை வழங்குதல்

விழுமியக் கல்வியை ஒரு பாடமாகக் கற்பித்தல் பாடசாலைக் கல்விமுறை மையில் அத்துணை சாத்தியமில்லை. ஏற்கனவே கலைத்திட்டத்தில் ஏராள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான பாடங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடத்தையும் சேர்த்துக் கலைத் திட்டத்தை ஒரு சுமையாக்கக் கல்வியாளர்கள் விரும்பவில்லை. எனவே, மனித விழுமியங்களை ஏனைய பாடங்களுடன் இணைத்துக் கற்பித்தலையே கல்வியாளர்கள் விதந்துரைக்கிறார்கள். ஏற்கனவே நடைமுறையிலுள்ள பாடத்திட்டங்களில் மாற்றங்களைச் செய்யாமல் அவற்றில் புதைந்து காணப் படும் மனித விழுமியங்களை இனங்கண்டு கற்பித்தலையே இங்கு எதிர்பார்க் கப்படுகிறது. ஆசிரியர் நன்கு திட்டமிட்டுப் போதிய முன் ஆயத்தங்கள் செய்தே இதனை நிறைவேற்ற முடியும். மொழி, இலக்கியம், சமயம், கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, அழகியற்கல்வி, தொழினுட்பக் கல்வி, வாழ்க் கைத் திறன்கள் போன்ற பாடங்களில் விழுமியங்கள் உள்ளன. அவ்வப் பாடங்களைக் கற்பிக்கும்போது ஆசிரியர்கள் விழுமியங்களை வெளிக் கொணர்ந்து, அவற்றிற்கு அழுத்தம் கொடுத்து மாணவர்களை உணரச் செய்தல் மிக அவசியமாகும்.

பாடசாலையில் நடைபெறுகின்ற இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் மற்றும் புறப்பாடவிதானச் செயற்பாடுள் என்பவற்றின் ஊடாகவும் மனித விழுமியங்களை ஒன்றிணைத்து மாணவர்களுக்கே கற்பிக்க முடியும். விளை யாட்டுச் செயற்பாடுகள் கலைநிகழ்ச்சிகள் கல்விச் சுற்றுலா, மன்றங்கள், இலக்கியக் கழகங்கள், கலைக் கூட்டம், சாரணர் இயக்கம், சிரமதானம், சமூக சேவை, சமய விழாக்கள் என்பன மனித விழுமியங்களை மாணாக்கர் விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பான சந்தர்ப்பங்ளை அமைத்துக் கொடுக்கின்றன.

பாடசாலையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களும் மாணவர்கள் நேரடி அனுபவங்களைப் பெறத் தேவையான சூழலை அமைத்துக் கொடுப்பவர்களும் ஆசிரியர்களே. விழுமியக் கல்வியைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதில் வெற்றி காண்பது என்பது ஆசிரியர் களின் திறமையிலும் அர்ப்பணிப்பிலுமே தங்கியுள்ளது.

இளஞ் சிறார்களுக்கு விழுமியக் கல்வியைச் செயற்பாடுகள் மூலம் வழங்கி நன்னெறிப்படுத்தும் ஆசிரியர்களும் மற்றும் பாடசாலைச் சமூகத் தினரும் தமது நடத்தைகளில் முன்மாதிரியாகத் திகழ்வதோடு மனித விழு மியங்களைத் தமது அன்றாட வாழ்க்கையுடனும் இணைத்துக் கொள்ளுதலும் இன்றியமையாததாகும். மனித விழுமியங்கள் உலகியல் வாழ்க்கையைச் செழுமைப்படுத்துகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

## விழுமியக் கல்வியின் பயன்கள்

கல்வியிலே பழைமையும் புதுமையும் ஒன்றிக்க வேண்டும். ஆன்மிகமும் உலகியல் அறிவும் ஒன்றிக்க வேண்டும். கல்வி மனித வரலாற்றில் ஆரம் பிக்கப்பட்ட காலத்திலிருந்து விழுமியக் கல்வியாகவே கற்பிக்கப்பட்டும், கற்கப்பட்டும் வந்தது. கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம் என்ற நிலைப்பாட்டினைப் போற்றிப் பாதுகாத்து வந்தது - வருவது விழுமியக் கல்வி.

கல்வியாளர் பலரும் கடன்வாங்கிய கல்விக் கொள்கைகளிலே அமிழ்ந்து கிடக்கும் புத்திஜீவிகளும் மரபுசார் சிந்தனைகளையும், சமயஞ்சார் கொள்கை களையும் நிராகரிப்போரும், உண்மை மறுப்போரும் சுயநலப் பிசாசுபிடித்தலை வோரும், கீழ்மைப் பண்புகளால் வளர்க்கப்பட்டவர்களும் 'பழைமை' என்பது பிற்போக்கு என்று பிதற்றிக் கூறுகின்றனர். உண்மையில் அது பின்னோக்கு ஆகும். பிற்போக்கு அன்று. நாம் கடந்த காலத்தைப் பின்னோக்கி ஆராய்ந்து பார்க்க வேண்டும். தற்காலத்துக்கு வேண்டியனவாக இருப்பின் அக்கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வாதன தாமாகவே கழிந்து விடும். பழையன எல்லாமே கூடாதன அல்ல. எனவே நம்முன்னோர் நமக்களித்த கல்விச் செல்வங்களையும் பண்பாட்டுச் செல்வங்களையும் பழைமை என்ற ஒரே காரணத்திற்காகப் பிற்போக்கு என்று அவற்றைத் தள்ளிவிடுதல் - ஒதுக்கிவிடுதல் - ஏற்காது புறக்கணித்தல் - அறிவுடைமை யாகாது. எனவே கல்வியின் மூலம் பண்டைய காலத்துக்குரிய பழைமைக் கருத்துக்களை உற்று நோக்கி - ஆராய்ந்து பார்த்து - சீர்செய்து - பக்குவப் படுத்தி நிகழ்காலத்திற்குரியதாக்க வேண்டும். பண்டு தொட்டு, மனிதரை மனிதத் தன்மைகளோடு கூடிய மனிதராகச் சீர்செய்து, பண்பட்டோராக வளர்த்து வந்த ஆன்மிகம் சார்ந்த விழுமியக் கல்வியின் தேவை. நிகழ் காலத்தில் பெரிதும் உணரப்படுகிறது. வேண்டவும் படுகிறது.

நிகழ்காலத்தில் கல்வி பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. அக்கல்வி மனிதரின் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கவும், விஞ்ஞான ஆராய்ச்சி, அறிவைப் பெருக்கிப் பல அற்புதக் கண்டுபிடிப்புக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் செய்யவும் உதவி வருகிறது. அறிவியலறிவு - தொழில்நுட்பத்திறன் என்பவற்றில் மனித இனம் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. பல அரிய சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. மனிதனுடைய விஞ்ஞான, தொழில்நுட்ப, கணினி அறிவு பன்மடங்கு மேலோங்கியுள்ளது. அதேவேளை மனித வாழ்வியல் துன்பங்கள், பிரச்சினைகள், பகை, பிணக்கு, போர், வன்முறை, சாதி அடக்குமுறை, மிலேச்சத்தனம், குழப்பங்கள் தினம் தினம் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. இன்பம், மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம், நிம்மதி என்பன மனித இனத்திடமிருந்து விடைபெற்று வெகுதூரம் சென்ற வண்ணம் இருக்கின்றன. எங்கும், எதிலும் மனிதரின் சுயநலவேட்கை, பேராசை, பொறாமை, ஆரோக்கியமற்ற போட்டி மனப்பான்மை, சுரண்டல் பாங்கு, முறையற்ற வழியில் பொருள் தேட்டம், வஞ்சகம், பகைமை, வெறுப்புணர்ச்சி, மேலாண்மை செலுத்துகின்றன. மனிதர்கள், பெரும்பாலான கல்விமான்கள் இத்தீயசக்திகளின் வயப்பட்டுப் பேய் பிடித்தவர்களின் நிலையில் உள்ளனர்.

ஓரறிவு முதல் ஐயறிவுவரை கொண்ட உயிரினங்களிடம் காணப்படும் அறிவு இயல்பூக்க அறிவு எனப்படுகிறது. ஆனால், மனித இனம் ஆறறிவு டையது. அந்த ஆறாவது அறிவு பகுத்தறிவு எனப்படுகிறது. பகுத்தறிவு ஆராய்ந்து அறியுந் திறனுடையது. சரி எது, பிழை எது என்று பிரித்துக் காட்டக் கூடியது. மனிதன் தன்னை உணர்ந்து கொள்ள அறிவு உதவுகிறது. மனிதனின் இந்த அறிவு அவன் வாழ்கின்ற இயற்கையைப் பற்றியும் - பௌதிகச் சூழல் பற்றியும் இயற்கை செயல்படும் நுட்பங்கள் பற்றியும் ஆராய்ந்து பார்த்தபோது அது விஞ்ஞான அறிவு ஆகியது. விஞ்ஞான - மற்றும் தொழில்நுட்ப அறிவு, மனித சமூகம் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளப் பேருதவியாக இருந்து வருகிறது. அதேவேளை மனிதரின் மகிழ்ச்சி, அமைதி என்பவற்றைக் குலைக்கவும் மனிதருக்கு உதவுகிறது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவுப் பெருக்கம் அபரிமித வளர்ச்சி ஆக்கத்திற்கும் அழிவுக்கும் பயன்படுத்தப்படுகிறது. தவறு மனிதனுடையது. விஞ்ஞானத்தினுடையது அல்ல. விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினைக் கையாள்பவன் மனிதன். தனது ஆராய்ச்சித் திறன்மிக்க பகுத்தறிவைப் பயன்படுத்தி மனிதன் நல்லது, கெட்டது பிரித்துணர்ந்து விஞ்ஞான அறிவினை ஆக்கத்திற்கு மட்டும் பயன்படுத்தி வந்தால் தரமானதும், வசதிகள் நிறைந்தது மான வாழ்க்கையினையும், அமைதி, மகிழ்ச்சி, சாந்தி நிறைந்த மனிதர் களையும் உலகினையும் விரைவிலே காணமுடியும். மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் மனிதனில் இணைகின்றன. அஞ்ஞானம் மனிதனை விட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலகி விடுகிறது. மனிதனிடத்தில் அதுவரை மறைந்திருந்த விலங்கினத் தன்மை நீங்கப் பெற்று, மனிதத் தன்மை மலர்ச்சி பெறுகிறது. மனத்தூய்மை, சொற்றூய்மை, செயல் தூய்மை பெற்று, மனித இனம் மனிதத் தன்மைகளோடு நடந்து கொள்ளும் நிலையில் பரிணாம வளர்ச்சி முழுமை எய்துகிறது.

தற்காலத்தில் விஞ்ஞான தொழில்நுட்பவிருத்தி அதிகளவில் வளர்ச் சியும், முன்னேற்றமும் கண்டிருக்கும் நிலையில் அந்த அளவிற்கு ஈடு கொடுக்கும் வகையில் மனிதப் பண்பு விருத்தி, மனிதரில் ஏற்படவில்லை என்பதே எல்லோரினதும் ஆதங்கமாக உள்ளது.

மனிதன் விஞ்ஞான அறிவினை வளர்த்துக் கொண்ட அளவிற்குத் தனது பகுத்தறிவினையும் அதன் ஊடாக மனிதப் பண்புகளையும் வளர்த்திருப் பானாயிருந்தால் இன்று உலகில் இத்தனை குழப்பங்களும், அட்டூழியங் களும், அழிவுகளும், அனர்த்தங்களும் ஏற்பட்டிருக்கமாட்டா. மனிதன் முழுமையான தூய அறிவினை அடையக்கூடிய தகுதிப்பாட்டினைப் பெற் றிருக்கிறான். ஆனால், அதற்கேற்ப மனித இனம் இற்றை வரை மனிதத் தன்மைகளோடு கூடிய மனிதர்களாக வாழும் நிலையை எய்தவில்லை. மனிதர்கள் உருவ அமைப்பில், அங்க அடையாளங்களில் மட்டும் விலங் கினத்திலிருந்து வேறுபட்டிருக்கிறார்களே தவிர, மனித வடிவம் பெற்றிருக் கிறார்களே தவிர, குணத்திலோ, பண்பிலோ அறிவின் தரத்திலோ மனிதனாக உயரவில்லை. விளைவுகளிலிருந்து, செயலின் தன்மை நல்லதோ, கெட்டதோ என்பதை அறிந்து கொள்ளலாம். அவ்வாறே, தற்கால உலக சமுதாயங்களில் இடம்பெறுகின்ற எதிர்மறை விளைவுகள் இதனைச் சுட்டிக்காட்டுகின்றன.

அண்மைக்காலத்துக் கல்வி முன்னேற்றம் மனிதரை மனிதப் பண்புகள் கொண்ட மனிதராகப் பயன்படுத்துவதில் படுதோல்வி கண்டுள்ளது. விஞ் ஞான அறிவையும் தொழில்நுட்பத்திறனையும் கணினியைத் திறம்பட நுட்பமாக இயக்கும் வல்லமையையும் மாணாக்கரில் அதிஉச்ச அளவிற்கு எப்படி விருத்தி செய்யலாம் என்று அக்கறையும், சிரத்தையும் கொள்ளும் நமது தற்காலக் கல்விமுறை நல்ல உள்ளங்களை, நல்ல மனிதப் பண்புகளை - நல்லொழுக்க நன்னடத்தைகளை - நற்செயல்களை உருவாக்குகிற மனித விழுமியக் கல்வியையும், மாணவர்களுக்கும் வழங்க வேண்டும் என்பதில் அத்துணை அக்கறையோ, சிறிதளவில் தானும் சிரத்தையோ எடுத்ததாகத் தெரியவில்லை. இந்நிலையைத் தொடரவிடக்கூடாது என்பது ஒரு சில உயரிய கல்விச் சிந்தனையாளர்களது கருத்து. நமது கல்வி முறையில் சமநிலைத் தன்மை இன்மையாலேயே இத்துணை சீர்கேடுகளும், அமைதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்மையும், அவலங்களும், நடத்தைப் பிறழ்வுகளும், கொடுமைகளும், குணநலமின்மையும், வன்முறைக் கலாசாரமும் உலகில் பல்கிப் பெருகியுள்ளன.

> மனிதன் எந்த அளவு அறிவினைப் பெருக்குகிறானோ அந்த அளவு தூய அற நெஞ்சத்தை வளர்த்துக் கொள்ளவில்லையெனில் அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்தில் போய் முடியும்.

என்கிறார் தத்துவஞானி பேட்ரண்ட் றஸல். இக்கூற்றின் உண்மை இன்று தெளிவாகத் தெரிகிறது.

'கல்வியே கருந்தனம்' என்று ஆன்றோர் கூறிவைத்தனர். 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்கிறார் வள்ளுவர். கல்வியின் நோக்கம் சான்றோனை உருவாக்குதல் என்று நம்முன்னோர் கொண்டனர். கல்வி, கேள்வி ஒழுக்கங் களில் சிறந்தவனாக விளங்குபவனே சான்றோன். அறிவோடு, அறம் பரப்புபவன் சான்றோன், கல்வியினால் அடையப்பெற்ற அறம், பொருள், இன்பம், ஆகிய வாழ்க்கைப் பயன்களைப் பிறருடன் பகிர்ந்து துய்த்து, பல்லுயிர் ஓம்பி வாழ்பவன் சான்றோன். கல்வியினால் எழுகின்ற அன்பு, தீமை செய்வதற்கு நாணுதல், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து சால்புகளையும் கொண்டு வாழ்க்கையில் ஒழுகி வருபவன் சான்றோன். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் குணப் பண்பு நலம் கொண்டவர் சான்றோர். 'உலகை ஒன்றாகக் காண்பதே கல்வி' எனக் கல்விக்கு வரை விலக்கணம் வழங்கியவர் ஔவையார். அந்த வகையில் கல்விப் பயனாக வடிவெடுத்த சான்றோன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் மகுட வாசகத்தின் பொருளை நடைமுறையில் வாழ்ந்து காட்டுவதன் மூலமாக உணர்த்தி உலகக் குடிமகனாகத் திகழ்பவன்.

'குணநலன் சான்றோர் நலமே' என்பது வள்ளுவம். உடல் நலம். மனித நலம். அறிவு நலம், திறன்விருத்தி ஆன்மிக நலம். குணப்பண்பு நலம், சமூக நலம், நல்லொழுக்கம் என்பனவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மனிதனில் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொள்வது கல்வி. அதுவே முழுமைக் கல்வி. (உலகியல் சார்ந்த நோக்கங்களும் ஆன்மிகம் சார்ந்த நோக்கங்களும் இணையப் பெற்ற கல்வியே விழுமியக் கல்வியாகும்) விழுமியக் கல்விச் சிந்தனைகள் பலவுள. தற்காலக் கல்வி முறையில் நன்மையும், தீமையும் உள்ளன. தீமைகள் துன்பங்களைத் தரக் கூடியவை. அதனால் அவை அகற்றப் பட வேண்டும். நன்மைகள் வாழ்க்கைக்குத் தேவையானவை. அதனால் அவை பேணிக் காக்கப்பட வேண்டும். தற்காலக் கல்வி முறை மனிதரை இயந்திரமாக்கியுள்ளது. அதனால் மனிதன், தான் மனிதன் என்பதை மனதில் கொள்ள மறுக்கிறான். மனித ஒழுக்கம், நன்னடத்தை, தான் மனிதன் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு குறையும்போது, 'நான்' என்ற அகந்தை மற்றும் சுயநலப்பற்றும், 'எனது' என்ற மமதை, மற்றும் பொருள் பற்றும் மனிதனில் தோன்றுகின்றன. இப்பற்றுக்கள் மனிதரில் பேராசை, கோபம், தற்பற்று, முறையற்ற பாற் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய தீய குணங்கள் போன்றன தோன்ற வழிவகுக்கின்றன. இக்குணங்கள் தனக்கும் பிறர்க்கும் தீங்கு விளைவிக்கின்றன.

விழுமியக் கல்வியினால் உண்டாகப் போகும் பயன் - பலன் என்ன என்று சிலர் வினவலாம். தற்கால வாழ்க்கை முறையில் மனிதரில் இடம் பெற்றுள்ள தீய குணங்களை - அழுக்குகளை உயர் குணங்களாக - விழுமிய கணங்களாக மாற்ற வேண்டும். அதற்குக் குணங்கள் சீரமைக்கப்பட வேண்டும். முறைப்படுத்தப்பட வேண்டும். கல்வியே உறுதுணையாக வரவேண்டும். விழுமியக் கல்வியைத் தற்காலக் கல்விமுறையுடன் இணைத்துக் கொண்டால் அதன் மூலம் போதிய வலுவைப் பெற்று, தன்னிலை உணரப்பட்டு, தீய கணங்கள் நலம் விளைவிக்கும் உயர் குணங்களாக மாற்றம் பெற வழி ஏற்படும். விழுமியக் கல்வி நிகழ்ந்தால் ஆசை நிறைமனமாகவும், முறையற்ற பால் கவர்ச்சி கற்பாகவும், உயர்வு தாழ்வு மனப்பான்மை சமத்துவ நிலையாகவும், வஞ்சம் மன்னிப்பாகவும் மாற்றமடையும். தீய குணங்களாகவும் சிந்தனைகளாகவும் மனதில் சுமந்து கொண்டிருக்கும் வரை, மன அமைதிக்கும் தொடர்ந்து குடும்பத்தில் அமைதி, சமூகத்தில் அமைதி எல்லாமே கெட்டு விடும். தீய குணங்களை முற்றிலுமாக ஒழித்து விடுவது என்பது மனிதர்க்கு முடியாத காரியம். அதனால் மனிதன் பரிணாம வளர்ச்சியின் பயனாகப் பெற்றுக்கொண்ட பகுத்தறிவைப் பயன்படுத்தி, விளைவுகளை ஆராய்ந்து பார்த்துத் தீயகுணங்கள் தேவையற்றவை; தீய விளைவுகளை எற்படுத்துபவை என்பதைத் தெளிந்து குணங்களைச் சீர்செய்து முறைப்படுத்தி தமது வாழ்க்கையை நெறிப்படுத்தி வாழ்தல் உத்தம வாழ்வு ஆகும். ஒவ்வொரு தனிமனித உள்ளத்திலும் ஏற்படுத்தும் இந்த நன்மாற்றம், அமைதியையும், இனிமையையும் வழங்கிக் குடும்ப, சமூக, உலக அமைதிக்கும் வழிவகுக்கும். எல்லா நிலைகளிலும் இனிமை, மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம் என்பவற்றை மனிதர்கள் அடைவதற்கு உறுதுணையாகத் தூய நற்கல்வி அமைய வேண்டும். விழுமியக் கல்வியே தூய நற்கல்வியாகும்.

விழுமியங்கள் எவை என்ற வினா ஒவ்வொருவரிடையேயும் தவிர்க்க முடியாதது. விழுமியங்கள் பெறுமதி மிக்கவை. அனைவராலும் மதிக்கப் படுபவை. பொருள் விரயம், பண விரயம் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும். பொருட்களின் மதிப்பு பெறுமானம் உணராதவர்கள் வாழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுப்பவர்கள் வாழத்தகுதியற்றவர்கள் ஆவர். வீடுகள், உணவுகள் பெருவிரய மாக்கப்படுதலைக் காண்கிறோம். பலரின் பசியைப் போக்கக்கூடிய உணவுகள் தினமும் வீசி எறியப்படுகின்றன. அவ்வாறு செய்ய எமக்கு உரிமையில்லை. அவ்வாறு உணவை வீணாக்குவது பாவகாரியமட்டுமல்ல, மனித குலத்திற்குச் செய்யும் துரோகமாகும். நீரைத் தினமும் விரயஞ் செய்கிறோம். அது பெருந்தவறு என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். காடுகளை அழிக்கின்றனர். பல்வேறு இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன. எத்தனையோ தலைமுறைகளுக்குப் போதுமான வளங்கள் இவ்வுலகில் உண்டு. அவற்றை இந்தத் தலைமுறையிலேயே அளவுக்குப் பன்மடங்கு அதிகமாக எடுத்துக் கொண்டால் அதுவும் வீண்விரயம் தான். இயற்கை வளங்கள் போதுமானவை. மனித குலம் முழுவதுக்கும் உரித்தானவை. எதிர்காலத் தலைமுறையினரின் பயன்பாட்டுக்காகப் பாதுகாத்துச் சேமித்து வைக்கப்பட வேண்டியவை என்னும் பண்பாடு எம்மிடையே வளர வேண்டும். அது விழுமியஞ்சார் பண்பாடு ஆகும்.

செல்வம் மிகினும், குறையினும் துன்பத்திற்கு ஏதுவாகும். பொருளைப் போற்றி, அளவறிந்து பேராசை கொள்ளாது அறவழியில் ஈட்டி, பிறருக்கும் உதவி, வீண்விரயஞ் செய்யாது, தாமும் செம்மையாக வாழ்தல் சிறந்த மனித விழுமிய வாழ்வாகும். பொருளைப் பொறுத்தளவில் ஏற்படுவது இகழ்ச்சி, ஐயமிட்டுண், ஒப்புரவொழுகு என்னும் ஔவையாரின் அறிவுரைக்கிணங்க ஒழுகினால் ஒரு பொல்லாப்பும் இல்லை.

விழுமியஞ்சார் பண்பாட்டிலே மனிதன் அறிவையும் திறனையும் பெற்றிருந்தால் மட்டும் போதாது. சிறந்த மனப்பாங்குகளயும் மனிதப் பண்பு களையும் மனித விழுமியங்களையும் உடையவராகவும் விளங்கும் போதே நிறை மனிதன் ஆகின்றான். எமது கடமைகளைச் சரிவரச் செய்வதன் மூலம், பிறரின் வாழ்க்கையில் எத்தனை மகிழ்ச்சியையும் நிறைவையும் எம்மால் ஏற்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு நலம் பெற்ற கல்வி, பெறுமானம் மிக்கதாக இருக்கும். நாமும் பிறரால் மதிக்கப் பெறுபவர்களாக விளங்கு வோம். பதவியிலோ, அதிகாரத்திலோ, தலைமையிலோ, இருந்து இறங்கிய பின்னரும் நாம் மதிக்கப் பெறுவோம். பிறரைக் கண்டு ஒதுங்கியோ, அஞ்சியோ வாழவேண்டிய நிலைமையும் ஏற்படாது. ஒருவரை அவர் கொண்டுள்ள பதவிக்காகவோ, அதிகாரத்திற்காகவோ மதிப்பவர்கள் அவை நீங்கிய நிலையில் அவரை மதிப்பதில்லை. ஆனால், பதவியையோ, அதி காரத்தையோ துஷ்பிரயோகம் செய்யாது தம் கடமைகளையும் ஆற்றிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புக்களையும் நிறைவேற்றி வருபவர்கள் என்றென்றும் பெருமதிப் பிற்குரியவர்களாகவே இருப்பர். அவர்களே கற்றறிந்தவர்கள்.

இன்றைய உலகு வேண்டி நிற்பது விழுமியக் கல்வியே ஆகும். இன்று பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் யாவும் இளைய சந்ததிக்கும் கல்வியை வழங்குகின்றன. கல்வி ஸ்தாபனங் களின் தொகையும், கல்விக்காகச் செலவிடப்படும் பணத்தின் தொகையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கல்வியை வழங்குவதிலும், பெறு வதிலும் நாட்டம் கூடி வருகிறது. கல்வியில் யாவருமே அக்கறை கொண் டுள்ளனர். கல்வியைத் திட்டமிடுவதிலும், அத்திட்டங்களைச் செயற்படுத்து வதிலும், மீண்டும் மீண்டும் மாற்றியமைப்பதிலும், புதிய மாற்றங்களைப் புகுத்துவதிலும், மீள் பரிசீலனை செய்வதிலும், பல்வேறு நிபுணத்துவ நிலையங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஆக்குவதும் அழிப்பதும் மாற்றுவதும் எனக் கல்வி எத்தனங்கள் நிகழ்ந்தபடியே உள்ளன. கல்வியைப் பற்றிப் பேசப்படுமளவிற்கு வேறு எந்தத்துறை சார்ந்த விடயம் பற்றியும் பேசப்படுவ தில்லை. காரணம் சிறியோர் முதல் வளர்ந்தோர் வரை, ஏதோ ஒரு விதத்தில் கல்வி எல்லோரையும் பாதிக்கிறது. கல்வியைப் பற்றிக் கருத்துச் சொல்லக் கூடியதாக யாவரும் இருத்தல் மற்றொரு காரணம்.

கல்வி, குறிப்பாக இந்த நூற்றாண்டில் வழங்கப்பட்டு வருகின்ற கல்வி பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப அபிவிருத்திக்குத் துணை செய்து வந்திருந்த போதிலும், மனிதப் பண்பாட்டு வளர்ச்சிக்கு மனித விழுமியங் களைப் பேணுவதற்குரிய அறிவு ஆற்றல் வளர்ச்சிக்கு, இன்னும் சொல்லப் போனால் மனித ஆக்கத்திற்கு உதவவில்லை என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய மதிப்பீடாக உள்ளது. மேலான கல்வி கற்றோரின் ஆணவத்தையும், அகந்தை யையும் போக்கும்; அறியாமையை அகற்றும்; பணிவுடையன், இன்சொலன் ஆகக் கற்றோர் விளங்குவர். அத்தகைய கல்வி கற்றோர் நற்குண நற்செய்கை களுடைய மேலோராகத் திகழ்வர். மனிதனை மனிதத் தன்மைகளுடைய மனிதனாக உயர்த்த உதவுகின்ற கல்வியையே கற்க வேண்டும். 'கற்றோர்க்கு அழகு கருணையே' என்கிறது நீதிவெண்பா. கல்வியின் மூலம் 'மனித ஆக்கம்' ஏற்பட வேண்டும் என்று கூறியுள்ளார் சுவாமி விவேகானந்தர். கல்வி, ஒருவனை அருள் நிறைந்தவன் ஆக்க வேண்டும் என்கிறார் திருமூலர்.

'விழுமியக் கல்வி' எவற்றைக் கற்பிக்கின்றன? என்பது நம்முன்னுள்ள வினாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பணிசெய்; உயிர்களை நேசி; பகிர்ந்து உண்; பிறர்மீது கரிசனை கொள்; மனத்தை ஒருவழிப்படுத்து நடுவுநிலைமையில் நில்; இன்னா செய்யாதே; இன்சொல் பேசு; நல்லனவற்றையே நாடு; நல்லன வற்றையே புரி; நல்லாருடன் சேர்; இரக்கம் கொள்; கருணை காட்டு; அறங்கள் செய்; கோபத்தைத் தணி; பொறுமையைப் பேணு.

என்பவற்றைக் கற்பிக்கிறது. மனித விழுமியக் கல்வி இவற்றைத் தான் கற்பிக்கிறது. எல்லா மனிதருக்கும் மிகப் பொருத்தமான கல்வியின் சாரமாகி இது மிளிர்கிறது. கற்க வேண்டிய கல்வியைக் கற்றவர்களால் தான் இவ்வாறு ஒழுக முடியும். இக்காலத்தவர்களின் ஒழுக்கம் அவ்வாறு அமையாமைக்குக் காரணம். ஒழுக்கம் சார்ந்த சமய விழுமியக் கல்வியைக் கற்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாமையே ஆகும். மேலே கூறிய விழுமியங்கள் எவற்றையேனும் தற்காலக் கல்வி மாணவர்களுக்குப் புகட்டு கிறதா! இல்லை. ஒழுக்கத்தைக் கற்பிக்காத கல்வி, கல்வியாகமாட்டாது. கல்வி கற்றும், கற்றோர் சமுதாயத்தில் அமைதி இல்லையென்றால், மனிதத்துவம் வலுவிழந்திருந்தால் நீதி, நேர்மை, நியாயம் என்பன ஓரங்கட்டப் பட்டிருந்தால் அந்தக் கல்வியால் ஒரு பயனும் இல்லை. அக்கல்வியைக் கற்ற காலம், கற்பதற்குச் செலவு செய்த பணம், மனித சக்தியாகிய கடும் பிரயாசையுடனான உழைப்பு யாவுமே விரயம் தான்.

மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். 'கற்க மறுப்பவன் வாழ மறுப்பவனாகின்றான்.' 'கல்வியை இளமை தொட்டு மரணபரியந்தம் விடாது கற்க வேண்டும்.' 'பாடை போகினும் ஏடது கைவிடேல்' என்பது முதுமொழி. கல்வி என்னும் போது வள்ளுவர் அடிச் சுவட்டில் நின்று கற்க வேண்டியவற்றைக் கற்றல் என்பதே கல்வி என்ற நிலைப்பாட்டினைக் கொண்டவர்கள் அச்சான்றோர்கள். கல்வி மூலம் சான்றோர்களைக் கொண்ட சமுதாயம் ஒன்றினை உருவாக்குவதே அவர் களின் கல்வி நோக்கமாகும். சூழ்ச்சி, சூது, அண்டிக் கெடுத்தல், ஏமாற்றுதல், திமிர் என்பன மனிதர்களுக்குப் பகையானவை. மனித இனத்திற்கு உரிமை யானவையல்ல. ஆனால், தற்காலத்தில் இவற்றிற்குத்தான் உரிமை கொண் டாடப்பட்டு வருகிறது. இவை யாவும் சுயநலத்தினின்றும் எழும் ஆசைகள். மனித குலத்தை அழிக்க வந்தவை இவை என்பதை, மனித அறிவு ஏனோ மனிதர்களுக்குச் சுட்டிக்காட்ட மறுத்து வருகிறது என்பதுதான் விடுவிக்க முடியாத புதிராக இன்று உள்ளது. எமக்குதவக் கல்வி தான், விழுமியக் கல்விதான் முன்வரவேண்டும். மாணவர்கள் சமூக சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். வெறும் புத்தகப்படிப்பு, விஞ்ஞான அறிவு, உலகாயதத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கின்றன. உங்களைப் பண்படுத்தாமல் விட்டு விடுகின்றன. அன்பு, கருணை, இரக்கம் என்னும் மனித உணர்வுகள் மழுங்கிய நிலையில் மனித உயிர்ப்பு இருக்காது. மனிதர்கள் இயந்திரங்கள் அல்ல. வெறும் ஜடங்களு மல்ல என்பதைக் கல்வி உணர்த்தத் தவறியமையினால் தான் மனித நெஞ் சங்களில் ஈரம் காய்ந்து வருகிறது. பக்திநல மேம்பாடுள்ளவர்களைத் தெய்வச் சேக்கிழார் பெரியபுராணத்தில், 'ஈர நெஞ்சினா' என்பர். இன்றைய மாபெரும் கல்வியாளர்கள் இறைமறுப்புக் கொள்கையுடைய பகுத்தறிவுவாதிகளென் பதால் மனிதச் செழுமை நலம் (ஈரம்) காய்ந்தவர்களாகவேயுள்ளனர். கல்வி உள்ளத்திற்கு வேண்டும். மனித விழுமியங்களை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள உதவுவதாகக் கல்வி அமைதல் அவசியம். அத்தகைய விழுமியக் கல்வியை, ஒழுக்கக் கல்வியை, பண்பாட்டுக் கல்வியை - மானுடம் சார்ந்த கல்வியை - தூய நற்கல்வியை, இன்றைய உலகு வேண்டி நிற்கின்றது என்பதை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

> மாணவர்கள் ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்ளக்கூடிய வாய்ப் பினை அளிக்கும் அதேவேளை அவர்களுக்கு அவர்களுள்ளே மறைந்திருக்கும் தெய்வீகத்தையும் வெளிக்கொணரக்கூடிய இயல்பு களும் உள்ளதாய் அமைந்திருப்பதே முறையான கல்வியாகும்.

என்று கூறுகிறார் பகவான் சத்தியசாயி பாபா. உலகினை அழிவின் விளிம்பிற்குக் கொண்டு செல்லும் துர்ச்சிந்தனைக் கல்வியைத் தடுத்து நிறுத்துவதற்குக் கல்வி முறையில் விழுமியக் கல்வியை இடம்பெறச் செய்ய வேண்டுமென்பது அறிஞர்கள், கல்வியாளர்கள். ஆன்மீக நெறியாளர்கள் ஆகியோரின் கருத்தாக உள்ளது. விழுமியங்களைப் பற்றியும் விழுமியஞ் சார் வரைவிலக்கணங்களைச் சற்று விவரிப்பது இவ்விடத்திலே மிகவும் பொருத்தமானதாகும். விழுமியங்கள் (Values) என்பதற்கு மதிப்பு, பெறுமதி, பெறுமானம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. பணம், பண்டம், பொருள், நிலம் என்பன உலகியல் ரீதியில் மதிப்பும் பெறுமானமும் வாய்ந்தவை. இவற்றைச் செல்வங்கள் என்றும் அழைக்கின்றனர். இவை ஒவ்வொன்றினதும் மதிப்பு, பெறுமானம், பெறுமதி பல்வேறு காரணிகளால் நிர்ணயிக்கப்படு கின்றன. இடத்துக்கிடம் காலத்திற்குக் காலம் அவை மாற்றமடைகின்றன.

'விழுமியங்கள்' என்ற தமிழ்ச் சொல்லினால் உணர்த்தப்படும் ஆங்கிலப் பதம் 'Values' என்பதாகும். விழுமியங்கள் விழுப்பம் (மேன்மை) தரலால், அவை உயர்வானவை. மேன்மையானவை, அதி உன்னதமானவை. எமது உயிரினும் மேலான பெறுமதியுடையவை. விழுமியங்களின் மதிப்பு நம் உயிரைவிட, உறவைவிட, இவ்வுலகில் எவ்வெப்பொருள்களைப் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியும், பெறுமானமும் மிகுந்தன என்று கொண்டாடி மகிழ்கின்றோமோ, அவற்றின் மதிப்பைவிட, பன்மடங்கு உயர்ந்து காணப்படுகிறது.

எனவே, எந்த நிலையிலும் விழுமியங்களை இழந்து விடலாகாது. விழுமியங்கள் தான் மனித அடையாளங்கள். மிருகத்திலிருந்தும் ஏனைய உயிரினங்களிலிருந்தும் மனிதரை வேறுபடுத்திக் காட்டும் குறிகாட்டிகள். 'மனித நாகரிகமானது வெறுமனே செங்கற்களாலும், சாந்தினாலும், இரும்பினாலும், இயந்திரங்களினாலும் கட்டியெழுப்பப்படுவதன்று. மனிதர்களாலும், அவர்களின் நற்குணப் பண்புகளினாலும், நல்லொழுக்கத்தினாலும் உருவாக்கப்படுவதே நயக்கத்தக்க நாகரிகமாகும்' என்பர் இந்திய தத்துவ ஞானி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன். இங்கு நற்பண்புகள், நல்லொழுக்கம் என்று குறிப்பிடப்படுபவை மனித விழுமியங்களாகும். விழுமியங்களை இனங்காணல் என்னும் விடயம் பற்றி ஆராய்வோமானால், டக்கவிஷ் (Dackawish, 1959) என்பவர் பன்னிரு அடிப்படை விழுமியங்களை இனங் கண்டுள்ளார் என்று கூறுவர் கல்வி ஆலோசனை நிபுணர் கலாநிதி குமாரசுவாமி சோமசுந்தரம் (2010:207). அவையாவன:

> மனித நேயம், பெரியோரைக் கனம் பண்ணல், மனித நல்லுறவுத் திறன்கள், மகிழ்ச்சி, நேர்மை, நன்மனப்பான்மை, பணிவுடைமை, சமயத் திறன், உணர்ச்சிக்கட்டுப்பாடு, சாந்தம், உண்மை, நடுநிலைமை.

என்பனவாம். ராம்ஜி (Ramji, 1986) என்பவர் பத்து விழுமியங்கள் மாணாக்கரிடத்திலே விருத்தி செய்யப்பட வேண்டியவை எனச் சுட்டிக் காட்டுகிறார். அவையாவன:

> தைரியம், உண்மை, அன்பு, தொழில், மகத்துவம், சேவை, சுத்தம், மனத்தூய்மை, மரியாதை, சமாதானம், இன்பம் என்பனவாம்.

பகவான் சத்தியசாயி பாபா இனங்கண்டுள்ள அடிப்படை மனித விழுமியங்கள் சத்தியம், தருமம், (நன்னடத்தை), சாந்தி (சமாதானம்), பிரேமை, அஹிம்சை என்பனவாம். இவ்வாறு மேலும் பலர், மனித விழு மியங்களை இனங் கண்டுள்ளமையுடன் சமூக, ஒழுக்க, ஆன்மிக, சமய, கலாசார, பொருளாதார மனித விழுமியங்கள் 'மனவெழுச்சி ஆட்சி'யுடன் தொடர்புபட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒருவரின் 'மன எழுச்சி' ஆட்சியே அவரின் நடத்தையைக் கட்டுப்படுத்தவும், இயக்கவும் பொறுப்பாகவுள்ளது. எனவே மாணவரின் முழுமையான அபிவிருத்திக்கு மனஎழுச்சி ஆட்சி, அறிதலாட்சி, உள - இயக்க ஆட்சி என்பன - ஒருங்கிணைக்கப்பட்டு அவை சமமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தி செய்யப்பட வேண்டும் என்பதை ஆசிரியர் உணர்ந்திருத்தல் அவசியமாகும். மாணவரில் விருத்தி செய்வதற்கு, மனித விழுமியங்களை இனங்காணும் ஆசிரியர்கள் இலங்கை ஒரு பல்லின, பல்சமய, பல்கலாசார சமூகங்களை உள்ளடக்கிய நாடு என்பதைக் கவனத்திற் கொள் ளுதல் அவசியமாகும். இன, மத, பிரதேச சார்பற்ற அதேவேளை முரண் பாடுகள் இல்லாத எல்லாச் சமூகங்களும் ஏற்றுக்கொள்கின்ற, உடன்பாடான நவீன முற்போக்குச் சமூகச் சிந்தனைகளுக்குப் பொருந்தக்கூடிய மனித விழுமியங்களை இனங்காணுதல் இன்றியமையாதது.

**விழுமியஞ்சார் கல்விப் பண்புகள்**

சமாதானம், சகவாழ்வு, நல்ல மனித உறவுகள், நட்பு, இனங்களுக்கிடையே ஒற்றுமை, புரிந்துணர்வு, மனித நேயம், பல்லுயிர் ஓம்புதல், பகிர்ந்து அனு பவித்தல், வளங்களைப் பாதுகாத்தல் என்பன விழுமியஞ்சார் கல்வியி னூடாகவே எய்தப்பட முடியும். சமாதானத்திற்கான கல்வி என்பது மனித விழுமியங்களை விருத்தி செய்வதற்கான கல்வியேயாகும். உடல், உள, விவேக உணர்வு, ஒழுக்க, ஆன்மிக, பண்பாட்டு, கலாசார, சமூக, பொருளாதார விருத்தி, சமநிலையில் ஒருங்கிணைந்த முறையில், மாணவரில் கல்வி ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. விழுமியஞ்சார் கல்விப் பண்புகளையும் கல்வி இணைத்துக் கொள்ளும் போது தான் எதிர்பார்ப்பு நிறைவுபெறும்.

கல்வியின் ஊடாக விழுமியங்களைத் தெரிதல் (அறம் தெரிதல்), விழுமியங்கள் அல்லாதவற்றைத் தெரிதல் (மறம் தெரிதல்) என்பன நிகழ்தல் வேண்டும். அப்போது தான், விழுமியங்களை ஏற்று வாழ்வில் மேற்கொள் ளவும் அல்லாதனவற்றை விலக்கிக் கொள்ளவும் முடியும். கல்விச் செயன் முறையில், கற்றல், கேட்டல், உணர்தல், தெரிதல், நிற்றல் என்பன முட்டின்றி நடைபெறும் போதே பூரண, நிறைவான கல்வியாக அது கொள்ளப்படும். விழுமியக் கல்வியை ஒரு பாடமாகக் கற்பித்தல் பாடசாலைக்கல்வி முறை மையில் அத்துணை சாத்தியமில்லை. ஏற்கனவே கலைத்திட்டத்தில் ஏராள மான பாடங்கள் இடம்பெற்றுள்ளன. இப்பாடத்தையும் சேர்த்துக் கலைத் திட்டத்தை ஒரு சுமையாக்கக் கல்வியாளர்கள் விரும்பவில்லை. எனவே, மனித விழுமியங்களை ஏனைய பாடங்களுடன் இணைத்துக் கற்பித்தலையே கல்வியாளர்கள் விதந்துரைக்கிறார்கள். ஏற்கனவே, நடைமுறையிலுள்ள பாடத்திட்டங்களில் மாற்றங்களைச் செய்யாமல், அவற்றில் புதைந்து காணப் படும் மனித விழுமியங்களை இனங்கண்டு, கற்பித்தலையே இங்கு எதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கப்படுகிறது. ஆசிரியர், (இதனை) நன்கு திட்டமிட்டுப் போதிய முன் ஆயத்தங்களைச் செய்தே இதனை நிறைவேற்ற முடியும். மொழி, இலக்கியம், சமயம், கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, அழகியற் கல்வி, தொழிநுட்பக் கல்வி, வாழ்க்கைத் திறன்கள் போன்ற பாடங்களில் விழுமியங்கள் உள்ளன. அவ்வப்பாடங்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் விழுமியங்களை வெளிக்கொணர்ந்து அவற்றிற்கு அழுத்தம் கொடுத்து மாணவர்களை உணரச் செய்தல் மிக அவசியமாகும்.

பாடசாலையில் நடைபெறுகின்ற இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மற்றும் புறப்பாடவிதானச் செயற்பாடுகள் என்பவற்றின் ஊடாகவும் மனித விழுமியங்களை ஒன்றிணைத்து மாணவர்களுக்குக் கற்பிக்க முடியும். விளை யாட்டுச் செயற்பாடுகள், கலை நிகழ்ச்சிகள், கல்விச் சுற்றுலா, மன்றங்கள், இலக்கியக் கழகங்கள், காலைக்கூட்டம், சாரணரியக்கம், சிரமதானம், சமூக சேவை, சமய விழாக்கள் என்பன மனித விழுமியங்களை மாணாக்கர் விருத்தி செய்து கொள்வதற்கு வாய்ப்பான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுக்கின்றன. பாடசாலையில் கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்து பவர்களும், மாணவர்கள் நேரடி அனபவங்களைப் பெறத் தேவையான சூழலை அமைத்துக் கொள்பவர்களும் ஆசிரியர்களே விழுமியக் கல்வியைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதில் வெற்றி காண்பது என்பது ஆசிரியர் களின் திறமையிலும் அர்ப்பணிப்பிலுமே தங்கியுள்ளது.

இளங் சிறார்களுக்கு விழுமியக் கல்வியைச் செயற்பாடுகள் மூலம் வழங்கி நன்னெறிப்படுத்தும் ஆசிரியர்களும் மற்றும் பாடசாலைச் சமூகத் தினரும், தமது நடத்தைகளில் முன்மாதிரியாகத் திகழ்வதோடு, மனித விழுமியங்களைத் தமது அன்றாட வாழ்க்கையுடனும் இணைத்துக் கொள்ளு தலும் இன்றியமையாததாகும். மனித விழுமியங்கள் உலகியல் வாழ்க்கை யைச் செழுமைப்படுத்துகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள் ளுதல் அவசியமாகும்.

***(நன்றி: பிரதி அதிபர் க. த. இராசரத்தினம்***
***சேவை விதப்பு மலர், 11.06.2011)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

## தற்காலக் கல்விச் சிந்தனைகள்

கல்வியின் மூலம் மனிதன் அடையும் பெறுபேறு அறிவு. மனிதன் அறிவை எங்கிருந்து பெறுகிறான் என்பது வினா. நீர்நிலைகள் இருக்குமிடமும் நீரெடுக்கும் முறையும் தெரிந்தவர்கட்கு நீரைப் பெறுவ தெளிது. அதுபோல், அறிவின் மூலங்கள் எவையென அறிந்தவர்கள் முயன்றால் அறிவை எளி தாகத் திரட்ட முடியும்.

கல்வி நோக்கிலே மேற்கோள், அனுபவம், சிந்தனை, உள்ளுணர்வு என்ற நான்கினை அறிவின் மூலங்களாக மேலைநாட்டு மெய்ப்பொருள் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

கல்வியையும் அறிவையும் பெற்றுக்கொள்வதற்கு ஆய்வு அவசிய மாகிறது. ஆய்வு என்பது மெய்ம்மையினைக் கண்டறியம் புலமைப் பயிற்சி யாகின்றது. விதிகள், சந்தர்ப்பங்கள், தோற்றப்பாடுகள், பண்புகள், அமைப் புகள், கூறுகள், அலகுகள் எவ்வாறு எவற்றை அடியொற்றியும் ஆய்வுகளை அமைக்கலாம். ஆய்வு வரலாற்று அடியொற்றியும் ஆய்வுகளை அமைக் கலாம். ஆய்வு வரலாற்று வளர்ச்சியில் மெய்யியலாளர்களின் பங்கும் பணிகளும் சிறப்பிடங்களைப் பெறுவன. மெய்யியலாளர்கள் தருக்க முறைமை அல்லது அளவையியல் முறைமையைப் (Logical method) பயன் படுத்தி மெய்ம்மையை அறிய முற்பட்டார்கள். அளவையியல் முறைமையை அடிப்படையாகக் கொண்டே கணிதக் கல்வியும் தீவிர வளர்ச்சியுற்றது.

ஆய்வறிவு என்பது தொடர்ச்சியான தேடலை முன்னெடுக்கிறது. தேடல் தொடர்ச்சியாக இருப்பதனால் அதற்கு முடிவில்லை. அறிவின் எல்லைகளை ஆய்வுகள் முன்னோக்கி நகர்த்திய வண்ணமுள்ளன. முடிவில்லாத ஆய்வு பல்வேறு கிளைகளாகப் பிரிந்து இன்று வளர்ச்சியுற்று வருகிறது. அடிப் படைகளை நோக்கிய ஆய்வுகள் பிரயோகங்களை நோக்கிய ஆய்வுகள், பயன்பாடுகளை முன்னெடுக்கும் ஆய்வுகள் என்ற பெருங் கிளைகள் வளர்ச்சி யுற்றன. இயற்கை விஞ்ஞானங்களில் பெரும்பாலும் பரிசோதனை முறை மைகள் வழியாக ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. சமூக விஞ்ஞானங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவையியலை அடியொற்றிய பல்வேறு ஆய்வு முறைகள் வடிவமைக் கப்பட்டு வருகின்றன.

கல்வியியலிலே அறிவைத் தேடுதலே ஆய்வாகிறது. அறிதொறும் அறியாமை புலப்படுவதால் ஆய்வு என்பது தொடர்ச்சியான செயல்முறை யாகிறது. புதிய அறிவை திரட்டுவதற்குரிய ஒழுங்கமைந்த செயல்முறையே ஆய்வில் முன்னெடுக்கப்படுகிறது. ஆய்வு என்ற கல்விச் செயல்முறை அறிந்ததில் இருந்து அறியாததை நோக்கிச் செல்லும் இயக்கவிசையாகிறது. ஆய்வின் வழியாகக் கண்டுபிடிப்புகள் நிகழ்கின்றன. புத்தாக்கங்கள் முன் வைக்கப்படுகின்றன.

உசாவல் விருப்புடன் ஆய்வு தொடர்புடையது. ஆய்வு என்பது புலமை சார்ந்த ஒரு தொழிற்பாடாகின்றது. பிரச்சினைகளை இனங்காண்பதும் பிரச்சி னைகளுக்கு மீள்வடிவம் கொடுப்பதும் ஆய்வின் பணியாகிறது. எண்ணக் கோள்களை (Hypothesis) உருவாக்குதல், தரவுகளைச் சேரித்தல், ஒழுங்க மைத்தல், புடமிடுதல், மதிப்பீடு செய்தல், தொகுத்தல், முடிவுகளை நோக்கி வருதல் என்றவாறு ஆய்வின் பரிமாணங்களை விளக்கினாலும் ஆய்வு அத்துணை எளிதானதன்று. நடைமுறைகளில் இருந்து கோட்பாடுகளை நோக்கி நகர்தலும் கோட்பாடுகளில் இருந்து நடைமுறைகளை அணுகுதலும் ஆய்வின் பிற பரிமாணங்களாகின்றன. ஆய்வின் வழியாகக் கோடுகள், விதிகள் (Laws) கண்டறியப்படுதலும் ஆய்வின் மேற்கிளம்பல் வடிவங்களா கின்றன. ஆய்வின் பிரயோசனங்களிலே பயனுடைமை (unitility) உட்பொதிந் திருக்கும். ஆய்வான அறிவின் முன்னரங்க விளிம்பை மேலும் முன்நோக்கி நகர்த்தும். அறிவுத் தேட்டத்துக்கு அது மேலும் அடிப்படைப் பங்களிப்பைச் செய்யும்.

## சிறந்த ஆய்வின் பயன்கள்

1. ஆய்வின் நோக்கங்களும் குறிக்கோள்களும் தெளிவாக வரையறை செய்யப்பட்டிருக்கும்.
2. போதுமான தகவல்கள், தரவுகள் முதலியவற்றின் திரட்டல்களை உள்ளடக்கியிருக்கும்.
3. பொருத்தமான முறையியல்களைப் பயன்படுத்தியதாக இருக்கும்.
4. நன்கு திட்டமிடப்பட்டதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புறவயமான அணுகுமுறைகளையும் பக்கம் சாராததும் முற்சாய்வு கொள்ளாததுமான பண்புகளையும் உள்ளடக்கியிருக்கும்.

6. போதுமானதும் பொருத்தமானதுமான தரவுகளில் இருந்தே முடிவு களை அண்மித்ததாயிருக்கும்.

7. முன்னர் ஒளிவீசப்படாத தரிசனங்கள் மீது ஒளி பாய்ச்சப் பட்டிருக்கும்.

8. ஆய்வுக்குரிய தருக்கத் தெளிவுடையதாயிருக்கும்.

9. ஆய்வுக்குரிய மொழிச் செறிவு மற்றும் மொழிக் கட்டுமானம் முதலிய வற்றைக் கொண்டிருக்கும்.

10. ஆய்வின் சமர்ப்பணம், செவ்விதாக அமைந்திருக்கும்.

கல்வியில் 'ஆய்வறிவு' என்பது தொடர்பாக இன்று நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல. ஆய்வுக்குரிய போதுமான பயிற்சிகள் முன்னெடுக்கப் படாமை, ஆய்வுப் பண்பாடு (Research culture) வலிதாகக் கட்டியெழுப்பப் படாமை, ஆய்வு மேற்பார்வைக்குரிய ஆளணியின் போதாமை, ஆய்வுக் குரிய ஊக்கல் போதாமை, அறிவு வசதிகளிலும் வளங்களிலும் வற்கடம் காணப்படுதல், தகவல்கள் மற்றும் தரவுகள் பெறுதலிலே பல்வேறு இடர்ப் பாடுகள் காணப்படுதல் ஆகிய பிரச்சினைகள் பற்றியும் இன்று ஆய்வாளர்கள் மனங்கொள்ள வேண்டியுள்ளது.

கிரேக்க நாகரிகம், மனித வளத்தைத் திரட்டிய நகர அரசுகளைக் கொண்ட தாகவும் உலக நாகரிக வளர்ச்சியின் முன்னோடியான தளமாகவும் மனித நாகரிக வளாச்சியின் தொட்டிலாகவும் அமைந்தது. அதன் வெளிப்பாடு மெய்யியல், அரசியல், அரங்கியல், கட்டடக்கலை, கல்வியியல் முதலாந் துறைகளில் பல நிலைகளிலே துலங்கலாயிற்று.

'கல்வித் திட்டமிடல்' என்ற எண்ணக்கரு பிளேட்டோவிலிருந்து வளர்ச்சி யடைகிறது. பல நிலைகளையும் உள்ளடக்கிய அகலவிரி பண்புகள் கொண்ட, வரன்முறை தழுவிய நாடு முழுவதையும் உள்ளடக்கிய 'கல்வித் திட்டம்' ஒன்றை உருவாக்கியதன் வாயிலாகக் கல்வித் திட்டமிடல் வரலாற்றிலே தமக்கென உரிய தடத்தைப் பதித்துக் கொண்டார். கல்விக் கோட்பாட்டிலும், கலைத்திட்டத்திலும் நோக்கு (Aim) என்பதை வரையறுத்துக் கூறும் மரபையும் இவர் ஆரம்பித்து வைத்தார். இவரின் பின்னர் தான் கல்வியியலில் நோக்கு, குறிக்கோள், இலக்கு ஆகியவை விதந்து பேசப்படலாயிற்று. 'தொடர்கல்வி' என்ற எண்ணக்கருவும் பிளேட்டோவினால் வலியுறுத்தப்பட்டது. இக்கருத்தின் மிகையான வடிவத்தைத் திருவள்ளுவரிடத்தும் கண்டுகொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எழுபிறப்பும் கல்வி தொடரும்' என தொடர் கல்விக்கு மிக விரிவான விளக்கத்தை வள்ளுவர் தந்தார். கருவிலிருந்து மனிதர் உலகில் வாழும் காலம் வரை கல்வி தொடரும் என்ற பிளேட்டோவின் கருத்துரை நவீன தொடர் கல்விக்குரிய முன்னோடிச் சிந்தனையாயிற்று.

கல்வியிலே மூன்று பெருங் காரணிகள் செல்வாக்குச் செலுத்துவதனை ரூசோ குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

1. இயற்கையாக ஒரு மனிதருக்குக் கிடைத்த கொடைகள்
2. இயற்கைச் சூழல்
3. சமூகச் சூழல் என்பனவாம்.

மனிதர் நல்லவர்களாகவே பிறக்கிறார்கள். சமூகத்தின் ஊழல் மனிதரை மாசுபடுத்தி விடுகிறது.

ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறு வேறான இயற்பண்பு வாதச் சிந்தனைகளை வெளியிட்ட ரூசோ பிரான்சிய சமுதாயத்தின் பழமைவாதக் கருத்துக்களையே தமது பெண்கல்விச் சிந்தனைகளில் வெளியிட்டார். ஆண்களுக்கு அனுசரணையாகவும் உதவியாகவும் இருக்கும் வகையில் அவருடைய பெண் கல்வி சிந்தனைகள் அமைந்தன. பெண்களுக்கு இளம் பருவத்தில் ஆண்கள் மீது அன்பு செலுத்துதல், வழிகாட்டுதல், ஒத்தாசை புரிதல் முதலிய துறைகளில் கல்வி வழங்கப்படுதல் வேண்டும் என்பது அவரது கருத்து. பெண்களின் பலம் குன்றிய இயல்பு இயற்கையானது என்பது அவரது நோக்கு.

இயற் பண்புவாதம் பல பிரிவுகளைக் கொண்டது. பொறிமுறை இயற் பண்பு வாதம் (Mechanical Naturatism) மனித இயற் பண்புகளைப் பொறி முறையாக விளக்குவதுடன் மனித யந்திரத்தின் செயற்பாடுகளைக் கல்வி வாயிலாக முழுமை கொள்ள எண்ணுகிறது. உயிர் சார்ந்த இயற்பண்பு வாதம் இயற்கைச் சூழலுடன் இசைவுற்று வாழ்வதற்குரிய கல்வியை வலி யுறுத்துகிறது. ரூசோ வலியுறுத்திய இயற்பண்புவாதம் (Social Maturalism) ஆகும்.

இன்றைய பாடசாலைகளும் பல்கலைக்கழகங்களும் இம்சை செய்யும் நிறுவனங்களாகி விட்டன. பாடசாலையும் பல்கலைக்கழகமும் மனத்தின் கொல்களமாக (Slaughter house) மாறிவிட்டன. கொமீனியஸ் (1572-1670) பாடசாலைக் கல்வியை மீளமைத்து அனைவருக்கும் கல்வியை வழங்க முடியும் எனக் கருதினார். வீட்டிலும் பார்க்க பாடசாலையே கல்வியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கும் முன்னெடுப்பதற்கும் பொருத்தமான நிலையம் என்று கண்டார். **பல்கலைக்கழகங்களிலே கல்வித் தகைமையும் கால மூப்பும் கைவிடப்பட்டு விட்டன.**

பாடசாலைகளின் செயற்பாடு வருமாறு அமையும்.

1. விஞ்ஞானம், கலை முதலாம் பாடங்களில் மாணவரின் திறன்களை வளர்த்தல்.
2. மொழியாற்றல்களை வளர்த்தல்.
3. நல்லொழுக்கங்களை வளர்த்தல்.
4. இறை நம்பிக்கையைப் பலப்படுத்தல்

அனைத்தறிவுக் கொள்கையைக் கட்டியெழுப்புவதிலேயே பாடசாலைகளுக்குச் சிறப்பார்ந்த பங்குண்டு. கல்வி மொழி தாய்மொழியாக இருத்தல் வேண்டுமென வலியுறுத்திய கொமீனியஸ் கற்பித்தலிலே பாட நூல்கள் மற்றும் துணை சாதனங்கள் ஆகியவற்றின் தேவைகளை விதந்து குறிப்பிட்டுள்ளார். கல்வியின் நோக்கம், மனித வாழ்வின் நோக்கம் ஆகியவை இறைவனை அடைதலும், நித்திய இறையின்பத்தை நோக்கி நகர்தலும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஜோன்டூயி (1859 -1952) யின் கல்விச் சிந்தனைகளில் அனுபவமே ஆழ்ந்து வற்புறுத்தப்படுகிறது. ஒரு பிரச்சினையின் சூழமைவு பற்றியும் அது தொடர்பான தெறிசிந்தனையை வளர்த்தலும் அறிவின்பாற்படும். புலன் தரவுகளிலும் மேலான அமைப்பை அறிவு கொண்டுள்ளது. கட்டுப்படுத்திய உற்று நோக்கல் பரீட்சித்தல், பரிசோதனைக்கு உட்படுத்தல் முதலியவற்றை அறிவு உள்ளடக்கி நிற்கிறது. விசாரணையின் விளைவாக அறிவு திரண்டெழுகிறது. வலுப்பெறுகிறது. சமூக முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அறிவு பரீட்சிக்கப்படத்தக்கது. சூழலுக்குரிய இசைவாக்கல் நிகழ்ச்சியில் மனித நுண்மதி ஆற்றல் சிறப்பார்ந்த இடத்தை வகிக்கிறது.

கல்வி என்பது அனுபவங்களை மீள் ஒழுங்குபடுத்தலும் மீள் கட்டுமானம் செய்தலுமாகும். கல்வியின் நோக்கம் மாணவரின் வலுவையும் திறன்களையும் விருத்தி செய்தலாகும். சமூக வினைத்திறனைக் கல்வி மாணவரிடத்து வளர்க்க வேண்டும். ஜனநாயக விழுமியங்களை அது மாணவரிடத்தும் பதிவித்தல் வேண்டும். மாணவரிடத்துக் கூட்டுறவும் இசைவாக்கமும் உருவாக்கப்படல் வேண்டும். ஜனநாயக சமூகத்தின் சிற்றுருவாகப் பாடசாலை முகிழ்த்தெழுதலே சிறந்தது. பாடசாலைச் செயற்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாக மாணவரிடத்துப் பொறுப்பேற்கும் பாங்கும் அறப்பாங்கும் வளர்க் கப்படல் வேண்டும்.

பயன்கொள் கல்வி சம சந்தர்ப்பத்தை வழங்குதலையும் எதிர்கால வாழ்க் கைக்கு மாணாக்கரைத் தயாரித்தலையும் அடிப்படைகளாகக் கொண்டது. மாணவர்களின் இயல்பூக்கங்களுக்கும் திறன்களுக்கும் ஏற்றவாறு கலைத் திட்டமும் கற்பித்தலும் அமைதல் வேண்டும். சமூகப் பரிமாணத்தை நோக்கு கையில் சமூகப் பங்குபற்றலுக்குரிய கல்விநிலைகளையும் அனுபவங் களையும் கலைத்திட்டத்தினூடாக வழங்குதல் வேண்டும்.

கலைத்திட்டம் மாணவரின் வளர்ச்சிப் படி நிலைகளுக்கு ஏற்றவாறும், அவர்களது விருப்பங்களுக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டு, கருத்துப் பரி மாற்றம் கண்டுபிடிப்பு ஆக்க மலர்ச்சி, கலைத்துவ வெளிப்பாடு ஆகியவற்றை ஊக்குவித்தல் வேண்டும். வாசிப்பு, எழுத்து, கணிப்பு, உடல் வேலைகள், விஞ்ஞானம், இசை மற்றும் கலைகளை உள்ளடக்கியிருத்தலே சிறந்தது. ஆனால் இவைகளை மாணாக்கர்களுக்கு ஒரேயடியாகக் கற்பிக்க வேண்டிய தில்லை. மாணாக்கரது உளமுதிர்ச்சிக்கேற்றவாறு லாவகமாக அறிவை வழங்கக்கூடிய நெகிழ்ச்சிப் பாங்கு கலைத்திட்டத்துக்கு அவசியமாகிறது. மாணாக்கரின் சமகால நடப்பியல் அனுபவங்களுடன் கலைத் திட்டமும் கற்பித்தலும் தொடர்பு பட்டிருத்தலே ஏற்புடையது. குறிப்பிட்ட பருவத்தின் வாழ்வியல் அனுபவங்களைத் தழுவிக் கலைத்திட்டம் இயங்குதலே பொருத்த மானது. புவியியல், வரலாறு, கணிதல், மொழி போன்றவற்றைக் கற்பிக்கும் பொழுது வாழ்வியல் அனுபவங்களுடன் ஒத்திசைவை ஏற்படுத்துதலே சிறந்தது.

> பள்ளிக்கூடக் கலைத்திட்டம் மற்றும் பல்கலைக்கழகக் கலைத்திட்டம் ஆகியவற்றிலே அழகியற் பாடங்களுக்கு முன்னுரிமை கொடுத்தமை, தொல்சீர் இசை நடனம் முதலியவற்றுக்குக் கொடுத்த முக்கியத் துவத்தைக் கலைத்திட்டத்தில் நாட்டம் இலக்கியத்துறை, இசை, நடனங்களுக்கு வழங்கியமை, கலைத்திட்டத்தினதும், இணைந்த கலைத்திட்டத்தினதும் செயற்பாடுகளில் ஆற்றுகைக்கு முன்னுரிமை வழங்கியமை, அழகியலையும், இறையியலையும், இயற்பண்பு நெறியையும் ஒன்றிணைத்தமை தாகூரின் அழகியற் கல்விப் பங்களிப் புகளாகக் கொள்ளப்படுகின்றன என்பார் பேராசிரியர், முனைவர் சபா. ஜெயராசா (2004:42).

இலக்கியத் திறனாய்வின் பரிமாணங்கள் கடந்த 50 ஆண்டுகளாக அதிகம் பேசப்பட்டும், வியாக்கியானம் செய்யப்பட்டும் வந்துள்ளன. பல்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனைக் கூட்டங்களின் வளர்ச்சியும் கல்விக் செயற்பாடுகளின் வளர்ச்சியும் திறனாய்வுக் கலை என்ற நிலையிலும், விஞ்ஞானம் என்ற நிலையிலும் வளர்த்து வந்துள்ளன. விஞ்ஞானத்தின் புறவயத் தன்மைகளையும் கலையின் அகவயத் தன்மைகளையும் உள்ளடக்கியும் நிராகரித்தும் திறனாய்வு வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

மனிதர்களுடைய வாழ்நிலை இருப்பில் இருந்துதான் சிந்தனைகளும் சிந்தனை ஒழுங்கு முறையால் எழும் கல்வியும் மனிதனின் தொழிற்பாடு களும் நிர்ணயிக்கப்படுகின்றன. நடைமுறை, சிந்தனை, கல்வி ஆகியவை ஒன்றுடன் மற்றையது இடையுறவு கொண்டதாகவும் பிரிக்கப்பட முடியாத வையாகவும் உள்ளன. இந்த இணக்கப்பாடு இருத்தலினால் கலைகளை விஞ்ஞானத்திலிருந்து பிரித்துவிட முடியாது. அவ்வாறே விஞ்ஞானமும் மனித இருப்பையும் உணர்வுகளையும் மீறி உருவாதல் சாத்தியமன்று.

மனித இருப்பு, சிந்தனை, உணர்வு, நடைமுறை அனைத்தையும் தொடுத்து நிற்பது கல்வியாகிறது. ஆனால், கல்விக்கும் திறனாய்வுக்குமுள்ள தொடர்புகள் தமிழ் மரபில் அதிகம் நோக்கப்படவில்லை. அப்பட்டமான உண்மைகளைத் தெளியவைப்பதற்கும் மறைத்து உருக்குலைப்பதற்கும் கல்வி கருவி யாக்கப்படுகிறதென்றால், குறித்த கல்வித் தொகுப்பைப் பயன்படுத்தும் திறனாய்வாளரின் வாழ்நிலை இருப்பையும் தெறிப்பையும் ஆழ்ந்து நோக்க வேண்டியுள்ளது. திறனாய்வாளர் தமது கல்வியைப் பயன்படுத்திச் சாதாரண மக்களுக்குத் தெற்றெனத் தெரியும் தேர்வுகளை மறைக்கவோ, திரிவுபடுத்தவோ முயலும் பொழுது அம்மக்களின் பட்டறிவு அல்லது அனுபவக் கல்வி வலிமையான ஆயுதமாகி விடுகிறது. பட்டறிவும் கூட்டு மொத்தமான கல்வித் தொகுப்பின் தவிர்க்கமுடியாத பரிமாணம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதனாலேதான் பெரும் எழுத் தாளர்களும் பெரும் திறனாய்வாளரும் சாதாரண மக்களால் நிராகரிக்கப் படுதல் உண்டு.

கல்வி, கேள்வியாகிய இரண்டும் அறிவுதரும் சிறந்த மூலங்களாகக் கருதப்பட்டன என்பதற்குத் திருக்குறளின் அதிகாரப் பகுப்பு சான்று பகர்கிறது. கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்ற வரிசைமுறை கல்வி, கேள்வியின் காரணமாக அறிவு விளைகிறது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

நூற்கல்வி, அனுபவக் கல்வி என்க கல்வி இருவகைப்படும். நம் அறிவின் பெரும் பகுதி நூற் கல்வியால் விளைகிறது எனலாம். சங்க காலம் தொட்டே முறையான கல்வியாக நூற் கல்வி கற்பிக்கப்பட்டு வந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணாக்கர்களைக் கூட்டி முறையாக வேதம் கற்பிக்கும் ஆசிரியரை 'ஆரணவு வாத்தி' என்று மணிமேகலை குறிப்பிடுகிறது. திரிகடுகத்தில் வரும் 'கணக்காயர்' என்ற சொல்லும் ஆசிரியரைக் குறிக்கும். கல்வியைக் காட்டிலும் கேள்வி சிறப்பு மிக்கதாகக் கருதப்படுகிறது. 'கேள்வி' என்பது அறிவைத் தரும் மூலமாக மட்டுமன்றி அறிவைச் செம்மைப்படுத்தும் கருவியாகவும் இருக்கிறது.

கல்வி, கேள்வி எனும் மேற்கோள்களை மூலங்களாகக் கொண்டு அறிவைப் பெற முயலும்போது மிகுந்த எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். தக்கவர்களால் எழுதப்பட்ட நூலும், தகுதிவாய்ந்த தேர்ந்த சிந்தனையாளர்களின் வாய்மொழிகளுமே ஏற்புடைய அறிவைத் தரும். சிறந்த மேற்கோள்களாகக் கருதப்படும். எந்தத்துறையில் அறிவைப் பெற முற்படுகிறோமோ அந்தத் துறை வல்லுநர்களின் மொழிகளை மேற்கோள்களாகக் கொள்வது சிறப்பு. மேலைநாட்டில் அறிவாராய்ச்சியாளர்கள் மேற்கோளாளனுடைய அறிவின் ஆழ் அகலம் பற்றி விரிவாகப் பேசுகின்றனர். ஆனால் 'ஒழுக்கம்' பற்றி அவர்கள் கூறுவதில்லை. ஆராய்ச்சி அறிவுடையோரின் சொற்களை மேற்கோளாகக் கொள்ளலாம் என்பதே அவர்களுடைய துணிபு. ஆனால், தமிழர்கள் அறிவை மட்டும் அளவுகோலாகக் கொள்ளாமல் ஒழுக்கத்தையும் உடன் சேர்த்துக் கருதியுள்ளனர்.

'சிந்தனை' என்பது மனத்தின் செயல்; மனம் செயல்படவில்லையென்றால் மனிதனால் அறிவைப் பெற முடியாது. மனம் பிறழ்ந்தவர்களால் சிந்தனை செய்ய முடியாத காரணத்தால் அறிவு பெற முடியவில்லை. வயது பல கடந்தும் சரியாகச் சிந்திக்க முடியாதவர்களை மனவளர்ச்சியில்லாதவர்கள் என்று உளவியல் கூறுகிறது. எனவே அறிவுக்கு ஆதார மூலமாக இருப்பது சிந்தனையென்றும் அது இல்லையென்றால் அறிவு இல்லையென்றும் பகுத்தறிவு வாதிகள் (Rationalists) கூறுகின்றனர்.

'அறிவு' அனுபவத்துடனும் அறத்துடனும் தொடர்புபட்டது. அறத்திற்கு அடிப்படையாக இருப்பது பிறரையும் தன்னைப்போல் கருதும் பண்பு. தீமைகளைத் தேடியோடும் மனிதனின் வாழ்வைத் திசைதிருப்பி நன்மையின்பால் செலுத்தித் தெய்விக வாழ்க்கைக்கு வழி செய்வது அறிவால் ஏற்படும் அறப்பயன்.

### கல்வியறிவாலேற்படும் ஆன்மப் பயன்

அறத்திற்கு அடிப்படையாக இருப்பது பிறரையும் தன்னைப் போல் கருதும் பண்பு. பிறருடைய துன்பங்களைத் தன் துன்பமாகக் கருதுபவன் அத்துன்பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் களைய முற்படுவான். பிறர்க்குத் துன்பந்தரத் தானும் அஞ்சுவான். இவ்வுணர்வு கொண்ட மக்கள் வாழும் சமுதாயம் அறத்தாறு செல்லும் அமைதிமிக்க சமுதாயமாகும். இவ்வுணர்வை எழுப்பவும் வளர்க்கவும் அறிவு துணை செய்ய வேண்டும்.

*அறிவினாலாகுவதுண்டோ பிறிதின் நோய்*
*தன் நோய் போல் போற்றாக் கடை* (குறள்: 315)

'பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்பமாக உணர்ந்து அத்துன்பத்தைக் களைய முற்படாத அறிவால் ஆகக் கூடிய பயனொன்றும் இல்லை' என்கிறார் வள்ளுவர்.

கட்டுப்பாடின்றிப் புலன்களின் போக்குக்கு ஏற்ப வாழ்வதால் தனி மனிதனிடம் தன்னைப் போக்கும் சமுதாயத்தில் குழப்பமும் நிலவும். அறத்தின் வழிச் செல்லும் சமுதாயத்திலோ கட்டுப்பாடும் தெளிவும் இருக்கும். எனவே புலன்களின் போக்கைக் கட்டுப்படுத்துவது அறத்திற்கோர் அடிக்கல். 'மதங்கொண்ட யானை போல் மனிதனை அலைக்கழிக்கும் புலன்களை அறிவெனும் அங்குசத்தால் அடக்க வேண்டும் (குறள்: 24:1). புலன்களைத் தடுத்து நிறுத்துவதோடு நில்லாமல் நன்மை விளையும் பொருட்டுச் செயற் படுத்தவும் வேண்டும். தீயனவற்றை ஒதுக்குவது அறிவின் எதிர்மறைப் பயன். இரண்டும் அறம் எனும் நாணயத்தின் இரு புறங்கள். தீமைகளைத் தேடியோடும் மனிதனின் வாழ்வைத் திசைதிருப்பி நன்மையின்பால் செலுத்தித் தெய்விக வாழ்க்கைக்கு வழி செய்வது அறிவால் ஏற்படும் அறப்பயன்.

அறிவின் பயனாகப் பொருளும் அதன் பயனாக இன்பமும் கிட்டும் என்பதை எல்லா நாட்டுச் சிந்தனையாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். பொருளைப் பெருக்குவதும் இன்பத்தைக் கூட்டுவதும் அறிவின் முடிந்த பயன் என்று மேலைநாட்டுச் சிந்தனையாளர் பலரும் கருதுகின்றனர். இக்கருத் தினை ஏற்பவர்கள் பொருளையும் இன்பத்தையும் தேடி ஓடுவதிலேயே தம் வாழ்நாளைக் கழிக்கின்றனர். ஆனால், கீழைநாட்டுத் தத்துவ அறிஞர்கள், குறிப்பாக இந்திய நாட்டுத் தத்துவ வாதிகள், ஆன்ம விடுதலையே அறிவின் இறுதிப் பயன் என்று குறிப்பிடுகின்றனர்.

பிறப்பு - இறப்பு எனும் முனைகளைக் கொண்ட நச்சு வளையத்தில் ஆன்மா சிக்கித் தவித்துச் சுழல்கிறது. இப்பிறவிச் சூழலை விட்டு வெளியேறி மீண்டும் பிறவாமல் இருப்பதற்கான வழியில் மனிதனை கடத்திச் செல்வதே அறிவின் தத்துவப் பயன். அறியாமையின் காரணமாகவே ஆன்மா பிறவிச் சூழலில் சிக்கி உழல்கின்றது. அறியாமை அகன்று விட்டால் அறிவுச் சுடரான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மா அறிவு மயமான இறைவனை அடைவதற்குத் தடையேதும் இல்லை. கல்வி கேள்விகளால் அறியாமை அகலும். மெய்ம்மை இல்லாதவற்றை மெய்ம்மையென மயங்கிச் சுழன்ற ஆன்மா விடுதலை பெற்று இறைவன் திருவடி தேடும். 'அறிவு மயமான இறைவனை நோக்கி ஆன்மாவைச் செலுத்தாத கல்வியினால் பயனேதுமில்லை என்பது வள்ளுவர் முடிவு. இதனை,

*கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழா அர் எனின்* *(குறள் : 2)*

என்று இரண்டாவது குறளிலேயே அழுத்தந் திருத்தமாகக் கூறிவிட்டார்.

பிறப்புக்குக் காரணமாகவும் ஆன்ம விடுதலைக்குத் தடையாகவும் இருப்பது அறியாமையே. நிலையற்ற உலகியலை நிலையானதென்று எண்ணி மயங்குவது, தோற்றங்களை உண்மையெனக் கருதிப் பிறழ்வதும் அறியாமையின் விளைவு. ஒளி கண்ட இருள் போல் மெய்யுணர்வு கண்டு அறியாமை அகலும். அம்மெய்யறிவைத் 'தத்துவஞானம்' என்று வடநூலால் கூறுவர். 'பிறப்புக்குக் காரணம் பேதமை. அதனைக் களைய வேண்டுமானால், மாற்றமும் திரிபும் கொண்ட நிலையிலா இவ்வுலகியலைக் கடந்து மாறாது நிலைத்திருக்கும் முழுமுதற் பொருளைக் காண வேண்டும். இச் செம்பொருட் காட்சி பேதமையை அகற்றிப் பிறவியை அறுத்துவிடும் என்னும் பொருளிலே,

*பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னும்*
*செம்பொருள் காண்ப தறிவு* *(குறள்: 358)*

என்னும் குறளை யாத்துள்ளார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார்.

கல்வி கேள்விகளால் பொருள்களின் தோற்றங்களைக் கடந்து மெய்ம்மையை உணர்ந்தவர்கள் தத்துவஞானிகள் என்றழைக்கப் படுவர். அத்தகையோர் உலகியல் வாழ்வின் நிலையாமையையும் நிலையாப் பொருள்பால் ஏற்படும் பற்றுகளையும் பற்றுகளால் வரும் துன்பங்களையும் நன்கறிவர். அத்தகைய மெய்யறிவு உடையோர் மீண்டும் இவ்வுலகியல் வாழ்வுக்கு வர விரும்பமாட்டார்கள்' என்னும் கருத்திலே,

*கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்*
*மற்றீண்டு வாரா நெறி* *(குறள்: 356)*

என்ற குறளை எழுதியுள்ளார் செந்நாப்போதர். மெய்ப்பொருட் காட்சியில் நிலையான இன்பத்தைச் சுவைக்கும் அவர்கட்குப் பிறவாமையே பெரும் பேரின்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறப்பறுத்தலை இந்திய நாட்டுத் தத்துவ அமைப்புகள் 'வீடு பறு' என்று சிறப்பிக்கின்றன. அறியாமையின் விளைவாக ஏற்படும் பற்றுகள் 'வீடு பேற்றுக்கு'த் தடையாக இருக்கின்றன. 'நான்' எனும் செருக்கும் 'எனது' என்ற பிணைப்பும் பிறவிச் சுழலிலிருந்து ஆன்மா விடுபடி முடியாதபடி தடுக்கின்றன. 'யான்', 'எனது' என்று சொல்லப்படும் அகப்புறப் பற்றுகளை அறுத்துவிட்டால் உலகியல் உழற்சியிலிருந்து ஆன்மா வீடு பெறும். தேவர் கட்கும் கிட்டாத வீடுபேறு கிட்டும்' என்னும் கருத்துப்பட,

*யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு*
*உயர்த்த உலகம் புகும்* *(குறள்: 174)*

என்னுங் குறளை எழுதியுள்ளார் திருவள்ளுவர். மெய்யறிவு, பற்றுகளை அறுக்கத் துணை செய்யும்.

தன்னைத் தவறாக உணர்ந்து கொள்வதே தன்முனைப்புக்குக் காரணம். தன்னையும் தன் அறிவையும் சரியாக உணர்ந்தவனிடம் தன் முனைப் பிருக்காது. தன் அறிவையும் அனுபவத்தையும் முடிந்த முடிவாகக் கருது வதால் அறிவுச் செருக்கு ஏற்படுகிறது. அறிவுக்கு வரம்பில்லை; எல்லை போடவும் முடியாது. 'அறிதொறும் அறியாமை கண்டற்றால்' (குறள்: 1110) என்ற குறள் மொழி அறிவின் வரம்பின்மையைக் காட்டுகிறது. அறிவெனும் வாக்கியத்தில் கால் புள்ளி, அரைப்புள்ளி போன்ற நிறுத்தக் குறிகளைக் காணலாம். ஆனால் அவ்வாக்கியம் முடிவுற்றதெனச் சொல்லும் முற்றுப்புள்ளி இல்லை என்பது வரலாற்றுண்மை. அனுபவமும் முடிவுற்றது. தன் அனுப வமே முழுமையானதென எவரும் தருக்கிக் கொள்ள முடியாது.

தவறான அறிவு பற்றுகளை வளர்க்கும். நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாலும் பொருளல்லாதவற்றைப் பொருளென்றுணரும் மயக்க அறிவாலும் செல்வச் செருக்கும் பற்றும் ஏற்படுகின்றன. பற்றுக்கள் துன்பத்திற்குக் காரணமாகின்றன. 'எந்த அளவு பற்றுகளை அறுக்கிறோமோ அந்த அளவு துன்பத்திலிருந்து விடுபடுவோம்' என்று கூறுகிறது குறள்.

*யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்*
*அதனின் அதனின் இலன்* *(குறள்: 341)*

அறியாமையின் கூறுகளான விருப்பு, வெறுப்பு, மயக்க உணர்வு ஆகியவை அழிந்து விட்டால் அவற்றின் விளைவுகளான வினைப்பயன்கள் இரா. வினைப்பயன் அற்று விட்டால் பிறவிச் சுழலிலிருந்து ஆன்மா விடுபடும். பிறவா நிலை எய்தும் (குறள்: 360).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையாமையை உணர்த்திச் செருக்கை அழிப்பதும் பற்றுகளை அறுப் பதும் தத்துவ அறிவின் செயல்கள். தத்துவ அறிவின் பயனாகச் 'சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்' (குறள்:359) பிறவி நோய் ஒருவனைச் சாராது என்கிறார் வள்ளுவர். எனவே, ஆன்ம விடுதலையே மனிதனின் இறுதிக் குறிக்கோள் என்றும், அதற்கு வழி செய்வதே அறிவின் தலையாய பயன் என்றும் நன்கு தெளியலாம்.

**முடிவுரை**

'கல்வியறிவு' நாளும் விரிந்து கொண்டிருக்கும் ஒரு பெருந்தொகுதி. அதனுள் பல வகை அறிவுகள் உண்டு. அறிவின் இயல்புக்கும் வகைகளுக்கும் ஏற்ப அறிவைப் பெறும் வழிகளும் வேறுபடும். திரட்டும் அறிவின் இயல்புக்கேற்ப அதனைச் சோதித்துப் பார்க்கும் ஏற்புடைமை கோட்பாடு மாறும். இவ்வேறு பாடுகளை முரண்பாடுகளாகக் கருத வேண்டுவதில்லை. அறிவு தரும் உலகியல் பயன்களெல்லாம் மனித சமுதாயத்தின் அமைதியான இனிய வாழ்வுக்குத் துணை செய்வனவாக இருக்க வேண்டும். உலகியல் பயன்களை ஆன்ம விடுதலைக்கான படிகளாக்கிக் பிறவித் துன்பத்தைப் போக்குவதே மனித வாழ்வின் இறுதிக் குறிக்கோள். ஆன்ம விடுதலையே அறிவின் முடிந்த பயன். எனவே, இக்கட்டுரையிலே வந்துள்ள விளக்கங்களின்படி தற்காலக் கல்விச் சிந்தனைத் தடம் இயல்வதைக் கல்வி உயர்கல்வி நிறுவனங்கள் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் என்பது பெறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

# மனித வாழ்க்கை விழுமியங்கள்

**கல்வி ஆலோசனை நிபுணர் பேரறிஞர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்களின் விழுமியக் கல்விச் சிந்தனைகளும் மனித வாழ்க்கை விழுமியங்கள் என்ற நூலும்**

**(பேராசிரியர் கலாகீர்த்தி சி. தில்லைநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் நிகழ்த்திய நூல் மதிப்பீட்டுரை)**

## தமிழ் ஆசிரிய மரபு

ஈழத்துத் தமிழாசிரிய மரபைப் பொது வழக்கில் 'நாவலர் மரபு' என்பர். கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, ராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை, த. கைலாசபிள்ளை, பொன்னம்பலபிள்ளை, மட்டுவில் வேற்பிள்ளை, அ. குமாரசுவாமிப் புலவர், வித்துவ சிரோமணி சி. கணேசையர், காசிவாசி செந்திநாதையர், சுவாமி விபுலானந்தர், பண்டிதர் இ. நமசிவாயம், உபஅதிபர் பொ. கைலாசபதி, பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, இரசிகமணி கனக. செந்திநாதன், காரைநகர் கலாநிதி க. வைத்தீஸ்வரக் குருக்கள், வித்துவான் க.கி. நடராஜன், வித்துவான் இ. ஆறுமுகம், வித்துவான் சி. குமாரசாமி, துர்க்காதுரந்தரி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர்கள், கலாநிதிகள் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், ஆ. சதாசிவம், பொ. பூலோகசிங்கம், சு. வித்தியானந்தன், க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, நா.சுப்பிரமணியன், க.அருணாசலம், சா. ஜெயராராசா, எஸ். சந்திரசேகரம், ச. முத்துலிங்கம், அ. சண்முகதாஸ், பண்டிதமணி கலாநிதி மு. கந்தையா, 'ஆத்மஜோதி' நா. முத்தையா, சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம், சித்தாந்தசரபம் க. கணபதிப்பிள்ளை, சித்தாந்த வித்தகர் (பொறியியலாளர்) கலாநிதி க. கணேசலிங்கம், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் என வருவது ஈழத்துத் தமிழாசிரியர் (தமிழறிஞர்) மரபு: இது இலக்கிய வழியுங் கூட.

தமிழகத்து அறிஞர் மரபு மறைமலையடிகள், G.u போப், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், கலாநிதி மு. வரதராசன், வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன், வித்துவான் அருணை வடிவேல் முதலியார்; டாக்டர் தேவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனாதிபதி; முருகேச முதலியார், பழ. இரத்தினஞ் செட்டியார், வித்துவான் வெள்ளைவாரணனார், பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், செஞ் சொற்கொண்டல் கலாநிதி சொ. சிங்கார வேலனார், சோ. சிவபாதசுந்தரம், கலாநிதி செல்வகணபதி, பேராசிரியர் கலாநிதி ஔவை நடராஜன், என வருவது தமிழக ஆசிரிய (தமிழறிஞர்) மரபு: சிந்தனைத் தடமரபு.

ஈழத்துத் தமிழாசிரிய மரபிலே நாவலருக்குப் பின்னர் பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை, ஏழாலை பண்டிதமணி, கலாநிதி மு. கந்தையா என்போர் வழியிலே இன்று முதன்மை பெறும் அறிஞர் கல்வி ஆலோசனை நிபுணர், கலாநிதி குமாரசாமி சோம சுந்தரம் அவர்கள்.

கலாபூஷணம், கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்களின் சிந்தனைகள், நாவலர் பெருமான், உபஅதிபர் பொ. கைலாசபதி, பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, சித்தாந்த வித்தகர் ஏழாலை, கலாநிதி மு. கந்தையா, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் வழிவந்தவை. கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்களின் சிந்தனைகள் - நூல்கள் பற்றிய - ஆய்வு எமது பிரதேசப் பண்பாட்டிற்கு அவராற்றிய பங்கின் ஒரு பரி மாணத்தை இனங்காண உதவும். இன்று சைவசித்தாந்த அறிவாராய்ச்சித் துறையும், விழுமியக் கல்வித் துறையும் நம்மத்தியிலே விளக்கமடைய வேண்டும் என்று உழைக்கும் - சிந்திக்கும் பேறறிஞர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்.

'மனித வாழ்க்கை விழுமியங்கள்' என்னும் நூலின் ஆசிரியர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் இலங்கைத் தேசிய கல்வி நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் என்னும் உயர் பதவி வகித்த கல்விமான்: கல்வி நிபுணத்துவ ஆலோசகர்; சைவசித்தாந்த சாத்திர நூலறிவும் இலக்கிய நூன் மரபும், தத்துவ, சமய, மெய்யியற் புலமை நலனும் மிக்க ஞானக் களஞ்சியம், சைவக் கல்வியுலகின் கலங்கரை விளக்கு, சமயம், கல்வி, தத்துவம், இலக்கியம், இலக்கணம், உளவியல், அறிவியல், ஆன்மிகம், பேருரையாற்றல், நேர்முக வர்ணனை முதலான துறைகளிலே நல்லனுபவ மிக்க பாண்டித்தியமும், நுண்மாண் நுழைபுலமும், புலமையும், வித்துவமும் மிக்கவர். உரைநடையில் ஒன்பது சிறந்த நூல்களை வெளியிட்டுள்ளதுடன் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அகில இலங்கை சமாதான நீதிவான் (J.P. whole Island) 'சித்தாந்த வித்தகர்' பேறறிஞர், என்ற பட்டங்களைப் பெற்றுள்ளார். இவரெழுதிய பிற நூல்கள் வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. 1978 - நல்லை நகர் நாவலன் (நாடகம்)
2. 1994 - சைவமரபும் தமிழர் வாழ்வும்
3. 1995 - மனித விழுமியங்கள்
4. 1996 - நல்வாழ்விற்குரிய நடைமுறைச் சிந்தனைகள்
5. 1998 - சைவ விழுமியங்கள்
6. 1999 - சைவ வாழ்வியற் சிந்தனைகள்
7. 2000 - மனித மேம்பாட்டுச் சிந்தனைகள்
8. 2006 - வாழ்வு நலம்பெற நற்சிந்தனைகள்
9. 2010 - மனித வாழ்க்கை விழுமியங்கள்

தமிழில் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்துக்கும், குறிப்பாகத் தனி மனித வாழ்க்கை இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டுச் செல்வதோடு தமது பங்களிப்பினை 'மனித வாழ்க்கை விழுமியங்கள்' என்னும் நூலினூடாகப் பதிவு செய்துள்ளார் பேரறிஞர், கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்கள். தத்துவத்திற்கு ஒரு சிவஞான முனிவரையும், சமய வாழ்வுக்கு ஒரு மறை ஞானசம்பந்தரையும் முன்னோடிகளாகக் கொண்டவர் நாவலர். கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்கள் வேதாந்திரி மகரிஷியைத் தத்துவத்திற்கும் சமய வாழ்வுக்கும் முன்னோடியாகக் கொண்டுள்ளார்.

'மனித வாழ்க்கை விழுமியங்கள்' என்னுமிந்நூல் பொதுவாக இரண்டு பிரதான அம்சங்களைப் பற்றியே பேசுகிறது. அவையாவன,

1. உலகியல்
2. ஆன்மிகம்

அதாவது, முகவுரையிலே பேரறிஞர், கலாநிதி சோமசுந்தரம் அவர்கள் குறிப்பிடுவன மனித வாழ்க்கையிலே உலகியல் நலன்களும், ஆன்மிக நலன்களான மனிதப் பண்புகள், விழுமியங்கள் என்பவையுமாகும். இந் நூலின் விடயப் பொருளாக 31 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு:

1. உயர்திணையில் மனிதர்கள்
2. ஒப்புரவு எனும் மனித விழுமியம்
3. நற்பழக்க வழக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. சொன்னசொல் தவறாமை
5. நன்மக்கட்பேறு என்னும் அறம்
6. அமைதிக்குப் பகை வெறுப்பு
7. நேர முகாமைத்துவம்
8. செய்வன திருந்தச் செய்
9. உணவு விழுமியம் ('நா' காக்க)
10. உழைப்பு உயர்வு தரும்
11. வாழ்க்கைத் தர்மங்கள்
12. நல்லுறவு பேணி நலம் பெறுவோம்
13. பணிவுடையன் இன்சொலனாதல்
14. மண்வளம் பெறுவோம்
15. எண்ணங்கள் நல்லனவாக அமையட்டும்
16. வருமுன் காக்க
17. ஆசைகளைச் சீரமைத்தல்
18. குணங்களைச் சீரமைத்தல்
19. சினம் தவிர்த்தல்
20. வாழ்க்கைப் பொருள் ஆதாரம்
21. இளைய தலைமுறையினரின் இயல்பான வளர்ச்சிக்கு உதவுவோம்
22. வாயே வாழ்த்து கண்டாய்
23. விட்டுக் கொடுத்தலே வீரம்
24. சகோதரத்துவம்
25. பிள்ளைகள் வளர்க்கப்பட வேண்டியவர்கள், வார்க்கப்படலாகாது
26. நல்ல நண்பர்கள் யார்?
27. நாலுபேர் போற்ற வாழ்வதே வாழ்வு
28. மனிதன் நல்லவனாக நடப்பதை நிறுத்தி நல்வனாக வாழ்ந்து காட்ட வேண்டும்
29. இன்றைய உலகுக்கு வேண்டி நிற்பது விழுமியக்கல்வி
30. விழுமியக்கல்வி - சில குறிப்புகள்
31. அறிவுப் பெட்டகத்தின் திறவுகோல் வாசிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தத் தெளிவும், சித்தாந்தத் தெளிவும் உடைய எழுத்தாளர், சிந்தனை யாளர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள். அவர் மகா விவேகி; ஆங்கிலக் கல்வி மரபும், தமிழ்க் கல்வி மாண்பும், தெளிந்த மகான். சிந்தனை வீச்சு நிரம்பிய மேதை. இவரது பன்முகப்பட்ட ஆளுமை நலன்களுடன் மரபார்ந்த கல்வியாலும், கருத்தூன்றிய நுட்பமான அவதானிப்பினாலும், இயல்பான புலமையாலும், பல்துறை அறிஞர் பெருமக்களது தொடர்பு களினாலும், ஆசிரியத்துவ வாண்மையாலும், முன்னோடிச் சீர்திருத்த வாதிகளினதும், கண்டனகாரரது காரசாரமான கண்டன முறைமையாலும், வித்துவப் புலமையுடனும் அதனுடன் பிரிப்பின்றி நிற்கும் மாண்பினாலும், நீதிநெறிப் பற்றினாலும், ஒழுகலாற்றினாலும் புடம் போடப்பட்டு முதற்தர மூளையுடையோரது சொல்லாண்மை வேகத்துடன் இந்நூலை எழுதியுள்ளார். பல்துறை யறிவுடன் நாவலர் மரபுக் கண்டன நெறியிலே இந்நூல் நல்லறிவுச் சுடர் கொளுத்தி நிற்கிறது. பொருளடிப்படையிலே பாவலர் துரையப்பா பிள்ளையின் நோக்குநிலை கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்களது சிந்தனை களிலும் படர்ந்துள்ளது.

**நாவலரும் நாவலர் மரபினர் சிந்தனைகளும்**

ஈழத்தின் புகழ் பூத்த இலக்கிய விமர்சகர் பேராசிரியர், கலாநிதி க. கைலாசபதியவர்கள் மேல்வருமாறு எழுதியுள்ளார்.

> இலங்கைத் தமிழிலக்கியம் தனக்கெனச் சில சிறப்பியல்புகளைக் கொண்டது. என்ற எண்ணமும் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி யிலிருந்தே மெல்லமெல்ல உருவாகியுள்ளது. அவ்வெண்ணம் முதலில் நல்லை நகர் ஆறுமுக நாவலரின் கண்டனக் குரலிலே கேட்கிறது. அதன் தெளிந்த ஒலியை இன்று பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் எழுத்துக்களிற் கேட்கிறோம். தொடக்கத்திலே இத்தனித்துவம் சமயத்திலும் கலாசாரத்திலும் முனைப்பாகத் தென்பட்ட தெனலாம். (1990 : v)

'14 வருடக் கிறிஸ்தவச் சூழலே நாவலரைத் தந்தது' என்கிறார் பண்டிதமணி, கலாநிதி சி. கணபதிப்பிள்ளை. சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனப் போற்றி வாழ்ந்தவர் நாவலர் பெருமான்.

> கன்னியை நாயகனிடத்து ஒரு துட்டாயினும் வாங்காது வீடு, விளை நிலம் தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமுடையது என் சென்ம தேசமாகவும், நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவையெல்லாவற்றிற்கும் காரணம் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டுமென்னும் பேராசையேயாம் (1968: 94-95) ''தமிழ் என்பது ஒரு சமயத்தின் பெயரன்று. ஒரு பாஷையின் பெயர்'' (1860) என்கிறார் நாவலர்.

சொல்லப்பட வேண்டிய விடத்தில் சொல்லப்பட வேண்டியதை நேர்மை யுடன் சொல்லத் தயங்காதவர் நாவலர். அவ்வகையில் நாவலருக்கு நிகர் நாவலரே தான். நாவலர் எழுதுகிறார்:

> இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தி யின்பம் பெறும் பொருட்டேயாம். இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது நமக்கு விளங்காமையால் எக்காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்
>
> (நாவலர்)

எழுத்துகளும், ஆய்வுகளும் வித்துவத் தன்மையைக் காட்டிலும் உண்மைத் தன்மை நிறைந்தவனாயிருத்தல் அவசியம் என்பதற்கு நாவலரது பணிகளும் எழுத்துக்களும் மட்டுமன்றி நாவலர் சிந்தனை மரபில் வரும் கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்களும் தகுந்த எடுத்துக்காட்டாகும்.

நாவலர் பெருமான் சைவக் காவலர்; ஒழுக்கசீலர். ஆங்கிலமுந் தமிழும் தாடணமிக்கவர். நூல்கள், புராணங்கள் பலவற்றைப் பதிப்பித்துத் தமிழுக்குத் தொண்டாற்றியவர். சமூக சீர்திருத்த வாதியென்று அறிஞர்களாற் போற்றப் பட்டவர். பைபிளை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்தார். கோயில் நடை முறைப் பிறழ்வுகளையும், ஆகம விரோத நடவடிக்கைகளையும் கண்டித்துக் களைய முற்பட்டார். அவரது கண்டனத்துக்குள்ளான விடயங்கள் வருமாறு:

ஆலயக் கிரியைகள் ஆகம விதிக்கமையாமை; தேவார திருவாசகம் முதலான திருமுறைகள் பண்ணோடு பாடப்படாமை; பார்ப்பனர், கோயிலார் சைவக் குருமார்கள், உருத்திர கணிகையர் முதலானோரின் ஒழுக்கச் சீர் கேடுகள்; சதுர்க்கச்சேரி நடத்தல்; வாண வேடிக்கை நடத்தல், பிறர்மனை நயத்தல், வரவு செலவு காட்டாமை; விடிய விடிய வைபவங்கள் நடத்தல்: பொய், களவு, மதுபானம் அருந்துதல், சூது, பலியிடல், சிறு தெய்வங்களை வணங்குதல், கூடாவொழுக்கம் புரிதல், வெற்றிலை பாக்குப் போடுதல், என்பனவற்றை நாவலர் கண்டித்தார்.

அர்ப்பணமும், அஞ்சாமையும் நாவலரின் இரு கண்கள். சமூக, சமய, கல்வி பிரசங்கப் பணிகளை அஞ்சாமை, வீரம், நேர்மை, ஒழுக்கம், உழைப்பு, அறிவு என்பனவற்றின் துணைக் கொண்டு சாதித்தவர் நாவலர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விடத்திலே சீர்திருத்தக் கொள்கை பற்றியும் சீர்திருத்த வாதிகள் குறித்தும் பேராசிரியர், கலாகீர்த்தி சி. தில்லைநாதன் அவர்கள் குறிப்பிடும் கருத்தை நோக்குதல் மிகமிகப் பொருந்துவதாகும். 'இலக்கியமும் சமுதாயமும்' (1979:80) என்னும் நூலிலே பேராசிரியர் எழுதுவதாவது:

> சீர்திருத்த வாதிகள் எனப்படுவோர் பொதுவாக மரபுவழி அமைப் புக்களின் பெருமைகளைப் போற்றிச் சார்ந்து நின்று முன்னிலை மீட்புக்கு முயல்வார்களேயன்றிப் புதிய அடிப்படை மாறுதல்களுக் காகப் போராடுவதில்லை. முன்னைப் பெருமைக்குப் பங்கம் விளை விக்கும் வகையிலே நடைமுறையிற் கெட்டியாகிவிட்ட பழக்க வழக்கங்களைக் களைய அவர்கள் முயற்சி மேற்கொள்வர். முன்னைப் பெருமைக்கு ஊறு விளைவிக்கும் வகையில் ஒழுகுபவர்களைக் கண்டித்துத் திருத்த எத்தனிப்பர். முன்னிருந்த நிலைமைக்கு இடையூறு நேராத வகையில் ஒழுகுவதற்கு அவசியமான விழுமியங்களைப் பொது மக்களிடையே பரப்பவும், நடவடிக்கைகளையும் மேற் கொள்வர். முந்தியவற்றுக்கு முரணாகவும் அவற்றைப் பலவீனப் படுத்தும் வகையிலும் புதியனபுகுமிடத்து இரண்டிற்குமிடையில் இணக்கம் காண்பதற்கும் பண்டையமைப்புக்குக் கேடு நேர்வதைத் தடுக்க அவசியமான சீர்திருத்தங்களை வலியுறுத்துவதற்கும் சீர்திருத்த வாதிகள் முன்வருவர் (1979: 80).

பேராசிரியரின் இவ்வெடுகோள் - விதி நாவலருக்கும், நாவலருக்குப் பின்வந்தோரனைவருக்கும் மிகவும் பொருந்துவதாகும். இம்மதிப்பீடு பேராசிரியர், கலாகீர்த்தி சி. தில்லைநாதன் அவர்களின் அறிவு மேதா விலா சத்தைப் புலப்படுத்துவதாகும். இவ்வகையில், இனி நாவலரது கண்டன மரபு விமர்சனங்களை நோக்குவாம்.

நாவலர் பெருமானின் சமய, பிறசமய (கிறிஸ்தவ) கண்டனங்கள் அவரது சமூகப் பற்றையும், நுண்ணறிவையும் காட்டுவனவாம். மக்களது சைவசமயத்தவரது நடத்தைகளைக் கண்டித்ததுடன், சைவக் கடவுள் நெறி யையும் பிறசமய தூஷனைகளிலிருந்தும் பாதுகாத்து வந்தார் நாவலர் பெருமான். இடித்துரைக்கும் கண்டனகாரர் எனப் புகழ் பெற்றவர் நாவலர் பெருமான். 'சைவர்கள் யார்?' என்பதற்கு நாவலர் பெரிய புராண வசனத்தில் தரும் விளக்கம் ஈண்டு கவனிக்கப்பட வேண்டியது. இவ்விளக்கம் கலாநிதி சோமசுந்தரம் அவர்களது கருத்துகளை விளங்கிக் கொள்வதற்குப் பேருதவி புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சுத்த சாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய், கொலை, களவு, கள்ளுண்ணல், புலாலுண்ணல், பிறர்மனை விழைதல், வரைவின் மகளிர் விழைதல், பொய்ச் சான்றுரைத்தல், முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணியங்களை உடையவர்களாய் குருலக்கணங் குறைவற அமைந்த சைவாசிரியரை அடைந்து சிவ தீக்ஷை பெற்றுக் கொண்டவர்களாய் விபூதி ருத்திராக்ஷதாரணம், சந்தியாவந்தனம், ஸ்ரீ பஞ்சாட்சர ஜெபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்க பூசை, குருவாக்கிய பரிபாலனம், மகேசுரபூசை, முதலியவற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு இருப்பவர் களாய் உள்ளவர்களே சைவர்கள் என்று சொல்லப்படும் (பெ.பு.வ.).

'சுப்பிரபோதம்' என்னும் கண்டனத்தில் மேல்வருமாறு நாவலர் எழுதியுள்ளார்.

> உருத்திரகணிகையர் வியபிசாரம், மதுமாமிசபக்ஷனம் முதலிய பாதகங்களின்றிச் சிவவேடம் பூண்டு சிவபக்தியிற் சிறந்தார்களென்று சைவாகமங்கள் சொல்லுகின்றன. இதற்கு மாறாக பக்ஷணமுடைய வர்களாய் வரைவின்றி யாவரையும் புணரும் ஸ்திரீகளை உருத்திர கணிகையரென்று நியோகிக்கின்றார்கள்.

## அருட்பா - மருட்பா போராட்டம்

1869 இல் போலியருட்பா மறுப்பு (எதிர்) குதர்க்கக் காரணிய நாச மகாபரசு கண்டனம் இடம்பெற்றது. சிதம்பரம் பேரம்பலத்திலே இராமலிங்க அடி களாரைத் தீட்க்ஷிதர்கள் பேச அழைத்தபோது, அவர், ''நா + அலர் என்று பிரித்து, நாவினால் வடு(ச்) செய்பவன், துன்பம் செய்பவன், வித்தை யில்லாதவன்?'' என்றெல்லாம் தூஷித்துப் பேசியபோது, ஈசான சிவா சாரியார், 'இந்தக் கருத்திலேயே தானா திருவாவடுதுறையாதீனம் அவருக்குப் (நாவலருக்கு) பட்டம் வழங்கியது எனக் கேட்க, அடிகள் தன் பேச்சை நிறுத்திக் கொண்டார். நாவலர் மானநட்ட வழக்குப் போட்டார். 'மஞ்சக் குப்பக்கோட்டில்' றொபேட்ஸ் (Roberts) ஐரோப்பிய நீதிபதி விசாரணை செய்தார். நாவலர் சார்பில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர், G.P. சௌந்தரநாயகம்பிள்ளை தீட்ஷிதர் சார்பில் (Show) 'சோ' அவர்களும் சுப்பராஜ் ஐயர் என்போர் வாதிட்டனர்.

(ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு, 1954) நாவலர் கண்டன மரபைப் பின்பற்றிக் காசிவாசி செந்திநாதையர் அவர்களும், சுன்னாகம் அ. குமார சுவாமிப் புலவரும் ஈடுபட்டுள்ளனர். 'கத்தோலிக்க பாதுகாவலன்' கண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தில் காசிவாசி செந்திநாதையருக் கெதிரான கண்டனம் வருமாறு:
சமயவாத விளம்பர வீர ஐய!

நீர் இலங்கை நேசன் வாயிலாக எவ்விதத்தானும் மிகச் சிறந்தோங்கிய ஓர் சாஸ்திரியானவரை வாதஞ் செய்ய வாரும் வாரும் என முழக்கம் இடுகின்றீர். வாதிப்பதினால் மாத்திரம் மெய் வேதத்தைக் கண்டுபிடித்தோரைக் காட்டுவீரோ! அவ்வாறு யாராவது கண்டுபிடித்தவரென யாண்டுங் கேட்டிலேம். வாதஞ் செய்யப்புகின் பொய் மதத்தோடுந் தம் மதம் மெய் மதமெனப் பிடிவாதமாய் வாதிப்பர். வாதத்தினால் மெய் வேதத்தை நுகரலாமென (உமது சிவகடாக்ஷ பீக்ஷணத்தாலோ) உமக்குப் புலப்பட்டதெவ்வாறு? நீர் உமது புன்மதி கொண்டு யாவராலுமளப்பருந் தகைத் தூய ஞானமே திரு மேனியாகக் கொண்ட பரமபதியருளிய வேதத்தை அளவிடப் புகுந்தது 'நரிவாலைக் கொண்டு கிணறாழம் பார்த்தலை யொக்கும் - உமது கல்வித் திறமையையும் தடுக்கப் பிரசண்ட வேதத்தையுங் காட்ட விரும்புவீரேல் என்னுடன் வருக, யானும் வருகுதல்'

(நாவலர் வழியில் தமிழறிஞர், 2000:90).

குமார சுவாமிப் புலவர் விறுவிறுப்பான முறையிலே கண்டனங்களை எழுதினார். ஓரெடுத்துக் காட்டு வருமாறு:
பைக்கிரியே,

'நீ என்ன பைக்கிரி? சைவர்க்கும், சோனகர்க்கும் இடையில் சண்டை உண்டாக்க வந்த பைக்கிரித் தம்பியா? பொய் ஏன் சொல்லுகிறாய்? பொய்யன் நாசமடைவான்?' (2000:94).

பிழையெனக் கண்டவற்றை அஞ்சாது எடுத்துரைக்கவல்ல நீதிமான் நாவலர். தமிழறிஞர்கள் தத்தமக்குள்ளேயே பலத்த கண்டனங்களை நிகழ்த்தி யுள்ளனர். ஓரெடுத்துக் காட்டு வருமாறு:

'சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்பித்த இலக்கண விளக்கத்தைச் சபாபதி நாவலர் கண்டிக்க, சபாபதி நாவலரைக் குமார சுவாமிப் புலவர் கண்டித்துள்ளார்' (2000:97).

என்கிறார் திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம்.

நாவலர் பெருமான் ஆரம்பித்த கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் அவர் காலத் திலேயே சங்கர பண்டிதர், செந்திநாதையர் போன்றோரால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. கிறிஸ்தவப் பாதிரிமாரின் நூல்கள் ஒவ்வொன்றும் கண்டிக்கப் பட்டதுடன் சைவசமய உண்மைகளை மக்களுக்குக் கூறுவதைத் தமது தலையாய கடனாகக் கொண்டு செயலாற்றியவர். தேவையேற்பட்ட போருதல் தாம் நேரடியாகத் தர்க்க வாதத்திலும் ஈடுபட்டனர். சங்கர பண்டிதர் கில்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிரியாருக்கு எழுதிய கடிதமொன்று கிறிஸ்தவ - சைவமோதல் எத்துணை தீவிரமாக நடைபெற்றது என்பதை விளக்கும்.

கண்டனங்களை ஆழ்ந்து வாசிக்கும்போது, செந்திநாதையரின் வாசகங் களிலிருந்து கிறிஸ்தவர்கள் சிவனுந் தேவனா? என்ற துண்டுப் பிரசுரத்தை வெளியிட, 'இந்துக்கள் தீய நாவுக்கு ஆப்பு' என்ற கண்டனப் பத்திரத்தை வெளியிட்டார்கள் என்பதும், அது மட்டுமல்லாமல் 'இந்து டிராக்ட் ஸொஸைட்டி' என்ற ஒரு சங்கம் ஒரு கோட்டையாக அமைந்து கிறிஸ்தவர் களின் பிரசுரங்களை எதிர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது என்பதும் புலனாகிறன. கிறிஸ்தவர்களது கருத்துக்களையும் விளக்கங்களையும் செந்தி நாதையர் தகுந்த ஆதாரங்களால் காட்டி எதிர்த்தனர். புற சமயக் காழ்ப்புணர்ச்சி இன்றி விவிலிய நூலில் இருந்து ஆதாரங்கள் காட்டியே எதிர்த்தார் என்பதற்கு அவர் கண்டனங்கள் சான்றாகும்.

### தமிழ் இலக்கிய மரபு

**விழுமியம், சமுதாயம், இலக்கியம், மொழி, உத்திகள் என்பன காலத்துக்குக் காலம் மாறுவன.**

"சமுதாயம் சீர்குலைந்திருப்பதால் என்னென்ன துன்பங்கள் தமக்கு நேரலாம் என்பதும் பலருக்குத் தெரிவதில்லை" என்கிறார் பேராசிரியர் சி. தில்லைநாதன் (1987:6). மேலும், ஒழுங்கான குடிமைச் சமுதாயத்தின் தாபகர்கள் என்று கவிஞர்களைப் பற்றி ஆங்கிலக் கவி ஷெல்லி கூறியது நோக்கத்தக்கது. (ப.7).

இலக்கியத்தை ஒரு கால கட்டத்தின் அல்லது பண்பாட்டின் கண்ணாடி என்பர். சமுதாய விழுமியங்களை வெளிப்படுத்துவதும், வழிப்படுத்துவது மென்பர். ஒரு கால கட்டத்தின் அடியிலான மனிதனின் இலட்சிய தாகங் களைப் பிரதிபலிப்பதென்பர். பொதுவாக நோக்குமிடத்துச் சமுதாய அடிப் படையிலான நியதிகளும் விழுமியங்களும் இலக்கிய நடவடிக்கைகளை நிர்ணயிக்கும் எனலாம். ஆயினும் இலக்கிய கர்த்தாவின் செல்வாக்கும் தாக்கமும் சமுதாயத்திற் காணப்படக்கூடுமென்பதனையும் மறந்துவிடல் ஆகாது. 'மரபு' என்னும் போது அதுவும் சமுதாயச் சார்பானது தான். மரபு என்பது கடலலை போன்றது என்றும் தனிப்பட்டவர் ஆற்றல் என்பது அக்கடலிலிருந்து வெளிக்கிளம்பும் ஓர் அலையைப் போன்றது என்றும் கூறுவர் டி. எஸ். எலியட் (ப.7-8). தமிழ்ச் சமுதாயத்துக்கு ஒழுக்க மருத்துவம் செய்யப் புகுந்த சமண, பௌத்த மதங்கள் தம் செல்வாக்கினைப் பெருக்கிக் கொண்டனர் (ப.10). தமக்கேற்பட்ட துன்பங்களைச் சமாளித்த துணிவினையும் பல்லவர் காலத் தமிழிலக்கியம் காட்டும். அனுபவம் பிறப்பது வாழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தின் வழியாகவே - இலக்கியம் சமுதாயத் தொடர்பினைச் சுத்த சுயம்புவாகி இயலுவதென்றால் தொல்காப்பியர் வகுத்த இலக்கண வரம்பு அல்லது சங்கத்தமிழ் மரபு என்றைக்கும் பேணப்பட்டிருக்க வேண்டும். கையாளப்பட்டிருக்கும் கருத்துக்கள் மட்டுமன்றி மொழியும் உத்திகளும் கூடக் காலத்துக்குக் காலம் மாறுபடுவது ஏன்?' (ப.18). கனியன் பூங் குன்றனும், திருவள்ளுவரும், இளங்கோவும், மாணிக்கவாசகரும், கம்பரும், பாரதியும் பரந்துபட்ட மக்கட் சமுதாயத்துடன் தம் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் பொருத்தமான வழிமுறைகளைக் கையாண்டதைத் தமிழ் இலக்கிய வரலாறு தெளிவுறுத்தும் (ப.21). தீரமிகு சாதனைக்குரியவர்களைப் புகழுக் குரியவர்களுக்கும் சக்தியும் சீரற்ற வாழ்வு நடத்தியவர்களை அழியாத இழிவுக்குரியவர்களுக்கும் சக்தியும் புலவர்களுக்கே உண்டென்று Francis Meres (1958) எழுதியிருக்கிறார்.

'மரபு' என்ற சொல் தொன்றுதொட்டு வழங்குவதைக் குறிப்பதாகவே அது வரலாற்றுக் கால முதலாகத் தமிழில் வழங்கி வருவதனை அவதானிக்க வியலும். மரபு என்றால் என்னவென்பதல்ல இன்றைய பிரச்சினை. மொழி, இலக்கியத் துறைகளில் மரபைப் பற்றிப் பேசுகின்ற சிலர் மரபு மாறக்கூடியதா, மீறப்படத்தக்கதா என்று வினவி நிற்கின்றனர். கால மாற்றங்களை மறுத்து வருமளவுக்கும் அமுங்குப்பிடியாகப் பிடித்து வழிபடப்பட வேண்டிய ஒன்றுதான் மரபெனப்படுவதா என்ற வினாவே இன்று பலரது சிந்தனைகளை அலைக்கழிப்பதாகும்.

வழிப்படுத்தல் என்பதே 'ஆற்றுப்படை' என்பதன் பொருள். போரில் இன்பம், காதலில் இன்பம், கலைகளில் இன்பம், கள்ளில் இன்பம், கொள்ளையில் இன்பம், என்று ஒரு காலகட்டத்தில் தமிழ்ச் சமுதாயமும் வாழத்தான் செய்தது. ஆண்கள் பரத்தையுடன் புதுப்புனலாடும் செய்திகளையும் தலைவியின் குழந்தையைப் பரத்தை தூக்கி முத்தமிடும் செய்திகளையும் சங்க நூல்கள் தருகின்றன. பண்டைக் காலத்தில் விறலியர் பாணரிடம் ஆண்கள் ஆடல் பாடல் கேட்கவும் சென்றார்கள். பின்னர் விறலி பரத்தையா வதையும் பார்க்கலாம். முதலில் மக்கள் ஆடல் பாடல் மகளிடம் ஆடல் பாடலுக்காகச் சென்றிருக்கலாம். கலைப்போக்கிற் பொருள் சேர்த்தலும் சமுதாயத்தில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளும் காரணமாக வலிமையுள்ளவனால், ஆடல், பாடல் மகளையோ, மகளிரையோ ஆதிக்கம் செய்ய முடிந்திருக்கலாம். ஆடிப் பாடிப் பிழைப்போர் அப்படி வலுவுடையோரையே அண்டித் திருப்தி செய்து வாழ வேண்டிய நிலையேற்பட்டிருக்கலாம். வசதியுடையவன் மனைவியோடு இற்பரத்தையையும் காதற்பரத்தையையும் வைத்திருப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகமாயிற்று. பொருள் கொடுப்பவர் எவரையும் வரவேற்கும் சேரிப் பரத்தையரும் இருந்தனர். 'மையின் மதியின் விளங்கு முகத்தாளை வவ்விக் கொளலும் அறனெனக் கண்டன்று' என்று கலித்தொகை கூறுவது எவ்வளவு கட்டுப்பாடற்ற, பாதுகாப்பிழந்த சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. 'விபசாரம்' சமுதாயத்தில் பெருமிடம் பிடித்து விட்டதைச் சிலப்பதிகாரம் தெள்ளத் தெளிவாகக் காட்டும். மணிமேகலை தெருவில் போகும்போது அவளைக் கவர்ந்து செல்வது நியாயம் என்று உதயகுமாரன் கருதுவது எதைக் காட்டுகிறது? 'வரைவின் மகளிர்' என்று வள்ளுவர் குறளில் ஒரு அதிகாரம் வகுப்பது எதைக் காட்டுகிறது? 'சமுதாயத்தில் ஒழுக்கக்கேடு மலிந்து கிடப்பதையே இவை காட்டும்' (பக். 68-69) என்பர் பேராசிரியர் சி. தில்லைநாதன். சங்க காலத்தில் மக்கள் கள்ளினை அருந்தினர். உயிர்க் கொலை செய்த புலாலினை உண்டனர். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் மதுபானமும், புலாலுணவும் கண்டிக்கப்படவில்லை. பண்டைத் தமிழர் இவற்றைச் சிறந்த உணவாகக் கொண்டனர். மாதரும் தமிழ் நாட்டில் மது வருந்தினர். (ப.69). களவும், கொள்ளையும் சங்க காலத்தில் இருக்க வில்லையென்று சொல்ல முடியாது. பசுக்களைக் கொள்ளையிடுவதும், வழிப்போக்கரை இரக்கமின்றிக் கொன்று பொருள் பறிப்பதும் சங்க காலத்தில் நிகழ்ந்தன. சங்க காலத்திலே கண்டிக்கப்படாத அச்செயல்கள் பின் கண்டிக் கப்படுகின்றனவென்றால் அதற்குக் காரணம், அச்செயல்களாற் சமுதாயம் சீரழிந்தமை உணரப்பட்டமையே (ப.69). சங்க காலத்தின் களவொழுக்கத்தின் பின்னரே திருமணம் நிகழும். இக்களவொழுக்கத்திற் குறைகளும் ஏமாற்றங் களும் பிற்காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். (ப.70). சிலப்பதிகாரம் காட்டுவது பெற்றோர் பேசி முடித்த வைதீக மணமே. நல்ல நாள் பார்த்து ஊரார் முன்னிலையில் சாட்சி வைத்துத் திருமணம் செய்ய வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? அதற்குக் காரணம் தொல்காப்பியரே கூறுகிறார்.

*பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்*
*ஐயர் யாத்தனர் கரணம் என்ப*

இந்தக் காலப்பகுதியிலே வழக்கம், ஆசாரம், சம்பிரதாயம், சட்டம், தேவ கட்டளை என்பவை கொண்டு சமுதாயம் தனிமனித நடத்தையைக் கட்டுப்படுத்திய நிலை தோன்றியிருக்கக் கூடும். சமுதாயத்தில் கட்டுப்பாடுகள் வலுத்ததும் பெண்கள் சிறை கலக்கப்பட்டதும் இக்காலத்திலாயிருக்கலாம். மக்கள் சடங்குகளுக்கும் சம்பிரதாயங்களுக்கும் பெரிதும் அடிமையாகி மனத்தூய்மை, ஒழுக்கம் ஆகியவற்றில் கவனமிழந்தனர். எப்படித் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தாலும், சடங்குகள் தங்களை மோட்சத்திற் சேர்த்து விடுமென நம்பி மனவமைதி கண்டனர். இன்றும் கொள்ளையடிப்போரும் வேறு கெட்ட நடத்தைகாரரும் ஆலயம் சென்று ஆராதனை செய்து பூவும் பொட்டுமாகத் திரிவதன் மூலம் மனத்திருப்தி கண்டு விடுகின்றனர். இது போன்ற ஒரு நிலை சமண பௌத்தர் செல்வாக்குப் பெற்றபோது ஈழநாட்டில் இருந்திருக்க வேண்டும். (ப.70). வெறும் பூசை புனற்தாரணங்களால் அறவாழ்வு காண முடியாது. மனத் தூய்மையும் உயர்ந்த ஒழுக்கமும் வேண்டுமென இவை போதித்தன. சமண பௌத்த மதங்கள் இந்து மதத்தில் அன்றிருந்த குறை பாடுகளைச் சுட்டிக் காட்டி அவற்றிற்கு மாற்றாகத் தோன்றியனவே. தமிழர் சமண, பௌத்த மதங்களை வரவேற்றனர்.

அறவாழ்க்கை சம்பிரதாய ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெற்று ஒழுக்கத்தையும் மனத் தூய்மையையும் மதித்து அமைய வேண்டிய அவசியம் உணரப்பட அல்லது உணர்த்தப்பட்ட காலகட்டம் இதுதான். சமுதாயத்தின் குறைகளைக் கண்ட புலவர்கள் அவற்றைக் கண்டிப்பதும் நிவர்த்தி செய்யத் தமது கலை இயல்புக்கேற்ற முறையில் வழிகாட்டுவதும் இயல்பே. திருட்டுத் தொழில் மிக வளர்ந்திருப்பதற்குச் சிலப்பதிகாரமே சான்று பகரும். (ப.72). வள்ளுவர் 'கள்ளாமை' என்றொரு அதிகாரமே வகுத்தார். 'கள்வர்க்குத் தளருமுயிர் நிலை' என்று அச்சமும் ஊட்டப்படுகிறது. சங்க நூல்கள் கண்டிக் காத பரத்தையொழுக்கத்தை அறநூல்கள் மிகவும் கண்டிக்கின்றன. விபச ாரம் தமிழ் நாட்டில் அளவுக்கு மிஞ்சி ஒழுக்கக்கேட்டுக்கும் சமுதாயச் சீரழிவுக்கும் ஏதுவாகி விட்டதே இதற்குக் காரணம் எனலாம். ஏலாதியிலே பொது மகளிர் பாடலைக் கேட்போரும், ஆடலைப் பார்ப்போரும் பகை யையும், பழிச் சொல்லையும் பெறுவார்கள் என்று வெறுத்துக் கூறிய தோடமையாது அப்படிச் செய்வோர் பாவத்திற்கும் சாக்காட்டிற்கும் ஆவார் களென்று பெரிதும் பயமுறுத்தவும்படுகிறது. கணவன் இருக்கும் போது மற்றொருவனுக்குப் பிறந்தவன் கேத்திரன், திருமணமாகாத பெண்ணுக்குப் பிறந்தவன் கானீனன், விபசாரத்தில் பிறந்தவன் கூடன். என்றெல்லாம் புத்திரர்களின் வகைகளைக் கூறுகிறது ஏலாதி. பெண்கள் கற்புள்ளவர்களாக வாழ வேண்டுமென்பதையும், சிறை காப்பதை விட நிறை காப்பது முக்கிய மென்பதையும் சங்கம்மருவிய கால நூல்கள் பன்னிப் பன்னிக் கூறுகின்றன சமுதாயத்தில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் கீழ்நிலையடைந்திருக்கா விட்டால் இவற்றையெல்லாம் நூல்கள் கூறியிருக்கவியலாது. ஆசாரக்கோவை வகுக்க வேண்டிய தேவையும், இன்னாதவை இனியவையென்று பிரித்துக்காட்ட வேண்டிய அவசியமும் ஏற்பட்ட இச்சூழ்நிலையில் அறநூல்கள் பல தோன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதில் வியப்பில்லை. தமிழர் மதுவருந்தினர்; 'வேத ஆரியரும் சோமபானம் பருகினர். மது வெறியின் தீமைகளை உணர்ந்து மேலும் சமண பௌத்தர் அதனை வெறுத் தொதுக்கினர். சங்க காலத்தில் தமிழ் நாட்டில் போரும் கொலையும் இருந்தன. ஆரியர் அவிசொரிந்து உயிர்ப்பலியிட்டனர்.' ஆனால் சமண பௌத்தர் பிரசாரம் செய்த தன்னுயிர் போல் மன்னுயிரோம்பும் பண்பு போற்றப்படும் போது கொலையும், புலாலும் வெறுத்தொதுக்கப்படுகின்றன. 'அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று' என்கிறார் வள்ளுவர். யாகங்களில் உயிர்பலியிடும் சடங்குகள் வெறுத் துரைக்கப்படுகின்றன. (பக். 72-73).

நடைமுறையிலிருந்த சமுதாயத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடனேயே. அந்நூல்கள் எழுதப்பட்டன. பதினெட்டுக் கீழ்க்கணக்கு நூல்களிலே பதி னொன்றும் உயர்ந்த ஆற்றல்களையே எடுத்துரைப்பன. மனிதனும் சமுதாயமும் பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைகளை இவை விரிவாய்க் கூறும். இவற்றையே அறநூல்கள் என்றும், நீதிநூல்களென்றும், ஒழுக்க நூல்கள் என்றும் கூறுவர். ஒழுக்கத்துக்கே பெரு மதிப்புக் கொடுத்து அது 'உயிரினும் ஓம்பப்படும்' என்பார் வள்ளுவர். இவ்வுலகில் நேர்மையாகி ஒழுகுவதைப் பற்றிக் கவலைப்படாது மறுவுலக நல்வாழ்வு வேண்டி யாகங்களும் பூசையும் செய்வதைக் கண்டித்த வள்ளுவர்,

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.*

என்கிறார். இக்கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது சிலப்பதிகாரம் காட்டும் கண்ணகியின் வரலாறு. நாலடியார், பழமொழி நானூறு, சிறுபஞ்ச மூலம், ஏலாதி என்பவற்றைச் சமணர் இயற்ற, ஆசாரக் கோவை, நான் மணிக்கடிகை, முதுமொழிக் காஞ்சி, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகியவற்றை வைதிக சமயத்தினர் இயற்றினர். (ப.74). ஒரு சில சந்தர்ப்பங்களில் அடியார்கள் வரம்பை மீறி மானிட விரக தாபங்களை அழுத்திக் கூறுவதாகவே தோன்றுகிறது (ப.81) என்பர் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள்.

*கற்கும் கல்விக் கெல்லையிலனே யென்னும்*
*கற்கும் கல்வியா வேனும் யானே யென்னும்*
*கற்கும் கல்வி செய்வேனும் யானேயென்னும்*
*கற்கும் கல்வி தீர்ப்பேனும் யானேயென்னும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கற்கும் கல்வி நாதன் வந்தேறக் கொலோ*
*கற்கும் கல்வியீர்க் இவையென் சொல்லுவேன்*
*கற்கும் கல்வியென் மகள் காண்கின்றனவே* - *(நம்மாழ்வார்)*

தமிழ், ஆரியம் இரண்டும் ஆன்மிக வாழ்வுக்கு உறுதுணையான இரு தெய்விக மொழிகள். இவை உலகிலுள்ள மற்றைய மொழிகளைப் போல மனிதர் தம் கருத்தை வெளிப்படுத்த உபயோகிக்கும். சாதாரண ஊடகம் மட்டுமன்று. எமது பண்டைய மூதறிஞர் மொழியை விலங்கு போன்ற வாழ்க்கையில் கருத்துப் பரிமாற்றத்தைச் செய்வதற்கு ஏற்ற வெறும் பயன்பாட்டுக் கருவியாக மட்டும் கருதவில்லை. பயன்பாட்டுப் பெறுமதிக்கு (Utilitarian Value) மேலே ஆன்மா ஐம்புலன்களால் பெறும் அறிவோடு மட்டும் நின்று விடாமல் ஆன்மிகப் பெறுமதி (Spiritual value) மிக்க அறிவுத் தளங்களில் உயர்ந்து தெய்வ நிலைக்கு இட்டுச் செல்லும் கருவியாகக் கருதினர். எனவே விழுமியங்களில் நம்பிக்கை வேண்டும். தமிழ் வாழ்க்கை வாழ்வார்க்குத் தமிழ் மொழியில் எப்படிச் சொல்லலாம் என்பதைத் திரு வள்ளுவர் மட்டுமே அறிவார் என்று வல்லோர் தனிப்பெரும் புகழ்மாலை சூட்டுவோர் பலர். கும்பகர்ணன் தமிழன். விபீஷணன், கிருஷ்ணன் ஆரியன். அர்ச்சுனன் தருமரைக் கொன்றிருக்கலாம்; தானும் இறந்தே தீருவான்; தமையனைக் கொன்று வாழான். கிருஷ்ணர் ஆரிய தர்மத்தின்படி கொண்ட வீரத்தை மீறாதிருப்பவன். வேதம் பொது நூல், ஆகமங்கள் சிறப்பு நூல்கள். சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோவிசிதி என்பன வேதாகமங்கள். வேதத்தின் அங்கங்கள். அவை முறையே அர்த்தம், ஞானம், மோட்சம், அமிர்தம், தர்மம், காமம் என்னுமிடங்களிற் பிறக்கின்றன. 'அங்கமும் வேதமும் ஓதும் நாவர்' என்கிறார் சம்பந்தர். கருத்துகளையும் விழுமியங்களையும் உணர முடிதல், விளங்க முடிதல் என்பன கைவர வேண்டும். அவ்வாறு தம் கல்விப் பின்னணியினால், நுட்ப புத்தித் திறனால் போற்றப்படத் தக்கவர்களே பேராசிரியர் தில்லைநாதன் அவர்களும் கலாநிதி சோமசுந்தரம் அவர்களும்.

புராணம் என்பது வேதத்துக்குப் பூதக் கண்ணாடி போன்றது. பூதக் கண்ணாடி சிறியதைப் பெரிதாகக் காட்டுவது. போலிப் புராணமும் சிறிதாகக் காணப்படும் தர்ம விதிகளை - அறக் கோட்பாடுகளைக் கதைகள் மூலம் பெரிதாகக் காட்டுவது. இதிகாசம், புராணம் ஆகிய இரண்டும் இப்பண்பினவே. புராணக் காட்சிகள் அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை. தேவார திருவாச கங்களில் புராணம் உயர்த்திப் பேசப்பட்டமையும் நோக்கத்தக்கது.

விழுமியக் கருத்துகளை வேதப் பிரமாணம், உபநிடதப் பிரமாணம், ஆகமப் பிரமாணம், திருக்குறட் பிரமாணம், திருமந்திரப் பிரமாணம், நாலடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமாணம், அறநூற் பிரமாணம், தொல்காப்பியப் பிரமாணம், நன்னூற் பிரமாணம், அனுபவப் பிரமாணம், அறிவுப் பிரமாணம், ஞானப் பிரமாணம், காட்சிப் பிரமாணம், கருத்துப் பிரமாணம், அனுமானப் பிரமாணம், அளவைப் பிரமாணம், பிரத்தியட்சப் பிரமாணம் என்ற அளவைகளால் தமது நூலிலே வரையறை செய்து எழுதுகிறார் கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்கள்.

## தமிழரின் அறக் கோட்பாடு

'அறம்' என்ற சொல் விரிந்த பொருளையுடையது. மனிதன் புரியும் நற் செயல்களனைத்தையும் இதிலடக்கிக் கூறலாம். தமிழர் வாழ்க்கையில் - அக வாழ்க்கையிலும் - புற வாழ்க்கையிலும் அறம் கடைப்பிடிக்கப்பட்டு வரு தலைத் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகவும், தெளிவாகவும் புலப்படுத்தி யிருப்பதைக் கண்டு மகிழலாம். 'அறம்' என்ற சொல் நீதியைக் குறிக்கும். அறம் என்ற சொல்லின் பொருள் 'அற்றது' என்பதாகும். அது பற்றற்ற நிலை தன்னலப் பற்றற்ற தூய்மை; நுட்பமும் ஆற்றலும் கொண்ட அந் நிலையை 'உண்மை' என வழங்கலாம். நன்மை, நேர்மை, குணம், நல்லூழ், தேசிய சிந்தனை என்றும் பிறவாறும் வழங்கலாம். மனத்தூய்மையின் அடிப்படையில் அமைவது தான் அறவாழ்க்கை. அறத்தால் வருவதே இன்பம். என்றும் 'அறவா நீ ஆடும்போதுன்னடியின் கீழ் இருக்க என்று' காரைக்காலம்மையார் பாடுவதும் சிவ தத்துவத்தின் அற மேன்மையை எடுத்துக் காட்டுவனவாகும்.

## தமிழரின் அறிவுக் கோட்பாடு

தமிழ் இலக்கியம் எதுவும் 'அறிவுக் கோட்பாடு' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவில்லை. சிதறிக் கிடக்கும் அறிவு தொடர்பான கருத்துகளை ஒன்று திரட்டித் தமிழர்களின் அறிவுக் கோட்பாட்டை உருவாக்க முற்படுவது 'மனித வாழ்க்கை விழுமியங்கள்' எனுமிந் நூலின் தலையாய கடனாயுள்ளது.

மேலைநாட்டு தத்துவ அறிஞர்கள் அமைத்துக் கொடுத்துள்ள வடி வமைப்பைக் கருத்திற் கொண்டு தமிழர்களின் அறிவுக் கோட்பாட்டை இந்நூல் உருவாக்க முயல்கிறது. இந்நூலில் உருவாகும் அறிவுக் கோட்பாடு தமிழ் இலக்கியத் துணிபிலிருந்து மேலைநாட்டு வடிவமைப்பில் வெட்டித் தைக்கப்படும் புதியதொரு தத்துவச் சட்டை எனலாம். உலகாயத அறிவுக் கோட்பாட்டாளர்கள் கூறுவது, புலன்கள் வழியாக மனிதன் பெறுகின்ற அனுபவம் ஒன்றே உண்மையான அறிவைத் தரும் சரியான மூலம். புலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் எல்லைக்கப்பால் ஒன்றுமில்லை என்ற உறுதியுடையவர்கள் உலகாயத தத்துவவாதிகள். 'அறிவியல்' 'அறிவறிவியல்' என்றும் குறிப்பிடுவர்.

அறிவு பற்றிய சிக்கல்களைக் கருப்பொருளாகக் கொண்டு ஆயுந்துறை, அறிவியற்றுறை எனப்படும். அறிவுக் கோட்பாடுகள் இதிலிருந்தே எழு கின்றன: உருவாகின்றன. 'அறிவறிந்த மக்கட்பேறென்பது' அறிவுக் கோட்பா டறிந்த மக்கட்பேறென விரியும்.

முற்றுப் பெறாமல் வளர்ந்து கொண்டே செல்வது அறிவின் இயல்பு. அறிவின் வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் எல்லை இல்லை. திருவள்ளுவர்,

*பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து*
*ஆள்வினை யின்மை பழி* *(குறள் 618)*

என்கிறார்.

அறிவுடைமைக்கு அழகு ஆள்வினையுடைமை. சிறப்புகளுக்கெல்லாம் சிறப்புத் தருவது அறிவு. அறிவின் சிறப்பில்லாமல் பிற சிறப்புகளையாரும் போற்றுவதில்லை. 'பொன்னும் பொருளும் அறிவுக்குப் பின்னே வரும்'.

*ஒரு குடிப்பிறந்தபல் லோருள்ளும்*
*மூத்தோன் வருக என்னாது அவருள்*
*அறிவுடையோன் ஆறு அரசுஞ் செல்லும்* *(புறம்: 183- 5-7)*

What is scienctific knowledge என்பதனை அறிவினாலேயே கண்டு தெளி யலாம். செய்திகளைத் தொகுத்தும் பகுத்தும் ஆழ்ந்து சிந்தித்தும் முயன்று உருவாக்கப்படுவது 'நெறிப்பட்ட அறிவு'. மேலோட்டமான அனுபவத்தால் திரள்வது 'நெறிப்படா அறிவு' நெறிப்படச் சிந்திப்போரையும், நெறிப்பட்ட அறிவுடையோரையும் சான்றோர் என்றனர் தமிழர்கள்; நடுநிலை நிற்போர்; ஒருபாற் கோடமாட்டார்.

ஆன்ற அறிவு, அஃகி அகன்ற அறிவு; 'மாண்ட அறிவு' (மாட்சிமைப் பட்ட அறிவு) என்றும் கூறுவர். பேச்சில் குறைபாடுடையவர்களால் கருத்து களைச் தெளிவாகச் சொல்ல முடியாது. அது போல சிந்தனையில் குறை யுடையவர்களால் சரியான அறிவைப் பெற முடியாது. நெறியினை, சீரிய சிந்தனையின் வளம் எல்லோர்க்கும் வாய்ப்பதுமில்லை; எளிதில் கிட்டுவது மில்லை; சிந்தனையின் சீரான ஓட்டத்திற்கு ஊறு செய்து திசை திருப்பும் தடைக்கற்கள் பலவிருக்கின்றன. 'அறிவு' என்பது ஒரு விளைவு. திருக்குறள் தத்துவ- மெய்யறிவின் தொகுதி. 'கேள்வி' என்பது அறிவைத் தரும் மூலமாக மட்டுமன்றி அறிவைச் செம்மைப்படுத்தும் கருவியாகவும் இருக்கிறது. அறிவைப் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகள் இரண்டு. அறிவைத் திரட்டுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெப்படி என்பதொன்று; மற்றது திரட்டிய அறிவைப் பிறர் ஏற்குமாறு வெளிப்படுத்துவதெப்படி என்பது. அறிவு வெளிப்பட்டு - வெளியிடப்பட்டு அதனைப் பிறர் ஏற்கும்போது தான் சமுதாயம் பயன் பெறும். எண்ணற்ற நூல்களைக் கற்றும் இடைவிடாது முயன்றும் அறிவைத் திரட்டினால் மட்டும் போதாது. நல்லறிஞர்கள் ஏற்குமாறு எடுத்துச் சொல்லவும் வேண்டும். அப்படிச் சொல்லத் தெரியாதவன் பெற்ற கல்வியும் அறிவும் பயனற்றுப் போய்விடும்.' அறிவைத் திரட்டுவது போன்றே ஏற்புடைய வகையில் அறிவை வெளிப்படுத்துவதும் முதன்மையானது.

*பல்லவை கற்றும் பயன்இலரே நல்லவையுள்*
*நன்கு செலச் சொல்லாதார்* *(குறள்:728)*

*நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு* *(குறள்.331)*

*பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருள்* *(குறள்.351)*

என்றெல்லாம் மொழிகிறார் வள்ளுவர்.

Francis Bacon என்னும் அறிஞர் 'மனித வாழ்வை மேம்படச் செய்வதே இறைவன் தந்த சிந்தனையின் நோக்கம்' என்கிறார். வாழ்க்கைப் போராட்டத்தில் ஒருவன் பயன்படுத்தும் பிறகருவிகளையெல்லாம் அவனுடைய பகைவர்கள் அழித்துவிடக் கூடும். ஆனால் அகக்கருவியாய் விளங்கும் அறிவை எந்தப் பகைவனாலும் அழித்திட முடியாது.

*அறிவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்கலாகா அரண்* *(குறள்: 429)*

உலகியல் வாழ்வைச் சுவைக்கச் செய்வதோடு அறிவு நின்றுவிடக் கூடாது. அறம் நோக்கி மானுட வாழ்வைச் செலுத்துவதாகவும் இருக்க வேண்டும். தான் வாழும் சமுதாயத்தின் இயல்பினை உணர்ந்து (ஒழுகாதவனின்) அறிவால் பயனில்லை.' (உலகத்தோடொட்ட ஒழுகல்) கூரிய அறிவிருந்தும், மக்கட் பண்பில்லையென்றால் அவனறிவால் பயன் ஏதுமில்லை.

*அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்*
*மக்கட் பண்பில்லா தவர்* *(குறள்:997)*

அறத்திற்கு அடிப்படையாக இருப்பது பிறரையும் தன்னைப் போல் கருதும் பண்பு. அறிவென்பது நாளும் விரிந்து கொண்டிருக்கும் ஒரு பெருந் தொகுதி. அறிவு தரும் உலகியல் பயன்களெல்லாம் மனித சமுதாயத்தின் அமைதியான இனிய வாழ்வுக்குத் துணை செய்வனவாக இருக்க வேண்டும். உலகியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்களை ஆன்ம விடுதலைக்கான படிகளாக்கிப் பிறவித் துன்பத்தைப் போக்குவதே மனித வாழ்வின் இறுதிக் குறிக்கோள்.

ஆன்ம விடுதலையே - அறிவின் முடிந்த பயன் என்பது அறியத்தக்கது. கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்களது 'மனித வாழ்க்கை விழுமியங்கள்'. என்னும் நூலை வாசித்த போது இத்தகு எண்ணங்கள் என் மனதிலே தோன்றின. மெய்மை (Reality) என்பதை விவரிக்க முடியாது. அனுமானிக்கலாம்.

இந்நூல் முழுக்க முழுக்க அறிவுத் தோற்றவியலையே தருகிறது. இருந்தாலும் ஆங்காங்கே ஆசிரியர் தம் தத்துவ இயலையும் கூறுகிறார். தத்துவ இயலின் அங்கமாகவே இந்நூலின் அறிவுக் கோட்பாடு அமைந்துள்ளது. மேலைநாட்டவர் குறிப்பிடும் அறிவின் மூலங்கள் அனைத்தும் திருக்குறளில் சிறப்பாகவும் சங்க இலக்கியங்களில் பரவலாகவுங் காணப்படுகின்றன.

தமிழரின் மெய்யறிவை மேலை நாட்டினரின் மெய்ப்பொருள் அறிவுடன் ஒப்புநோக்கித் தமிழர் இத்துறையில் மேலையோரை விடவும் ஆழ்ந்தும் நுணுகியும் சென்று உண்மை கண்டவர் என்பதைத் தமிழ் நூல்களின் வாயிலாக உணர்ந்து இவ்வுண்மையை உலகறியச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு உழைத்து வருபவர் பேறறிஞர் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள். சிந்தனையாற்றலால் மனிதன் விலங்குகளிலிருந்து வேறுபடுகிறான் சிந்தனையின் விளைவுக்கேற்பவே மனிதன் சிறப்படைகிறான்.

**தமிழரின் சிந்தனை மரபு**

அனுபவத்தாலேற்படும் அறிவு துண்டு துண்டானது. ஆளுக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் மாறும் தன்மையது. ஆனால் 'சிந்தனை' என்பது மனிதர்கள் அனைவர்க்கும் பொது. அச்சிந்தனையால் விளையும் அறிவே பொதுமையானதாக எல்லார்க்கும் ஏற்புடையதாக இருக்கும். எனவே சிந்தனா வாதிகள் (Rationalists) சிந்தனையே அறிவுக்காதாரம் என்று பறை சாற்றுகின்றனர். ஒப்பீட்டு நோக்கில் ஆய்வு செய்வதனாலே தமிழரின் சிந்தனைத் தடம் குறித்த முதன்மையும் பெருமையும் புலனாகும். பிரான்ஸ் நாட்டின் தத்துவ அறிஞர் தேகார்த் (1596-1650) சிந்தனை வாதிகளின் முன்னோடியாக 17ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார். 'சிந்தனையொன்றே ஐயத்திற்கப்பாற்பட்டது' என்பது இவருடைய வாதம். டச்சு நாட்டைச் சேர்ந்த ஸ்பினோசாவும் (1632 - 1677) சிந்தனைவாத தத்துவ அறிஞருள் முதன்மையானவர். உள்ளுணர்வால் வருவதே உயர்ந்த அறிவென்று உறுதியாக நம்பினார். ஆனால் உள்ளுணர்வு அரியது. ஏல்லார்க்கும் வாய்ப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லார்க்கும் கிடைக்கும் அறிவூற்றுச் சிந்தனையே. 'ஸ்பினோசா' புலனறிவை மறுப்பவர்.

ஜேர்மானிய தத்துவ அறிஞர் லைபினிஸ் (Leilbniz) (1646 - 1716), 'சிந்தனை வழி வராத அறிவு பொதுமையுடையதாக இருக்காதென்கிறார். 'உண்மை' என்பது புற உலகிலிருந்து மனதுக்கு வருவதில்லை; மனத்திலே வித்தாக இருக்கிறது. அது வளர்ந்து மரமாகிறது. நம்மனம் தங்கச் சுரங்கம் போன்றது. பூமியினுள் ஆழ்ந்து கிடக்கும் தங்கத்தைத் தோண்டி எடுத்து ஒளிரச் செய்வது போல் மனத்துள் ஆழ்ந்து கிடக்கும் உண்மையை வெளிக் கொணர வேண்டும். 'உண்மையை வெளிக்கொணரச் சிந்தனை தான் பயன் படுகிறது' என்கிறார். மேலை நாட்டுச் சிந்தனைகளோடு ஒப்பிடுகையில், தமிழரின் குறள் வழிச் சிந்தனை, மரபு தனிமனிதனுக்கும், நாட்டுக்கும், வீட்டுக்கும், குடும்பத்துக்கும், வாழ்க்கைக்கும், தேரிய சீரிய எண்ணங்களின் எழுச்சிக்கும் வழிவகுப்பதாகவே அமைந்துள்ளது. சுருங்கக் கூறின் அனு பவம், சிந்தனை ஆகிய இரண்டுமே அறிவாக்கத்திற்கு வழி செய்யும் மூலங்கள் என்பது உறுதிப்படுகிறது.

1. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் (அனுபவம்)

2. எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் (சிந்தனை)

முடிவாகத் தமிழரின் சிந்தனை வரையறுப்பதாவது, உண்மையான ஏற்புடைய அறிவைப் பெற வேண்டுமானால் அனுபவத்தின் மேல் சிந்தனையாற்றலைச் செலுத்த வேண்டும் என்பது முடிவாகிறது.

**தமிழர் மெய்யியல் - தத்துவ மரபு**

தமிழர் மெய்யியல் அல்லது தத்துவ மரபு மிகவும் ஆழமானது. எல்லோருக்கும் இலேசிலே புரிந்து கொள்ளும் வகையில் காணப்படாதது. மனிதர்கள் பலர், உண்டு, உடுத்து, உறங்கி, இனம்பெருக்கி வாழும் வாழ்க்கையே மனிதக் குறிக்கோள் என்கின்றனர். அவர்களில் மிகச் சிலர் நான் யார்? என் உள்ளம் ஆர்? வந்தவாறு எப்படி? போமாறு ஏதோ? என்று சிந்தித்து அவற்றுக்கு அடிப்படையாகவுள்ள சக்தியை அறிய ஆவலுறுகின்றனர். அதன் விளை வாகத் தோன்றியனவே அநுபூதி நெறிகள். அந்தக் கரணங்களைக் கொண்டு அறியும் பொருள் ஒன்று உண்டு என்றும், அதுவே ஆன்மா என்றும் வரை விலக்கணம் வகுத்தனர். அது பூரண அறிவுடையதன்று; அதாவது, அறிவிக்க அறியும் பொருள் என்றனர். அதனை அறிவுடையதாக்கும் பொருள் ஒன்று உண்டு. அதுவே மெய்ப்பொருள். அம்மெய்ப்பொருளையறிந்து அது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவதே மனிதனது இலட்சியம் என்றும் உபநிடதங்கள், தந்திரங்கள், ஆகமங்கள் எல்லாம் இவற்றை விரித்தும், விளக்கியும் இந்நிலையில் உயர்த்துயர்த்து ஞான நெறியின் உச்சியை அடையும் குறிக்கோளை மனிதனது குறிக்கோளாக எடுத்துக் காட்டுகின்றன. சமய அடிப்படையில், சித்தாந்தம், வேதாந்தம் என்னுமிரு கொள்கைகள் பிரசித்தமாயுள்ளன. சைவசித்தாந்தத்தின் அடிப்படை நூல்கள் 14 சித்தாந்த சாத்திரங்களாகும். புராணோதிகாசங்களும், திருமுறைகளும் சித்தாந்தத்தின் அடிப்படைகளாகும். பாதராயணர் எழுதிய பிரம்ம சூத்திரம் எனப்படும் வேதாந்த சூத்திரம் வேதாந்தத் தத்துவங்களுக்கு முதல் நூல். பிரம்ம சூத்திரத்திற்கு வேறுபட்ட விளக்கங்கள் தரப்பட்டன. அவற்றுக்கேற்பத் தத்துவங்கள் மாறுபட்டன. சங்கரரின் விளக்கம் அத்வைத மாகவும் ராமானுஜரின் விளக்கம் விசிஷ்டாத்வைதமாகவும், மத்துவரின் விளக்கம் துவைதமாகவும் வேதாந்த தத்துவங்கள் விரிந்தன.

சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் விளக்கமாகவும், சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்று ஆன்மாக்களின் பெயர்கள் குறித்தும் விவரிக்கும். உயிர் அல்லது ஆன்மா பற்றிய கோட்பாடு சைவ சித்தாந்தத்திலே பேருண்மையாக என்றும் நிலவும் கோட்பாடாகும். சகலர் ஆணவம், கன்மம், மாயை எனுமிரு மலங்களையும் உடையவர்கள் விஞ்ஞான கலர் ஆணவம் மட்டும் உடையவர்கள்.

ஆன்மாக்களுக்கு ஞான அறிவு வேண்டும். அல்லாவிட்டால் உணர மாட்டாதவை. ஆன்மா ஆணவத்தைச் சார்ந்தால் அறியாமையுடையவராயும் இறைவனைச் சார்ந்தால் ஞானவான்களாயும் மாறுகின்றனர். இறைவனின் திருவருள் நோக்கம் கிட்டாதவிடத்து ஆன்மாக்களுக்கு ஞானமும் அறியா மையாகவே தோன்றும். இது கோட்டானுக்குப் பகலிலும், கண் தெரியாம லிருப்பதற்கு ஒப்பாகும்.

*பாலாழி மீனாளும் பான்மைத்து அருளுயிர்கள்*
*மாலாழி யாழும் மறித்து*

ஆன்மாக்கள் திருவருளைத் தவிர்த்து, பாற் கடலில் வாழும் மீன்கள் பாலின் தன்மையை உணராது பூச்சிபுழுக்களைத் தேடும் தன்மையினை ஒத்து மயக்கத்தைத் தரும் உலக விடயங்களாலே ஆழ்ந்து கிடக்கும். (பாற் கடல் திருவருளுக்கும் மீன்கள் உயிர்களுக்கும், பூச்சி புழுக்கள் உலக விடயங்களுக்கும் உவமையாயின. (திருவருட்பயன், அருளது நிலை: 4).

*பரப்பமைந்து கேண்மின் இது பாற்கலன்மேற் பூனை*
*கரப்பருந்த நாடுங் கடன்* (திருவருட் பயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான நூல்களைப் பாடங் கேட்கும்போது புலன்களை வேறு விடயங் களிலே செலுத்தாமல் பரபரப்பின்றி அமைதியாகக் கேட்பீர்களாக. மனத்தை யொடுக்காது - கேட்டல் - பாற் கலன் மேற் பூனை கரப்பன் பூச்சியை விரும்பிச் சுவரை நோக்கிச் செல்லுதலுக்கு ஒப்பானது. (பாற்கலன் - ஞான நூல்களுக்கும், பூஞை - ஆன்மாவிற்கும்; கரப்பு - உலக விடயங்களுக்கும் உவமைகளாயின.

தத்துவங்களை அகத்தியர், தொல்காப்பியர், அனுமார், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், அரவிந்தர், அரிச்சந்திரன், அருணகிரிநாதர், அருணந்தி சிவாசாரியார், ஆறுமுகநாவலர், மகாத்மா காந்தி, இராதா கிருஷ்ணன், இராம கிருஷ்ணர், சேர். பொன். இராமநாதன், இராமன், இராமானுஜர், உமாபதி சிவம், கச்சியப்ப சிவாச்சாரியார், உப அதிபர் பொ. கைலாசபதி, பண்டிதமணி கலாநிதி சி. கணபதிப்பிள்ளை, டாக்டர் மு. கந்தையா, கனகசபைப்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், கைலாசபிள்ளை, சங்கர பண்டிதர், சங்கராச்சாரியார், சபாபதி நாவலர், சிவஞான முனிவர், கலாநிதி சிவப்பிரகாசம், சு. சிவபாதசுந்தரம், சேக்கிழார், சோக்கிரட்டீஸ், சி. வை. தா. தாயுமானவர், பரிமேலழகர், பாரதி, பாரதிதாசன், பிரம்மா, பிளேட்டோ, சேனாவரையர் நச்சினார்க்கினியர், பேராசிரியர் இளம் பூரணர், மத்துவர், மழவை மகாலிங்கையர், மனு, மெய்கண்டார், ராஜாஜி, இராவணன், வாலி, விசுவாமித்திரர், வியாசர், விவேகானந்தர், வினோபா, விஷ்ணு, வைசம்பாயனர், திருமூலர், பதினெண் சித்தர்கள் ஆசிரியர் உலகுக்கு வழங்கியுள்ளனர்.

'மனித வாழ்க்கை விழுமியங்கள்' என்னும் நூல் மூலம் நூலாசிரியரின் சமய, இலக்கிய, கல்வி அறிவின் ஆழம் உரைநடையாக வெளிவந்துள்ளது. மரபு முறை - மரியாதை முறை என்பனவற்றைக் கொண்டமையினும் 'கண்டன முறைமை' நூல் முழுவதுமே இழையோடியுள்ளது. நுண்மான் நுழைபுலமிக்க இவ்வாசிரியரின் விவேகத் தள நிலையும் தத்துவ விசாரங்களை வெளியிடும் மெய்யியல் உணர்வும் விதந்து பாராட்டத்தக்கன. இந்நூலில் மெய்ப்பொருட் சார்புடைய பல கலைச் சொற்கள் இடம் பெற்றிருத்தலும், இந்திய, சமய, பண்பாட்டுப் பின்னணியை முழுமையாகப் பார்த்து இந்நூல் பிழி சாறாக எழுதப் பெற்றுள்ளது. ஐரோப்பிய மெய்ப்பொருள் அறிஞர்கள் அறிவு விளக்கம் தருவதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே திருவள்ளுவர் தம் நூலில் அறிவுக் கோட்பாடுகளை விளக்கியிருப்பதை இந்நூலாசிரியர் அழகுற எடுத்துக் கட்டுரை வடிவிலே எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் கூறு நல்லுலகம் இனியெதிர் காலத்திலே செய்ய வேண்டிய சீரிய நேரிய தடத்தினை விளக்கி - விண்டு காட்டியுள்ளார் என்பது வரவேற்றுப் பாராட்டத்தக்கதாகும். இந்நூலாசிரியரின் 'புலமையிணைவு' என்பது இனி வருங்காலத்திற் சிந்தனைக்குரியதாகிறது; பயனளிப்பதுமாகும்.

## மெய்யியல் புத்தி விருத்தி

மனித விழுமியங்களையும், மனித வாழ்க்கை விழுமியங்களையும், இச்சிந்தனைகளை எழுதிய கலாநிதி, பேரறிஞர் கு. சோமசுந்தரம் அவர்களை - அவரது தளத்தை - அறிவதற்குரிய ஞானவிளக்கம் இங்கு விளங்கப்படுத்தப் படுகிறது. புத்தி விருத்தி என்பது கற்பனைக்கெட்டாத அளவு நீண்டது. மிகக் கடினமானது; படிப்படியாக முன்னேறுவது தான் முறை. அகங்கார விருத்தி, புத்தி விருத்தி, மனோ விருத்தி, சித்த விருத்தி, உள்ளவிருத்தி, மனோ லயம், சித்தலயம், உள்ளலயம், மனத்தெளிவு, சித்தத் தெளிவு, உள்ளத் தெளிவு, மன அழிவு, சித்த அழிவு, உள்ள அழிவு, மனமுறை, எனப் பதினைந்து கண்கள் உள. 'கண் விழித்தல்' என்பது ஆத்மாவின் உள்முக ஆற்றலின் - உள்ளொளியின் வெளிப்பாடாகவே கொள்ளக் கிடக்கிறது. உபஅதிபர் அளவெட்டி பொ. கைலாசபதியவர்களது தீட்ஷண்யம் மிக்க ஞானவுணர்விலே வெளிப்பட்ட கருத்துக்கள் ஆராய்ந்து கண்டறியற்பாலன. 15 கண்களுள் 7 ஆம் கண்ணாகிய 'சித்தலயம்' வரை நான் இதிகாச புராண சாத்திரங்களி லிருந்து சான்று காட்ட முடியும். அதற்கு மேல் குறிப்பாலுணர்ந்தவர் களைக் கூற முடியும். சித்தத்தினுள்ளே சிவலிங்கம் கண்டவர்களை யார் தான் இனங்காண முடியும்? விழுமியக் கல்வியில் இன்று உலக முன்னோடி யாகப் பெரும்பாலானவர்கள் ஏற்பது பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் சிந்தனை களையும், போதனைகளையும் தான் என்பது உலகப் பிரத்தியட்சம். 'ஆத்ம ஜோதி' நா. முத்தையா, வேதாந்திரி மகரிஷி என்போரது சிந்தனைகள் மிகமிக நுட்பமானவை; மனம், ஆத்மா சம்பந்தப்பட்டவை.

புத்தி விருத்தித் துறைகள் 9 வகைப்படும். அவையாவன.

1. தர்மத் துறை
2. அர்த்தத் துறை
3. காமத் துறை
4. மோட்சத் துறை
5. அமிர்தத் துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஞானத் துறை
7. சித்தாந்தத் துறை
8. முடிந்த சத்தியத் துறைகள்
9. அகத் துறைகள்

என்பன அவையாம்.

மெய்யியலறிஞர் ஒவ்வொருவரும் தமக்கென ஒரு மரபைச் சார்ந்து விளங்குவர். அவரது சிந்தனைகள் சமூகத்தின் சில பிரச்சினைகளுக்கு மத்தியில் முகிழ்க்கின்றனர். இதனால் அவர் அச்சிந்தனை வடிவங்களுக்கு வாரிசாக மாறுகிறார்.

ஓர் இனத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சி தலைமுறை தோறும் பயன் பாடுடைய சிந்தனை வடிவங்களில் தான் தங்கியிருக்கிறது. புதுமைக்காக மரபைக் கைவிடுதல் வெறும் மேற்போக்குத் தன்மைக்கே வழிவகுக்கும். இது மெய்யியல், கலை, சமூக, அறவியல், அமைப்புக்கள் அனைத்திற்கும் பொருந்தும் விடயமாகும். மெய்யியலாளன் ஓர் அறிவார்ந்த மொழியைப் பேசுகிறான். அதில் அவனது எண்ணக்கருவூலங்கள், தனித் தன்மைகளை, பெறுமான மதிப்பீடுகளெல்லாம் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். ஒரு மெய்யியல் அறிஞனிடம் எத்தகையதோர் மெய்யியற் கருவூலத்தைக் கையளித்தாலும் அவை புதிதாக உயிரோட்டமுடன் கூடிய ஒன்றை உருவாக்கி உலகுக்கு அளிக்கும் தனிச்சிறப்புள்ளவனாகிறான். அதில் அவனது கருத்துச் செல்திசை (Tenor of his thoughts) இறந்த காலத்திலிருந்து வந்தாலும், தீர்வு காணும் விதம் நிகழ் காலத்திலேயே உருவாகிறது. இதனால் அவனது தீர்வும் தம் காலத்தைச் சார்ந்ததும், என்றும் புதுத் தோற்றம் எடுக்கும் நிலையிலுள்ளதுமான செயற்பாட்டினையே பிரதிபலிக்கும். மெய்யியல் செழித்தோங்கிய காலப்பகுதியில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் தம்மரபு வழிவந்த கல்வியைத் தம்முள் தாங்கியவர்களாகவும், தம் சமகாலப் புதுச் சவால்கள் குறித்து ஆழ்ந்த உணர்ச்சி உடையவர்களாகவும் இருந்திருக் கின்றனர். இதனால் மெய்யியல் அறிஞர்கள் புதிய சவால்கள் பலவற்றிற்கு விளக்கங் கொடுக்கும் இன்றியமையாமையையும் உணர்ந்தனர். மெய்யியற் கொள்கைகள் சில உயர்கல்வி நிலையங்களில் மட்டுமே கல்விமான்களால் போற்றப்பட்டுக் கிடக்கின்றன. சாதாரண மனிதன் அவற்றைப் பற்றி ஒன்றும் அறியான், மிகத் திறமை வாய்ந்த சிந்தனையாளன், மெய்யியலாளன். மெய்யியலை வாழ்க்கைத் துறையாகக் கொண்டவர்கள் தம் முன்னோர் பேசி முடிவுக்குக் கொண்டு வந்த விடயங்களையே மீண்டும் மீண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்க்கித்துக் கொண்டிருப்பவர். இந்நூலை வாசித்ததால் என்னுட் கிளம்பிய சிந்தனைகளே இவை.

### விழுமியக் கல்வி என்பதன் விளக்கம்

பேரறிஞர், கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்கள் விழுமியம்சார் கல்வியின் பண்புகள் என்று (ப. 288) குறிப்பிடும் சிந்தனைகள் வருமாறு:

> சமாதானம், சகவாழ்வு, நல்ல மனித உறவுகள், நட்பு, இனங் களுக் கிடையே ஒற்றுமை; புரிந்துணர்வு, மனித நேயம், பல்லுயிர் ஓம்புதல், பகிர்ந்து அனுபவித்தல், வளங்களைப் பாதுகாத்தல் என்பன விழுமியஞ்சார் கல்வியினூடாகவே எய்த முடியும். சமாதானத்துக்கான கல்வி என்பது மனித விழுமியங்களை விருத்தி செய்வதற்கான கல்வியாகும். உடல், உள, விவேக உணர்வு, ஒழுக்க ஆன்மிக, பண்பாட்டு, சமூக, கலாசார, சமூக, பொருளாதார விருத்தி, சம நிலையில் ஒருங்கிணைந்த முறையில் மாணவரில் கல்வி ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. விழுமியம்சார் பண்புகளையும், கல்வி இணைத்துக் கொள்ளும் போது தான் எதிர்பார்ப்பு நிறைவு பெறும். கல்வியினூடாக விழுமியங்களைத் தெரிதல் (அறம் தெரிதல்), விழுமியங்கள் அல்லாதவற்றைத் தெரிதல் (மறம் தெரிதல்) என்பன நிகழ்தல் வேண்டும். அப்போது தான் விழுமியங்களை ஏற்று வாழ்வில் மேற்கொள்ளவும், அல்லாதனவற்றை விலக்கிக் கொள்ளவும் முடியும். கல்விச் செயன் முறையில் கற்றல், கேட்டல், உணர்தல், தெளிதல், நிற்றல் என்பன முட்டின்றி நடைபெறும் போதே பூரண நிறைவான கல்வியாக அது கொள்ளப்படும்.

என்கிறார்.

### மனித வாழ்க்கை விழுமியங்கள் குறித்து நூலில் உள்ள விளக்கங் களும்; எடுத்துக் காட்டுகளும்

விழுமியங்கள் தொடர்பாக இந்திய தத்துவஞானி சர்வப் பள்ளி இராதா கிருஷ்ணன் கூறியுள்ள கருத்துகளை எடுத்துக் காட்டி எழுதும் பேரறிஞர் கலாநிதி சோமசுந்தரம் அவர்கள் எழுதுவதாவது:

> 'Values' என்னும் ஆங்கிலப் பதத்திற்கு மதிப்பு, பெறுமதி, பெறுமானம் எனப் பொருள் சொல்லப்படுகிறது. பணம், பண்டம், பொருள், நிலம் என்பன உலகியல் ரீதியில் பாதிப்பு பெறுமானம் வாய்ந்தவை. இவற்றைச் 'செல்வங்கள்' என்றும் அழைக்கின்றனர். இவை ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொன்றினதும் மதிப்பு, பெறுமானம், பெறுமதி பல்வேறு காரணி களால் நிர்ணயிக்கப்படுகின்றன. இடத்துக் இடம், காலத்துக்குக் காலம் அவை மாற்றமும் அடைகின்றன. "Values" என்னும் ஆங்கிலப் பதம் விழுமியங்கள் என்ற தமிழ்ச் சொல்லி னாலும் உணர்த்தப் படுகிறது. விழுமியங்கள் விழுப்பம் (மேன்மை) தரலால், அவை உயர்வானவை; மேன்மையானவை; அதி உன்னதமானவை. எமது உயிரினும் மேலான பெறுமதியுடையவை. விழுமியங்களின் மதிப்பு, நம் உயிரை விட. உறவை விட இவ்வுலகில் எவ்வெப் பொருள்களை பெறுமதியும் பெறுமானமும் மிகுந்தன என்று கொண்டாடி மகிழ்கின் றோமோ, அவற்றின் மதிப்பை விடப் பன்மடங்கு உயர்ந்து காணப் படுகிறது. எனவே, எந்த நிலையிலும் விழுமியங்களை இழந்து விடலாகாது. விழுமியங்கள் தான் மனித அடையாளங்கள். மிருகங் களிலிருந்தும் ஏனைய உயிரினங்களிலிருந்தும் மனிதரை வேறு படுத்திக் காட்டும் குறிகாட்டிகள்.

மனித நாகரிகம் ஆனது வெறுமனே செங்கற்களாலும், சாந்தினாலும், இரும்பினாலும், இயந்திரங்களினாலும் கட்டியெழுப்பப்படுவதன்று. மனிதர்களாலும் அவர்களின் நற்குணப் பண்புகளினாலும், நல்லொழுக் கத்தினாலும் உருவாக்கப்படுவதே நயத்தக்க நாகரிகம் ஆகும். இங்கு நற்பண்புகள் நல்லொழுக்கம் என்று குறிப்பிடப்படுபவை, மனித விழுமியங்கள் ஆகும்.

விழுமியங்களை இனங்காணல் (ப. 207) பற்றிக் கலாநிதி கு. சோமசுந்தரம் அவர்கள் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா Dackawish (1959), Ramji (1986) ஆகியோர் குறிப்பிடும் விழுமியங்களை எடுத்துக் காட்டுகிறார். டக்கவிஷ் 12 அடிப்படை விழுமியங்களை இனங்கண்டுள்ளார். அவை வருமாறு:

1. மனித நேயம்
2. பெரியாரைக் கனம் பண்ணல்
3. மனித நல்லுறவுத் திறன்கள்
4. மகிழ்ச்சி
5. நேர்மை
6. நன் மனப்பாண்மை
7. பணிவுடைமை
8. சமயத் திறன்
9. உணர்ச்சிக் கட்டுப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சாந்தம்
11. உண்மை
12. நடுநிலைமை

என்பன.

'ராம்ஜி' பின்வரும் விழுமியங்கள் மாணவர் பால் விருத்தி செய்யப்பட வேண்டியவை என்கிறார். அவர் குறிப்பிடும் பத்து விழுமியங்களும் வருமாறு

1. தைரியம்
2. உண்மை
3. அன்பு
4. தொழில் மகத்துவம்
5. சேவை
6. சுத்தம்
7. மனத்தூய்மை
8. மரியாதை
9. சமாதானம்
10. இன்பம்

பகவான் சத்தியசாயி பாபா அவர்கள் இனங்கண்டுள்ள அடிப்படை மனித விழுமியங்கள் ஐந்து:

1. சத்தியம்
2. தருமம் (நன்னடத்தை)
3. சாந்தி (சமாதானம்)
4. பிரேமை (அன்பு)
5. அஹிம்சை

என்பனவாம்.

இவ்வாறு மேலும் பலர், மனித விழுமியங்களை இனங்கண்டுள்ளமையுடன் சமூக, ஒழுக்க, ஆன்மிக, சமய, கலாசார, பொருளாதார, மனித விழுமியங்கள் என வகைப்படுத்தியும் காட்டியுள்ளனர். மேலும், விழுமியங்கள் 'மனவெழுச்சி ஆட்சி' யுடன் தொடர்புபட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கது என்று எழுதுகிறார்.

நல்லுறவு பேணி நலம் பெறுவோம் (கட்டுரை 12) (ப.77) என்னும் கட்டுரையில் கலாநிதியவர்கள் எடுத்துக் காட்டும் வாழ்க்கை விழுமியம் என நீதி பற்றி விளக்குகிறார்.

> நீதியை அவமதிக்கவோ, அலட்சியம் செய்யவோ முடியாது. நீதி என்றும் விழிப்பாகவேஇருக்கிறது. தவறு செய்தோர், தாம் அதைக் கெட்டித்தனமாகச் செய்து முடித்தோம் என்று நிம்மதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபோதும் இருக்க முடியாது. குற்றம் புரிந்தவர்க்கு வாழ்க்கையில் நிம்மதி என்றுமே கிட்டாது. நீதி தரும் தண்டனை அதுவாகும். நீதி தவறியவருக்கு நீதியே கூற்றாகும்.

(மனத்தை) அடக்குதல் வேறு; அடங்குதல் வேறு'' (ப.90). மனம், எண்ணம் ஆகிய இரண்டும் ஒன்று தான். ஆயினும் மனத்தின் இயக்கத்தை 'எண்ணம்' என்னுஞ் சொல் சிறப்பாகச் சுட்டி நிற்கிறது (ப.92).

(ப.93). இல் ''மனோவேகம், மற்றெல்லா வேகங்களையும் விட அதி வேகம் உடையது. மனத்தில் தோன்றும் எண்ணங்களைத் தோன்றாமல் செய்யும் வலிமை மனிதரிடம் இல்லை. தோன்றும் எண்ணங்களைச் சீர் செய்யவும், முறைப்படுத்தவும், நெறிப்படுத்தவும், மனிதனுக்கு பெறும் அதற்கான பகுத்தறிவு மனிதனிடம் உண்டு. பகுத்தறிவை மனிதன் பயன் படுத்தத் தவறும்போது தவறான எண்ணங்கள் மனிதனை வழிநடத்த முயலும். அதுவே தான் மனிதன் எப்போதும் விழிப்போடு இருந்து தவறான கெட்ட எண்ணங்களை விலக்க வேண்டும்.'' என்கிறார்.

(ப.95). இல் '' திருத்தம் மனிதன் உள்ளிலிருந்து வரவேண்டும். அதை வெளியிலிருந்து அழுத்தம் காரணமாக அடைதல் இயலாத காரியம் என்கிறது. குறைகளைத் திருத்தினால் 'குணநலப் பேறு' வரும் என்கிறார்.

(ப.100). இல் ''காலம் பொன்னானது'', கொட்டி விட்ட பால், விட்டு விட்ட இளமை, நழுவ விட்ட சந்தர்ப்பம், கடந்து விட்ட காலம் என்பவற்றை மீளப்பெறுதல் முடியாத காரியம். காலத்தை மதித்து வாழ்தல் வாழ்க்கைக்கு வளமூட்டும்.''

(ப. 102). இல் ''மனிதராற் செய்யத்தக்கவை பற்றியும், விலக்கத்தக்கன பற்றியும், நிரற்படுத்தும் பண்புகளை நோக்கலாம்.

''உடற் பயிற்சி, உணவுப் பழக்கம், நல்லொழுக்கம், நன்னடத்தை, மனநலம், ஒழுங்கு முறை அதிகாலை துயில் எழல், காலைக் கடன்களை ஒழுங்காகச் செய்தல், குளிர்ந்த நீரில் குளித்தல், கடவுள் வழிபாடு செய்தல், நேரத்துக்கு உணவு உண்ணல், வேலைகளில் முழுமையாக ஈடுபடல், எல்லோருடனும் அன்பாகப் பழகுதல், நல்லுறவு பேணல், சீரான உணவு முறை பேணல், பகலில் நித்திரை செய்யாதிருத்தல், நேரத்திற்கு உறங்குதல்'' என்பன செய்யத்தக்கவை.

மனிதரால் விலக்கப்பட வேண்டியவை வருமாறு: புகை பிடித்தல், மது அருந்துதல், போதைப்பொருள் பாவனை, தீயோர் நட்பு, வன்செயல், காம உணர்வு, சோம்பல், பேராசை, மன அங்கலாய்ப்பு, சினம், முறையற்ற பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சி ஆரோக்கியமற்ற போட்டி மனப்பான்மை, வஞ்சம், பகைமை உணர்ச்சி, கர்வம் விலக்கல் என்பன விலக்கப்பட வேண்டியவை.

(ப. 103). இல் வாழ்க்கை முழுவதும் வளமாகவும், நயமாகவும் விளங்க வேண்டுமானால் தனக்குக் கிடைத்த முதல், அதாவது ''விந்து சக்தி'' எனும் உயிர்ச்சக்தி இளமையிற் தேவையற்ற வழியில் செலவு செய்யாது பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிறார்.

**(ப. 104, 105) இல் ' மன அழுக்குகளாக பொறாமை, பேராசை, சினம், அச்சம், பால் உணர்ச்சி, அகந்தை, மமதை, அங்கலாய்ப்பு, வஞ்சகம், சூது, கவலை என்பன உள்ளன. ஆசைகளை முழுமையாக ஒழிக்க முடியாது. ஆசைகளைச் சீர்செய்து முறைப்படுத்தித் தனக்கும் பிறருக்கும் தீமை விளை விக்காது பார்த்துக் கொண்டால் அதுவே போதுமானது. அவ்வாறே ஏனைய உணர்ச்சிகளையும் அளவுக்கு விஞ்சாது பார்த்துக் கொள்ள வேண்டும். புலன் உணர்ச்சிகளைத் தடுத்து நிறுத்த மனிதன் தனது பகுத்தறிவைப் பயன்படுத்த வேண்டும். பகுத்தறிவைப் பறி கொடுத்த பலர், படித்தும் படியாதோர் போலக் காணப்படுகின்றனர். இன்றைய உலகில் பல கவனக் கலைப்பான்கள் இளைஞரை ஆட்டிப் படைக்கின்றன. சினிமா மோகம், தொலைக்காட்சி நாடகங்கள், மற்றும் பாலுணர்வுகளைத் தூண்டும் கவர்ச்சிகள், தகவல்கள் அடங்கிய ஆபாசப் படங்கள், சஞ்சிகைகள், நூல்கள் என்பன இளைஞர்களின் மனங்களைக் கெடுத்து விடுகின்றன.'' என்கிறார்.**

> ஆன்மீகம் என்பது ஒரு வாழ்க்கை முறை. உலகியல் வாழ்க்கையில் முற்று முழுதாக மூழ்கியிருப்போர் ஆன்மிகத்தை இணைத்துக் கொண்டால் வாழ்வு வளம் பெறும்; நலம் பெறும். துன்பங்கள் மறையும், இன்பம் பொங்கும். ஆன்மிகம் உலகியலுக்கு எதிரான தல்ல. இரண்டும் தேவையே என்பதை மறுப்பதற்கில்லை. தனி மனித அமைதிக்கும் சமூக அமைதிக்கும், குடும்ப அமைதிக்கும், ஆன்மிகம் இணைந்த வாழ்வு வழி செய்கிறது. ஆன்மிக வாழ்வு இளமையிலிருந்தே இடம்பெற வேண்டும் என்பது உணரப்பட வேண்டிய உண்மை யாகும். உடல் நலம், நீண்ட ஆயுள், நிறை செல்வம், உயர் புகழ், மெஞ்ஞானம், அமைதி வாழ்வு அடைதல் இலகு என்று விளக்குகிறார் நூலாசிரியர் கலாநிதி கு. சோமசுந்தரம்.

(பக். 106, 107) இல் ''கற்றவர்களுக்குச் சரி, கல்லாதவர்களும் சரி நடை முறையில் பெரியோர் வார்த்தைக்கு மதிப்புக் கொடுப்பதாகத் தெரிய வில்லை. ஆசை மனிதனை ஆட்டிப்படைக்கும் மனிதனின் நிம்மதியைக் கெடுக்கும். சாதாரண ஆசையாகத் தோன்றிப் பேராசையாக விரிவுபடுகிறது. பேராசையால் பொருள், புகழ், அந்தஸ்து, கீர்த்தி, பதவி, மானம், மதிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றை இழந்தவர்களின் வரலாறுகளை நாம் அறிந்துள்ளோம். பேராசை நிறைந்தவர்களின் மனங்களில், அச்சம், பகைமை, பொறாமை, கோபம், அங்கலாய்ப்பு, வன்முறை, இம்சித்தல், பழிவாங்கல், வஞ்சம், கடும்பற்று, அகந்தை, மமதை என்பன காணப்படும். நிலையான இன்பத்துக்கு, நிறைவான மனம், அருள் நிறைந்த அமைதி; கணிந்த அன்பு என்பன அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

(ப. 108) இல் ''ஆசைகள் இருக்கும் வரை பிறவிகள் இருந்தே தீரும். பிறவிகள் இருக்கும் வரை துன்பங்களும் தொடர்ந்து கொண்டே செல்லும். எனவே துன்பங்கள், துயர்களிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால் பிறவியை ஒழிக்க வேண்டும். பிறவியை ஒழிக்க வேண்டுமாகில் அதற்குக் காரணமாக அமைந்த ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டும்.''

(ப. 113) இல் ''துன்பங்களுக்கெல்லாம் காரணம் அறியாமையே என்பது பெரியோர் வாக்கு. இதனை உணர்ந்து அறிவுகூறும் வழி நின்று, எதனையும் அளவு முறை பிறழாது அனுசரித்து வாழ்ந்தால், கிடைப்பது இன்ப வாழ்வு. பொங்குவது மகிழ்ச்சி; நிலவுவது அமைதி என்கிறார்.

(ப. 114) இல் ''விஞ்ஞான அறிவினை ஆக்கத்திற்கு மட்டும் பயன்படுத்தி வந்தால் அமைதி, மகிழ்ச்சி, சாந்தி நிறைந்த மனிதர்களையும் உலகினையும் விரைவில் காணமுடியும்.

(ப. 115) இல் '' மனிதன் மனிதப் பண்புகளை வளர்த்திருப்பானா யிருந்தால் குழப்பங்கள், அட்டூழியங்கள், அழிவுகள், அனர்த்தங்கள் ஏற் பட்டிரா என்கிறார்.

மனிதருட் பலர் உருவ அமைப்பிலும் அங்க அடையாளங்களில் மட்டும் விலங்கினத்திலிருந்து வேறுபட்டிருக்கிறார்களே தவிர, குணத்திலோ, பண்பிலோ, அறிவின் தரத்திலோ மனிதனாக உயரவில்லை.

(ப. 116) இல் மனித விழுமியங்களிலிருந்து விடுபட்டு வாழும் மனிதர் களிடத்து மேலோங்கும் துர்க்குண நடத்தைகள் - மேலோங்கும் தீய குணங்கள் பற்றிக் கூறுமிடத்தில் துன்பங்கள், பிரச்சினைகள், பகை, பிணக்கு, போர், வன்முறை, சுயநல வேட்கை, பேராசை, பொறாமை, போட்டி மனப்பான்மை, சுரண்டல், முறையற்ற வழியில் பொருள் தேடல், வஞ்சகம், பொறுப்புணர்ச்சி, மேலாண்மை செலுத்துதல், பேய் பிடித்தவர்களின் நிலையில் வாழ்கின்றனர் என்கிறார்.

இன்பம், மகிழ்ச்சி, அமைதி, ஆனந்தம், நிம்மதி என்பன மனிதனிடத்தி லிருந்து விலகிவிட்டன என்கிறார். ஆசிரியரின் சிறுமை கண்டு பொங்கும் உணர்வு நலனை இவ்விடத்திலே காணுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பேட்ரண்ட்றஸல்'' என்பாரின் மேற்கோளையும், ஔவையின் மேற் கோளையும், எடுத்துக் காட்டுவது நோக்கத்தக்கது.

''மனிதன் எந்த அளவு அறிவைப் பெருக்குகிறானோ அந்த அளவு, தூய அறநெஞ்சத்தை வளர்த்துக் கொள்ளவில்லை எனில் அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்தில் போய் முடியும்'' என்கிறார் பேட்ரண்ட் றஸல். ''உலகை ஒன்றாகக் காண்பதே கல்வி'' - ஔவை. ''குணநலம் சான் றோர் நலமே'' என்பது வள்ளுவம்.

(ப, 117) இல் உலகியல் சார்ந்த நோக்கங்களும், ஆன்மிகம் சார்ந்த நோக்கங்களும் இணையப் பெற்ற கல்வியே விழுமியக் கல்வியாகும். அண்மைக் காலத்துக் கல்வி முன்னேற்றம் பொருள் ஈட்டுவதற்கான வல்லமை யையும், குறுக்குவழி உபாயங்களையும் மனிதருக்கு வழங்குவதில் வெற்றி கண்டுள்ளது. ஆனால் மனிதரை மனிதப் பண்புகள் கொண்ட மனிதராகப் பண்படுத்துவதில் படுதோல்வி கண்டுள்ளது.''

(ப.120) இல் '' ஆசை - மனமாகவும், கோபம் - சகிப்புத் தன்மை யாகவும் தற்பற்று - ஈகையாகவும் மனச்சாட்சி கற்பாகவும், உயர்வு தாழ்வு மனப்பான்மை - சமத்துவ நிலையாகவும், வஞ்சம் மன்னிப்பாகவும், மாற்ற மடைய வேண்டும்.

(ப. 140) இல் பிள்ளைகள் பெற்றோரிடமிருந்து எதிர்பார்ப்பது, அன்பு, அரவணைப்பு, கரிசனை, பற்று, பாசம், பிணைப்பு, உரையாடல், நலன் விசாரித்தல் என்பனவாகும். அத்துடன், அன்புப் பரிவர்த்தனை, அறிவுப் பரிவர்த்தனை, தகவற் பரிவர்த்தனை, உணர்வுப் பரிவர்த்தனை, சமய, கலாசாரப் பரிவர்த்தனை, ஒழுக்க விழுமியங்கள் பரிவர்த்தனை, என்பனவும் பகிரப்பட வேண்டும்.

(ப. 142) இல் உளத் திறன்களாக நுண்ணறிவுத் திறன்கள், நன்மனப் பாங்கு, குணப் பண்புகள், நல்லொழுக்கப் பண்புகள், விழுமியங்கள், செய்திறன், ஆர்வம் என்பனவற்றை நிரற்படுத்துகிறார்.

(ப.200) இல் ஒருவன் முன்னேற வேண்டியது அவசியம். ஆனால் அடுத்தவனை உழக்கி மிதித்து விட்டு, அல்ல என்பதைக் கருத்தில் கொண் டால், பிரச்சினைக்கு இடமிருக்காது.

(ப. 201) இல் ''மனிதர்கள் இயந்திரங்கள் அல்ல; வெறும் ஜடங்களு மல்ல என்பதைக் கல்வி உயர்த்தத் தவறியமையால் தான் மனித நெஞ்சங் களில் ஈரம் காய்ந்து விடுகிறது.''என்கிறார்.

இவையனைத்தும் நம் வாழ்விலும் சிந்திக்கப்பட வேண்டியனவாம். இனி, இந்நூலைக் குறித்துக் சில ஆங்கில வரிகள் அவசியம் என்று கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**An Interdisciplinary Approach Book Written by Dr. Kumarasamy Soma-sundaram**

"The interdisciplinary approach of yours in utilizing the internal evidences from tamil and other literatures is interesting. The presentation of philosophical thought with Profuse and profound quotations and the analytical treatments.

Characteristic of metaphysis are reflected in your work. your endevour in bringing ot a book with innovation is appreciated. This book deals with the tamils learn of knowledge "manitha vaghkai vighumiyangal" is a significant Contribution to Tamilology.

***(10.10.2010)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20

## சுதேச தமிழ் மருத்துவ இலக்கியமான பரராசசேகரத்தின் யாப்பியற் கவிதை வளம்

இந்தியத் தமிழ்நாட்டைப் போலவே ஈழத்திலும் மிகவும் ஆதிகாலந்தொட்டுச் சுதேச வைத்தியம் மக்கள் பிணி தீர்ப்பதில் சிறப்புற்று விளங்கிவந்துள்ளதை அறிய முடிகிறது. பல்லவ, சோழ, பாண்டியர்களின் நட்புறவும் மேலாதிக்கமும் இலங்கையில் ஏற்பட்டிருந்த காலங்களில் தமிழகத்தில் கையாளப்பட்டு வந்த மருத்துவம் (சித்த மருத்துவம்) இங்கும் கையாளப்பட்டு வந்திருக்க வேண்டும். பொலநறுவை பொற்கல் விஹாரையில் (Potugal vehara) அமைந்துள்ள ஒரு சிலை சித்தமருத்துவத்தின் தந்தை என்று கருதப்படும். அகத்திய முனிவருடையது என்ற கருத்து இதை வலுப்படுத்துவதாக அமைகிறது. (சிவசண்முகராஜா சே. 1993 ஈழத்துச் சித்த மருத்துவ நூல்கள், ஓர் அறிமுகம், St. Joseph's Catholic press, 360, Main Street, Jaffna, அறிமுகம் Uragoda, C.G. (1987) A History of Medicine in Sri Lanka from Earliest times to 1948, A centenary Publication, Sri Lanka, Medical Association, Colombo 14). தமிழ் மருத்துவம், சுதேச மருத்துவம், சித்தமருத்துவம், ஆயுர்வேத மருத்துவம், சித்தாயுர்வேத மருத்துவம், நாட்டு மருத்துவம், கை மருத்துவம், நாடி வைத்தியம் என்றெல்லாம் தமிழரது மருத்துவ முறைமைகள் வெவ்வேறு பதங்களிற் பேசப்பட்டுள்ளமை சுட்டத்தக்கது. யுனானி மருத்துவம், தொடுகை மருத்துவம், சிங்கள மருத்துவம், ஆங்கில மருத்துவம் என்பன பிறவகை மருத்துவ முறைமைகளாகும். மூலிகை மருத்துவம் என்பது சித்தாயுர்வேத தமிழ் மருத்துவ முறைமையேயாகும்.

ஈழத்துச் சுதேச தமிழ் மருத்துவ இலக்கியம் என்ற வகையிலே முதன்மையாக வைத்து எண்ணப்படுவது பரராசசேகம் என்ற பன்னீராயிரம் பாடல்களைக் கொண்ட நூலேயாகும். இந்த நூலுக்கு முன்னர் தோன்றியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செகராசசேகரம் என்ற மருத்துவ இலக்கியமாகும். இவ்விலக்கியத்தை ஏழாலையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஐ. பொன்னையா என்பவர் ஏழு பாகங்களாகப் பிரித்து வெளியிட்டுள்ளார். அச்சுவேலியைச் சேர்ந்த ச. தம்பிமுத்துப்பிள்ளை என்பவரும் பரராசசேகரத்தைப் பதிப்பித்துள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும் அவரின் பதிப்பு நூல் கிடைத்திலது.

சுதேச தமிழ் மருத்துவ இலக்கியமான பரராசசேகரத்திலே அருமையான தமிழ்ச் சுவையை அனுபவிக்க முடியும். வைத்தியன் 'பண்டிதன்' எனவும் அழைக்கப்படுகிறான். பண்டிதன் என்பது அறிவியல், மொழி, சிந்தனை, கவிதா, சாமர்த்தியம், விஞ்ஞான நோக்கு, இயற்கையோடியைந்த சிந்தனை, உவமை, உருவக கையாளல், தமிழ்ப் பாவியல், யாப்பியற் கட்டுமானத்தை இறுகப்பற்றுதல் என்னும் குணாம்சங்களினால் மேதாவிலாசம் கொண்டவன் என்னும் விரிந்த, பரந்த புலத்தைக் குறித்து நிற்கிறது. தெய்வ நம்பிக்கை, இதில் மிகப் பிரதானமாயமைகிறது. இவ்வனைத்துப் பண்புகளும் இலக்கிய, நூன் மரபுச் சிறப்புகளுடன் பரராசசேகரம் எனும் நூலிலே இடம்பெற்றுள்ளமை எம்மால் ஆய்வு செய்யப்பெற்று வெளிக்கொணரப்பட்டுள்ளது.

சுருக்கமாக, காப்புச் செய்யுள் வரிகள்; ஓரிரு சான்றுகள் இங்கு நோக்கலாம்.

1. *சீரணியுஞ் திருமாலு மயனுங் காணாச்*
*சிவபெருமானளித் தருளுமொரு வெண்கோட்டுக்*
*காரணி மெய்யைங் கரத்து நால்வாய் முக்கட்*
*கடவுளிரு பதயுகளங் கருத்துள் வைப்பாம்*
(*பரராசசேகரம், கடவுள் வணக்கம், செய். 1*)

2. *அந்நியன் மதியென வலர்ந்த கோட்டைச்*
*சுந்தர நிறை மதித் துதிக்கை யானையை*
(*பரராசசேகரம், கடவுள் வணக்கம், செய். 2*)

3. *வாரண மங்கையை வதுவை செய்திடும்*
*சீரிய வேள் பதஞ் சிந்தை செய்குவாம்*
(*பரராசசேகரம், கடவுள் வணக்கம், செய். 3*)

**உவமைகள், உருவகங்கள், அன்மொழித் தொகைகள்: (மேலது, செய் - 3)**

பரராசேகர இலக்கிய மருத்துவ நூலிலே யாம் தரிசித்த ஆய்வு செய்து கண்டுபிடித்தனவாக மேல்வரும் நயங்கள் வரிகள், வசனங்கள், உவமைகள், உருவகங்கள், அன்மொழித் தொகைப் பிரயோகங்கள் அமைகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மானின் விழியாள் பெண் மணியே கேள்
2. காவியற் கண்ணினாளே
3. ஏலவார் குழலினாய் கேள்
4. மின்னிடை மின்னே
5. வாட்டடல் மடமானே
6. கிளி சேர் மொழியாய்
7. பேனேயூரும் போலூரும்
8. செப்புப் போன் முலை மாது நலாய்
9. குரும்பையின் முலை நன் மாதே
10. வட்டமுலையாய்

என வருவன காண்க.

தமிழியல் யாப்பிலக்கிணத்திலே எதுகை மோனை என்ற இலக்கிய வழக்குண்டு. தமிழிலே கவிதையையோ, செய்யுளையோ இயற்ற முற்படும் எவருக்கும் எதுகை மோனைப் பிரயோக முறைமை அவசியம். கடடாயம் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் மேதாவிலாசமிக்க புலவன், கவிஞன், காவிய ஆசிரியன் எழுதும் பொருள் மரபு கவிதையான கவிதைப்பண்பான எதுகை மோனை என்ற கவிதையின் வடிவத்தன்மையினால் நீடுநிலைபெற வாய்ப்புள்ளது. எனவே பாவலன், புலவன், கவிஞன் என்பவனுக்கு எதுகை மோனை வழக்குகளை இக்கட்டுரை அறிமுகப்படுத்துவதும் பொருந்து மல்லவா?

1. உண்மையாய்
வண்மையாய்
திண்ணமாய்
மண்ணுளோர்

2. காரணமாறிந்தோர்
தாரணையறிந்து
வாரளி முலையினாளே
பூரணமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தானே
மானே
பேனே
தேனே

**யாப்பியற் கவிதை வளம்**

பரராசசேகர இலக்கிய மருத்துவ நூலிலே பல்வேறு வகையான யாப்புகள் இடம்பெற்றுள்ளன. செய்யுட்கள் பெரும்பாலும் பாமர சாமானிய படிப்பறி வற்ற மக்களுக்குப் புரியத்தக்கனவாயமையவில்லை. பண்டிதன் எனும் மருத்துவனின் சாணக்கியமும், புலமையும், வித்துவ நலனும், மேதா விலாசமும், அறிவியற் பொருள் மரபு சுட்டும் திறனும் எல்லாம் இணைந்தும், பொருந்தியும் கவிதைகள் - செய்யுட்கள் இடம் கொண்டுள்ளமை மனங் கொளற்பாலது.

எண்சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம், நாற்சீர்விருத்தம், அறுசீர் விருத்தம், ஈரசைச்சீர் அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம், பன்னிரு சீர்ச்சந்த விருத்தம், பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம், துள்ளலோசை விரவிய எண்சீர் விருத்தம், கலிவெண்பா, எண்சீர்ச்சந்த விருத்தம் முதலிய யாப்பியன் முறைமைகளிலமைந்து இலக்கியச் செய்யுட்கள் பரராசசேகரத்திலே காணப் படுகின்றன. ஒரு சில யாப்புகளுக்கான சான்றுகளை நோக்குவோம். மேல் வருஞ் செய்யுள் எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம் என்னும் யாப்பில மைந்துள்ளது.

*தாரணியோர் மிகப் புகழ் தன் வந்திரி செய்த*
*தகவுடைய சீர்த்திபெறு மாயுள் வேதப்*
*பேரணியம் வாகடத்தைப் பெரிது பேணிப்*
*பெட்புடைய தமிழ்ப்பாவாற் பேசும் வண்ணம்*
*சீரணியுந் திருமாலு மயனுங் காணாச்*
*சிவபெருமானளித்தருளுமொருவெண் கோட்டுக்*
*காரணிமெய் யைங்கரத்து நால்வாய் முக்கட்*
*கடவுளிரு பதயுகளங் கருத்துள் வைப்பாம்*

மருத்துவ இலக்கியமான பரராசசேகரத்தில் இடம்பெறும் நாற்சீர் விருத்தம், சான்றாதாரம், செய்யுள்,

*செந்திரு நிறையொலி திகழுங் கிம்புரி*
*அந்தியின் மதியென வலர்ந்த கோட்டைச்*
*சுந்தர நிறை மதித் துதிக்கை யானையை*
*வந்தனை மலர்கொடு வணங்கி வாழ்த்துவாம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரராசசேகரத்திடம்பெறும் அறுசீர்விருத்தம் சான்றுச் செய்யுள்

*ஆயுளைக் கொடுக்கும் வேத மறையிலெட்டிலக்கமாகும்*
*மீயுயர் தமிழினாயேன் விளம்புவா னென நினைத்தல்*
*பாயுயர் விழியிலாதான் பகலினைக் காட்டக் கண்டு*
*சேயுயர் செவியினோர்க்குச் செப்பிய தன்மைத்தாமால்*

இனி, ஈரசைச்சீர் அநுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

*ஏகமாயாதி யாகி யெங்குமா யாவுமாகிப்*
*போகமாய்ப் போகியாகிப் பொருந்துயிர்க் குள்ளீடாகிப்*
*பாகமாரம்பையோடு பரசிவனருளிற் றோன்றித்*
*தாகமார் கைலை தன்னிற்றனித்திருந்தருளு மெல்லை*

இறுதியாகத் துள்ளலோசை விரவிய எண்சீர் விருத்தம்

*தழுதாழை நிலவாகை புளியாரை நொச்சி*
*சாரணையுடன் கோவை தக்கவழி சித்தி*
*பழுபாகலிருவேலி கோரக்கர் மூலி*
*பாங்கான வாகையகில் நன்னாரி சீந்தில்*
*வழுவாத விருவேலி யிலாமிச்சு வெட்டி*
*வாகாய முக்கிரா மிளகு சாரணைவேர்*
*அழகான வேங்கை வயிரத்தினுட னொல் வோன்*
*றவ்வாறு பலமாக வெவ்வேறு கொள்ளே*

இவை பரராசசேகர மருத்துவ இலக்கியத்தின் தமிழ்வள மாண்புகள்.

***(நன்றி: ஓலை, புரட்டாதி, மார்கழி, 2008)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

# இன்றும் நடைமுறையிலே பயன்படும் தமிழ் மருந்துகள் குறித்த இலக்கியச் சான்றுகள்

பொதுமக்கள் புரிந்துகொள்ளும் முறைமைகளுள் ஒன்றாகப் 'பேச்சுமொழி' அமைகிறது. 'பேச்சு' என்பது புரிந்துகொள்வதற்கான கருத்துத் தொடர்பாடலாக அமைகிறபோது அதன் பயன்பாடு பல்பரிமாணங்களை எய்துகிறது. நூலாக்கம், கவிதை, கட்டுரை, விரிவுரை, விளக்கவுரை என்பனவற்றிற்கு மட்டுமன்றி வாழ்வின் மருத்துவ விளக்கங்களுக்கும் கருத்துத் தெளிவுக்கும் 'பேச்சுமொழி' அத்தியாவசியமாகிறது. ஏட்டு வழக்கிலே (எழுத்துமொழியிலே) உள்ள அரிய, நுண்ணிய, பயனுள்ள கருத்துகளை எழுத்து விளக்குகின்ற வகையில் 'தொடர்பாடல் மொழி' யான பேச்சுவழக்கு பெரும்பயனை நல்குகிறது. எனினும் மிகத் தொன்மையான நடைமுறைகளைத் தமிழ் மருத்துவத்துறைசார்ந்த கவிதைகளிலே காணுகிறோம். ஈழத்திலக்கிய வரலாற்றிலே, காலத்தால் முற்பட்ட தமிழ் மருத்துவம் பற்றிய சிகிச்சை முறைகளையும், மருந்துகளையும் யாழ்ப்பாணத்தரசர் காலத்து நூல்களான **செகராசசேகரம், பரராசசேகரம், அமுதாகரம்** மற்றும் பதார்த்தசிந்தாமணி, சொக்கநாதர் தன்வந்திரியம், **வைத்திய சிந்தாமணி, சைவத்திற் தெளிவு, சுதேச வைத்திய அவுடதத் திரட்டு, ஆயுள்வேத அவுடத சங்கிரகம்** ஆகிய நூல்களாலறிய முடிகிறது. உலகப் புகழ்பெற்ற தமிழ்நூல்களான **திருக்குறள், திருமந்திரம், சித்தர் பாடல்கள்** என்பனவும் இன்றும் நடைமுறையிலே பயன்படும் தமிழ் மருந்துகள் குறித்த இலக்கியச் சான்றுகளாகும். பன்னிரு திருமுறைகளிலும் கூடத் தமிழ் மருத்துவக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளமையை அறிய முடிகிறது எனலாம். இலக்கிய நோக்கில் காணப்படும் மருத்துவம் தொடர்பான கருத்துகளில் பதினென் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள் (ப. 211) எனும் நூலிலே டாக்டர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை ஏலாதி பற்றி மேல்வருங் குறிப்புகளைத் தருகிறார்:

> நோய் என்பது தளர்ச்சி, மெலிவு, நொய்ம்மையைச் செய்வது.
> உள்ளம் எதனையும் சரியாக ஆராய விடாமற் பிணிப்பது பிணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உடம்பு நொய்ந்து போகும்படி செய்யும் நோயை வராமல் மறுப்பது தான் மருந்து. நோயினால் உடம்பு கெடுநாற்றத்தை அடையும். அக்கெடு நாற்றத்தை மறுத்து மருவினை - மரு (மணம்) அதாவது உடம்புக்கு இயற்கை உள்ள மணத்தினை பெறும்படி அருள்வது மருந்து எனப் பெற்றது.

திருமூலநாயனார் மருந்து என்றால் என்ன என்பது குறித்து விவரிக்கிறார். அதாவது,

> வந்த நோயை மறுத்து வரும் நோயினையும் மறுத்த, இயல்பாக வந்துசேரும் சாவினையும் மறுத்து நிலையான இன்பத்தை அருள் வதே மருந்து.

என்பது திருமூலரது கருத்து. **திருமூலர் எண்ணாயிரத்தில்** மேல்வரும் பாடல் உண்டு.

*மறுப்பது உடல் நோய் மருந்து எனல் ஆகும்*
*மறுப்பது உள நோய் இருந்து எனல் ----*
*மறுப்பது இனி நோய் வாரா திருக்க*
*மறுப்பது சாவை மருந்தெனல் ஆமே*

'வைத்தியம்' என்றால் என்ன என்பதற்கு மேல்வருமாறு விளக்கம் கூறப்படு கிறது. அதாவது, 'உடம்பினை அழியாது வைத்து இயங்கச் செய்யும் மருந்து முறையே' வைத்தியம் எனப்பெறும்.

இலக்கியச் சான்றுகளிலே தமிழ் மருந்துகள் பேசப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாகச் சிறுபஞ்சமூல(ம்) வேர்கள் பெரும்பஞ்சமூல(ம்) வேர்கள் என்பன பிரதானமானவை. சிறுவழுதுணை, சிறுநெருஞ்சி, சிறுமல்லிகை, பெரு மல்லிகை, கண்டங்கத்தரி என்பன சிறுபஞ்சமூல வேர்கள். வில்வம், வாகை, பெருங்குமிழ், தகுதாழை, பாதிரி என்பன பெரும்பஞ்சமூல வேர்கள். மர வேர்கள், இலை, பட்டை, பிஞ்சு, காய், பழம், கொட்டை என்பன மருந்தாகப் பயன்படும் முறைமையைத் தமிழ் மருத்துவம் கொண்டுள்ளது.

வாழ்க்கைநெறிக் கொள்கைகளை முழுமையாக விளக்கும் அறநூல்கள் தோன்றுவதற்கு முன்னர் உலகின் பல்வேறு பகுதிகளில் வழக்குற்று ஒழுக்க நெறியைச் (Customary Morality) சிறப்பாக விளக்கும் மூதுரைகளும் முது மொழிகளும் பழமொழிகளும் தோன்றிப் படிப்படியாக வளர்ந்துள்ளன.

மனித இனத்திற்கேயுரிய தனிப்பண்புகள் பல. அவற்றுள் ஒழுக்கம் முதன்மையானதாகப் போற்றப்படுகிறது. 'ஒழுக்கம்' என்னும் சொல் 'ஒழுகு' என்னும் வேர்ச்சொல்லடியாகப் பிறந்ததாகும். 'ஒழுகு' என்னுஞ் சொல்லிற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இடையறாது கடைப்பிடித்தல்' என்பது பொருள். இடையறாது நீர் ஒழுகுவதை 'ஒழுக்கு' என்று கூறுவதைப் போல வாழ்க்கையில் உயர்ந்தவையெனப் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்தும், எவ்விடத்தும் இடையறாது மேற்கொண்டொழுகுவதையே ஒழுக்கம் என்பர். இலக்கியத்திற் சான்றுகள் இதற்கு ஏராளம் உள்ளன. இன்றைய அதிவேகக் கடும் நோயான HIV / AIDS க்குரிய அரிய மருந்தாகத் தமிழ் மருந்து, தமிழ் இலக்கிய மருந்து உள்ளது. அதாவது **'வாழ்க்கை ஒழுக்கம்'** என்னும் மருந்தே அம்மருந்தாகும். இவ் வொழுக்கம் சமயத்துடனும், பண்பாட்டுடனும், கலாசாரத்துடனும், நாகரிகத்துடனும், நடத்தையுடனும், உணவுப்பழக்கத்துடனும், அத்யந்தத் தொடர்புடையது. இன்று உலகளாவப் பேசப்படும் நடைமுறை மருந்து தமிழ் மருந்தாகவே உள்ளது. அதாவது தமிழ் மக்களது மருத்துவமாகிய 'ஒழுக்கம்' தான் அம்மருந்து. இவ்வொழுக்கம் வெற்றிகரமாகத் தொழிற்பட்டுப் பயன்தர வேண்டுமெனிற் நேர்மை, வாய்மை, நன்னெறி, கட்டுப்பாடு, அறம் என்பன மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே - முழுநிறைவடிவமே 'அறம்' என்று கூறுவர். பண்டைத் தமிழ் மக்கள் தனிமனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். மறுமைப்பேற்றை அளிக்காவிட்டாலும், இவ்வுலக வாழ்க்கையில் தனிமனிதனும் சமுதாயமும் நலமாக வாழ்வதற்கும் முன்னேற் றத்தை அடைவதற்கும் அறவாழ்வு இன்றியமையாதது என்னும் 'நம்பிக்கை', 'நற்பண்பு' அல்லது 'ஒழுக்கம்' என்னும் பொருளிலேயே பெரும்பாலும் தமிழிலக்கியங்களில் வழங்கப்பெற்றிருப்பதை நாம் காணலாம். வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், ஈகை, அறக்கடவுள், சமயம் என்ற பல்வேறு பொருள்களிலும் 'அறம்' என்னுஞ் சொல் வழங்கப்பட்டு வருகிறது. 'அறவியல்' என்பது 'சமுதாயத்தில் வாழும் மனிதர்களின் நடத்தையைப் பற்றி ஆராயும் கலை' என்று வரையறை செய்யலாம்.

அறக்கருத்துகளுடனும், இயற்கை மருத்துவத்துடனும் தொடர்புபடுத்தப் படுவது தமிழ் மருத்துவம். சான்றாக 'ஏலாதிக்' குளிசை என்ற மருந்தைக் கூறலாம். இன்றும் இம்மருந்தின் உபயோகம், பயன்பாடு உண்டு.

ஏலத்தை ஆதியாகக் கொண்டு பல பொருட்களின் கூட்டுச் செய்யப்படும். ஏலாதிப் பொடி என்றும் ஏலாதிக் குளிகை என்றும் மருந்துகள் அமைகின்றன. ஏலத்தோடு இருபது முப்பது பொருள்கள் சேர்ந்து மருந்தாகும். இருந்தாலும் சிறப்பாக ஏலத்தோடு ஒரு முறையில் இலவங்கம், மிளகு, சிறுநாகப்பூ, தாளிசபத்திரி, கூகை நீர், சுக்கு, வெல்லம் ஆகிய எட்டுப் பொருட்களும், மற்றொரு முறையில் நற்சீரகம், இலவங்கம், பெருங்காயம், மரமஞ்சள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலாமிச்சை வேர், கார்போக்கரிசி, கருங்காசு, முத்தக்காசு, நெற்பொரி, சிறுநாகப்பூ, தேன் ஆகிய 11 பொருள்களும் சேர்த்து மருந்துகள் செய்யப் படுகின்றன. 'ஏலாதி' என்னும் நூலிலே இருபத்தொரு பாடல்களில் உணவு கொடுத்து ஆதரிப்பவரே பெருவாழ்வு பெறுவர் என்பதை ஆசிரியர் வலியுறுத் துவார். இத்தகையவர் விண்ணுலக வாழ்வு பெறுவர் என்று எட்டுப்பாடல்களிற் கூறுகிறார். அழியா வாழ்வு (செ. 76) பற்றி **ஏலாதி** கூறும்.

மொஹஞ்சதாரோ அல்லது சிந்துவெளி நாகரிகம் குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மா. இராசமாணிக்கம்பிள்ளை மேல்வருமாறு கூறுவர்:

> இன்று இந்தியா முழுவதிலும் ஆயுர்வேத, யுனானி, மருத்துவப் புலவர் பயன்படுத்துகின்ற 'சிலாசித்து' என்னும் மருந்து மொஹஞ்ச தாரோவிற் கிடைத்துள்ளது. சிந்துவெளியினர் (Sambur) மான், கொம்பு களைப் பொடியாக்கி மருந்தாகப் பயன்படுத்தினர் என்பது தெரிகிறது. மான் கொம்புகளும் மாட்டுக் கொம்புகளும் சில கிண்ணம் போலக் குடையப்பட்டுள்ளன. அவை மருந்து வைத்துக்கொள்ளப் பயன் பட்டனவாகும். நாட்டு மருத்துவத்தில் 'சிலாசித்து' உயர்தர மருந் தாகும். இது வயிற்றில் உண்டாகும் குடல், நுரையீரல் முதலியன பற்றிய நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல் பெற்றது. அது இமய மலைப் பாறைகளிலிருந்து கசிந்து வருவது. அதனை மலைவாழ்நர் கொண்டு வந்து இன்றும் உள்நாடுகளில் கொடுக்கின்றனர். 'ஒத்மஞ் சோபுதி' என்னுமிடத்தில் மருந்துக்குரிய ஒருவகை எலும்புகள் சில கிடைத்துள்ளன. அவை காது, கண், தொண்டை, தோல் பற்றிய நோய்களைக்.குணப்படுத்தும் வன்மையுடையன. இத்தகைய மருத் துவக் கலை பற்றிய மூல உணர்ச்சிகள் சிந்துவெளி மருத்துவர் களிடமிருந்தே தோற்றமாயின.

மட்டக்களப்பு டாக்டர் சி. குமாரசுவாமி ஐயங்கார் தமிழ் மருத்துவராகத் திகழ்ந்துள்ளார். 'ஆயுள்வேதக் கருவூலம்' என்னும் நூலிலே இடம்பெற்றுள்ள மேல்வரும் பாடல் 'பாலருக்கான கரப்பன்' நோய்க்கான சொறி, சிரங்கு, கரப்பன் முதலிய நோய்களைப் போக்குவதற்கான குடிநீரைப் பற்றிக் கூறுகிறது.

பாடல் மேல்வருமாறு:

*ஈச்சங்கொழுந்து நொச்சியிலை*
*இசங்கு மணித் தக் காளியிலை*
*காய்ச்சுஞ் சங்கம் குப்பியிலை*
*கரிய சீரம் பீ நாறி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மூச்சை யழிக்கும் செஞ்சந்தம்*
*முதிய குப்பை வெங்காயம்*
*பாய்ச்சிக் கசாயம் பருகிவிட்டால்*
*பறக்கும் கரப்பன் பாலருக்கே*

இனி, செமிபாட்டுக் குறைவைக் குறிக்கும் 'மாந்தம்' என்னும் நோயைப் போக்குவதற்கேற்ற 'கணமாந்தக் குளிகை'யைப் பற்றிக் கூறுகிறது.

போமென்ற கண மாந்தக் குளிகையொன்று புகலுகின்றேன். திரிகடுகு கரிய சீரம் ஆமென்ற வசம் புள்ளி யசமதாகும் அப்பனே வகை யென்று வராகனொன்று நாமென்ற கல்வத்தில் மருந்தை வைத்து நாட்டக்கேள் பிரண்டையொடு மாவிலங்கை தாமென்ற வேளை நொச்சி வேம்புவுஞ் சங்குடனே பேய் மருட்டி சங்கந்தப்பி.

என்பது அப்பாடல்.

சித்தாயுள்வேதம், தமிழ் மருத்துவம், பாரம்பரிய வைத்தியம், சுதேச மருத்துவம் குறித்த மருத்துவர்கள் வாயில் இன்றும் நிலவும் பழப்பாட லொன்றுண்டு.

*வெங்காயம் சுக்கானால் வெந்தயத்தாய் ஆவதென்ன*
*இங்கார் சுமந்திருப்பாரிச் சரக்கை - மங்காத*
*சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்*
*ஏரகத்தச் செட்டியாரே*

அஜீரணத்தைப் போக்க வெங்காயம், வெந்தயம், பெருங்காயம் முதலிய வைகளைக் குழம்பு தயாரிப்பதற்காக வாங்கி வந்ததில் வெங்காயமானது சுக்கைப் போன்று உலர்ந்துபோய் விட்டபடியினால், மற்றைய பொருள்களால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஆகவே இவைகளால் கிடைக்கப் பெறும் பயனைச் சீரகம் மூலம் பெறலாம். சீரகமும் கெட்டுப்போகாத பொருளாகவே இருக்கிறது. அதைப்போன்றே வினையினால் உருவான உடலானது (வெங்காயம்) தளர்ச்சியடைந்து சுக்கைப் போல் இறுதிக் காலத்தில் வாடிவதங்கிப் போனால் உயிர் தரிப்பதற்காக அயச்செந்தூரம் (வெந்த அயம்) சாப்பிடுவதனால் வினையின் பயனை மாற்ற முடியாது. மீண்டும் மறுபிறவி எடுக்க வேண்டியே வரும் என்ற கருத்திலே இப்பாடல் இயல்கிறது.

பிறிதொரு பழம் பாடல் மேல்வருமாறு:

*காலை இஞ்சி கடும் பகல் சுக்கு*
*மாலை கடுக்காய் மண்டலம் தின்போம்*
*கோலையூன்றிக் குறுகி நடப்பினும்*
*காலை வீசிக் கடுக நடப்பரே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூதுவளை, கண்டங்கத்தரி, சுண்டைக்காய் முதலிய மூலிகைகளை 'கான்சர்' என்ற புற்றுநோயைக் கட்டுப்படுத்தும் மருந்துகளாகவே தமிழ் மருத்துவம் சொல்லியுள்ளது.

| | **மூலிகை** | **இரசாயனக்கூறு** |
|---|---|---|
| 1. | தூதுவளை (அலர்க) | சோலாமரின் |
| 2. | பளவமல்லி (பாரிஜாதம்) | அர்பர் டிரிஸ்டோஸைட் |
| 3. | அகில் (அகரு) | லிரியோ டெனின் |
| 4. | கொடிவேலி (சித்ரக) | பிளம்பாஜின் |
| 5. | எழிலம்பாலை (சப்தசட) | எச்டமின் குளோரைடு |
| 6. | ஜாதிபத்திரி | எர்மன்ஸ் காம்பவுண்ட் |
| 7. | பேய்மிரட்டி (பூதாங்குச) | ஓவட்டோ டையவைடு அன் ஐஸோமலிக் அஸிட் |

இவ்வட்டணையில் தூதுவளை, பவளமல்லி, அகில், கொடிவேலி, எழிலம் பாலை, பேய்மிரட்டி என்ற சொற்கள் நுணுகிக் கவனிக்கத்தக்கன.

நெல்லிக்கனி, வில்வம், துளசி, அறுகம்புல், மஞ்சள், அரசு, ஆல் என்பனவும் மூலிகைகளேயாகும். வாத நோய்களைக் குணப்படுத்துவதில் இந்திரவல்லி (முடக்கத்தான்), பலா (சிற்றாமுட்டி) போன்ற ஆயுள்வேத மூலிகைகளுக்கு ஈடு இணையாகச் சொல்லக்கூடிய மூலிகைகளோ, மருத்துவ முறைகளோ இல்லை. 'கற்பூரவல்லி' குழந்தைகளின் கபத்தையும். சுரத்தையும் கட்டுப்படுத்துவதுடன் இரத்த அழுத்த நோயைக் கட்டுப்படுத்தும் ஒரு இரசாயனக் கூற்றினையும் கொண்டுள்ளது என்பது இன்றைய ஆய்வுகளால் நிலைநாட்டப்பட்டுள்ளது. இது பக்டீரியா நோய்களையுங் கட்டுப் படுத்தவல்லது.

டாக்டர் பிருந்தா, தமிழ் மருந்துகளின் குணமேன்மைகளை மேல் வருமாறு விவரித்துள்ளார்:

> கலப்பைக் கிழங்கினைப் பொடித்து நீர் விட்டரைத்துத் தொப்புள், உள்ளங்கை, உள்ளங்கால் இவ்விடங்களில் பூச பிள்ளைப்பேற்றைத் தீவிரமாக்கும். நிலாவரை (சுவர்ணமாஸிக) என்று சொல்லப்படும் பெருஞ்செடி வகையின் இலை சிறந்த மலமிளக்கியாகவும் பூச்சி கொல்லியாகவும் பயன்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தசமூலம்' என்பது ஆயுர்வேத மருத்துவத்தில் பத்து வேர்களடங்கிய மூலிகை மருந்தாகும். இது பசியைத் தூண்டும் வாயு உபத்திரவங்களைச் சீர்செய்யும். 'தசமூலம்' மருந்தில் இடம்பெறும் மூலிகைகள் பத்தும் வருமாறு:

சிறுதேக்கு, குமிழம், மூவிலை, ஓரிலை, வில்வம், பெருவாகை, பாதிரி, முள்கத்திரி, நெருஞ்சில், கண்டங்கத்திரி என்பன.

சிறந்த ஆயுர்வேத மருந்தெனப்படும் 'திரிபலா' வில் ஹரிதகி, பிபிதகி, ஆம்பகி என்பன உண்டு. இவை நெல்லிக்காய், கடுக்காய், கன்றிக்காய் ஆகியனவற்றின் பொடிகளால் தயாரிக்கப்படும் ஒரு சூர்ணமாகும். 'திரிகடுகு' என்பதில் சுக்கு, மிளகு, திப்பிலி எனப்படும் மூலிகைகள் உள்ளன. எனவே 'தசமூலம்', 'திரிபலா', 'திரிகடுகு' முதலியவை சிறப்புத் தமிழ் மருந்துகளாகும். 'சித்தாயுர்வேதம்' என்பதும் தமிழ் மருத்துவமே என்பது அறிந்துணரத்தக்கது. மருந்துகளின் பெயர்கள் வடசொற்களிலும் அமைந்துள்ளமை கருதத்தக்கது.

'ஏட்டு மருத்துவம்' என்னும் நூல், ஈழத்தில் நிலவும் பாரம்பரிய மருத்துவ மூலிகைச் சிகிச்சை முறைமைகளை 'ஏட்டுச் சுவடிகளிலிருந்து' தொகுத்து வெளியிடப்பட்ட நூலாகும். தமிழ் இலக்கியம், தமிழ் மருத்துவம், ஏட்டு மருத்துவம், சித்த மருத்துவம், சுதேச மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் என்ற பல்வேறு துறைகளினூடாகவும் எமக்குக் கிடைத்துள்ள சான்றுகளை மேலும் மரம், செடி, இலை, குழை, பட்டை, வேர், பால், பிஞ்சு, காய், பழம், விதை, பஸ்பம், சூரணம், பொடி எனப் பல்வேறு வகைகளிலும் நோய் தீர்க்கப் பயன்பட்டு வருகின்றன.

கிறிஸ்து பிறப்பதற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே அபின் கண்டறியப்பட்டது. கிரேக்க மருத்துவரும் மருந்தாளருமான காலன் என்பவர் அபின் மருந்தை வலிநிவாரணியாகப் பயன்படுத்தினார்.

சுடுகாடு மற்றும் ஊரின் ஒதுக்குப்புறங்களிலே நிறைந்து வளர்ந்திருந்த நித்திய கல்யாணி செடியில் இருந்து தயாரிக்கப்பட்ட மருந்து புற்று நோய் களைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. கந்தகம், பொன், வைரம் என்பனவும் 'பாதரசம்' என்பதும் பயன்பட்டுள்ளமை காணத்தக்கது.

'அபமார்க்க' எனும் தாவர வகையைத் தமிழில் 'நாயுருவி' என வழங் குவர். சிகிசிரம், கதிரி, சிறுகடலாடி, சுவானம், கிருஷ்ணபன்னி, கொட்டாவி, சேகரி, நாயரஞ்சி என்ற மறு பெயர்களாலும் 'நாயுருவி' அழைக்கப்படுகிறது. இதில் 'செந்நாயுருவி' என்றொரு வகையுமுள்ளது. இதனைப் 'படருருக்கி' என்று கூறுவர். 'அர்க்க' என்பது தமிழில் 'எருக்கு' என்று சொல்லப்படுகிறது. 'அருக்கன்' என்பது இதன் வேறு பெயராகும். எருக்கு 'செடிவகையைச் சேர்ந்தது. வெண்மை நிறமுள்ள பூவையுடைய 'எருக்கை' 'வெள்ளெருக்கு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுவர். இதன் இலை, பூ, பால், பட்டை, வேர் ஆகியவை மருந்தாகப் பயன்படுகின்றன. வயிற்றுப் புழுக்களைக் கொல்லுதல், உடலைத் தேற்றுதல், மலமிளக்குதல், வெப்பமுண்டாக்குதல் ஆகியவை எருக்கிலையின் செய்கை களாகும். 'அரக்வா' தமிழில் 'கொன்றை' எனப்படும். சரக்கொன்றை, சிறுகொன்றை, செங்கொன்றை, கரங்கொன்றை, நரிக்கொன்றை, புலி நகக் கொன்றை, மந்தாரக் கொன்றை, முட்டுக்கொன்றை, மயிர்க்கொன்றை, செம்மயிர்க்கொன்றை, பொன்மயிர்க்கொன்றை எனவும் அழைக்கப்படும்.

**வாழைக்காயின் மருத்துவ குணம்**

வாந்தி, பித்தம் பேதி வாய்நீர் வயிறுளைதல் ஆர்த்த அனலங்காசம்
அண்டர் தாம் சூழ்ந்தேறு செம்புனலுற் தெம்பும் உண்டாம் திண்டி
மிகப்பெருகும் அம்புவியுள் வாழைக்காய்.

பித்தவாந்தி, பித்தாதி சாரம், பைத்தியம், உமிழ் நீர்ச் சுரப்பு, வயிறு ளைதல், உஷ்ணம், இருமல் ஆகியவற்றைப் போக்கும் குணம் வாழைக்காய்க்கு உண்டு. இரத்தவிருத்தியும் பயனும் உண்டாகும்.

'குக்குலு' என்பது தமிழிலே குங்குலியம் என்று பெயர். குங்குலியம் என்பது ஒருவகை மரத்தின் பிசின். இந்த மரத்துக்கு 'கருமருது' என்று பெயர். குடூசிக்குச் சீந்தில் என்று பெயர். அமிர்தவல்லி, அமிர்தை, அமிர்தக் காடி, குண்டலி சீந்திற் கிழங்கு, சோமவல்லி என்பன 'சீந்தில்' என்பதற்கு மறுபெயர் களாகும். 'குமுத' என்றால் அல்லி. **'அகத்தியர் குணபாடம்'** என்னும் நூலிலே மேல்வரும் பாடல் உள்ளது. அப்பாடல் வருமாறு:

*மேகம் அறும் புண் ஆளும் விட்டோடும் நீரிழிவு*
*தாகந் தணியும் தழல் அகலும் - வாகான*
*மெல்லியலே! ஆயுள்மறை வேதியரெல்லாம் - உரைக்கும்*
*அல்லி மலரால் அறி*

'குஸ்தும்புரு' தமிழிலே கொத்தமல்லி என்று அழைக்கப்படுகிறது. அகத்தியர் குணபாடம் மேல்வரும் பாடல் மூலம் கொத்தமல்லியின் மருத்துவத்திறன் உணர்த்துகிறது.

*கொத்துமல்லி வெப்பங் குளிர் காய்ச்சல் பித்த மந்தஞ்*
*சர்த்தி விக்கல் தாகமொடு தாது நட்டம் - கத்தியெழும்*
*வாத விகார மடர்வன் கர்த்த பிவிரணம்*
*மதலத்தில் வாத கற்றும் போற்று*

'கூஷ்மாண்ட' என்பது தமிழில் கலியாணப் பூசணிக்காய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரசா - தமிழில் துளசி. அரி, இராம துளசி, கிருஷ்ண துளசி, குல்லை, திருத்துளாய், துழாய், துளவு, வனம், விருந்தம் என்றும் அழைக்கப்படும். 'சுன்தி' என்பது தமிழில் 'சுக்கு' என்று பெயர். அது வேர்க்கொம்பு, உலர்ந்த இஞ்சி, விடமூடிய அமிர்தம் எனவும் கூறப்படும். சுக்கை வாயில் போட்டு மென்றால் பல்வலி குணமாகும். சுக்கை அரைத்து மூட்டு வீக்கங்களுக்குப் பூசினால் நாளுக்கு நாள் வீக்கம் குறையும். சுக்கை மென்று சாரத்தை மாத்திரம் விழுங்கினால் தொண்டைக்கட்டு, குரற்கம்மல் நீங்கும். சுக்கை முலைப்பால் விட்டரைத்து இலேசாக நெற்றியிற் பற்றிட்டு, நெருப்பு அனல்படும் படிக் கட்டினால் தலைவலி நீங்கும்.

தலா - தமிழில் 'பனை' என்று வழங்கப்படுகிறது. ஏடகம், கரும்புறம், காமம், திருவிராகன், தாலம், தாளி என்பன மறுபெயர். பானை மரத்தின் எல்லாப்பகுதிகளும் உபயோகப்படும் உறுப்புக்களாம். எனினும், ஓலைகள், மட்டை, பூ, வேர் ஆகியனவையே மருந்துகளுக்கு முக்கியமாகப் பயன்படுகின்றன. அகத்தியர் குணபாடம் மேல்வரும் பாடலாலே பனையின் மருத்துவ குணத்தை விவரிக்கிறது.

*பனையிலுறு பூவதுதான் பங்கமுறாக் குன்ம*
*வினை அகற்றும் நீர்க்கட்டை மீட்கும் - முளையான*
*பன்னோல் ஒழிக்கும் பழஞ்சுரத்தைப் போக்கிவிடும்*
*மின்னே இதனை விளம்பு*

பிறிதொரு பாடல் வருமாறு:

*நாளும் பனம்பழத்தை நல் அமுதாய் உண்ணுங்கால்*
*ஆளுங் கரப்பான் அழுகிரந்தி - நீளுமலஞ்*
*சிக்கும் பித்தத்தில் வளி சேருதலால் நோய்க்கணமு*
*திக்கும் பலக்கும் எனச் செப்பு*

பனங்காய் முதிர்ந்தால் கொட்டை கனத்துக் கடினமாகிவிடும். மேல் சதை பழுத்து அதிக சுவையுடன் இருக்கும். இப்பழத்தைச் சுட்டோ வேக வைத்தோ தின்பது வழக்கம்.

மேகசுரம், நீர்ச்சுருக்கு, உஷ்ணதாகம் ஆகியவற்றைப் போக்கும் குணம் பனங்கற்கண்டுக்கு உண்டு.

*மேகவலு மிக வீசும் சூரிகையால்*
*ஆகமுறு கனலு மாறுங்காண் - மேகலா*
*தங்கிவரு நீர்ச் சுருக்குந் தாகவெப்*
*இங்கு பனங் கற் கண்டுக்கே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைமரத்தின் மதுவிலிருந்து வெல்லம், கற்கண்டு, சர்க்கரை முலியவை செய்கிறார்கள். வாத, பித்த, தொந்தம், சிலேத்தும தோடம், சந்நிபாதம், ஆரோகம், வாத குன்மம் ஆகியவற்றைப் போக்கும் குணம் பனை வெல்லத்திற்கு உண்டு.

மருந்தை முறிக்கும் குணம் எள்ளுக்கு உண்டு. வெம்மை, காசம், கபம், பித்தம் ஆகியவற்றை அதிகரிக்கும் குணமும் இதற்கு உண்டு. அகத்தியர் குணபாடம் மேல்வருமாறு கூறுகிறது.

*எள்ளு மருந்தைக் கெடுக்கும் ஏறனலாந்திண்மை தரும்*
*உள்ளில் ஐயைச் சேர்க்கும் உதிரத்தைத் தள்ளும் - இரு*
*கண்ணுக் கொளி கொடுக்குங் காசமுண்டாம் பித்தமுமாகப்*
*பண்ணுக் கிடர் புரியும் பார்*

'நிம்ப' என்றால் தமிழிலே 'வேம்பு' என்று பெயர். 'நிர்க்குண்டி' என்பது நொச்சி. பாண்டு வெங்காயம். ஈருள்ளி - ஈரவுள்ளி, ஈரவெங்காயம், உள்ளி, காயம், சுக்கிரந்தம், நிச்சியம் எனவும்படும்.

'பாண்டு' எனப்படும் வெங்காயம் கைப்புச் சுவையுடையது. இதன் பூ, தாள், கிழங்கு, விதை ஆகியவை பயன்படுகின்றன.

வெங்காயம் பற்றிய பாடல் வருமாறு:

*வயிற்றுச் சிறுநோயை வாதவலியை*
*வயித்தியஞ் செய்யாமல் ஓட்டும் - குயிற்றாத*
*சிங்காரக் கொங்கைச் செழுந் திருவேநாட்டிலுறை*
*வெங்காயப் பூவெனவே விள்*

முட்கா - பச்சைப்பயறு. இது பைத்தியத்தை நீக்கும். பாடல் வருமாறு:

*பச்சைப் பயறுதான் பாரிற் பயித்தியத்தை*
*அச்சம் அற நாளும் அகற்றுங்காண் - கச்சுலவு*
*கொங்கைமடமாதே! குளிர்ச்சியென்பார் எப்போதுந்*
*தங்குவா தத்தைத் தரும்*

அறுகம்புல்லை இடித்துப் பிழிந்து சாற்றைக் கண்ணுக்குப் பிழியக் கண்ணோயும் கண்புகைச்சலும் நீங்கும். அதை மூக்கிலிட்டால் இரத்தபீசம் நீங்கும். அறுகம்புல்லின் சாற்றை வெள்ளிக்கிழமையில் குடித்து வந்தால் பெருச்சாளி விடம் நீங்கும். அறுகம்புல்லுடன் சிறிது மஞ்சள் சேர்த்து அரைத்துத் தடவி வந்தால் சொறி, சிரங்கு, படர்தாமரை, கிருமி ரோகம், சீதபித்தம் ஆகியவை நீங்கும். 'படலா' என்பது பாதிரி. இதன் பூவிற்கு 'மதன காமேஸ்வரப்பூ' என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைப் பூண்டை அரைத்துச் சிறிய கட்டிகளுக்குப் போட்டால் அவை கரையும். வெள்ளைப் பூண்டின் இரசத்தை 1-2 துளி வரை காதில் பிழிய செவிடு நீங்கும். 20 முதல் 30 துளி வீதம் தினம் 2 அல்லது 3 முறை கொள்ள இருமல், சுவாசம், மலக்கிருமி ஆகியவை தீரும். நல்லெண்ணெயில் பூண்டைக் காய்ச்சிக் காது நோய்க்கு விடலாம்.

வசா - வசம்பு: வார்டாக - கத்தரிக்காய். வழுதலை - வழுதுணை. ஹரிடகி - ஹரிதகி - கடுக்காய். கடுக்காய்க்கு 55 மறு பெயர்களுள. மூல வாயுவினால் பிறந்த முக்கலும் ஆசனக் கடுப்பும் இராது. அகத்தியர் குண பாடம் மேல்வருமாறு சுட்டுகிறது.

*வனதுர்க்கிச் சேய்க்கு மணித் தயிலம் பூசி*
*அனறில் பொரித்தாங் கருந்தத் - தினமுமலச்*
*சிக்கலக் கடுப்ப நின்ற சீதமறுங் காற்று கைத்த*
*முக்கலக் கடுப்பிருக்கு மோ*

இருதயநோய், இரத்தபித்தம், உதட்டு ரோகம், கண் நோய்கள், காமாலை, குன்மம், குட்டம், கைகால் எரிச்சல், சலக்கட்டு, தந்தரோகம், தொண்டைக் கம்மல், வயிற்றுப் பொருமல், இந்திரிய மார்க்கங்களிலும் மலம் முதலிய வைகள் வெளிப்பட வேண்டிய மார்க்கங்களிலும் அடைபடுதல், உள்ளங்கால் எரிவு, கையெரிவு, மண்டைப்புற்று, மண்டைக் கிரந்தி, வயிற்றுக்கட்டி, வாய்ப்புண் முதலிய நோய்களைப் போக்கும் குணம் கடுக்காய்க்குண்டு.

கடுக்காயின் நுண்ணிய பொடியையோ கடுக்காய்க் கஷாயத்தையோ மூலத்தின் மீது தூவினாலோ அல்லது கழுவினாலோ இரத்தம் நிற்கும். தினமும் காலை தோறும் ஓராண்டு வரை கடுக்காய் சாப்பிட்டு வந்தால் நரை திரை மாறும். பச்சைக் கடுக்காயைப் பாலில் அரைத்துச் சாப்பிட்டால் இருமல், ஈளை, சீதக்கடி, புகையிருமல் ஆகியவை நீங்கும்.

'மஞ்சள்' பல்வேறு மருத்துவக் குணமிக்கது.

*பொன்னிறமாம் மேனிப் புலானாற்றமும் போகும்*
*மன்னு புருட வசியமாம் - பின்னியெழும்*
*வாந்தி பித்த தோடமையம் வாதம் போந் தீபனமாங்*
*கூர்ந்த மஞ்சளின் கிழங்குக்கு*

*தலைவலி நீரேற்றஞ் சளையாத மேகம்*
*உலைவு தரு பீநசத்தி னூடே - வலி சுரப்பு*
*விஞ்சு கடி விடமும் வீறு விரணங்களும் போம்*
*மஞ்சட் கிழங்குக்கு மால்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஞ்சளைப் பொடி செய்து புண்களின் மீது தூவினால் அவை ஆறும். சாதத்துடன் மஞ்சளையுஞ் சேர்த்தரைத்துக் கட்டிகளின் மீது வைத்துக் கட்டினால் அவை எளிதில் பழுத்து உடையும். 'புக்கை கட்டுதல்' என்னும் வைத்திய முறைமை இன்றும் சித்தமருத்துவத்தில் தமிழ் மருத்துவத்தில் உள்ளது. மஞ்சள் புக்கைக்குச் சேர்க்கப்படும். உடலில் எப்பாகத்திலுமுள்ள நோவுகளைப் புக்கை கட்டுவதனால் மாற்றமுடியும். மஞ்சளைச் சுட்டு முகர்ந்தால் நீரேற்றம் நீங்கும். வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்தரைத்து அம்மைக் கொப்புளத்தின் மீது பூசினால் அவை பழுத்து உடைவதுடன் வெகு எளிதில் ஆறிப்போகும்.

இனி, யாழ்ப்பாணத்தரசர்களான ஆரியச் சக்கரவர்த்திகளது காலத்தில் **செகராசசேகரம், பரராசசேகரம்** என்னும் மருத்துவ நூல்களெழுந்தன. இக் கட்டுரையிலே இனிவரும் பாடல்கள் **பரராசசேகரம்** என்னும் மருத்துவ நூலிலிருந்து சான்றுகளாகப் பாடல்களைக் கொண்டமைகின்றன. பெரும்பாலும் இங்கே எடுத்துச் சான்றுகளாகக் காட்டப்படும் பாடல்கள் பொதுமக்கள் அறிந்திராதவையாகவும், புதியவையாயும் அருமைமிக்கவையாயும் அமையும் என்பது இக்கட்டுரையாளரின் நம்பிக்கை. பாடல்கள் 'மருந்து' சுட்டும் பாடல்களாயமைவது மனற்கொளற்பாலது.

'சிரரோகம்' என்ற பகுதியிலே 'சாறடைக் கிருதம்' என்னும் தலைப்பில் இடம்பெறும் பாடல் வருமாறு:

*கடுக்காயுள்ளி காற்பலமுங் கடிய விந்துப் பொருபலமும்*
*முடுக்குஞ் சிவதையிரு பலமும் மூன்று கழஞ்சு பெருங்காயம்*
*அடுக்கும் வசம்பு விழாலரிசி யரிய காந்தங் கெந்தகமும்*
*எடுக்கு மருந்து தள்ளாம லிவைதாம ரைத்துக் கரைப்பதுவே*

'உள்ளிக் குழம்பு' பற்றிய இரு பாடல்கள் (செய். 24) **பரராசசேகரத்தில்** இடம்பெறுகின்றன. அவை வருமாறு:

*வெள்ளுள்ளிச் சாறு நாழி விளம்பிஞ் சிச்சாறு நாழி*
*கள்ளவிழ் முருக்குத் தும்பை காணத்தின் சாறுநாழி*
*வள்ளியின் சாறுநாழி வளர்நொச்சி வேளை மேனி*
*உள்ளதோர் சாறு நாழியுறு வெல்லங் கலந்து காய்ச்சே* (செய். 21)

*திரிகடு கிருசீர் காயந் திப்பிலி மூலமிந்து*
*நறுவிய விளங்க மேல் நற் கெந்தி சிவதை ரோணி*
*உறுவசம் புள்ளியோமஞ் சூதநற் காந்த மொக்கக்*
*குறிசமன் கூட்டிக் கொண்டாற் கொதித்தெழு வாயுப்போமே* (செய். 27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சஞ்சீவித் தைலம்' பற்றிக் கூறும் **பரராசசேகரப்** பாடல் மேல்வருமாறுள்ளது.

*பூவே சந்தங் காரகிலும் பொன்னே யேல மிலவங்கம்*
*காவே பொருந்துஞ் செண்பகப்பூக் கர்ப்பூரம் புனுகு சட்டமதும்*
*கோவே பச்சிலை நாகம்பூக் கூறுமிருகச் சோலமுடன்*
*தாவே தற்கோலப் புட்டில் சாதிக் காயொடு கோட்டமுமே* (செய். 50)

பரராசசேகரத்தில் 'கெர்ப்பரோக நிதானம்' சிகிச்சை பற்றிக் கூறும் பகுதியிலிடம் பெற்றுள்ள பாடல்களிரண்டினை இனி நோக்கலாம்.

*பூசிய மருந்தின் மேலே பூமத்தி னிலையைப் போட்டு*
*மாசறவிதனை மாற்றி மன்னுபேய்ப் பீர்க்கங்காயை*
*வீசியே பிளந்து பின்னும் வியாதியின் மேலே சேர்த்திக்*
*காசறக் கட்டி வைத்தாற் கரைந்திடுஞ் சுரோனியன்றே*
*(கெர்ப்ரோகநிதானம், செய். 7)*

*கட்டிய வெட்டு நாளிற் கரைந்து நோய் நீங்கா தாகில்*
*முட்டிய செளுகஞ் செய்து முரணறவுதிரம் போக்கிக்*
*கட்டிடுங் கொல்லன் கோவைக் கிழங்கினைத் துவைத்தேயிங்கும்*
*பட்டுறச் சுரோணிமேலே பண்புடன் கட்டிவையே* *(செய். 8)*

'சுரோணித கெர்ப்ப வாயுவின் குணம்' பற்றிக் கூறும் பகுதியில் 'எண்ணெய்' பற்றி மேல்வரும் பாடல் விளக்கியுரைக்கிறது.

*உற்றதொரு கள்ளியிலைச் சான்றி னோடே*
*யுவந்தகழ லெருக்கலையிற் சாறு தானும்*
*குற்ற மறும் வெள்ளையுள்ளி யுத்த மாணி*
*கொள்ளுமிவை சாறெள்ளி லெண்ணெயோடு*
*முற்றவிவை யளவியொரு காண்டத் திட்டு*
*முதுசிவதை வேரரைத்துக் கலக்கியின்னும்*
*வெற்றிபெறு மிந்துப்பு நிறையோ ரெட்டும்*
*வெண்கார மொருபத்தும் விரவிக் காய்ச்சே* *(செய். 14)*

'கெற்பவாயு' நோய்க்குப் பரராசசேகரம் 'இலைக்கள்ளிக் குழம்பு' பற்றிக் கூறும் பாடல் வருமாறு:

*ஓதுமிலைக் கள்ளிதனிற் பிழிந்த நற்சா*
*றுரியதன்பா லாழாக்கு நெய்யுழக்குத்*
*தீதகற்றுங் கோமயமோ ருழக்குங் கூட்டிச்*
*சேர்காயம் வெளுத்தலுடன் வெண்காயுள்ளி*
*சோதிபெறுமிந்துப்புக் கழஞ்சொ ரென்று*
*தாளிட்டுக் குழம்பாகக் காய்ச்சி யுண்ண*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாதைபுரி சூலைமுதற் கெர்ப்பவாயு*
*வலிகுன்மமிவை யனைத்துமாறிப்போமே (செய். 53)*

'நிதம்பசூலையின் குணம்' பற்றிக் கூறும் **பரராசசேகரம்**, 'முடக்கொத்தா னெண்ணெய்' பற்றியும் கூறுகிறது. அப்பாடல் வருமாறு:

*அடைவுபெறு முடக்கொற்றான் சாறு நாழி*
*யதனுடனே குறிஞ்சா நீர் தானு நாழி*
*இடமுடைய நல்லெண்ணெய் நாழி விட்டே*
*யிதிற்காயஞ் சீரகங்கார் கோலுமேலம்*
*திடமுடைய குந்திருக்கஞ் சன்னசாலை*
*திரிகடுகு வசம்புள்ளி மதுரங் குப்பை*
*பொடிபடவே தூவி வடித் துள்ளே கொள்ளப்*
*பெருயோனி தனிற் சூலையொடுவும் போமே (செய். 59)*

பரராசசேகரத்திலே முத்தோஷ சுரத்துக்குக் குடிநீர் மேல்வருமாறு கூறப் பட்டுள்ளது. இரு பாடல்களும் வருமாறு:

*செஞ்சொட்டி தூதுவளை யாடாதோடை*
*சீந்தில் தாமரை வளையம் பற்படாகம்*
*பிஞ்சிட்ட நன்னாரி கண்டங் காரி*
*பெருங்கடுக்காய் நெல்லிக்காய் தான்றிசுக்குப்*
*பஞ்சிட்ட வடியீரொவ் வொன்று தானும்*
*பலங்காலாய்ப் பன்னிரண்டு படிநிர் வற்றி*
*மிஞ்சிட்ட குடிநீரிற் றேன்றிப் பிலியு*
*மேற் பொடியிட்டுக் குடிக்க விடு மூன்று சுரமே (செய். 115)*

*முக்கடுகு பலை மூன்று முத்தற் காசு*
*முந்திரிகை நிலவேம்பு முள்ளி நாரி*
*தக்கவதி மதுர நாவேல மோதஞ்*
*சந்தனம் வெண் கோட்டமுடன் சிறியமூலம்*
*மிக்க சடர் மாஞ்சில் குறுந் தொட்டி வில்வம்*
*வேர்வாசையுடன் பிரமி சீந்திலாமிச்*
*சொக்கவே யெட் டொன்றாய்த் தேனளாவி*
*யுட்டிடுகின் முச்சுரங்க ளொழியு மன்றே (செய். 116)*

**பரராசசேகரம்** 'வாதபித்த சுரத்தின் குடிநீர்' பற்றி மேல்வருமாறு கூறுகிறது. அப்பாடல் வருமாறு:

*ஆடாதோடை பேய்ப்பு டோலடருஞ் சீந்திற் பற்படகம்*
*நீடார் கண்டங் கத்தரி வேர் நில வேம்புடனே நீற் சுக்கு*
*வாடாக் குடிநீர் தேன்குத்தி வடித்துக் குடிக்கவல்லீராய்*
*பாடாய் வந்த வாதபித்தம் பாரிற் றீர்ந்து போய்விடுமே (செய். 118)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரராசசேகரம்**, 'கரப்பான் ரோக நிதானம்' என்னும் பகுதியில் 'கருங் கோழிப் பற்பம்' பற்றிக் கூறுகிறது.

பாடல்கள் வருமாறு:

*திரிகடுகு பலை மூன்று வெள்ளையுள்ளி*
*செங்காந்தர் சாதிலிங்கஞ் சீனக்காரம்*
*இருசீரம் பெருங்காய மேலமோம*
*மிலவங்கஞ் சதகுப்பை மதியினுப்பு*
*வருகடுகு ரோனியவின் கராம்பு வாசி*
*வகுத்தகுறா சானியுலு வாக்கு லக்காய்*
*கருமையுறு கார்புகாச் சாளி யாவுங்*
*கழஞ் சொன்று சீனத்தின் பட்டை தானும்* *(செய். 46)*

*பட்டை பல மொன்றரையாம் புங்கின் வேரும்*
*பழுத்த சாரணைக் கிழங்கொ டமுக்கிரா வேர்*
*திட்டமுடன் றூள் செய்து கறுத்தக் கோழி*
*தேடியே காலிறகு குடலுந் நீங்கிப்*
*பட்டைமுத லதன் வயிற்றுட் பொதிந்து கொண்டு*
*பானையினு ணாற் சதுரக் கள்ளிவெட்டி*
*இட்டமுடன் றுண்டாக்கி யந்தினீரு*
*மிட்டதன்வாய் நெய்யரியால் வேடுகூட்டே* *(செய். 47)*

'இலைக்கள்ளியெண்ணெய்' பற்றிப் **பரராசசேகரம்** மேல்வருமாறு சுட்டுகிறது:

*இலைக்கள்ளி நாய் வேளை நொச்சி வீழி*
*யெருக்கலை மாதளைதிராய் பேய்ப்பிசுக்குத்*
*துலக்கமுறு பூமத்தைநிம்ப மெல்லாஞ்*
*சொற்றபடி யிலைச்சாறு நிம்ம வெண்ணெய்*
*கலக்கமறு மெள்ளெண்ணெ யிலுப்பை யெண்ணெய்*
*கருதுமே ரண்டவெண்ணெய் சமனாய்க் கொண்டு*
*மலைத்தலறு குந்துருக்க மஞ்சள் கூட்டி*
*வடித்தெண்ணெய் முழுகியுள்ளூ மேலும் பூசே* *(செய்.55)*

பரராசசேகரம் வரட்கரப்பனுக்கு 'முலைப்பால்நெய்' மருந்து பற்றிக் கூறுகிறது.

*மங்கையர்தம் முலைப்பாலும் பசுவின் பாலும்*
*வளர்பிள்ளைக் கற்றாழை பொன்னாங்காணி*
*இங்கிவை யொவ் வொன்றுபடி யொன்ற தாக*
*விதிற்பாதி பசுவினெய் யிவற்றினோடே*
*செங்கைகொடு பிடுங்கும்வேர் முத்தக்காசு*
*சிறந்தகொடு வேலிய முக்கிரா யெருக்குப்*
*பொங்குகெந்த மனோசிலை பொன்னரி தாரம்பின்*
*புகழான திப்பில் சுக்குப் பொருந்தக் கூட்டே* *(செய்.131)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரராசசேகரம்**, கரப்பன் ரோகநிதானத்தில் 'அருக்கதைலம்' பற்றிக் குறிப்பிடுகிறது. பாடல்கள் வருமாறு:

*எருக்கலை தன் பூக்காய் தோ லிலைபட்டை யென்னுமைந்து*
*வருக்கமும் பல மொன்றாக வகுத்துநீர் நாலு நாழி*
*எரித்து நா லொன்றதாக விறுத்து நல் லெண்ணெய்*
*முருக்கிலை வேளை ரண்டு மொழிந்த சாறுரிதொன் கூட்டே (செய். 138)*

*கூட்டு வெள்ளாட்டின் பாலுங் குலவ முவுழக்க தாகும்*
*கோட்டந்திப் பிலிமரீசங் கொள்ளு நாற் கழஞ்சொவ்வொன்று*
*கூட்டியே வடித்துப் பூசக் கூறிய வரட்கரப்பன்*
*ஓட்டமாயோடு மென்ன வுரைத்தன ருறுதி கண்டே (செய். 139)*

**பரராசசேகரம்** கூறும் 'ஆருள்ளியெண்ணெய்' மருந்து மேல்வருமாறு வருகிறது.

*ஏலமிலவங்க மகில் சிவந்த சந்த*
*மிந்துப்புச் சாதிக்காய் கராம்பு நற்சீர்*
*கோலமுறும் வசுவாசி கடுக்கா யோமங்*
*குங்குமப்பூ வகைக்கிரண்டு கழஞ்சு கூட்டிச்*
*சீலமுடன் வடித் தெண்ணெய் பூசி யுள்ளுந்*
*தின்று சிரத்தினிலுமிட்டு முழுக நாளும்*
*மூலமுறு சிரந்தியுடன் கரப்பனல்லால்*
*மொழிந்த பல கிரந்திகளுந் தீருமன்றே (செய். 25)*

மூலக் கிரந்திக்குத் 'தூதுளம்பழ லேகியம்' என்னும் மருந்தைப் **பரராசசேகரம்** கூறுகிறது. அப்பாடல்கள் வருமாறு:

*தூதுவளை சிற்றமட்டி யாடா தோடை*
*தூய கண்டங் காரி வட்டுக் குதிரையின் வேர்*
*தீதில்சிறு வழுதலை வேர் பிரண்டையின் வேர்*
*செப்புமரல் புளி கடலை வேரு மூலங்*
*காதுகறிக் கருணை யின்றன்கிழங்கு காட்டிற்*
*கருணைதரு கிழங்கு காரணைக் கிழங்கு*
*தீதில் நித்தக் கத்தரியின் வேரு மெல்லாஞ்*
*சேர வகைக் கிரபலமாய்த் தேடிக் கொள்ளே (செய். 27)*

*தேடியிடித் தெட்டொன்றாய வித்தி றுத்துச்*
*சேர்கின்ற சாறுவகை செப்பக் கேண்மின்*
*தோடு பெறு மாதுளையின் பழங்கரும்பு*
*சொற்ற சிறு காஞ்சோன்றி யிலையும் வேரும்*
*பீடுபெறு சாறிவைகள் படிதான் காலாய்ப்*
*பெருகுகருப் பூரவள்ளி கண்டங்காலி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுமிலை தமிழ்சாறு படியொவ் வொன்று
கூறிய தூதுழம் பழத்திற் சாறு நாலு (செய். 28)

அரத்தையுடன் கற்கவகை கழங் சொன்றாகு
மாண்பனையின் வெல்லமது படிகால் கூட்டி
உரைத்த நல்ல வெல்லதரைப் படியாந் தேனு
முற்றிடு காற்படி மெழுது பதத்திற் காய்ச்சி
வரைத்தநிறை கழஞ்சுகொள்ளச் சீனி தன்னில்
வகுத்தபடி யந்தி சந்தி மண்டலங்கொள்
உரைத்ததொரு மூலத்தின் கிரந்தி கோழை
யுட் காய்ச்ச லுள்ளுருக்கி யிருமல் போமே (செய். 30)

**பரராசசேகரம்**, 'பெருங்கிரந்தியெண்ணெய்' பற்றிப் பேசுகிறது.

பிரமிபுளி வல்லாரை வெள்ளறுகு சங்கு
பேசரிய முசுமுசுக்கை முருக்கு வவ்விலொட்டி
அரியுடைய காந்திகருப் பூரவள்ளி கோழி
யவரைவன மல்லிகை கோடகசாலை யுவரி
கரவிளை கை யாந்தகரை தூதுவளை கற்றாழை
காற்பாச மோடு மணித் தக்காளி கிரந்தி
வருபிணி நாயன் வீழி முக்கனுவ னோடு
வளராடா தோடை செருப்படி துளசியிலையே (செய்.35)

**பரராசசேகரம்**, 'கற்பூரவள்ளியெண்ணெய்' பற்றிக் கூறுகிறது.

நோய் செய்யும் வாய்க்கிரந்தி ண்டந் தன்னில்
நுவல் கிரந்தி கரப்பனுடன் மூலத்துற்ற
தீமை யுறுமக்கிரந்தி சிறு சிரந்தி
தீருவதற்கோ ரெண்ணெய் செப்பக் கேண்மின்
நாமமுறுங் கர்ப் பூரவள்ளி வீழி
நவில் முசுக்கை தூதுவளை புளியியங்கு
ஆமமறும் பஞ்சவர்தம் முல்லை கோழி
யவரையிவை யிலைச்சாறு பருத்திப் பிஞ்சு (செய். 39)

பிஞ்சுபெறு தென்னையினிற் குரும்பைச்சாறு
தேசிய விருள்ளியினிற் சாறுமல்லால்
விஞ்சியுள கிளுவை தனிற் காயிற் சாறு
மிகு பசுப்பால் செவ்விளநீர் படியொவ்வொன்று
தஞ்சமுறுந் திரிகடுகு திப்பிலி மூலஞ்
சாருமிகு சீரகங்களோம மேலம்
மிஞ்சியுறு மிலவங்கப் பட்டை பத்ரி
வேண்டுமத்தித் திப்பிலி திரிபரையிந் துப்பு (செய். 40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*துப்புறமு மரத்த சந்தம் வலம்பு ரிக்காய்*
*தூய வசுவாசி யதி மதுரங் கோட்டம்*
*வெப்பமறுஞ் சடாமாஞ்சி லரத்தை மஞ்சள்*
*வேண்டு சிறு தேக்கமரர் தாகு வின்னும்*
*செப்புகுலக் காய் வசம்பு சிறு நாகம்பூச்*
*செவ்வள்ளி மரமஞ்சள் கழஞ்சொவ்வொன்று*
*தப்பறநல் லெண்ணெய் விட்டு வடித்துப் பூசச்*
*சாற்றியதோர் கிரந்திவகை சாந்தமாமே* *(செய். 41)*

இக்கட்டுரையிலே எடுத்துக்காட்டியுள்ள செய்யுட் சான்றுகளினூடே இன்றும் பயன்படும் தமிழ் மருந்துகளின் வகைகளை அறிந்துகொள்ள முடிகிறது அல்லவா! கூடவே தமிழ்மொழியின் வளம் குறித்தும், செய்யுள்களின் யாப்பு மற்றும் அணி நயம் முதலியனவும் அறிந்து கொள்ள இங்கு எடுத்தாளப்பட்டுள்ள செய்யுட்கள் உதவுவனவாகும். 'தமிழ்க் கவிதை மரபு' பன்முகத் தடத்தில் இன்றும் இயல்வது அனைவராலும் மனங்கொளத்தக்க விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

## சுதேச தமிழ் மருத்துவ நூல்கள்

சுதேச மருத்துவ இலக்கிய வரலாற்றையும் அதன் வளர்ச்சிப் போக்கையும் எடுத்துக்காட்டும் ஆவணங்களில் இங்கு இலங்கையிலே வெளிவந்த சித்த மருத்துவ நூல்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இலங்கையின் பல பாகங்களிலும் சிதறிக் காணப்படும் சித்த வைத்தியம் சம்பந்தமான ஏட்டுச் சுவடிகள், இங்கு சித்தமருத்துவம் ஒரு காலத்தில் செழிப்புற்றிருந்ததை எடுத்துக் காட்டுகின்றன. 1994 ஆம் ஆண்டு '**ஏட்டு வைத்தியம்** என்னும் நூல் வைத்தியகலாநிதி சு. பவானி அவர்களினாலேயே ஆயுர்வேதத் திணைக் களத்தினாலே வெளியிடப்பட்டது. 1980 இல் **'சித்த அவுடத சங்கிரகம்'** என்னும் சித்த மருந்துகளின் தொகுப்பு நூல் ஆயுர்வேத வைத்தியத் திணைக் களத்தினால் வெளியிடப்பட்டதும் குறிப்பிடற்பாலது. 1992 இல் திரு. சி. முருகவேள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள தமிழ் வைத்திய ஏட்டுச் சுவடிகளின் பெயர்ப்பட்டியலொன்றை அப்போதைய பிரதம நூலகராக இருந்தபோது வெளியிட்டார்.

கி.பி. 12 - 15 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தில் **பரராசசேகரம், செகராசசேகரம்,** இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி முதலான நூல்கள் தோற்றம் பெற்றன. இவை யாவும் தொகுப்பு நூல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றிலே கூறப்பட்டுள்ள மருந்துகளிற் பல தற்போதும் இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வழக்கிலுள்ளன. கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டளவில் **அமுதகாரம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்த சூடாமணி, சொக்கநாதர் தன வந்திரியம்** போன்ற நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்நூல்கள் பலவற்றையும் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த வேறுபல சித்தமருத்துவ நூல்களையும் அச்சுவாகனம் ஏற்றிய பெருமை ஏழாலையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஆ. பொன்னையாபிள்ளை அவர்களையே சாரும். **செகராகசேகரம்** நூலை அச்சுவேலியைச் சேர்ந்த ச. தம்பிமுத்துப்பிள்ளையும் **அமுதாகரத்தைத்** திருகோணமலையைச் சேர்ந்த ச. தம்பையாபிள்ளை என்பவரும் பதிப்பித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதேச மருத்துவ நூலாக்கத்தில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வைத்தியர்களும் பெரும் பணியாற்றியுள்ளனர். திருகோணமலையைச் சேர்ந்த வைத்தியர் சி. ஆறுமுகம்பிள்ளை 1931 இல் **நோய் நிதானங்கள்** என்னும் அரிய தமிழ் மருத்துவ நூலைத் தொகுத்து வெளியிட்டார். சித்தமருத்துவ நோய் காடல் சம்பந்தமாக எமக்குக் கிடைத்த முதலாவது நூல் இதுவென்றே கூறலாம். ஆயுள்வேத வைத்தியத்தில் **மாதவன் நிதானம்** போன்ற நோய் நிதான நூல்கள் பல இருப்பினும் சித்த மருத்துவத்தில் நோய் நிதானத்துக் கென்று தனியான நூல் எதுவும் இலங்கையிலே இல்லாதிருந்தது. அக்குறைபாட்டைப் போக்கும் நோக்குடனேயே தாம் இதனைத் தொகுத்ததாக நூலாசிரியர் தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். **'அங்காதிபாதம்'** என்னும் பெயரில் இதே நூலாசிரியர் எழுதிய ஒரு நூல் இற்றைவரை கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது. அதுபோலவே திருகோணமலையைச் சேர்ந்த ப. சின்னத்தம்பி என்பவர் 1906 இல் எழுதிய **அங்காதிபாதம்** என்னும் நூலும் கையெழுத்துப் பிரதியாகவே இருந்து வருகிறது.

சித்தமருத்துவ நூல்களின் பட்டியல் ஒன்றைச் சித்தமருத்துவ கலாநிதியும், கைதேர்ந்த சித்தவைத்தியரும், கைதடி சித்தமருத்துவத்துறை விரிவுரையாளரும் எமது முதன் மாணாக்கருமாகிய டாக்டர் சே. சிவசண்முகராசா எழுதிய நூலொன்றில் விவரமாகக் காணலாம். அவரது நூற்பட்டியல் வருமாறு:

> அங்காதிபாதம், அமுதாகரம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்த சூடாமணி, ஏட்டு வைத்தியம், கிறித்தவ பண்டிதர் வைத்திய நூற்றிரட்டு, சித்த ஔடத சங்கிரகம், சித்த வைத்திய சிகிச்சைக் கிரமம், சுதேச வைத்திய அவுடதத் திரட்டு, சுதேச வைத்திய மருத்துவ மூலிகைக் கையகராதி, செகராசசேகரம், சொக்கநாதது தன்வந்திரியம், நயனவிதி குணமும் மருந்தும், பரராசசேகரம், வைத்திய சிந்தாமணி, வைத்திய பூரணம்.[1]

**பரராசசேகரம்**

இம்மருத்துவ நூல் 1928-1936 ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் ஐ. பொன்னையா அவர்களால் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. ஏழு பாகங்களாக அமைந்த இந்நூலின் முதலாம் பாகம் சிரரோக நிதானம் எனப்படும். உச்சி (கபால) ரோகம், அமுத (மூளை) ரோகம், செவி ரோகம், நாசி ரோகம், நயன ரோகம், வாய், கழுத்து ரோகங்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பாகத்திலே கெர்ப்பரோகம், பாலரோகங்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

மூன்றாம் பாகத்திலே சுரம், சன்னி, வலி, விக்கல், சக்தி ரோக நிதானங்களும் அவற்றக்கான சிகிச்சை மருந்துகளும் கூறப்பட்டுள்ளன.

நான்காம் பாகத்திலே வாத, பித்த, சிலேற்பன ரோக நிதானங்களும் சிகிச்சை முறைகளும் கூறப்பட்டுள்ளன.

ஐந்தாம் பாகத்திலே, மேகரோகம், பிளவை ரோகம், பவுத்திர ரோகம் முதலியனவும் சத்திரவிதி, வன்மவிதி, இரட்டை விதி என்பனவும் கூறப் பட்டுள்ளன.

ஆறாம் பாகம் உதரரோகம், குன்மம், பாண்டு, காமாளை, சோகை, வாய்வு, சூலை ரோகங்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளும் கூறும்.

ஏழாம் பாகம் மூலம், அதிசாரம், சிரணி கரப்பன், கிரந்தி, குட்டரோக நிதானங்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளுங் கூறும்.

**வைத்திய சிந்தாமணி**

1932 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. இதனைப் பதிப்பித்தவரும் வைத்தியர் ஐ. பொன்னையாபிள்ளையவர்களே. இதில் எண்வகைத் தேர்வு (அட்ட வித பரீட்சைகள்) இலக்கண விதி, கஷாய விதி, சரக்குச் சுத்தி முறைகள், பற்ப செந்தூர விதி, மாத்திரை விதி, சூரண விதி, கிருத (நெய்) விதி, இரசாயன விதி, கற்ப விதி என்பவற்றின் கீழ் அவ்வவற்றிற்குரிய விளக் கங்கள், மருந்துகள் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளதுடன் தைலங்கள் கண் மருந்துகள் முதலியனவும் விளக்கப்பட்டுள்ளன.

ஆயுர்வேத வைத்தியமானது சிங்கள மக்களாலும், சித்த மருத்துவமானது தமிழ் மக்களாலும், யுனானி மருத்துவமானது முஸ்லிம் மக்களாலும் பின் பற்றப்பட்டு வருகிறது.

> முதுமுதற் கடவுளாம் சிவபெருமான் உமையம்மையாருக்குக் கூறிய தாகவும் உமையிடமிருந்து அதைக் கேட்ட முருகப் பெருமான் அகத்தியர், திருமூலர் முதலான சித்தர்களுக்கு உபதேசித்ததாகவும் இச்சித்தர்களே பூமியில் சித்தமருத்துவத்தைப் பரப்பியதாகவும் கூறுவர். நந்திதேவரிடமிருந்து அகத்தியர், திருமூலர் முதலானோர் சித்தமருத்துவத்தை அறிந்ததாகக் கூறுவோருமுளர். எனவே தான் சித்தமருத்துவத்தைச் சிவசம்பிரதாயமுடையது என்றுங் கொள்வர்[2].

என டாக்டர் சிவசண்முகராஜா கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி காலத்தில் சித்த மருத்துவமானது இலங்கை முழுவதும் பரவி யிருந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய, பல்லவர்களின் மேலாதிக்கம், நட்புறவு என்பன இலங்கையில் ஏற்பட்டிருந்த காலங்களில் இவ்வைத்தியமுறை புத்துயிர் பெற்று வளர்ச்சியடைந்திருக்கக் கூடும். பொலநறுவையில் அமைந்துள்ள பொற்கல்விகாரையில் (Potgal Vehera) உள்ள சிலைகளில் ஒன்று சித்தமருத்துவத்தின் தந்தை என்று கருதப்படும் அகத்திய முனிவருடையது என்ற கருத்து இதனை வலுப்படுத்துவதாக அமைகிறது. 15 ஆம் நூற்றாண்டளவில் சிங்களத்தில் ஆக்கப்பட்ட 'வைத்திய சிந்தாமணி பைசாஜ்ஜ சங்கிரகம்' (Vaida Cintamani Bhaisadya Sangrahea) என்னும் நூல் வைத்திய சிந்தாமணி என்னும் தமிழ் மருத்துவ நூலைத் தழுவி எழுதப்பட்ட ஒன்றாகும் என்ற கருத்தும் நோக்கற்பாலது. இவை சிங்களவர் மத்தியில் சித்த மருத்துவத்துக்கிருந்த செல்வாக்கை நன்கு காட்டும். சித்த மருத்துவம் கூறும் சித்தர்களில் ஒருவரான 'கோரக்கர்' திருகோணமலையில் சித்தியடைந் தார் என்பதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. பதினெண் சித்தர்களில் புலத்தியர், சட்டநாதர் ஆகிய இருவரும் சிங்கள நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படு கிறது. சிங்களம் என்பது இங்கு இலங்கை எனும் நாட்டைக் குறிப்பதாகிறது. எனவே இத்தமிழ்ச் சித்தர்கள் இலங்கையி லிருந்து இந்தியாவுக்குச் சென்று சித்தமருத்துவ வளர்ச்சியில் தம்மை ஈடு படுத்தியிருக்க வேண்டும்.

பரராசசேகர மன்னின் சகோதரனான பரநிருபசிங்கன் என்பவன் சிறந்த சித்தமருத்துவராகத் திகழ்ந்ததுடன் கண்டியரசனின் மனைவிக்குச் சிங்கள வைத்தியர்களால் குணப்படுத்த முடியாதிருந்த வயிற்றுவலியைக் குணப் படுத்தினான் என்ற செய்தியும் குறிப்பிடத்தக்கது. இது யாழ்ப்பாண அரச பரம்பரையினருக்குச் சித்த மருத்துவத்தில் இருந்த ஈடுபாட்டைக் காட்டு வதுடன் சித்த மருத்துவம் சிங்கள மக்களுக்கும், அரச குடும்பத்தாருக்கும் பயன்பட்டிருப்பதற்கும் சான்றுபகர்வதாகவுமுள்ளது. தற்போது கூட சிங்களப் பாரம்பரிய மருத்துவர்களிடம் தமிழ் ஏட்டுச் சுவடிகள் பல இருப்பதாகக் கூறப்படுவதும் கவனத்திற் கொள்ளத்தக்கது. எனினும் பிற்காலத்தில் தமிழ் மருத்துவமானது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலேயே பெரு மளவில் கையாளப்பட்டு வந்துள்ளது.

''இலங்கையில் சித்த மருத்துவத்தின் தாயகமாக யாழ்ப்பாணம் விளங்குகின்றது'' என்று கலைப்புலவர் நவரத்தினம் அவர்களும், 'சித்த மருத்துவமானது அதன் தூய்மையுடனும் தனித்தன்மையுடனும் யாழ்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்தில் இன்றுவரை கையாளப்பட்டு வருகிறது' என்று பேராசிரியர் ஊரகொட எடுத்துக் கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கன.

பதினெண் சித்தர்களில் ஒருவரான போகநாதர், முருகனருளால் கதிர்காம யத்திரத்தை ஸ்தாபித்தவர் என்று கூறுவர். தமிழ்நாட்டில் பொதிகை மலையைப் போல் ஈழநாட்டில் கதிரைமலை (கதிர்காமம்) சித்தர்களின் புண்ணிய வாச ஸ்தலமாக விளங்கி வந்துள்ளது. மூலிகை வளமிக்க இப்புண்ணியபூமியில் சித்தர்களைத் தலைவனான முருகப்பெருமானின் யந்திரத்தை ஸ்தாபித்துச் சித்தர்கள் வழிபட்டுவந்ததுடன் அங்கிருந்து சித்தமருத்துவத்தையும் பரப்பி யிருந்தல் வேண்டும். கதிர்காமத்தில் மூலிகைச் சந்தை உண்டு. கடலறிஞ்சில் அல்லது கடலிறஞ்சிப்பட்டை(சிங்களத்தில் கொத்தலகிம்புட்டு), மரமஞ்சள் (சிற்களத்தில் வெனிவெல்கட்ட), புலிநகம் (சிங்களத்தில் புலிஉகிர்), சீந்தில் (சிங்களத்தில் ரஸகிந்த), செஞ்சந்தணம் (சிங்களத்தில் ரத்ஹந்துன்), வெண் சந்தணம் (சிங்களத்தில் சுதுஹந்துன்), ருத்திராட்சம் முதலான அநேக மூலிகைச் சரக்குகளைக் கொண்ட மருந்துக் களஞ்சியங்களாகக் கதிர்காமத்திலுள்ள பல கடைகள் விளங்குகின்றன. கதிர்காமத்துக்கருகில் மூலிகை மலை (மூலிகை கந்த) காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இதனை அனுமன் எடுத்துவந்த சஞ்சீவி மலையின் ஒருபகுதி என்றும் கர்ணபரம்பரைக் கதையாகவும் கூறுவர்.

17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மதப் பிரசாரகராக இங்கு வந்த போல்டேயல் பாதிரியார் தமது காலத்தில் இங்கு நிலவிய வைத்தியமுறை பற்றி மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது.

> இக்காலத்தில் நாட்டு வைத்தியம் சிறப்புப் பெற்றிருந்தது. நாட்டு வைத்தியர்களின் எண்ணிக்கைக்கும் குறைவில்லை. இவர்களுக்குச் சத்திர சிகிச்சை செய்வதில் பயிற்சியில்லை. நோய்கள் பற்றித் தாம் பெற்றுள்ள அனுபவம், பயிற்சி ஆகியவற்றைக் கொண்டே இவர்கள் நோய்களை மாற்றுவர். இவ்வைத்தியம் சம்பந்தமாக இவர்களது முன்னோர்களால் அவர்கள் அனுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் எழுத்தில் பொறித்த ஏட்டுப் பிரதிகள் உண்டு. இவ்வைத்தியர்கள் நோய்களுக்கான சிகிச்சையாகக் குளிசைகளையும் திரவங்களையும் மருந்துகளாக அளிப்பது வழக்கம். இத்தகைய மருந்துகளை இவர்கள் பல்வேறு மூலிகைகளிலிருந்தும் தயாரிப்பர். காய்ச்சல், அதிக வயிற் றோட்டம், ஏற்படும்போது சிறிதளவு மிளகை அரைத்துத் தண்ணீர் சேர்த்துப் பொக்கிளடியில் பூசும்படி வைத்தியர்கள் பணிப்பர்.

தானும் இவ்வாறு குணமடைந்தவர்களில் ஒருவர் எனவும் போல்டேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை வைத்தியம் இன்றும் யாழ்ப்பாணத்திலே தமிழ் மூலிகை வைத்தியமாகவே உள்ளது. கற்பூரவல்லி இலையும் குழந்தை வைத்தியத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. குழந்தைக்குச் சளி ஏற்பட்டால் அதை நீக்கு வதற்குச் கற்பூரவல்லியை வெதுப்பிச் சாறு பிழிந்து அதில் சிறிது கற்கண்டு சேர்த்துக் கொடுக்கும்படி வைத்தியர் பணிப்பர். வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவை அரைத்தேக்கரண்டி வீதம் குழந்தைக்குப் புகட்டுவர். கற்பூர வல்லி இசைச் சாற்றில் தொற்றுத் தடுப்புத் திறன் (Anti streptcollal action) இருப்பதாக நம்பப்படுகிறது. குழந்தை பிறந்ததிலிருந்து அதற்குக் கோரோ சனை கொடுப்பது, கிரந்தி எண்ணெய் தலைக்கு வைப்பது போன்ற பல விடயங்களையும் சித்த மருத்துவர்களின் ஆலோசனையுடனே மக்கள் செய்வர். கோரோசனை மாத்திரை, முக்கூட்டு மாத்திரை, பால சஞ்சீவ மாத்திரை, பிரமிநெய், வல்லாரை நெய், மாதுளை நெய், வடிகிரந்தி எண்ணெய், கொதியெண்ணெய், கோழியவரைச் சாற்றெண்ணெய், செவ்வரத் தம்பூக் கிரந்தியெண்ணெய், அரக்க சஞ்சீவி மாத்திரை என்பன முக்கிய மருந்துகளிற் சிலவாகும்.

**பரராசசேகரம்** நூலில் பாலரோகநிதானம் என்னும் பிரிவில் சிறுவர் நோய்களுக்கான சிகிச்சை முறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பிற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பாலரோகம் சம்பந்தமான நூல்கள் பலவும் அதன் தழுவலாகவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது என்பார் டாக்டர் சே. சிவசண்முகராஜா.

**விஷகடி வைத்தியம்** (Sidda toxicology)

நஞ்சியல் பற்றிய வைத்தியத்துறை ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தில் சிறப்புற் றிருந்த போதிலும் தற்போது வேகமாக அருகிக்கொண்டு வருகிறது. அலரிக் கொட்டை, எட்டிவிதை, பாஷாண நஞ்சுகள் முதலியவற்றை உண்டவர்கள் விஷகடி வைத்தியர்களிடம் பொதுச் சிகிச்சைபெறச் செல்வம். விஷகடி வைத்தியத்தில் பார்வை பார்த்தல், நூல் கட்டுதல், மந்திர ஜெபம் என்பனவும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சித்த மருத்துவ நூலான **பரராசசேகரத்தில்** நஞ்சுகள், விஷகடிகள் பற்றி எதுவும் கூறப்பட்டில. **செகராசசேகரத்தில்** விஷம் பற்றிக் கூறப்பட்டுள்ளதாக டாக்டர் சிவகடாட்சம் எடுத்துக் கூறியுள்ளார். எனினும் நஞ்சியல் பற்றி யாழ்ப்பாணத்தில் வெளிவந்த முதல் நூலாக **அமுதாகரம்** கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண் வைத்தியம்** (Siddha opthalomology)

'நயனவிதிகுணமும் மருந்தும்' என்னும் நூல் கண் வைத்தியம் சம்பந்தமாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்த ஒரேயொரு நூலாகும். பருத்தித்துறை, அளவெட்டி, கொல்லங்கலட்டி, நுணாவில் போன்ற இடங்களில் இத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். தோல் வியாதிகள், பறங்கிப் புண்கள் எனப்படும் மேகப் புண்கள் மேக நோய்கள் முலியவற்றை மாற்றுவதில் தேர்ச்சி பெற்ற வைத்தியர்கள் மாரிசன்கூடல், சில்லாலை போன்ற இடங்களிலும் செங்கமாரி எனப்படும் காமாளைக்குச் சிகிச்சையளித்த வைத்திய பரம்பரையினர் அளவெட்டியிலும் வசித்ததாகச் கூறப்படுகிறது. விசர்நாய் கடிக்கு வைத்தியம் செய்த சிலரும் ஒரு சில இடங்களில் இருந்திருக்கிறார்கள்.

**பரராசசேகரம்** ஐந்தாம் பாகம் வர்ம வைத்தியம் (மர்மஸ்தானங்கள் பற்றியது) குறிப்பிடுகிறது.

இலங்கையிலே முதன்முதலில் மருத்துவ நூல்களை அச்சிடுவித்த பெருமை கிறின் அவர்களையே சாரும். அமெரிக்க வைத்தியரான இவர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நீண்ட காலம் பணியாற்றியவர். பரராசசேகரம் முதலிய சித்த மருத்துவ நூல்களைப் பதிப்பித்த ஐ. பொன்னையா, கிறீனின் மாணவ பரம்பரையில் வந்த ஒருவர் என்று கூறப் படுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. சில்லாலை இன்னாசித்தம்பி பரம் பரையினர் இருபாலைச் செட்டியார் பரம்பரையினர், நயினாதீவு இராமுப் பிள்ளை, சோமசேகரம் பரம்பரை, கொழும்புத்துறை ஜோர்ஜ் பரம்பரையினர் குறிப்பிடத்தக்கோராவர்.

நாயன்மார்கட்டு, கள்ளியங்காடு, சில்லாலை, இளவாலை, வேலணை, சுன்னாகம் என்னும் ஊர்கள் இன்றும் மருத்துவ மாண்பில் நிலைபேறுடையன வாயுள்ளன.

தெற்காசியாவில் ஆதியில் வளர்ந்த அறிவியற் கலைகளுள் மருத்துவம் குறிப்பிடத்தக்க இடம் பெற்றுள்ளது. தமிழ் மக்கள் உள்ளிட்ட தெற்காசிய மக்களின் மருத்துவ வரலாறு இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமாகிவிட்டது. கிரேக்கம், சீனா, இந்தியா போன்ற நாடுகளில் கட்டுக் கோப்பான அறிவியல் மருத்துவம் இற்றைக்கு ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டு களுக்கு முன்னரேயே இடம்பெற்றன.

ஆரம்பத்தில் மந்திரங்கள், மதச் சடங்குகள், என்பவற்றுடன் பின்னிக் கிடந்த இந்திய மருத்துவத்துறை தனியொரு அறிவியல் துறையாக உரு வெடுக்கும் முயற்சிகள் கிறிஸ்து சகாப்தத்துக்கு முன்னதாகவே ஆரம்பமாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டன என்பதற்குப் புராதன இந்தியாவின் மருத்துவ நூல்கள் சான்று பகருகின்றன.

சுதேச மருத்துவ நூல்களின் தோற்றத்திற்கு முன்னரேயே ஆயுள்வேத நூல்களுள் மிக ஆதியானது எனக் கருதப்படும் 'சர்ஹசம்ஹிதை' கி.பி. முதலாம் நூற்றாண்டளவிலேயே உருவாகியிருத்தல் வேண்டும் எனக் கணிக் கப்பட்டுள்ளது.

பரராசசேகரம் என்னும் மருத்துவ நூலின் ஆசிரியர் தன்வந்திரி என்பார் ஆக்கிய வடமொழி வாகடத்தைப் பெரிதும் தழுவியே தாம் மேற்படி தமிழ் நூலினை ஆக்கியதாகக் குறிப்பிடுகிறார்.

*தாரணியோர் மிகப் புகழ் தன்வந்திரி செய்த*
*தகவுடைய கீர்த்து பெறு மாயுயர் வேதம்*
*பேரணியும் வாகடத்தைப் பெரிது பேணிப்*
*பெட்புடைய தமிழ்ப்பாவால் பேசும் வண்ணம்*

என்று செய்யுள் வருகிறது.

திருமூலர், யோகர், புலிப்பாணி, கோரக்கர், கொங்கணர், சட்டைமுனி, மச்சமுனி, ஸ்ரீமால்முனி, யூகி என்போரை மருத்துவச் சித்தர்களாக ஏற்றுக் கொள்வதில் தவறில்லை. இவர்களது பெயர்களில் காணப்படும் தமிழ் மருத்துவ நூல்கள் **பாதரசம், கெந்தகம்** முதலான கனிமங்களை அடிப்படை யாகக் கொண்டு செய்யப்படும் அசேதன இரசாயன மருந்துகள் பற்றியே பிரதானமாக எடுத்தாண்டுள்ளன.

கலாநிதி பா. சிவகடாட்சம் மேல்வருமாறு குறிப்பிடுவர்.

> தமிழ்ச் சித்தர் நூல்களிற் காணப்படும் மருதார்சிங்கி, தவச்சாரம், துத்தநாகம், அபினி, அக்கரகாரம் போன்ற மருந்துப் பெயர்கள் அரபுமொழி மூலமுடையவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பண்டைய மருத்துவ முறைகளில் மூலிகைகளே பிரதான இடம் பெற்றிருந்தன. இம்மருந்துகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பக்க விளைவுகள் குறைவு. சித்தர்கள் கண்டறிந்த செந்தூரங்கள், பஸ்பங்கள், குளிகைகள், பற்றியும் அவற்றின் செய்முறைகள் பற்றியும் கூறும் வடமொழி மருத்துவ நூலான சாரங்கதார கி.பி. 15 ஆம் நூற்றாண்டளவில் எழுதப் பெற்றிருக்கலாம் என நம்பப்படுகிறது.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் ஆக்கப்பெற்ற 'பாவப் பிரகாச' என்னும் ஆயுள்வேத நூல் சித்தர் மருந்துகள் பலவற்றையும் உள்ளடக்கிய ஆயுள்வேத நூலாகத் திகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பாரம்பரிய சுதேச மருத்துவமானது புராதன ஆயுள்வேத நூல்கள் கூறும் மருந்துகளையும் சித்தர்கள் கண்டறிந்த மருந்துகளையும் உள்ளடக்கிய தாகும். தமிழிலுள்ள மருத்துவ நூல்கள் யாவும் தாம் கூறும் மருத்துவ முறையினை ஆயுள்வேதம் என்றே கூறுகின்றன. அகத்தியர் 2000, **தன்வந்திரி வைத்திய சிந்தாமணி, செகராசசேகரம்** போன்ற தமிழ் நூல்கள் மூலிகை மருந்துகளைப் பற்றிக் கூறுவனவாகவும் பேகர் சப்த காண்டம் 7000 கொங் கணர் சரக்கு வைப்பு, அகஸ்தியர் செந்தூரம் 300 போன்ற நூல்கள் இர சாயன இரசாயன மருந்துகள் பற்றி விளக்குவனவாகவும் உள்ளன. இந் நிலையில் தமிழரின் பாரம்பரிய மருத்துவத்தை ஆயுள்வேதம், சித்த மருத்துவம் எனப் பிரிப்பது அர்த்தமற்றதாகி விடுகின்றது.

நமது பாரம்பரிய, சுதேச மருத்துவத்தின் முழு வடிவத்தையும் தமிழி லுள்ள மருத்துவ நூல்களின் வாயிலாகவே அறிய முடிகிறது. தேரையர் பாடலொன்றில் 'தாயைக் கொன்றான் சாறு' என்பது 'வாழைச் சாறு' என்பதைக் குறிக்கும். உண்மைப் பொருளை அறிந்து தெளியத் தமிழ்ப் புலமையுடன் கூடிய மருத்துவ அறிவு அவசியமாகும்.

**பரராசசேகரம் சிரரோகநிதானம்** பதிப்பு நூன்முகத்தில்,

> பரராசசேகரன் சபையில் இருந்த பண்டிதர்கள் (பண்டிதர் - வைத்தியர்)
> பலர் இதை இயற்றித் தொகுத்தார்கள் எனக் கூறுவாருமுளர்.

என்கிறார் பதிப்பாசிரியர் ஐ. பொன்னையா. **பரராசசேகரத்துடன்** சம்பந்தப்பட்ட பரராசசேகரனே அந்தகக் கவிவீரராக முதலியாரால் புகழப் பட்ட பரராச சேகரன் என்றும் கொள்ளப்படத்தக்கவன். அந்தகக் கவி வீரராக முதலியாரது காலம் 17 ஆம் நூற்றாண்டு என்கிறார் மு. அருணாசலம். **பாவலர் சரித்திர தீபகம்** எனும் நூலிலும் **திருவாரூருலா** முதலிய நூல்களி யற்றிய அந்தகக் கவி வீரராகமுதலியார் காலம் 17 ஆம் நூற்றாண்டு என்றே கூறப்பட்டுள்ளது. ஐ. பொன்னையா பிள்ளை தமது **பரராசசேகரம்** சிரரோக நிதானம் நூன் முகத்திலே அது சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் உருவானதாகக் கூறியுள்ளார். எனவே **பரராசசேகரம்** உருவான காலம் 17ஆம் நூற்றாண் டாக இருக்க வேண்டும். ஆனாலும், வைத்தியன் சஞ்சிகையில் **பரராச சேகரம்** 600 ஆண்டுகளுக்கு முன்னர் தொகுக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. **ஈழநாட்டுப் புலவர் சரிதம்** ஆசிரியரின் கூற்றுப்படி நோக்கினும் பரராசசேகரன் 15 ஆம் நூற்றாண்டுக்குரியதாகவே கொள்ள வேண்டியுள்ளது. இன்னொரு சபையிற் பார்த்தால் தமிழ் இலக்கிய வரலாற்றின் படி தமிழில் மருத்துவ, (சித்தர்) பாடல்கள் அதிகளவில் எழுந்த காலம் கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் இருந்த நெருங்கிய தொடர்புகள் காரணமாகச் சமகாலத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட இந்நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலும் பிரதிபலிக்க இடமுண்டு. முதல் நூல், வழி நூல், சார்பு நூல் விவகாரம் எனவும் இதனைக் கூறலாமல்லவா?

தமிழ் மருத்துவத்தில் திருமூலர் போன்றே ஆயுள்வேத மருத்துவத்தில் கஸ்ருதர். கஸ்ருதர் விசுவாமித்திர பரம்பரையைச் சோந்தவர். **மகாபாரதம்** இவரை அந்த இராஜரிஷியின் புத்திரராக வர்ணிக்கிறது. மருத்துவ பரம்பரையில் புகழ்வாய்ந்த ஒருவரின் பெயரை அவர் வழிவந்தோருக்கு வைப்பது இன்றும் வழக்கம்.

**காது குத்துதல்**

வளர்பிறையில் சுபதினமொன்றில் வருஷ ஆரம்பத்திலிருந்து 6 ஆம் அல்லது 7 ஆம் மாதத்தில் இதைச் செய்கிறோம். ஆண் குழந்தைக்கு வலது காதை முதலிலும் இடது காதை இரண்டாவதாகவும் குத்துவர். பெண் குழந்தை யெனில் முதலிலே இடது காதையும் பின்னர் வலது காதையும் குத்துவர்.

மாதுளை, உள்ளிப் பூண்டு, தேங்காய், திராக்ஷை, வில்வம், கடுக்காய் என்பன மருந்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைப் **பரராசசேகரம்** கூறும்.

**பாலுடன் உப்பைக் கூட்டி உட்கொள்ளக்கூடாது. வாழைப்பழத்தை மோர், தயிர், பனம்பழம் இவற்றுடன் சாப்பிடக்கூடாது. வெண்ணெயுடன் காய்கறி களைச் சாப்பிடக்கூடாது. முள்ளங்கியைத் தேனுடன் சாப்பிடக் கூடாது. முள்ளங்கியுடன் உளுத்தம் பருப்புச் சமையலைச் சாப்பிடக் கூடாது. மணத் தக்காளியைத் திப்பிலி, மிளகு, தேன், வெல்லம் இவற்றுடன் உட்கொள்ளக் கூடாது. மீன்களுடன் வெல்லம், சர்க்கரை முதலிய கரும்பு சம்பந்தமான பொருட்களை உட்கொள்ளக்கூடாது. தயிருடன் மான், கோழி இவற்றின் மாமி சத்தைக் கூட்டி உண்ணக்கூடாது.**

வெற்றிலை கருமையானது. வெப்பத்தையுண்டாக்கும். கார்ப்பு, துவர்ப்புச் சுவைகளுடையது. பித்தத்தை அதிகப்படுத்தும். நறுமணமுடையது. வாயைத் தெளிவுபடுத்தும். கசப்புச் சுவையுடையது. வாயு, கபம் இவற்றைப் போக்கும். மலச்சிக்கலை நீக்கும். பசித்தீயைத் தூண்டுகிறது. வாயில் அரிப்பு, அசுத்தம், துர்நாற்றம் முதலியவைகளைப் போக்குகிறது.

கட்டில் மூன்று தோஷங்களையும் குறைக்கும். தரையில் படுப்பது வலுவை உண்டாக்கும். ஆண்மையை வளர்க்கும். **மரத்தின் பலகை வாயுவை உண்டு பண்ணும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ரிஷிகாளான்**

> மூலிகையின் அரசன்: உப உணவு. அரசர்கள், முனிவர்கள், யோகிகள் ஞானிகள் பயன்படுத்தி சுகதேகிகளாக வாழ்ந்தனர். இதன் வகைகள் பல. இருநூறு வகையான காளான்கள் உணவுக்கெனப் பயன்படு கின்றன. பல்வேறு நோய்களுக்கும் மருத்துவமாகப் பயன்படுகின்றன.

என்கிறார் டாக்டர் உமா ஸ்ரீசங்கர்.

மூலிகைகளும் ஔடதங்களும் என்று கூறும்போது மரம், செடி, இலை, குழை, பட்டை, வேர், பால், பிஞ்சு, காய், பழம், விதை, பஸ்பம், சூரணம், பொடி எனப் பல்வேறு வகைகளிலும் நோய் தீர்க்கப் பயன்படுகின்றன.

வடசொற்களிலேயும் பல மருந்துப் பெயர்கள் உள.

அபமார்க்க - நாயுருவி

படருருக்கி - செந்நாயுருவி

செந்நாயுருவியினால் வீக்கம், பாண்டு காமாலை நீங்கும். மாதர்களின் ருது காலத்தில் வழக்கப்படி உதிரப் போக்கை உண்டாக்கும். செந்நாயுருவி இலைச்சாறு அதிகளவில் கருப்பத்தைக் கரைக்கும். நாயுருவி வேர்ச் சூரணத்துள் சிறிது மிளகுப் பொடியையும் தேனையும் சேர்த்துக் கொடுக்க இருமல் நீங்கும். அர்க்க - எருக்கு கரவில் - அலரி; கர்ஜார - பேரீஞ்சு; காக்மசி - மணத்தக்காளி; காரவெல்லிகா - பாகல்; குக்குறு - குங்கிலியம்; குரந்தக - மருதோன்றி; குஸ்தும்புரு - கொத்தமல்லி; கூஷ்மாண்ட - கல்யாணப் பூசிணி; சுரஸா - துளசி; சுன்தி - சுக்கு, தலா - தாலம் (பனை), படலா - பாதிரி.

**அறுகம்புல்லை இடித்துப் பிழிந்து சாற்றைக் கண்ணுக்குப் பிழியக் கண்ணோயும் கண புகைச்சலும் நீங்கும். அதை மூக்கிலிட்டால் இரத்த பீசம் நீங்கும். அறுகம்புல்லின் சாற்றை வெள்ளிக்கிழமைகளில் குடித்து வந்தால் பெருச்சாளி விஷம் நீங்கும்.**

பாதிரியின் பூவுக்கு 'மதன காமேஸ்வரப்பூ' என்று பெயர்.

மூலநோய் தீர்க்கும் மூலிகை கடுக்காய். நுண்ணிய பொடியையோ, கடுக்காய்க் கஷாயத்தையோ மூலத்தின் மீது தூவினாலோ அல்லது கழுவி னாலோ இரத்தம் கசிவது நிற்கும். பச்சைக் கடுக்காயைப் பாலில் அரைத்துச் சாப்பிட்டால் இருமல், பீளை, சீதக்கடி, புகையிருமல் ஆகியவை நீங்கும்.

தமிழர் கலாசாரத்தோடும், பண்பாட்டோடும். மதவழிபாட்டோடும், தெய்வீகத்துடனும் அலங்காரத்துடனும் தொடர்புடையது மஞ்சள். (ஹரிட்ரா). கைப்பும் கார்ப்பும் மஞ்சளின் சுவையாகும். மஞ்சள் உடலுக்கு வனப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும். உடலிற் பூசினால் புலால் நாற்றத்தை நீக்கும். புருட வசியமும், பசியும் உண்டாக்கும். வாந்தி, வாத, பித்த கபதோஷம், தலைவலி, நீரேற்றம், பிரமேகம், பீநிசம், ஐவகை வலி, வீக்கம், வண்டு கடி விஷம், பெருவிரணம் ஆகியவற்றைப் போக்கும். மஞ்சள் நீரை அருந்தினால் காமாலை குணமாகும்.

ஹிங்கு - பெருங்காயம். மலமிளக்குதல், புழுக் கொல்லுதல், சிறுநீர்ப் பெருக்குதல், காமம் பெருக்குதல், ருதுவுண்டாக்குதல் ஆகியன இதன் குணங்கள். இருதய ஓட்டத்துக்குக் கிளர்ச்சியையுண்டு பண்ணிக் காமக் கிளர்ச்சியை உண்டாக்கும். பிரசவத்தின் பின் அழுக்கை வெளிப்படுத்து வதற்குப் பெருங்காயத்தைப் பொரித்து வெள்ளைப்பூண்டு பனைவெல்லத் துடன் சேர்த்துக் காலை தோறும் கொடுக்கலாம்.

**அமுதாகரம் - இலக்கியவளம்**

வரதண்டிதர், வரதராசகவி என்றும் வழங்கிய புலவர் பெருமான். வடமொழி, தென்மொழி நிலை கண்டுணர்ந்த வரன்முறைப் புலமையோடு ஆயுள்வேதம், சித்த வைத்தியம் ஆகிய இருதுறைகளிலும் பெரும்பாண்டித்தியம் பெற்ற தோடமையாது விஷ வைத்திய முறைகளையும் துறைபோகப் பயின்று சகலவாகம பண்டிதராய் விளங்கினார். அவர் தாமறிந்த வைத்திய நூலாக்கங் களைப் பிற் சந்ததியினர் பேணிப் பாராட்டும் வகையில் நிலையான தொண்டு செய்ய நினைந்து **'அமுதாகரம்'** என்னும் அரிய மருத்துவ நூலையும் 310 விருத்தங்களில் விரிவாகச் செய்துள்ளார்.

*ஐயமின் முந்நூற்றுறையிரு விருத்தம்*
*செய்ய செந்தமிழாற் றெறிந்துரை செய்தனன்*
*கங்கைமா நதிசூழ் காசிமாநகரும்*
*பங்கமில் பங்கயப் பைந்துணர் மாலையும்*
*ஆதி நான் மறை சேர் அந்தணராணையும்*
*கோதக ளோதிமக் கொடியு மிங்குடையோன்*
*கண்ணியங் குமுகிற் கயலினங் குதிக்கும்*
*துன்னிய வளவயற் சுன்னை நன்நாடன்*

என்றும்,

*அரங்கநாதன் அருளிய புதல்வன் வரம்பெறு*
*புதல்வன் வரதபண்டிதன்*

என்னும் பாயிரப் பாடல்கள் இவர் நூல் செய்த பெருமையைப் புகழ்ந்து கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பொங்கரவக் கடலுலகோர் புகழமுதா*
*கரம் எனப் பேர் புனைந்த சீற்றத்*
*தங்கரவு முதலிய பல் விடந் தீர்க்கும்*
*மருந்துபல சாற்ற லுற்றேன்*

எனப் புலவர் பாடியுள்ளார்.

விஷமூட்டும் உயிரினங்களுள் பல்வேறு பாம்புகள், பூச்சிகள், குளவிகள், பூனை, எலி, அறணை, புலிமுகச் சிலந்தி முதலியவற்றின் விவரமும் அவற்றுக் கெல்லாம் உடனுக்குடன் உபயோகிக்க வேண்டிய மருந்து வகைகள், பூச்சுகள், நசியம் ஒத்தணம் முதலியவை யாவும் பொருத்தமாகக் கூறப் பெற்றுள்ளன.

எடுத்துக்காட்டாக இரண்டு விருத்தங்கள் பார்க்கலாம்.

*பார்மலி துத்திப் படவிட நாகம்*
*மண்டலி புடையன் வளர்கரு வளலை*
*எண்டரும் ணிகள் இவை முதல் எவைக்கும்*
*அருந்திரு மருந்தோடு அஞ்சனம் குடோரி*
*பொருந்திய நசியம் பூச்சொடு துவாலை*
*முறுக்கிடு மருந்துகள் முறைமுறை துவைத்து*
*வறுத்தெடுத்து ஒற்றும் மருந்துகள் பலவும்*
*தேளொடு புலிமுகச் சிலந்தி செவ்வட்டை*

*தாழ்விலா அறணை தருநஞ்சுப் பல்லி*
*கண்டறிவாளை கடியன் காணாக்கடி*
*மண்டுகம் பொல்லா வலியுடைக் குளவி*
*புலிகடி நாய்கடி பூனைக்கடியுடன்*
*எலிகடி முதலா வியம்பிய எவைக்கும்*
*மருந்துடன் எண்ணெய் தூள்வகை பலவொற்றுத்*
*திருந்துள வஞ்சியம் சிறந்திடு நசியம்*

இத்தகைய வைத்திய பெருநூலை முதலில் ஆராய்ந்து வெளியிட்ட பெருமை கிழக்கிலங்கைத் திருகோணமலையைச் சேர்ந்த தம்பையாபிள்ளை அவர் களுக்கே உரியது. அவர் இதனை 1892 ஆம் ஆண்டில் அச்சேற்றி யுள்ளமை பெருவிருந்தாகும். **அமுதாகரம்** 'சித்தர் ஆரூடம்' என்னும் செவ்விய நூலாகும்.

சுதேச மருத்துவ நூல்களின் கால நிர்ணயம் குறித்து என்பேராசானும் பேராசிரியரும் கலாநிதியும் இந்துப் பண்பாட்டிலும் கலைகளிலும், வரலாற் றிலும் துறைபோன ஆய்வறிஞருமான சி. பத்மநாதன் மேல்வருமாறு எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரநிருபசிங்கன் வைத்தியத்தில் மகா பண்டிதன் என்கிறது யாழ்ப்பாணம் சரித்திரம். கி.பி. 12-15 ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதியில் செகராச சேகரம், பரராசசேகரம், இலங்கைச் சிங்கை மன்னன் நயனவிதி என்னுந் தொகுப்பு நூல்கள் தோன்றியுள்ளன. கி.பி. 17,18 ஆம் நூற்றாண்டுகளில் அமுதாகரம், இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்த சூடாமணி, சொக்க நாதர் தன்வந்திரியம் என்பன எழுந்தன என்கிறார்.

பேராசிரியர் சி. பத்மநாதன் ஆயுள்வேத மருத்துவம் குறித்து வெளி யிட்டுள்ள ஆய்வுக் கருத்துகள் மேல்வருமாறு:

> ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்துத் தமிழ் நூல்களிலே ஆயுள்வேத மருத்துவம் பற்றியவை மிகப் பிரதானமானவையாகும். வடமொழி யிலுள்ள ஆயுள்வேத நூல்களின் ஏட்டுப் பிரதிகள் பலவற்றை இந்திய தேசத்திலிருந்தும் பெற்று, அவற்றிலே ஆராய்ச்சிகள் நடாத்தித் தமிழிலே பல மருத்துவ நூல்களை எழுதுவித்தமை ஆரியச் சக்கரவர்த்திகளின் சிறப்பான சாதனையாகும். செகராசசேகர னொருவன் சத்திர வைத்திய முறையிலும் நாடி சாஸ்திரத்திலும் வல்லுநனாக விளங்கினான் என்பதைச் செகராசசேகரம் என்பதிலுள்ள செய்யுளொன்றின் மூலம் அறிய முடிகின்றது. சர்ப்ப சாஸ்திரம், நயன சாஸ்திரம், பரராசசேகரம் என்ற பிற மருத்துவ நூல்களும் யாழ்ப்பாண மன்னர் காலத்திற்குரியனவாகும். தமிழிலுள்ள ஆயுள் வேத மருத்துவ நூல்களுட் செகராசசேகரம் என்பதே மிகப் பழைமை யானதென்று கருதப்படுகிறது. பரராசசேகரம் என வெளிவந்துள்ள மருத்துவ நூலானது ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்து மருத்துவ நூல்கள் பலவற்றின் தொகுப்பு நூலாகும். அது பதினாறாம் நூற்றாண் டிலே தொகுக்கப்பெற்றது என்று கருதலாம்.

### சுதேச மருத்துவ இலக்கியங்களில் பதிப்புக் குறைபாடுகள்

பேராசிரியர் கலாநிதி பொ. பூலோகசிங்கம் மருத்துவ இலக்கிய நூல்களின் பதிப்புக் குறைபாடுகளைப் பற்றிக் குறித்துள்ளார். குறிப்பாகப் பரராச சேகரப் பதிப்புப் பற்றி அவர் தெரிவித்துள்ள கருத்துகள் வருமாறு:

> பொன்னையா பதிப்பிற் பாடலெண் துணிதல் அரிதாயிருத்தல் வருந்தத்தக்கது. பாடபேதச் செய்யுளுக்கு எண்ணிட்டும் எண்ணி டாதும் மயக்கம் தருவதோடு வசனப் பகுதிகளுக்கு எண்ணிட்டுத் திகைப்பினை ஏற்படுத்தியுள்ளார். இவை போதாவென்பது போல அச்சுப் பிழையாகச் சில பாடல் எண் பெறாமலும் சில பாடல் தவறான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண் பெற்றும் அமைந்திருத்தல் முழுப் பதிப்பிலும் காணக்கூடியதா யிருக்கிறது.

**செகராசசேகரம் (செகராசசேகர வைத்தியம்)**

*மணி தங்கு வரையுளாதி*
*மன்னுயிர் படைத்தபோது*
*பணிதங்கு வகையு நோயின்*
*பேருடன் குணமுங் காட்டி*
*அணிதங்கு மருந்துங் காட்டு*
*மாயிரு வேதந் தன்னைக்*
*காணி தங்கு வகையால் வேதங்*
*கடந்த மாமுனிவன் செய்தான்*

'வேதங்கடந்த மாமுனிவன்' செய்த ஆயுள்வேத நூலிலிருந்து சில வற்றைத் தேர்ந்தெடுத்து அந்தாதித் தொடை பெற்ற விருத்தமாக இதனாசிரியன் செய்தான் என்பது பெறப்படும்.

*செய்தவர் தமது நூலும்*
*தேர்ந்ததோர் தெரிப்பும் பார்க்கிற்*
*பொய்த்தவம் பயர்ந்த பௌவம்*
*போலுமிங் கிதனை யாய்ந்து*
*வெய்தவ நோய்கள் தீர*
*விருத்த வந்தாதி யாகக்*
*கொய்தவ வொழுங்கிலே தான்*
*கோப்புறச் செப்பலுற்றாம்.*

என்றும் கோத்ததாய்ச் செய்யுளில் வருகிறது.

**பரராசசேகரம்**

பரராசசேகரம் 12,000 பாடல்களைக் கொண்டது. இன்று 8,000 பாடல்களே கிடைத்துள்ளன இந்நூல் பரராசசேகர வைத்தியம், பரராசசேகர மாலை, பரராசசேகரம், பன்னீராயிரம் என்னும் பெயர்களில் வழங்கப்பட்டு வந்துள்ளது. முதற்பாயிரச் செய்யுளாகிய விநாயக வணக்கச் செய்யுளைச் சுட்டி இந்நூல் தன்வந்திரி பகவானின் வடமொழி ஆயுர்வேத வாகடத்தைத் தழுவி உருவான நூல் என்றுங் கூறுவர். எனினும் பாயிரத்தில் நூல் வரலாறு கூறுமிடத்தில் சிவ சம்பிரதாயம் கூறப்பட்டுள்ளதுடன் அகத்திய முனிவர் சொன்ன வைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியத்தைப் பின்பற்றியே இந்நூல் இயற்றப்பட்டுள்ளதென்ற கருத்தும் கவனத்திற் கொள்ளத்தக்கன.

*அந்தமில்லருள் பெறு மகத்தியன் முனே*
*சுந்தர வைத்தியஞ் சொல்லல் சேகரன்*
*கந்தமிழ் காத்தியங் கால சாத்தியம்*
*சந்தமிழ் கட்ட சாத்தியஞ் சாற்றினான்* (ப.சே.செ. 19)

வேதன் முன் வகுத்த வாயுள் வேதத்தில் விரித்துச் சொன்ன
கோதிலா வியல்பினாலே குறுமுனி அருளிச் செய்தார்
ஆதலாற் றமிழினாலே யாய்ந்தவரறிந்துரைத்த
மூதுரை வாகடத்தின் முறைமையை மொழியுமாறே (ப.சே.செ. 12)

பிடரிவலித்து நோமிகுந்து பேரப்பிரிய வெண்ணாமல்
உடனே மயக்கித் தலை ணக்குமுடனே நடுக்குந் திமிருண்டாம்
விடமே மிருந்தவது போல மேனி வரளு நாடோறும்
இடரே பண்ணும் பிடரியலியிதுவும் பிறவீச் செனலாமே
(ப.சே.மூ.பா. கன்னிரோகநிதானம் செ. 265)

### பிறவீச்சுவாதம்

அடுத்தடுத் தெதிர்த்துக் குத்தியதிகமாய் விறைத்து வேர்த்துப்
படுத்த நாத் தடக்கிப் பேசும் பல்லது கிட்டு நெஞ்சம்
அடுக்கவே கட்டிச் சீறி யங்கமும் பிறகே வீழில்
திடுக்கெனப் பிறவீச்சென்று தெளிந்தவர் செப்பினரே
(ப.செ.மூ.பா. செ. 236)

### உளைவாதத்தின் குணம்

ஓடி உழைத்து சந்துதொறு மொருக்கால் விடமன்மிகக்குத்தும்
வாடிக்காயம் வரண்டு வரும் வலுவாய்ப் பற்றுமுளைவாதந்
தேடிப் புணர்ச்சிதனைச் செய்தால் சிறுநீர் கருகித்தெளிந்து விழும்
நாடிக் கபாலங் களப்புவலி வந்தே நாளில் நல்குமதே
(ப.செ.நா.பா.செ.151)

### நடுக்குவாதத்தின் குணம்

நடுக்குஞ் சுழற்சி செயு நாத்தடக்கிப் பேசும்
படுத்து முழுதங்கம் பரக்கும் - முடுக்கிக்
கிடுகிடெனக் கொண்டே கெடியில் விழத்தள்ளும்
தடையிடறு மென்றே நவில் (ப.செ.நா.பா. செ. 73)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவாதம்

வருத்திடு முடக்குங் காயும் வசமற வீங்குங்கால்கை
உடுத்திடனுளைத்து குத்தி யுவாதியும் பயமுமுண்டாம்
கருத்துடனசனஞ் செல்லா கடுத்திடு முறக்கம் வாரா
பெருத்திடும் பெரியவாதஞ் செய்குணம் பேசுங்காலே

(ப.செ.நா.பா. செ. 193)

## சன்னிவாதம்

கையுங் காலு மொருப்பககங் கனத்துத் திமிர்த்துச் சாவாக்கும்
மெய்யுமறவே மிகமெலிந்து வெதும்பு நாவந் தடுமாறும்
செய்யுற் குணத்தை நாடியறி செப்புஞ் சன்னி வாதமென
உய்யும் படிக்கு வழிகாணா துலகோரறிய வுரைத்துமே

(ப.செ.நா.பா. செ. 153)

## சர்வாங்கவாதம்

குத்திடுங் கழுத்து வீங்கும் குமிறிடும் பரந்து நோகும்
ஒத்திடக் கணக்கு மேனி யுறைந்திடும் விறைத்துயாங்கும்
மித்திடு மயக்கஞ் சோடும் பிடித்திடுமெழும் பொணாது
கத்திடுங் களையுண்டாகுங் கடுஞ்சருவாங்க வாதம்

(ப.செ.நா.பா. செ. 192)

## நெஞ்சடைவாதம்

நெஞ்சினிலடைத்து நின்று நின்றதிற் சேடமுண்டாய்க்
கஞ்சி சோறருந்தில் விக்கிக் கடினமாய்வண சிற்றள்ளி
மிஞ்சவே யடைத்து முட்டாய் மிகுதியுங் களையுண்டாகும்
வஞ்ச நெஞ்சடைக்கும் வாத குணமென வகுக்கலாமே''

(ப.செ.நா.பா.செ. 56)

## விக்கலும் குணமும்

நீடு மாதளை நெற்பொரி சர்க்கரை
தேடு திப்லி தேனிற் குழைத்துண்ணப்
பீடை செய்யும் பெருஞ்சத்தி விக்கலும்
ஓட வோடத் துரத்து மிதுண்மையே (ப.செ.மூ.பா. செ. 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அமுதாகரம்'** நூலிலே வரதபண்டிதரின் கவிவளம் காணத்தக்கது.

*ஈசுரமூலி கருடக் கொவ்வை யிறையவனிம்பமுடன்*
*எட்டியாடை குவைத்தா னொச்சியட் பெழினீர் நொச்சி*
*யாசறு காண்டை கொடிக் கழலகுப் பழையரமுறி தொட்ட விரலன்று தறித்தான்*
*குந்தமயிற் குந்தத் தொடுவாய் முதிரை*
*தேசசுற நாறுகரந்தை புறங்கை திருந்தவே நாறியுடன்*
*செப்பிய வங்கோலங் காத்தோட்டி சிறந்திடுவே ரிவைகள்*
*பேசிய வோரளவாகத் தூள்பொடி செய்து களஞ்சிரதம்*
*முரிய முறித்தச் செறிவு மீதொக்கப் பேணிக் கொண்டருளே''*

| | | |
|---|---|---|
| ஈசுரமூலி | - | பெருமருந்து |
| இறையவனிம்பம் | - | சிவனார் வேம்பு |
| ஆடை குலைத்தான் | - | குறிஞ்சா |
| தொட்ட விரலன்று தரித்தான் | - | பாகல் |
| குந்தம் | - | குருந்தம் |

வாழையைத் தாயைக் கொன்றான் என்றும், கருடன் முட்டையைக் காள வண்ணனூர்தியண்டம் என்றும் மயிலை - சூர்ப்பனகை, வானூர்பரி என்றும் குறிப்பிடுகிறார்.

'நசியவகை' கூறும் பாடல்

*மண்ணின் வேந்தும் மலையின் முனிவனு*
*முண்ணுஞ் சோற்றுக் குரிசையுண் டானுமாய்க்*
*கண்ணின் மூக்கிற் கசக்கிப் பிழிந்திடில்*
*விண்ணிற்போன விடங்களும் தீருமே.*

| | | |
|---|---|---|
| மண்ணின் வேந்து | - | முடிதும்பை |
| மலையின் முனி | - | மிளகு |
| சோற்றக் குரிசையுண்டான் | - | உப்பு |

(அதாவது முடிதும்பை இலை, மிளகு, உப்பு இம்மூன்றையும் துவைத்துக் கண், மூக்கில் விட எந்தவித விடமும் இறங்கி மாறுமாம்.

**அமுதாகரத்தில்** எலிக்கடிக்குப் பத்தியம்:

*தொலையும் பத்தியஞ் சொல்வேன், முருங்கையி*
*னிலையும் பிஞ்சுமினி தென்றியம்புவர்*

குளிகை, சூரணங்கள், குடிநீர், லேகியம், பற்பம், செந்தூரம், தைலங்கள், காயம் 7, பத்து 8, புதங்கம் 9, பொடி 10 என்ற வகையில் சுதேச மருத்துவ நூல்களில் மருந்துகள் சொல்லப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டாக ஒவ்வொன்றிலும் ஐந்து வகைகளை நோக்கலாம்.

**குளிகை**

1. பூதகாந்த பரமேசுரன் குளிகை
2. பெரிய சுவாச மூச்சுக் குளிகை
3. குமார குளிகை
4. சுர குளிகை
5. சிங்களக் குளிகை

**சூரணங்கள்**

1. வயிற்றுக் கடுப்புச் சூரணம்
2. ஏலாதிச் சூரணம்
3. பிரமிய வாதத்திற்குச் சூரணம்
4. அஸ்வகந்தாதிச் சூரணம்
5. வேர்க்கொம்புச் சூரணம்

**குடிநீர்**

1. பெரும்பாட்டிற்குக் குடிநீர்
2. சோலைக் குடிநீர்
3. கீரைப்பாம்பிற்குக் குடிநீர்
4. பித்தசுரத்திற்குக் குடிநீர்
5. ஈழைக்குக் குடிநீர்

**லேகியம்**

1. தாது விருத்திக்கு லேகியம்
2. வெள்ளை வெங்காய லேகியம்
3. மேக சஞ்சீவக் குழம்பு
4. கடுக்காய் லேகியம்
5. கோரக்கர் லேகியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பற்பம்**

1. தால் பற்பம்
2. அமுக்கரா பற்பம்
3. பஞ்சலோக பற்பம்
4. கந்தக பற்பம்

**செந்தூரம்**

1. இரச செந்தூரம்
2. உலோக செந்தூரம்
3. தங்க செந்தூரம்
4. பவள செந்தூரம்
5. வங்கநாராயண செந்தூரம்

**தைலங்கள்**

1. எரி தைலம்
2. சிரங்கு எண்ணெய்
3. குமரி தைலம்
4. தாழம்பூ தைலம்
5. கொம்பரக்குத் தைலம்

**காயம் 7**

1. பிள்ளை பெற்றவருக்கு வேப்பிலைக் காயம்
2. கெற்பவாயு, செற்ப சூலை, பிரண்டைக் காயம்
3. வேலம்பட்டைக் காயம் (பிள்ளை பெற்றோருக்கு)
4. வச்சிர காயம்

**பத்து 8**

1. சொறி குஷ்டம்
2. கரப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதங்கம் 9**

1. திரி - மூலவுபத்திரத்திற்கு
2. புகை - சிறுபிள்ளைகளுக்குப் புகை
3. சர்வ பீணிசத்திற்கும் சந்தனாதிக் குளிகை
4. மூலவியாதிக்குப் புகை

**பொடி 10**

1. தந்த நோய்க்கு
2. பிராமிய வாதத்திற்கு
3. வசியம்

வைத்திய கலாநிதி க. த. சோமசேகரம் அவர்கள் 'பெண்களின் பெரும் பாடு' எனும் இரத்தப் பெருக்குக்குப் **பரராசசேகரம்** சுட்டும் பாடல் என்று கூறிய பாடல் வருமாறு:

*அந்திமதி பொலிகின்ற மரத்தின் பூவும்*
*அறுமுகனார் கொடியேந்தும் சமூலத்தோடு*
*இந்திராணி சூடும் பூ இரண்டும் - வெள்ளை*
*இரசத்தின் பேருடைய மரத்தின் பாலும்*
*சந்தூட வழித்துண்டை செய்து*
*தரணியோர் பூசும் மணம் தன்னிற் கொள்ள*
*விந்தைசெறி கழலாளே உண்மை சொன்னேன்*
*மேதினியில் பெரும்பாடு துவானல் போமே*

**அடிக்குறிப்புகள்**

1. சிவசண்முகராசா, சே., (2000), இருபதாம் நூற்றாண்டில் ஈழத்துச் சித்த மருத்துவம், பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம், ப. 62.
2. மேலது, (அறிமுகம்), ப. 01.

***(கொழும்புத் தமிழ்ச்சங்க ஆய்வரங்கில் வாசிக்கப்பட்டது, 26.12.2007)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23

## ஈழத்துச் சுதேச மருத்துவ நூல்களுள் முதன்மையானது பரராசசேகரம்

யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாக வளர்ந்து வரும் சுதேச மருத்துவத்திற்குரிய முதனூல் பரராசசேகரமாகும். தமிழ் மருத்துவம் அல்லது சித்த மருத்துவம் எனப்படும் சுதேச மருத்துவம் பண்டைய வைத்தியர்களால் பேணப்பட்டு வந்தமையும் அதை அன்றைய அரசர்கள் ஊக்குவித்தனர் என்பதும் வரலாறு கூறும் செய்தியாகும். பரராசசேகரம், செகராசசேகரம் யாழ்ப்பாணத்து அரசர்கள் (ஆரியச் சக்கரவர்த்திகள்) வாழ்ந்த காலத்தில் சித்த - சுதேச மருத்துவத்திற்கு - ஆதரவு வழங்கப்பட்டபோதும் பல அரிய நூல்கள் ஏட்டு வடிவத்திலேயே காணப்பட்டன. ஏழாலையைச் சேர்ந்த ஐ. பொன்னையா என்னும் பெருந்தகை இவற்றிற் பெரும்பாலான ஏடுகளைச் சேகரித்து அச்சுவாகன மேற்றியுள்ளமை சித்த வைத்தியர்களால் நன்றியுடன் நோக்கற்பாலதாகும்.

நாவலர் பெருமான் முதல் பேராசிரியர்கள் வைத்தியகலாநிதி சு. பவானி, சி. பத்மநாதன், வைத்தியகலாநிதி (திருமதி) விக்னவேணி, டாக்டர் சே. சிவசண்முகராஜா, டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன், டாக்டர் பிரேமா சிவசண்முகராஜா இன்னும் பல சித்தமருத்துவத்துறை மருத்துவ கலாநிதிகள் பரராசசேகரம் பற்றி அறிந்துள்ளதுடன் அந்நூல் பற்றியும் அதிற் பேசப்பட்டுள்ள மருத்துவம், சிகிச்சை, மொழிமரபு, உவமைகள், நிதானங்கள், வடமொழிச் சொற் பயன்பாடுகள், மூலிகைகளின் பெயர்கள் என்பன போன்ற விடயங்களை நுண்ணாய்வு செய்தும், நூல்களாக்கியும் பணியாற்றியுள்ளனர். உலகளாவிய ரீதியில் சீன, கிரீஸ், கிரேக்க, இந்திய, மத்திய கிழக்கு நாடுகள், சிங்களப் பிரதேசம் இவற்றிலும் சுதேச மருத்துவப் பயன்பாட்டின் அனுகூலங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. சித்தர்கள் பற்றியதும், ஆயுர்வேதம் பற்றியதும் யுனானி பற்றிய தொடர்புகளும் சுதேச மருத்துவ இயலினுள் இயல்வதையும் அவதானிக்க முடிகிறது. கலைப் புலவர் நவரத்தினம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> இலங்கையில் சித்த மருத்துவத்தின் தாயகமாக யாழ்ப்பாணம் விளங்குகிறது.

என்று 'இந்துசமயம்' (1963:165) என்னும் நூலிலே குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் உரகொட,

> சித்த மருத்துவமானது அதன் தூய்மையுடனும் தனித்துவத்துடனும் யாழ்ப்பாணத்தில் இன்றுவரை கையாளப்பட்டு வருகிறது.
>
> (A history of medicine in Sri Lanka, p.14)

நாவலர் பெருமான், தமிழ்நாட்டைச் சேர்ந்த நரசிங்கபுரவீராசாமி முதலியாருக்கு எதிராக எழுதிய கண்டனக் கட்டுரை ஒன்றிலே யாழ்ப்பாணத்தில் எழுந்த சித்தாந்த நூல்களில் செகராகசேகரம், பரராசசேகரம், அமுதாகரம் என்பன பற்றியும் குறிப்பிட்டுள்ளார் (1971:67). பரராசசேகரம், செகராக சேகரம், சொக்கநாதர் தன்வந்திரியம் முதலிய நூல்களில் 'சிவன் உமைக்குச் சொன்ன வைத்தியம், அகத்தியமுனி சொன்ன ஆயுர்வேதம் போன்ற குறிப்புகள் சித்தமருத்துவ - சுதேச மருத்துவ - புராண வரலாற்று மரபைச் சுட்டி நிற்கின்றன என்று நுவலுகிறார் டாக்டர் சே. சிவசண்முகராஜா (1993:4).

'வடமொழி ஆயுள்வேதத்தைச் செந்தமிழாற் செய்தேன் போன்ற கூற்றுக்கள் அக்காலத்தில் வடமொழியில் செல்வாக்கு மிகுந்திருந்த கவர்ச்சியையும் நூலாசிரியர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முற்பட்டுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுவதாகக் கொள்ளலாம். தமிழ்நாட்டைப் போலவே இங்கும் வைத்தியத்துறையில் வடமொழி, தென்மொழியிற் புலமை பெற்ற பிராமணர்கள் ஆதிக்கம் பெற்றிருந்ததையும் மறுப்பதற்கில்லை. பிராமண நூலாசிரியர்களில் அமுதாகரம் எழுதிய வரதபண்டிதர், சொக்கநாதர் தன் வந்திரியம் எழுதிய சொக்கநாதக் குருக்கள் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். வடமொழியிலிருந்ததைத் தமிழிற் சொன்னோம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ள போதிலும் அவ்வட மொழிநூல்களெவையெனத் தெளிவுபடுத்தவில்லை. பரராசசேகரம், சொக்கநாதர் தன்வந்திரியம் என்பவற்றில் தன்வந்திரி சொன்னதைத் தமிழிற் சொன்னோம்' என்று மட்டும் குறிப்புகள் காணப்படுகின்றன. ஆனால் தன்வந்திரி என்பவர் இருமொழிகளிலும் புலமைபெற்றவர் என்பதும் வடமொழியில் மட்டுமன்றித் தமிழ்மொழியிலும் நூல்கள் பல செய்துள்ளனர் என்றும் அறியப்பட்டுள்ளது (1978:332 - 333). அதுமட்டுமன்றி இந்நூல்களிற் கூறப்பட்டுள்ள மருந்துகளிற் பல வடமொழி ஆயுள்வேத நூல்களிற் காணமுடியாதுள்ளன. எனினும் இந்நூலாசிரியர்களுக்கு ஆயுள் வேத மருத்துவத்திலும் இருந்த ஆழ்ந்த அறிவு காரணமாக அதன் நிழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் நூல்களில் படிதல் தவிர்க்க முடியாது போய்விட்டது போலும். அகத்தியர். தேரையர் போன்ற சித்தர்கள்கூட தமது நூல்களில் ஆயுண்மறை, ஆயிருவேதம் என்றே கூறியுள்ளனர். அதுபோலவே பரராசசேகரம், செகராசசேகரம் போன்ற ஈழத்து மருத்துவ நூல்களிலும் ஆயுள்வேதம் என்று அக்காலநிலைக்கேற்ப குறிப்பிடப்பட்டிருப்பினும் அவை சித்தமருத்துவ நூல்களேயாம். (உண்மையில் அக்கால இந்திய அல்லது இந்து மருத்துவ முறைகள் யாவும் ஆயுள்வேதம் என்றே அழைக்கப்பட்டன). பக்கச்சார்பற்று ஆராய்வோமேயானால் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூல்கள் பெருமளவில் சித்தர் மருத்துவ மரபைத் தழுவியவையாகவும், அத்துடன் வடமொழி ஆயுள்வேதக் கலப்புடையனவாகவும் விளங்குகின்றன என்பதும் புலப்படும் (1993:6).

ஈழத்துச் சித்த மருத்துவ நூல்களில் முதன்மையாக வைத்து எண்ணப் படுவது பரராசசேகரமாகும். மூலநூல் பல பிரிவுகளைக் கொண்டதாகவும் பன்னீராயிரம் (12,000) பாடல்களை அடக்கியதாகவும் ஆக்கப்பட்ட போதிலும், தற்சமயம் எமக்குச் சில ஆயிரம் பாடல்களே கிடைத்துள்ளன. அவற்றை ஏழாலையைச் சேர்ந்த சுதேச வைத்தியர் ஐயம்பிள்ளை பொன்னையா பிள்ளை என்பவர் ஏழு பாகங்களாகப் பிரித்து 1978 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டுள்ளார். அச்சுவேலியைச் சேர்ந்த ச. தம்பிமுத்துப்பிள்ளை என்பவரும் பரராசசேகரத்தைப் பதிப்பித்துள்ளதாகக் கூறப்படுகின்ற போதிலும் அவரின் பதிப்பு நூல் காணக்கிடைத்திலது.

பரராசசேகரம் என்னும் இந்நூல், பரராசசேகர வைத்தியம், பரராசேகர மாலை, பரராசசேகரம் பன்னீராயிரம் என்னும் பெயர்களில் வழங்கப்பட்டு வந்ததாகவும் கூறுவர். இந்நூல் குறித்துப் பல்வேறு சர்ச்சைகள் காலத்துக்குக் காலம் எழுந்த வண்ணம் உள்ளன. தனிநூலா? தொகுப்பு நூலா? நூலாசிரியர் யார்? ஆக்கப்பட்ட காலம் எது? இது சித்த வைத்திய நூலா அல்லது ஆயுள்வேத வைத்திய நூலா? வடமொழி நூலா? என்று கேள்விகள் பலரிடையே வாதப்பிரதிவாதங்களைத் தோற்றுவித்துள்ளன. பரராசசேகரம் வேறு பல நூல்களிலிருந்து தொகுக்கப்பட்ட பாடல்களைக் கொண்டதென்பதும் அறிய முடிகிறது. ஏட்டுப் பிரதிகளில் இருந்த வேறுபாடுகள் காரணமாக இந்நூலினைப் பதிப்பித்த ஐ. பொன்னையாபிள்ளை அவர்களும் முதற்பாக மான சிரரோக நிதானத்திற்கு இரண்டு பாயிரம் வெளியிட்டதன் மூலம் மூலநூல் பற்றிய ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி விட்டார்போல் தோன்று கிறது.

'இந்நூல் அச்சிடத் தொடங்கிய பின் கிடைத்த ஏட்டுப்பிரதி ஒன்றிற் கண்ட பாயிரச் செய்யுட்களில் இன்றியமையாததாயுள்ள சிலவற்றை அச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டு முதலில் சேர்த்துள்ளோம் (1928: நூன்முகம்) என்று அவரே குறிப்பிட்டுள்ளார்.

முதற்பாயிர விநாயகர் வணக்கத்தில்,

*தரணியோர் மிகப் புகழுந் தன்வந்திரிசெய்*
*தகவுடைய சீர்த்திபெறு மாயுள்வேதப்*
*பேரணியும் வாகடத்தைப் பெரிதுபேணிப்*
*பெட்புடைய தமிழ்ப்பாவாற் பேசும் வண்ணம்*

என்று கூறப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டே பலரும் பரராச சேகரமனாது தன்வந்திரி பகவானின் வடமொழி ஆயுள்வேத வாகடத்தைத் தழுவி உருவான நூல் எனக் கூறுவர். ஆனால் இதே பாயிரத்தில் நூல் வரலாறு பற்றிக் கூறுமிடத்தில் சிவ சம்பிரதாயம் கூறப்பட்டுள்ளதுடன் அகத்திய முனிவர் முன்னர் சொன்ன வைத்தியத்தைப் பின்பற்றியே இந்நூல் இயற்றப்பட்டுள்ளதென்ற கூற்றும் இடம்பெறுவது கவனத்திற் கொள்ளத் தக்கது.

*அந்தமிலருள் பெறு மகத்தியன் முனே*
*சுந்தர வைத்தியஞ் சொல்லச் சேகரன்*
*கந்தமில சாத்தியங் காலசாத்தியம்*
*சந்தமில் கட்ட சாத்தியமுஞ் சாற்றினான்*

என்ற செய்யுள் நோக்குதற்குரியது.

அகத்தியர் முதலானோரின் நூல்களைப் பின்பற்றி, பரராசசேகர மன்னன் இந்நூலை இயற்றினான் என்பதற்கு ஆதாரமாக மேல்வருஞ் செய்யுளைப் பலரும் எடுத்துக்காட்டுவர்.

*அமிழ்துறள் தமிழ்மொழி யகத்தியற் குணர்த்திய*
*கவுரிதன் புதல்வன் கார்த்திகேயன்*
*கதிரை நன்னகர் முதற்பதிபலமேவி*
*அடியவர் வேண்டியாங் கருள்புதி வள்ளல்*

என்று தமிழ்முனி அகத்தியர் முன் வைக்கப்படுவதுடன், அவருக்குத் தமிழ் உணர்த்தியவரும் சித்தர் வணங்குத் தலைவருமான முருகப்பெரு மானும் போற்றப்படுகிறார். வாகடநூல் சொன்னது, வாகடர் சொல்லியது, வாகடநூல் விதித்ததன்றே, சாற்றினார் வாகடநூல் தன்னையாய்ந்தே என்ற வரிகளும்,

பாயிரும் புவனத்துள்ளே பரந்த முன்னூல்கள் பேணி
ஆய நோய்க்குணஞ் சிகிச்சை யறிந்தவா புகலலுற்றாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற செய்யுள் வரிகளும் இந்நூல் பல நூல்களின் தொகுப்பு என்பதைச் சந்தேகமற எடுத்துக்காட்டுகின்றன. எனவே மருத்துவப் புலவர்களிற் சிலரும் (பண்டிதர் - வைத்தியர்) வடமொழி ஆயுள்வேத முறைகளைத் தமிழிற்பாடி பரராசசேகரம் தொகுப்பில் இடம்பெறச் செய்திருக்கக்கூடும் (1993:9).

> பரராசசேகர நூலைப் பதிப்புச் செய்வதில் புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோமணி, மகா வித்துவான் சி. கணேசையரும் பதிப்புத் துறை வல்லார் ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளையும் உறு துணை புரிந்துள்ளனர்.

என்று விளக்கந் தந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் நூலகர் ஏழாலை திரு. சி. முருகவேள் அவர்கள், கணேசையரது சிறப்புப் பாயிரங்கள் தக்கசான்றுகளாகும். மருத்துவரல்லாதோரும், தமிழ்ப் புலமையாளரும் இந்நூல் பற்றி அறிந்து வைத்துள்ளனர்; எழுதியுள்ளனர். எனவே இந்த அடிப்படையில் இன்றைய நிலையில் பரராசசேகரத்தைத் தமிழ்ச் சித்த வைத்திய நூல்களுள் முதல்வரிசையில் வைத்து எண்ணுவது பொருத்த முடையதே.

பரராச சேகர நூலாசிரியர் யார் என்பது குறித்து,

1. பரராசசேகர மன்னனால் இந்நூல் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.
2. மன்னனின் வேண்டுகோட்படி மருத்துவப் புலவர் ஒருவரால் இயற்றப் பட்டிருக்க வேண்டும்.
3. மன்னனின் வேண்டுகோட்படி பலர் சேர்ந்து தொகுத்திருக்க வேண்டும்.

என்னும் மூன்று கருதுகோள்களைச் சுட்டுவர் டாக்டர் சே. சிவசண்முக ராஜா. கர்ணபரம்பரைக் கதைகள். பரராசசேகரனே இந்நூலை ஆக்கியதாகக் கூறுகின்றன. யாழ்ப்பாண வைத்தியர்களிடையே பரராசசேகரம் எழுதிய நூலாசிரியர் பரராசசேகர மன்னனே என்ற கருத்துப் பெருமளவில் நிலவி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. எது எவ்வாறெனினும் சமுதாய நிலையிலும், சுதேச வைத்தியர்களது (பரியாரிமாரின்) நாவிலும் பரராச சேகரம் வெகு பிரசித்தி பெற்றுள்ளமை மனங்கொளத்தக்கதாகும். இந்நூல் எழுந்த காலம் 17ஆம் நூற்றாண்டாகலாம் என்றும், இன்னஞ் சிலர் 13 ஆம் நூற்றாண்டாகலாம் என்றும் கூறுவர். 14-17ஆம் நூற்றாண்டுக் காலப் பகுதி யில் வெளிவந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை (1993:17).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரராசசேகரம் நூலமைப்பு**

> செய்யுட்களில் மட்டுமன்றி உரைநடையிலும் மருந்துகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. உரைநடையிலுள்ளவை பிற்காலத்தாராற் சேர்க்கப் பட்டிருத்தல் வேண்டும். சிரரோக நிதானத்தைச் சார்ந்த நாக்கரோகம் முதலிய சில பகுதிகள் பிரதிகளில் வசனநடையிலேயே எழுதப் பட்டுள்ளன. பதிப்பாசிரியர் பொன்னையாபிள்ளை வசனங்களைப் பொருள் மாறுபடத் தகுந்த எவ்வித மாற்றமுஞ் செய்யாது பிரதிகளிற் கண்டவாறே பதிப்பித்திருக்கிறோம். (பரராசசேகரம், ப. 226).

ஐ. பொன்னையா அவர்கள் பரராசசேகரத்தை ஏழு பாகங்களாகப் பிரித்து வெளியிட்டுள்ளார். அவற்றின் விவரங்கள் வருமாறு:

**முதலாம் பாகம்**

சிரரோக நிதானம். கழுத்துக்கு மேற்பட்ட உடலுறுப்புக்களில் ஏற்படும் நோய்கள் கூறப்பட்டுள்ளன. உச்சி ரோகம் (கபால ரோகம்), அமுத ரோகம் (மூளையுடன் சம்பந்தப்பட்ட நோய்கள்), நாசி ரோகம் (மூக்கு சம்பந்தப்பட் நோய்கள்), நயன ரோகம் (கண் சம்பந்தமான நோய்கள்), வாய் ரோகங்கள் (உதடு, பல், நாக்கு சம்பந்தமான நோய்கள் அடங்கும்), கழுத்துச் சம்பந்தமான நோய்கள் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**இரண்டாம் பாகம்**

கெற்ப ரோகம் (கற்பிணிகளுக்கும், சாதாரண பெண்களுக்கும் எற்படும் நோய்கள்), பாலரோகம் (குழந்தைகளுக்கு ஏற்படும் பல்வேறு நோய்கள்) அடங்கும்.

**மூன்றாம் பாகம்**

சுரம், சன்னி, வலி, விக்கல், சத்திரோக நிதானங்களடங்கும்.

**நான்காம் பாகம்**

வாத, பித்த, சிலேற்பன ரோக நிதானங்களடங்கும்.

**ஐந்தாம் பாகம்**

மேகரோகம், பிளவை ரோகம், பவுத்திரரோக நிதானங்களுடன், வன்ம விதி, சத்திர விதி, இரட்சை விதியும் அடங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆறாம் பாகம்**

உதர ரோகம், குன்மம், பாண்டு, காமாலை, கோசை, வாய்வு, சூலை ரோகங் களடங்கும்.

**ஏழாம் பாகம்**

மூலம் அதிசாரம், கிரகணி, கரப்பன், கிரந்தி, குட்டரோக நிதானங்களும் அவற்றுக்கான சிகிச்சை முறைகளுங் கூறப்பட்டுள்ளன.

**இவ்வேழு பாகங்களும் 1928-1936 காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. நிதானம் என்ற சொல் நோயைக் கண்டறிதல் என்று பொருள்படும். ஒரு நோயை இன்னதுதான் என்று நிச்சயிப்பதுவே மருத்துவத்துறையின் சாணக் கியம், வித்துவம், புலமை, ஆளுமை என்று சொல்லப்படும் மருத்துவ மரபு இன்றும் உண்டு.**

பரராசேகரம் கூறும் மருந்து வகைகளைக் கவனிக்குமிடத்து அவை பல ரோகங்களுக்கும் பாவிக்கக் கூடிய தன்மையில் அமைந்திருப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. உதாரணமாக, மேகவாதத்தின் கீழ்க் கூறப்பட்டுள்ள வெள்ளறுகுப்பற்பம் (வாதரோக நிதானம்) மேகவாதத்துக்கு மட்டுமன்றி வேறும் பல வாதரோகங்களைப் போக்கவல்லதாக அமைகிறது. அவ்விதமே வாதரோக நிதானத்தில் குறிப்பிட்ட ஒரு வாதநோய்க்குச் சிகிச்சை கூறப் பட்டுள்ள எண்ணெய் முதலியனவும் வேறும் பல நோய்களுக்கு மருந்தாகவும் அமைகின்றன. இங்ஙனம் பொதுச் சிகிச்சையில் பயன்படும் வகையிலும் மருந்துகள் கூறப்பட்டுள்ளதால் மருத்துவர் இன்றும் பரராசசேகர முறைமை களையே பின்பற்றுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A., Ph.D.**



கணபதியை உமாபதியைக் கைகூப்பித் தொழுதாலும்
மணமலர் போல் நிறைய மகிழ்ந்து குல தெய்வமாம்
குணமகளாம் நயினையூர்க் குலநாக பூஷணியை(க்)
கணமேனும் மறவாக்கனக நாகேஸ்வரன் வாழ்க

கருவிலே திருவுடைய கனகசபா பதிபெற்ற
பெருமகனாய் பூஷணியின் பேரருளால் கற்றோங்கி
மருவியொரு பட்டதாரி மணியாகி எம் ஏயும்
திருவருளால் பெற்றவனே சிறந்தென்றும் நீ வாழ்க

சங்கநூல் பின்வந்த சார்ந்த விலக்கிய நூல்கள்
தங்கமாய்க் கற்றுணர்ந்த தன்மையால் எதிர்காலம்
சிங்கமென அவை முன்னே சென்று சொன் மழை பொழிய
பங்கயத்தின் வாணியுனைப் பாராட்டுவாள் உண்மை

அத்திவாரத்தில் கல்வி ஆசறவே கற்றதனால்
சித்தியாயிவ்வுலகில் சீர்பெரிய புலவனுமாய்
பத்தியாய்ச் சமயத்தில் பகருஞ் சித்தாந் தத்திலுமே
புத்தியாம் பெற்றவுனை புகழ்மிக்க வாழ்த்துவனே

காத்திரமாய் இலக்கியங்கள் கனத்தபல கட்டுரைகள்
தோத்திரநூல் பற்பலவை தூயவர்கள் போற்றும்படி
நேத்திரம் போல் வெளியிட்டனை வித்துவானே நயினை யூர்ப்
பாத்திரமாய் ஈழமெங்கும் பாராட்ட வாழுதியால்

நவகோள்கள் வரிசையிலே நாயகனாம் வியாழனுக்கு
புவனமெல்லாம் போற்றுகின்ற பொன்னான பேரதுதான்
தவமான வாசீகத் தனிப்பெயர் அவ் விருதினை நீ
உவமையாய் குருவெனவே பெற்றுவிட்டாய் உயர்ந்தாயே

(பெரும்புலவர், கலாபூஷணம் வை.க. சிற்றம்பலம், இணுவில்)

ISBN 978-955-4745-00-1
9 789554 745001

விலை ரூபா 900.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org